# கழகப்புலவர்

# பெ. பொ. சி.

# கவிதைகள்



தொகுப்பு

கலாவிநோதன்

**சித்தி அமரசிங்கம்**

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா (ஆச்சிப்பிள்ளை)
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# கழகப் புலவர்
# பெ. பொ. சி.
# கவிதைத் தொகுப்பு

[ மலிவுப் பதிப்பு ]

தொகுப்பு

கலாவிநோதன்


த. சித்தி அமரசிங்கம்

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

வெளியீடு

ஈழத்து இலக்கியச் சோலை
21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.
1998 வைகாசி

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | 08 |
| நூல் பெயர் | : | **கழகப் புலவர்.<br>பெ. பொ. சி.<br>கவிதைத் தொகுப்பு** |
| தொகுப்பு | : | கலாவிநோதன்<br>**த. சித்தி அமரசிங்கம்** |
| முதற்பதிப்பு | : | **வைகாசி, 1998** |
| பக்கம் | : | 232 + I - XXXVIII |
| பிரதிகள் | : | **1000** |
| வெளியிடுவோர் | : | **ஈழத்து இலக்கியச் சோலை**<br>21, ஔவையார் வீதி,<br>திருக்கோணமலை. |
| அச்சகம் | : | **ஸ்ரீ கணேச அச்சகம்**<br>28B, புதிய சோனகத் தெரு,<br>திருக்கோணலை. |
| அட்டை வடிவம் | : | **தாபி** |
| மலிவு விலை | : | **ரூபா 50/=** |



04-03-1919 19-05-1983

பெ. பொ. சிவசேகரனார் அவர்களின்
திருமணம் 05–02–1952ம் ஆண்டு நடைபெற்றது.

# பொருள் அடக்கம்

நினைவில் நீங்கா கவிதாலயம் (சுவாமி ஜீவனானந்தம்)
ஆசியுரை (தங்கராசா)
அணிந்துரை (தாரைச்தீவான்)
அணிந்துரை (வடிவேல்)
பாராட்டுரை (புலவர். சோமஸ்கந்தக் குருக்கள்)
எங்கள் அம்மப்பா (சு. வைஷ்ணவி)
வரலாறு (இராஜநாயகி காந்தி)
வெளியீட்டாளர் உரை (சித்தி. அமரசிங்கம்)

## தெய்வம்

பக்கம்

01. ஒருவன் 01
02. தமிழ் அருள்வாய் 02
03. தட்சண கைலை 03
04. ஒப்பிலா கோணை அப்பா 04
05. ஆதிமுதலே 05
06. எங்கள் மலையே 06
07. இரங்கையா 07
08. பேர் பெற்றாய் 08
09. காட்சிதா 09
10. திருக்கோண நாயகர் ஊஞ்சல் 10
11. ஓங்காரமாய் 12
12. காத்தருள் 13
13. எல்லைக்காளி 14
14. குமரோனே 15
15. காலம் செலுமோ? 17
16. நலியத் தகுமோ? 21
17. தம்பலகாமம் 22
18. கந்தளாய் 26
19. சம்பூர்த்தாயே 28
20. புறப்பட்டார் 29
21. வெருகலம்பதி 30
22. சித்தாண்டி 33
23. மண்டூரன் 35

பக்கம்

24. ஸ்ரீ வல்லப சக்தி 36
25. குமரவேளே 41
26. குல தெய்வமே 42
27. வடிவேலா 43
28. தருவாய் 44
29. ஆலடியோன் 45
30. சௌந்தர்ய லகரீ 46
31. கதிர்காம மாலை 48
32. அருள் வேண்டல் 51
33. கூவியழை சங்கே 54
34. கதிரைமலை கந்தன் 56
35. ஆலடி அர்ச்சனை 60
36. ஆலடி எழுச்சி 65
37. காளி கவிமாலை 68
38. **Nadarajah** 85
39. நடராஜா 93
40. கோணநாயகர் திருப்பொன்னூஞ்சல் 102
41. சீராளம்மன் திருவூஞ்சல் 104

## சான்றோர்

01. கம்பன் புகழ் 108
02. பாரதி இதயம் 112
03. மாதவி உள்ளம் 114
04. பாரதியைப் பாடுங்.... 116
05. பொன்னம்பலம் 117
06. பாரதி தரிசனம் 118
07. நாவலர் நா 121
08. கணபதிப்பிள்ளை 122
09. நா வல்லார் 123
10. தனி நாயகம் 1 126
11. தனி நாயகம் 11 130
12. நாயகம் 131
13. கங்காதரர் 132
14. மண்ணகம் வரு.... 133
15. எழுகவில்லே 134
16. புலவர்மணி 135
17. ஜகந்நாதன் 136

| | பக்கம் |
|---|---|
| 18. காந்தி நூற்றா.... | 139 |
| 19. இலிங்கன் | 141 |
| 20. திருக்கவிராயர் | 142 |
| 21. கலைஞர் வாழி | 143 |
| 22. வடிவேல் | 144 |
| 23. சிவச்செம்மல் | 145 |
| 24. சிவஞானம் | 146 |
| 25. நாக நாதன் | 147 |
| 26. பூபாலபிள்ளை | 148 |

## இளைஞர்

| | |
|---|---|
| 01. ஈழத்தமிழ் நாடே | 150 |
| 02. ஈழத்து மக்களே | 152 |
| 03. அக்காலம் ? | 153 |
| 04. ஊருணியே | 154 |
| 05. ஏழையின் கண்ணீர் (குரல்) | 155 |
| 06. சமாஜம் வாழ்க! | 156 |
| 07. அருள் நெறி வாழி! | 158 |
| 08. கோணமலை | 159 |
| 09. சந்நிதி கெடுக்காதே | 160 |
| 10. கொடுங்கோல் யாரே? | 161 |
| 11. குணமலை (உரை) | 163 |
| 12. இல்லை எழில் | 164 |
| 13. குமரருக்கு | 165 |
| 14. ஏர் தொட்டு வாழ்க! | 166 |
| 15. மாவலி நாட்டீர் | 167 |
| 16. தேசிய சேமிப்பு | 168 |
| 17. மலரே வாழி! | 169 |
| 18. காலப் போக்கு | 170 |
| 19. திட்டம் வேண்டும் | 171 |
| 20. பாதகம் | 173 |
| 21. வாவென்றழைக்கி.... | 174 |
| 22. நாவலர் சிலை | 175 |
| 23. சனியன் | 176 |
| 24. ஏற்றம் | 178 |
| 25. திருக்குறள் | 180 |
| 26. குறட்பொருள் | 181 |
| 27. பொதுமறை | 182 |

## சிறுவர்

பக்கம்


01. எமதிழம் கவி புரண்டு 183
02. தூய்மை 184
03. மாசற்று வாழ்வாய் 185
04. எல்லாந்தமிழ் 186
05. நம்நாடு 186
06. திருநாடு 187
07. குழந்தை 188
08. பெண்குழந்தை 189
09. கோணமலை 190
10. கிளிவெட்டி 191
11. சிரிபெண்ணே 192
12. காவலன் 192
13. குடிகாரா 193
14. நாவலர் 194
15. பாரதிப்புலவன் 195


## இயற்கை [ செய ]


01. பூமகள் 196
02. முகில் 198
03. அருந்துணை 199
04. வீதி 1 201
05. வீதி 11 203
06. எண்வரிசை 205


## பா மேடை


01. கவி அரங்கு 207
02. பொங்கல் விழா 208
03. கம்பன் விழா 209
04. பாரதி விழா 210
05. "குங்கும" விழா 212


## வேறு


01. பாராட்டு 215
02. மஹா கும்பாபிஷேகம் 216
03. சைவசமய நூலகப் பணி 217
04. கோணமாமலையும் 222

Prof. A. S. Gnanasambandan

19, Dr. Natesan Road,
Ashok Nagar,
Madras -600 083.

# வாழ்த்துரை

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇ தாம்மாய்ந் தனரே"

என்ற புறநானூற்று வாக்கிற்கிணங்க, புலவர் பெ. பொ. சிவசேகரனார் தம்புகழ் நிலைநிற்க "கவிதாலயம்" என்ற கவிதைத் தொகுப்பை இவ்வுலகிடைநிறுத்தி அமரரா யினார். இந்நூலுக்கு ஏனையோர்போல கவிதைத்தொகுப்பு என்று பெயரிடாமல் கவிதாலயம் என்று பெயர் சூட்டியதே ஒரு சிறப்பாகும்.

இவருடைய பாடல்களுள் நுழைபவர்கள் ஆலயத் திற்குள் நுழைவதுபோன்ற ஓர் உணர்ச்சியை பெறுவார்கள் என்பதுறுதி. இந்நூல் தமிழ்மக்களின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்று நாடுள்ள சூழ்நிலையில் கவிதாயலம் போன்ற மக்கள் மனத்தைத் திருத்தும் சிறந்த நூல்களை வெளியிட முன்வந்துள்ள "ஈழத்து இலக்கியச் சோலை" போன்ற இலக்கிய அமைப்புகள் இன்றுசெய்யும் நற்பணி மானிட சாதிக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

வெல்க அவர்கள் முயற்சி.

அ. ச. ஞானசம்பந்தன்.

**01-04-1998**

இராமகிருஷ்ண மிஷன்,
(இலங்கை - கிளை)
ஆஸ்ரமும் சிறுவர் இல்லமும்,
இராமகிருஷ்ணபுரம், மட்டக்களப்பு,
இலங்கை.

## நினைவில் நீங்கா கவிதாலயம்

அமரர் பெ. பொ. சிவசேகரத்தின் அமரத்துவமான கவிதைகளை ஒன்று திரட்டி பெ. பொ.சி. கவிதைத் தொகுப்பாகக் கொணரும் அன்பர்கள் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

*"மெய்யாய் நிகழ்ந்த ஒன்று*
*பொய்யாய் பழங்கதையாய் கனவாய்*
*மெல்ல மெல்லப் போனதுவே"* - என்றவாறில்லாது

அமரர் பெ. பொ. சிவசேகரனார் அவர்களின் வாழ்வையும் நினைவையும் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னும் மறந்து விடாது காத்திரமான முறையில் நினைவு கூரும் முயற்சி இது என்பதைப் பார்க்கும் போது அமரரின் செயற்றிறனும், அவர்விட்டுச் சென்ற கவிதைச் சுவடுகளும் ஆழமான பதிவுகளாக இருப்பதையே காட்டுகிறது.

*காலங்கள் மாறலாம்*
*கருத்துக்கள் மாறலாம்*
*கவிதைப் பொருள் மாறாதிருப்பது*

கவிஞரின் தீர்க்க தரிசன நிகழ்வு. இக்கவிஞர் ஆசிரியராக இருந்த வேளை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் பாடங்கற்பித்துச் சிறந்தவர். கழகப் புலவர் எனச் சிறப்புற்றவர். உலக வாழ்வில், தான் வாழ்ந்த 64 வருட காலத்தில் கவிஞரின் தமிழ்ப்பணிக்கும் சைவப்பணிக்கும் இந்நூல் சிறந்த நற்சான்று.

இந்நூலை வெளிக்கொணருவதில் முன்னின்றுழைத்த அன்பர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டுகின்றேன். பயனுறு இம்முயற்சியினால் தமிழ்வளம் சிறப்புறுகின்றது. இப்பணியினையும் இதனோடு தொடர்புடைய அன்பர்களை யும் மீண்டும் வாழ்த்தி திருவருள்நிறையப் பிரார்த்திக் கின்றேன்.

"பத்திரத்தை ஏந்திப்படியில் விளையாடும்
உத்தமியாள் காளி உபாசகரின் - புத்தியிலே
நின்று நடம்புரிவாள் நெஞ்சத்தில் சித்துருவாய்
என்று ஒளிர்வாள் இருந்து."

**- கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரனார்.**

இறைபணியில்,
**சுவாமி. ஜீவனானந்தா.**

திருக்கோணமலை

# பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை

தமிழில் கற்றுத் தமிழை வளர்த்துத் தமிழால் வளர்ந்த தலை சிறந்த தமிழ் அறிஞர் எமது கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரனார் ஆவார். அன்னார் மகா கவி பாரதி போல் தமிழில் பித்தாகி தன்னை மறந்தே தனித்துவம் மிக்க கவிதைகளைத் தந்து உதவிய பெருந்தகை எனலாம்.

நினைத்த பொழுதே நெஞ்சை அள்ளக்கூடிய இனிய கவிதைகளை ஆக்கித்தந்த அருந்தமிழ்ப் பாவலர் நமது கழகப்புலவர் ஆகும். ஆனால் இவர் வாழ்ந்த காலத்தில் இவரின் தமிழ்ப் புலமையை, இவர் வடித்த இனிய தமிழ்க் கவிதைகளின் பெருமைகளை சீர்தூக்கிப் பார்க்காது சோர்ந்து நாம் கிடந்தது மிக வேதனைக்குரிய ஒன்றாகும்.

நமது கழகப்புலவர் அவர்கள் மிகப் பணிவானவர், பண்புமிக்கவர், குழந்தை உள்ளம் படைத்தவர். அதே வேளை நேர்மையும், கடமையுணர்வும், கண்ணியப்போக்கும் இவரின் ஆயுதங்களாகத் திகழ்ந்தன. தலைசிறந்த ஆசிரியராகவும், சிறந்த புலவராகவும் சிறந்த தமிழ் அறிஞராகவும் வாழ்ந்த நமது கழகப் புலவர் அவர்கள் பாடிவைத்த பைந் தமிழ்ப் பாக்களில் பல இன்று நூலுருப் பெற்று வரவுள்ளன என்பதைக் கேட்டு உண்மையிலே பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு வெளிவரும் இப்புலவரின் இவ்வரிய நூலினை தமிழ் நல்லுலகம் இருகரம் நீட்டி வரவேற்று நல்வகையில் பயன்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டு, இந்நூலின் மகத்துவம் ஒளிமயமானதாகத் துலங்க வேண்டும் எனவும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. தங்கராசா

**பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**பிரதேச கல்விப் பணிமனை**
**திருக்கோணமலை.**

**24 - 04 - 1998**

# அணிந்துரை

கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரனாருடன் நெருங்கிப் பழகிய நாட்கள் குறைவெனினும் அவரையும், அவர் கவிதை களையும், அவர்தம் பணிகளையும் நான் நன்கறிவேன். ஆங்கில அறிவிருந்தும் - கணிதம் கற்பித்தும் கூட - தமிழ்ப் பற்றுடையோராய் - யாப்பறிந்தோராய் - இலக்கண இலக்கிய ஆழமுடையோராய் - பெரும்புலவராய் அவர்திகழ்ந்தார். (அவருடன் யானும் பல பாமேடைகளிற் பங்குபற்றிய துண்டு) அவர் அறுபதுகளிலும், பின்பும் பல தாள்களிலும் எழுதியநூற்றுக்கு மேற்பட்ட கவிதைகள் கொண்ட கோவை (மூலப்பிரதிகளுடன்) என்னிடம் கையளிக்கப்பட்டது. நான் செய்த பாக்கியமே. அவற்றை நான் ஒப்புநோக்கிச் சில எழுத்து - அசை - சீர் - அடிகளைத் திருத்தி (முடிந்தவரை) (வெளிவந்த கதிர்காமமாலை -ஆலடி அர்ச்சனை-காளிமாலை தவிர) தலைப்புக்கள் இட்டு -வகைப்படுத்தித் தொகுப்பாக்கிய போதில் நல்ல பல கவிச்சுவைகளும் கிடைக்கப் பெற்றேன்.

ஏரிலார்க்கில்லை எழில் - உண்ணச் சோறிலார்க்கில்லை சுகம், போன்ற நான்மணிக்கடிகையை நினைவூட்டும் பாடல்களும், "அளும் படையின் அநியாயமதால் நாளும் பொழுதும் நலியத்தகுமோ" போன்ற கந்தர் அனுபூதியை நினைவூட்டும் பாடல்களும் மட்டுமல்ல, சாந்திதரும் ஆலயங் கள் சத்தமிட்டுக் கொக்கரித்து வாந்தியெடுத்தோலமிடும் வாயாகமாறிவரும் சீரழிவைக் கண்டுமனம் சிந்தையெலாம், வேகுதையா!" போன்ற திருத்தக் கருத்துள்ள பாடல்களும், "சிங்கள மக்காள் ஈழத் தீவுமக்குரிய தென்பீர் - வங்கநாடி ருந்து வந்த வடவர்நீர் என்றுதானே உங்களின் வரவு கூறும் உயர் மகாவம்சம் - பொய்யோ? ' எங்களைக் கள்ளத்தோணி என்பிரேல் நீங்கள் யாரோ? ' போன்ற துணிகரக் கருத் துள்ள பாடல்களும், ' காசுகள் வெடி பறக்கும் கடவுளும்

திடுக்கிட்டே செய் ஆசைகள் வேண்டாமென்று புறப்பட்டார் வெளியிலேயே! தாசிகள் ஆட்டங்கண்டு தாங்கிடார் ஓடுகின்றார்! ஆசைகள் வளர்ப்பதற்கோ ஆலயம் கட்டி வைத்தார்?' போன்ற நகைச்சுவைப் பாடல்களும் கண்டு மகிழ்ந்தேன். ('வீதி' நல்லதோர் நகைச் சுவைக்கவியாகும்) அவரின் கவிப்புலமைக்குக் 'காளி கவிமாலை' (அபிராமிபட்டருடைய அந்தாதி போல்) ஒன்றே (கட்டளைக் கலித்துறை) தக்க சான்றாகும். எல்லாவற்றையும் சுட்டி எழுதமுடியாது. வாங்கிக்கற்றுப் பயன் பெறுங்கள். திகதிகள் இடப்படாமைதான் வருத்தம். இது என்றோ வெளிவந்திருக்க வேண்டிய நூல் என்றாலும் இப்போதாவது வரவுள்ளதே என்னும்போது மகிழ்ச்சியாயுள்ளது. விரைவில் 'கழகப் புலவர் கவிதை'களை எதிர்பார்ப்போமாக!

*நன்றி*

**'தாமரைத் தீவான்'**
அம்மன் கோயில் வீதி,
திரு / இலிங்கநகர்.

**02 - 07 - 1997**

# அணிந்துரை

ஈழ நாட்டில் திருக்கோணமலை ஈன்றெடுத்த வரகவி, கழகப்புலவர் திரு. பெ. பொ. சிவசேகரனார். அவருடைய ஆக்கங்களாகிய கவிதைகளைப் பாதுகாத்து வைத்திருந்து நூல்வடிவில் வெளிக்கொணருவது பெருமகிழ்ச்சிக்குரிய செயற்கரிய நற்செயல்.

கவிதை வெள்ளத்தில் குழைந்து குழைந்தாடி மகிழ்ந்த கழகப்புலவரைக் காலவெள்ளம் அள்ளிக் கொண்டு போய் விட்டது. எனினும் அவர் இக்கவிதைகளிலே நுழைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இக்கவிதை நூலில் அவர் தத்துவஞானியாக, சமய போதகராக, சமுக சேவகனாக, சர்ச்சனரைப் போற்றும் சான்றோனாக, செம்மை நலமுணர்த்தும் சீலனாக, சீர்திருத்த வாதியாக, வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

வெள்ளத்தனைய மலர்நீட்டம், புலவர்தம் உள்ளத்த னைய கவிதை. கழகப் புலவரது கவிதைகளில் கம்பனைக் காணலாம், பாரதியைக் காணலாம், வள்ளலாரைக் காண லாம். தேவார முதலிகளையும், தெய்வத் தமிழுரைத்த சான்றோர்களையுங் காணலாம்.

" **அறிவுக்குள் அறிவான பொருளே ஒளியே,**
**அருளாளர் உள்ளத்துள் வெளியாகும் உருவே"** எனவும்

" **மணியினுள் ஒளியே, சோலை மலரினுள்**
**மணமே, தூயகுணமணிக் குன்றே "** எனவும்

" **அண்டங்கள் யாவுக்கும் ஆதிமுதல் நீயே**
**அம்மையாய் அப்பனாய் ஆனவனும் நீயே "** எனவும்

கூறும் கவிதைச் சரங்களால் கழகப்புலவர் தத்துவ ஞானி யாக விளங்குகின்றார்.

" ஒப்பிலாக் கோணையப்பா" , "காலம் செலுமோ" என்னும் கவிதைகளில் கழகப்புலவர் தன்னைச் சமய போதகராகக் காட்டுகின்றார்.

" **ஆற்றலும் அறிவுங்கொண்ட அணிதிகழ் இளைஞர் கூட்டம்**
**சேற்றினில் புகுந்து நாட்டின் சிறப்பினை உயர்த்த வேண்டும்** "
என்றும்; " **செய்யுண்டு நீருண்டு சிறுபோகஞ்செய்ய**

**சீருண்டு வரவுண்டு ஏர்கொண்டு வாழ "** என்றும் கழகப் புரலர் தமது கவிதைகள் மூலம் சமுக சேவகனாகத் திகழ்கின்றார்.

**" வாட்டந் தீர்த்த வண்டமிழாசான் வீட்டுத்துறவி விபுலானந்தன்"**

**" தவயோகி கங்காதரானந்தன் ஈயும் சிவயோகத்தாச் சிரமத்தோன்"**

**" வற்றிய தமிழர் விட்ட வான்பெரு மூச்சு மொன்றாய் நற்றவத் தனிநாயகமாய் நானிலத் துதித்ததம்மா "**

**" ஆறுமுக நாவலரை அனுதினமும் நீபாடு அழியாமற் சைவநெறி காத்தவனை நீபாடு "**

**" செந்தமிழ் சிவனார் பூணும் சிவமணி செம்மை சான்ற அந்தணர் மரபில் வந்த அருள் ஜெக நாதன் வாழ்க "**

**" அழியா உருவம் அளித்தான் கீதைக்குப் பெரியான் பெரியதம்பி "**

என்று கவிச்சரந் தொடுத்த கழகப்புலவர் சர்ச்சனரைப் போற்றும் சான்றோனாக வாழ்கின்றார்.

**" சாந்திதரும் ஆலயங்கள் சத்தமிட்டுக் கொக்கரித்து**
**வாந்தியெடுத் தோலமிடும் வாயாக மாறிவரும் சீரழிவைக்**
**கண்டுமனம் சிந்தையெல்லாம் வேகுதையா "**

**" பகையன்றி வேறொன்றுங் காணேன் இந்தப் பாருலகம்**
**படையெடுப்பில் மகிழுதந்தோ "**

என்று பச்சாத்தாபப்படும் கழகப் புலவர் சீர்திருத்தவாதியாக இக்கவிதைச் சரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஆற்றொழுக்காகத் தவழ்ந்து செல்லும் கவிதைகளைப் படைத்த கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரனாரின் மனைவியும், மக்களும், சுற்றமும், கற்றோரும் இக் கவிதை நூலைப் பெற்று பெருமிதமடைவார்களாக.

ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார் கூறுகின்ற கல்வி, தறுகண், இசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெரு மிதச் சுவையை கழகப் புலவரின் கவிதைகளை அனுபவித்து அடியேனும் பெருமிதமடைகிறேன்.

**' வான்கலந்த பெ. பொ. சி உன்கவிதைச் சோலையிலே**
**நான் கலந்து போதங்கு நற்பண்பும் நன்மதியும் நல்லுணர்வும் - என்**
**ஊன்கலந்த தென்றலாய் உளமுருக வீசுதையா '**

ஞான சிரோன்மணி

**25 - 04 - 1998** **பண்டிதர் ஆர். வடிவேல்**

## புலவர் சிவசேகரனார் அறக்கட்டளைத் தலைவரின்

# பாராட்டுரை

கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரம் அவர்களால் எழுதப்பெற்ற கவிதை நூல் ஒன்று வரப்பெற்று மகிழ்ந்தேன்

இன்நூலின் பெரும் பகுதி தெய்வீகக் கவிதைகள் பக்திச்சுவை நனி சொட்டப் பாடிய அருட் கவிதைகள் பலமுறை படித்து மகிழலாம்.

என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஆசிரியர் திலகம் பெ. பொ. சிவசேகரனார்.

திருக்கோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

கம்பரின் கவிதைகளும் சிந்தனைகளும் மக்களிடையே பரவவேண்டும் என்ற எண்ணத்தோடு கம்பன் கழகம் நிறுவிப் பணியாற்றினார்.

புலவர் பெ. பொ. சிவசேகரனாரின் கவிதைகளை நூலுருவமாக்கப் பெரிதும் முயன்ற திரு. த. அமரசிங்கம் அவர்களின் முயற்சி பாராட்டற்குரியது.


Dr. **புலவர் வை. சோமாஸ்கந்தக் குருக்கள்** D. Ac

**தர்மகர்த்தா**

சமாதுப்பிள்ளைார் கோவில்

பெரியதொடுவாய் பிள்ளையார் கோவில்

பெரியதொடுவாய் பத்திரகாளி கோவில்

தெய்வானைப் பிள்ளையார் கோவில்

**DIRECTOR:- ஸ்ரீ சத்தியா ரெக்**

471, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.


25 - 04 - 98

எட்டுவயதுப் பேத்தியின் எழிற் - பா

# எங்கள் அம்மப்பா

மக்களால் புலவரென்று புகழ்பெற்ற
அம்மப்பா அவர்களே.
கவிமழையைக் கொண்டு வந்த
பெரும் புயலே
கணிதத்திலும் பொது அறிவிலும்
சிறந்து விளங்கிய உத்தமரே
காளி கவிமாலை என்னும் நூறு பாடல்களை
இயற்றியவரே
செல்லுமிடமெல்லாம் பேரும் புகழுமுடன்
விளங்கிய கவி மலையே
தராசினில் கவியோடு சரிசமமாக
நின்றவரே
திருவள்ளுவர் கழகம், கம்பன் கழகத்தினை
ஆளுமை கொண்டவரே
கவிதாலயத்தைச் சொந்தமாக்கிக்
கொண்டவரே
நீங்கள் இன்று எம்முடன் இல்லையென்று
வருந்து கின்றோம்.
இருந்திருந்தால் என்னை ஊக்கு வித்து
உமது வாரிசாக்கியிருப்பீர்

பேத்தி
**சு. வைஷ்ணவி**

# கழகப் புலவர் பெ. பொ. சி.

**திருமதி. இராசநாயகி கந்தையா**
ஓய்வுபெற்ற ஆசிரியை

கழகப் புலவர் பெ. பொ. சி. பல கலைஞானம் படைத்தவர். தன் அறிவு ஆற்றலை ஆதாரமாகக் கொண்டு நூல்கள் ஆக்கி வெளியிடவும் கனவிலும் நினைக்காதவர். பெ. பொ. சி தன் சக்தி முழுவதையும் இளைஞர்களிடமும் மாணாக்கர்களிடமும் அள்ளிச் சொரிந்து அவர்கள் உயர்ச்சியையும் வளர்ச்சியையும் கண்டு ஆனந்தம் அடைந்த அவருக்கு, அவர் மறைவின் பின் அவரது நினைவு மலருக்குச் செய்திகளனுப்பிய மாணாக்கர்கள், அறிஞர்கள் அளித்த ஒரு சில செய்திகளை பெ. பொ. சி யின் கவிதை தொகுப்பில் இடம் பெறச் செய்வதன் மூலம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் ஒவ்வோர் தலைப்பில் அளித்த செய்திகளே அவரது அறிவு, ஆற்றல், பண்பு, மாணவர் நலம் காணல் போன்றவற்றை நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

இந்துக் கல்லூரியில் சுவாமி விபுலாநந்த அடிகளார் அதிபராயிருந்த காலத்தில் மாணவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் வேட்டி கட்டிப் போகும் சட்டமிருந்தது. ஒரு வெள்ளிக் கிழமை - வேட்டி சால்வையுடன் போன தனது மகன் வேட்டியின்றி, சால்வையை வேட்டியாகக் கட்டிக் கொண்டு ஓடோடியும் வந்து, "அம்மா, ஒரு வேட்டி தாருங்கள். பாடசாலைக்குப் போக நேரமாகிறது" என்றார் சிவசேகரனார். நடந்தது என்ன என்று வினவிய பொழுது "ஒரு வயோதிபர் உடுக்க உடையின்றி, கிழிந்த துண்டை அரையில் கட்டிக் கொண்டு கைநீட்டி ஒரு முழத்துண்டு கேட்டுக் கெஞ்சிக் கொண்டு நின்றார். போவோர், வருவோர் யாரும் காதில் கேட்காதது போல் வழியே சென்றனர். நான் சால்வையைக் கட்டிக் கொண்டு வேட்டியைக் கழற்றிக் கொடுத்து விட்டு வந்து விட்டேன்" என்றார். வறுமைத் தசையில் இருந்த தாயார் தன் மகனை வாரியணைத்தார்.

பெ. பொ. சி யின் சகமாணவன் ஒருவன் தனது குடையை முறித்து விட்டான். அம்மாணவன் பயத்தால் அழத் தொடங்கினான். அவரை அழவேண்டாமென்று கூறி மாணவன் முறித்த அவனுடைய குடையை தான் வாங்கிக் கொண்டு தனது குடையை தனது சகபாடிக்குக் கொடுத்து வீட்டுக்கனுப்பினார். பெ. பொ. சி யின் தாயார் முறிந்த குடையைக் கண்டதும் விசாரித்தார். மகனின் இரக்க குணம் தாயாரின் இதயத்தைக் குளிர வைத்தது. வறுமை யிற் செம்மை புதிய குடைக்கு வழிகோலியது.

இலக்கியப் பாடத்தில் உபபாடப் புத்தகமாக "உதயணன் சரித்திரம்" என்னும் பாடநூல் இருந்தது. தாயார் மகனின் கல்வி, ஒழுக்கம் என்பதில் மிக்க கண்ணுங் கருத்துமுடையவர். இரவில் தனது வேலைகளை முடித்துக் கொண்டு மகனின் பாடசாலைப் புத்தகங்கள் கொப்பிகளைப் பார்வையிடுவார். ஒருநாள் 'உதயணன் சரித்திரம்' நூல் இவர் புத்தக அடுக்கில் இல்லை. "எங்கே?" என்று விசாரித்தார் தாயார். "அம்மா, அண்ணனிலும் பார்க்கத் தம்பி கூடப்படிக்கிறானே; அவன் என் வகுப்பில் தான் இருக்கிறான். நாளை அப்புத்தகப் பாடத்தில் வினாக்கள் தருவதாக ஆசிரியர் கூறினார். அவன் தனக்கு ஆயத்தம் செய்யப் புத்தகமில்லையென்றான். அவனைப் படிக்கும்படி கொடுத்தேன்" என்று சாவதானமாகச் சொன்னார். தாயாருக்குக் கோபம் வந்தது. "நாளைக்கு நீ எப்படி வினாவிற்கு விடையெழுதப் போகிறாய்." என்று கடுங்குரலில் வினவினார். எனக்கு அப்புத்தகத்தில் இன்ன பக்கத்தில் இன்ன விஷயம் இருக்கிறதெனத் தெரியும் நான் எல்லா வினாக்களுக்கும் சரியான விடையெழுதுவேன்" என்று தைரியமாகக் கூறினார். அடுத்தநாள் இரவு அப்பியாசக் கொப்பியைத் தாயார் பார்வையிட்டார். தனது மகன் எல்லா வினாக்களுக்கும் சரியான விடையெழுதி ஆசிரியர் கையொப்பமிட்டிருப்பதைக் கண்டு ஆனந்தமடைந்தார்.

தாயார் திருமணவீட்டிற்குப் போனால் நமது வீடு திருமணக் கோலமாகிவிடும். மணமகன் மணமகளை மணவறை ஆக்கி அமைத்து ஓமம் வளர்த்துத் தாலி

கட்டும் வைபவம் நடத்துவார். மரண வீட்டுக்குப் போனால் முருங்கைச் செத்தலில் உருவம் சமைத்து சவக்கிரியை செய்வார்.

ஆலயங்களில் திருவிழாக்கள் என்றால் சிவசேகரனாருக்குப் பேரானந்தம். வீட்டில் சிறு கொட்டகை போட்டுத் திருவுருவம் சமைப்பார். தேர் திருவிழாவிற்குப் போய் அங்கப் பிரதட்சனை செய்து விட்டு வீட்டில் விளையாட்டுத் தேர்சமைத்துத் திருவிழா நடத்துவார். சூரம் போர்த் திருவிழாவில் அம்மனுக்குப் பக்கத்தில் அம்மனாகவும், முருகனுக்குப் பக்கத்தில் முருகனாகவும் நின்று வீதிவலம் வருவார். சூரனாக நின்றாடும் போது அது அகங்காரமழிக்கும் காட்சியாகவேயிருக்கும்.

தன் வகுப்பு மாணவர்களுக்கு மாத்திரமல்ல; தமக்கு கீழ் படிக்கும் கீழ்வகுப்பு மாணவருக்கும் மாத்திரமல்ல; தன்னிலும் பார்க்க உயர் வகுப்பு மாணவர்களுக்குக் கூட பாடஞ் சொல்லிக் கொடுப்பதை அந்த மாணவர்கள் போற்றியுள்ளனர். கணக்கு மேதை, கணித ஆசிரியராக மாறியது வியப்பில்லை. தமிழ்க்கடல்; இலக்கிய இலக்கணங்களைச் சிறுவயதிலேயே தனிமுயற்சியினால் துருவித் துருவி ஆராய்ந்த அறிவினால் கழகப் புலவராயினார் என்றால் இறைமாட்சியென்றே கூறவேண்டும்.

கழகப் புலவரின் தந்தையார் பெரியதம்பி பொன்னையா ஆவார். கரவெட்டியில் பிறந்து அங்கு கல்வி கற்றுத் திருக்கோணமலைக்கு தொழில் தேடி வந்தார். சாம்பல் தீவு மெதெடிஸ்த மிஷன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் கிறீஸ்தவ நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் கிறீஸ்தவராக இருக்க வேண்டுமென்று கிறீஸ்தவ அதிகாரிகளின் ஒழுங்காக இருந்தது. பெரியார் பொன்னையாவைக் கிறீஸ்தவ மதம் சேர்ந்து ஆசிரியத் தொழிலைச் செய்யும் படி அதிகாரிகள் வேண்டினார்கள். "என் தந்தையார் எனக்கு வைத்த பெயரை

மாற்றி நீங்கள் சூட்டும் பெயரை ஏற்க மாட்டேன். எந்த மதத்தில் பிறந்தேனோ அந்த மதத்திலேயே இருப்பேன்" என்று கூறி ஆசிரியத் தொழிலுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார். கடற் படையில் சேர்ந்து களஞ்சிய பொறுப்பா ளராகக் கடமையாற்றிக் கொண்டார். மூதூரில் உடையா ராகக் கடமையாற்றிய பத்தினியார் புதல்வியைத் திருமணம் செய்யத் திருவருள் கூட்டி வைத்தது. பொன்னையா + தங்கமுத்துத் தம்பதிகளுக்கு முதல் இரண்டு குழந்தை களும் பிறந்து சில நாட்களில் இறந்து போக திருக்கோண மலை சிவன் கோவிலில் வழிபாடாற்றி நேர்த்திக் கடன் வைத்துப் பிறந்த குழந்தைக்குத் தான் **சிவசேகரன்** என்று பெயர் சூட்டினார்கள் பெற்றோர்.

குழந்தை துடுக்குமிடுக்கும் நிறைந்த செல்வப்புதல் வனாக வளர்ந்த காலத்தில் தந்தையையிழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அக்காலத்தில் பிரிட்டிஷ் கடற் படையில் தொழில் புரிந்தோருக்கு ஓய்வூதியம் பெறும் பாக்கியமில்லை. சிவசேகரனாருடன் கூடிப்பிறந்த இருபெண் பிள்ளைகளையும் புதல்வன் சிவசேகரனையும் பராமரிப்ப தற்காக இரவு பகலாக நெல்குற்றி, அரிசி விற்று வறுமையிற் செம்மையாய் வளர்த்து வந்தார். இலவசக் கல்வி அக் காலத்தில் இல்லை. மூவரையும் ஆங்கிலக்கல்வி கற்கவும் வழி செய்தார்.

சிவசேகரனார் தமது நாலம் வகுப்புவரை திருக் கோணமலை வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் கல்வி கற்றார். சைவப் பிள்ளைகளுக்கு ஒரு சைவக் கல்விச் சாலையில்லையென எண்ணிய சைவப் பெரியார்களின் விடா முயற்சியினால் உருவாக்கப்பட்ட இந்துக் கல்லூரியில் தொடர்ந்து படித்தார். அச் சிறு பராயத்தில் அவர் காட்டிய திறமைகளை உற்றுக் கவனித்தார். அவரது தாய் மாமனும் தலைமை ஆசிரியருமாகிய பத்தினியார் சுப்பிரமணியம வர்கள். கிளிவெட்டி அரசின் பாடசாலையில் கடமை யாற்றிய தனது தமையனார் சுப்பிரமணியம் அவர்களிடம்

சிவசேகரனாருடனும் மற்ற இரு பெண் குழந்தைகளுடனும் தாயார் போய் விடுமுறையைக் கழித்து வருவார். மருமகனாரின் கணிதம், தமிழ் அறிவை உற்று நோக்கினார் மாமனார். சிவசேகரனாரின் எட்டு வயதில், நிகண்டுப் புத்தகத்தைக் கையிற் கொடுத்து நெட்டுருச் செய்வித்தார். மாமனாரின் மறைவையொட்டிச் சிவசேகரனார் பாடிய பாடல் 'ஊருணி' என்ற தலைப்பிலுள்ளது. அதில் ஒரு பா பின்வமாறு :-

**'என்னைத் தமிழில் இரும்புலவனாக்குதற்காய்**
**முன்னே எடுத்த முயற்சியெலாம் - முன்வந்து**
**நித்தம் உனை நினைக்கச் செய்தே உன் நிகண்டுப்**
**புத்தகத்தைக் காணும் பொழுது'**

கிளிவெட்டியிலிருந்து திருக்கோணமலைக்கு வரும் போதெல்லாம் தாய் மாமனார் தனது மருமகனைப் பற்றி ஆசிரியர்களைக் கண்டு கலந்துரையாடுவார்.

ஒரு நாள் அவர் உணவு உண்ணும் போது அவர் கையில் இருந்த உணவைக் கவ்விச் சென்றது ஒரு காகம். கரித்துண்டையெடுத்து விறாந்தைச் சுவரின் வெண்பா ஒன்று எழுதினாராம். தவறாமல் சனிக்கிழமை தோறும் திருக்கோணமலைக்கு வரும்போதெல்லாம் சிவசேகரனாரின் சிறிய தந்தையார் சிவசேகரனார் வீட்டிற்கு வந்து போவதுண்டு. சாம்பல் தீவு மெதெடிஸ்த மிஷன் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய சின்னத்தம்பி என்னும் நாமமுடையவர். சுவரில் சிவசேரனார் எழுதிய வெண்பா அவர் கண்ணிற்பட்டதும் அவரடைந்த ஆனந்தம் இம்மட்டன்று என்று நமது தாயார் கூறி மகிழ்ந்தார். அப்பாடலைத் தமது மூத்த புதல்விக்கெழுதிக் கொண்டு போய்க்கொடுத்து 'உன் உடன் பிறவாத் தம்பியின் அறிவாழத்தைப் பார்' என்று காட்டினாராம். சிறிய தகப்பனாரின் மூத்த புதல்வி சிவசேகரனாருக்கு நான்கு வயது மூத்தவர். அவரே தனக்கு வேண்டிய தமிழ், கணக்குப் பாடங்களில் உள்ள கஷ்டங்களை தன் தம்பி சிவசேகரனிடம் கேட்டுப் பெறுவார்.

இன்று திருமதி பாக்கியலட்சுமி தில்லைநாயகம் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் சிவசேகரனைப் பற்றி நாம் கூறியது ஒரு சொற்பமென்று நம்மைக் குறை கூறுவார். ஓரே வளவில் ஓரே வகுப்பில் படித்தவர்களானமையின் சிவசேகரனின் அறிவு, ஆற்றல், திறமை, துடிப்பு எல்லாம் நன்கறிந்தவரானமையினால்.

சுவாமி விபுலானந்த அடிகளாரின் அரவணைப்பில் படித்துப் பட்டம் பெற்று பதவி உயர்வுடன் வாழ்ந்தவர் திரு. அருணாசலம் சந்திரசேகரம் அவர்கள். திருக்கோண மலையில் கல்வியதிகாரியாகவுங் கடமையாற்றியவர். சிவசேகரனார் சுவாமி விபுலானந்த அடிகளாரிடம் சிலப்பதி காரம், தொல்காப்பியம் என்னும் நூல்களைப் பாடங்கேட்டுப் படித்தவர்களுள் ஒருவராவார். திரு. சந்திரசேகரம் அவர் களிடம் சிவசேகரனாரின் அடக்கம், அறிவு, ஆற்றல், ஆராய்ச்சித்திறன்களைப் பற்றி சுவாமியவர்கள் வியந்து கூறியுமுள்ளார்.

அக்காலத்தில் ஈ. எஸ். எல். சி (E. S. L. C) (S. S. L. C) என்ற பகிரங்கப் பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தியடைந்தார். இலண்டன் மெற்றிக்குலேஷன் (London Matriculation) பரீட்சையெடுக்க விரும்பினார். தனது நகை விற்றார் தாயார். மகன் இலண்டனில் இருந்து முக்கிய பாடங் களுக்குரிய வினா, விடை எடுத்துப்படிக்க உதவி செய்து பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பத்தையும் அனுப்ப உதவி செய்தார். சிவசேகரனார் பரீட்சையெழுதினார்.பரீட்சை முடிவு பலருக்கு வியப்புங் கவலையுமளித்தது. தமிழில் சித்தியடையவில்லை. "அடே தம்பி , உன் ஆராய்ச்சியான தமிழ் இலண்டனில் விடை திருத்தியவர்களுக்குப் புரிய வில்லைப் போலும்" என்று சிவசேகரனாரின் சிறிய தந்தை யாரின் மகள் கூறிக் கவலைப்பட்டார். மீண்டும் பரீட்சைக்குத் தமிழ்ப் பாடத்திற்குத் தோற்றிச் சித்தியடைந்தார்.

சிவசேகரனாரின் இளமை அறிவுத் துடிப்பு கட்டுக் கடங்காதது. கரடியனாறு விவசாயக் கல்லூரியிற் சேர்ந்து

பயிற்சி பெற்றுச் சித்தியடைந்தார். இதுமட்டுமல்ல இந்தியாவில் மாத்தாண்ட விவசாயக் கல்லூரிக்கும் விண்ணப்பித்து அங்கும் போய் பயிற்சி பெற்றார்.

தொழில் புரியவேண்டுமென்ற எண்ணம் வந்தது. இலிகிதர் பரீட்சையில் சித்தியடைந்து திருக்கோணமலை கச்சேரியில் இலிகிதராகக் கடமையாற்றினார். அவர் மனம் சாந்தியடையவில்லை. மாணவர்களுடன் சேர்ந்து பாடஞ் சொல்லிக் கொடுத்த ஆசை - ஊக்கம் அவரை இலிகிதர் வேலைக்கு முற்றுப்புள்ளி வைக்கச் செய்தது. சிவசேகரனாரின் இராஜினாமக் கடிதத்தைக் கண்டதும் இவருக்கு அதிகாரியாக இருந்த சபாரெத்தினம் அவர்கள் மிக மனம் வருந்தி வீட்டிற்கு வந்து "இவ்வேலையை விடாதே, உனது அறிவு, அற்றலினால் நீ சொற்ப காலத்தில் உயர் பதவி வகிக்கச் சந்தர்ப்பமுண்டு.எனவே இராஜினாமாக் கடிதத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள் என்று இரந்தார்." தாயாரும் கெஞ்சினார். சிவசேகரனாரின் உள்ளம் மாணவ சமுதாயத்திற்காக அமைந்து விட்டது. மறுத்தார். 1942ல் ஆங்கில ஆசிரியராகப் பதவியேற்றார். 1947/48ல் தமிழ் ஆசிரியருக்கான பயிற்சியையும் 1960/61ல் கணித ஆசிரியருக்கான பயிற்சியையும் பலாலி ஆசிரிய கலசாலையில் பெற்றார். ஆசிரியரானார். அவர் மனம் நிறைவு பெற்றது போல் ஓர் உணர்வு.

அவரின் கற்பித்தல் முறை ஒரு தனித்துவம் பெற்றது. பாடசாலை நேரசூசி கூட அவரைக் கட்டுப்படுத்த முடியாத படி மாணவர்களுடன் இரண்டறக் கலந்து கற்பிக்கும் நிலையுடையது. பின் தங்கிய மாணவர்கள், வசதி குறைவான மாணவர்கள் அவரது இதயத்தை ஈர்க்கும் பரிபக்குவ நிலையில் கற்பித்தல் நிகழும்.

மாமனாருக்கு மருமகனின் திறமையில் ஆனந்தமடைந்தாலும் பிற்காலத்தில் உயர் அதிகாரியக வரக்கூடிய இலிகிதர் வேலை விட்டது கவலைதான். திருமணம் நிச்சயமாயிற்று. 1952ஆம் ஆண்டு மாசி மாதம் 5ம் திகதி தாய் மாமன் மகள் செல்வி தனேஸ்வரி சுப்பிரமணியமவர்களுக்கும் சிவசேகரனாருக்கும் கோலாகலமாகத் திருமணம்

நடைபெற்றது. அடக்கமும் அமைதியும் நிறையப்பெற்ற இல்லாள்,சிவசேகரனாரின் துணைவி தனேஸ்வரி அம்மையார். ஒரு சிறு ஊதியத்தில், யாரிடமுங் கையேற்றுச் சேவை செய்யாத தன் கணவனாருக்கு உகந்த மனையாளாக அமைந்தார்.

"இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பிக்கும் வாழ்க்கைத் துணை நலம் வள்ளுவர் கழகம் அமைத்துப் பணியாற்றிய கழகப் புலவர் சிவசேகரனாருக்கும் கிடைத்த பெரும் பாக்கியமாகும்.

இவர்களின் இல்லறத்தின் செல்வமாக 07-02-1953இல் மூத்த மகன் தனசேகரம் பிறந்தான். மூத்த மகன் தனசேகரன் அவர்கள் கல்விப் பொது உயர்தரப் பரீட்சையில் சித்திய டைந்தும் பல்கலைக் கழகத்திற்கான புள்ளிகள் பெறவில்லை. இலிகிதர் பரீட்சையில் தேறித் திருக்கோணமலை கச்சேரி யில் கடமையாற்றினார். தற்போது ஓமானில் கடமை புரிகி றார். அவரே கழகப் புலவர் சிவசேகரனாரின் மலர் வெளி யீட்டிற்குரிய செலவைப் பொறுப்பவராக அமைந்துள்ளார்.

6-4-55இல் இரண்டாவது மகன் நச்சினார்க்கினியன். எல்லாரும் 'இனியன்' என்றே அழைப்பர். அவரும் படித்து நீர்ப் பாசன இலாகாவில் வேலை மேற்பார்வையதிகாரி (Work Supervisor) ஆகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். சிறு நீர்ப்பைக் கோளாறு ( Kidney Trouble ) அவருக்கு ஏற்படிருந்தது. யாருக்கும் தெரியாமல் நோயை வெளியிற் காட்டிக் கொள்ளாது கடமைக்குச் சென்று வருவார். ஈற்றில் தாங்கமுடியாத நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று -பின் கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சையளித்தும் 1983 மாசியில் அவர் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. அப்பொழுது இனியனுக்கு இருபத்தெட்டு வயதாகும். நான்கு வயதில் தன் கடைசிமகனை இழந்த கவலையை ஒருவாறு சகித்துக் கொண்டு தன் சேவையைத்

தொடர்ந்தார். இருபத்தெட்டு வயதில் மகனைப் பறிகொடுத்த பதைபதைப்பு அவரைத் தாக்கி மகன் மரணித்த ஒருமாத காலத்தில் கழகப் புலவரும் உயிர் நீத்தார். தனது ஒரே யொருமகள் செந்தாமரை போன்று அவர் கண்களில் பட்ட தினால் 'செந்தாமரை' என்றே பெயர் சூட்டி 'மகள் செந்தா' என்று அன்புடன் அழைப்பார். அவரும் படித்துத் தையற் கலையில் சிறப்படையும் பயிற்சியும் பெற்றார். உயர் திரு. சி. பரமேஸ்வரன் தம்பதிகளின் அருமைப் புத்திரன் திரு. ப. சுதாசங்கரரைத் திருமணம் செய்து இனிய இல்ல றமாகிய நல்லறத்தை நடாத்துகின்றனர். யாழினி, வைஷ்ணவி என்னும் இரு பெண் குழந்தைச் செல்வம் உடையவர்களாக வாழ்கின்றனர். எட்டுவயது வைஷ்ணவியின் "எங்கள் அம்மப்பா" என்ற கவிதை பெ. பொ. சி. யின் கவிதைத் தொகுப்பைச் சிறப்பிக்கிறது.

நான்கு வயதில் கண்ணன் என்று கொஞ்சிக் குலாவிய முகில் வண்ணன் 1966 ஐப்பசியில் எதிர்பாராத நோயினால் சடுதியாக இறைவனடி சேர்ந்து விட்டார்.

பெ. பொ. சி. தனது மக்களின் திருமணவைபவத்தில் கலந்து கொள்ள முடியாதபடி காலன் கைப்பட்டுவிட்டார். மனைவி, மக்கள் பெரிதும் கவலையுற்றனர்.

தந்தையாரின் மரணத்தின் பின் குடும்பப் பொறுப்பு தனயன் தனசேகரனுக் குரியதாயிற்று. சகோதரியின் திருமண வைபவம் அவர் பொறுப்பாயிற்று. தந்தையாரின் மரணச் சடங்கு நிகழ்வும் மகன் சுமக்க வேண்டியதாயிற்று.

உயர் திரு. குணசேகரம் சுவாமியாரின் மகன் திரு. குஞ்சிதபாதத்தின் அருமை மகள் செல்வி வாணியை பெரியோர்களின் நிச்சயாத்தத்தின் படி திருமணம் செய்து இல்லறத்தை இனிது நடாத்துகின்றார். பெ. பொ. சி. யின் கவிதைகள் நூல் உருப்பெற மகன் தனசேகரனுக்கு அவரது துணைவியார் மிக்க மகிழ்ச்சியுடன் நூலுக்குரிய செலவைப் பொறுப்பேற்க வேண்டுமென்று தமது கணவனாரை அன்பாக வேண்டிக் கொண்ட பெருமைக் குரியவர். அவரின் பூரண ஒத்துழைப்பு இல்லாவிடின் பெ. பொ. சி. யின் கவிதை

நூல் வெளிவரச் சாத்தியமேயில்லை. பெ. பொ. சி. யின் மறைவு அறிந்த பலர் அனுதாபச் செய்திகளில் அவரது எழுத்துக்கள் நூல் உருவம் பெறவேண்டுமென வேண்டி யுள்ளனர்.

தான் நூல்களை ஆக்கி வெளியிட்டுப் புகழ் தேட வேண்டுமென்ற விருப்பமில்லாத பெ. பொ. சி. கிடைத்த புத்தக மட்டைகளிலும், துண்டுக் கடதாசிகளிலும் அவ்வப் பொழுது எழுதியவற்றில் ஒரு சிலவற்றைப் பொறுக்கி யெடுத்தோம். துல்லகமற்ற கடதாசிகளில் எழுதியுள்ளார். துண்டுப் பிரசுங்களின் இடைவெளியில் எழுயுள்ளார். கணித வரைப்படங்களிலுள்ளும் கவிதை பிறந்துள்ளது. அவற்றைச் சேர்த்து விளங்காத ,தெளிவில்லாத சொற்களை நமது ஊகிப்பில் நிறைசெய்தெழுதினோம். பெ. பொ. சி. யின் தன்னலமற்ற சேவையில் சிலவற்றைக் குறிப்பிடாவிட்டால் தொகுப்பில் நோக்கம் நிறைவுடையது என்று கூறுவது பொருந்தாது.

இவரது நினையைக் கூறும் வகையில் இன்னும் நகராண்மைக் கழக நூல் நிலையத்தில் "பெ. பொ. சி. நினைவு நூல் நிலையம்" என்ற பெயரைக் கொண்ட ஒரு அலுமாரி 450 புத்தகங்களுடன் காட்சி தருகின்றது.

திருக்கோணமலைப் பிரதான வீதியில் வள்ளலாரின் திருப்பாடல்கள் ஓசை ஒலிக்கும் நாட்கள் இருந்தே வந்தன. உயர் திரு. குணசேகரம் சுவாமிகளின் ஆதரவுடன் டாக்டர் உயர் திரு. சி. சின்னத்துரை அவர்களின் ஒத்துழைப் புடனும் வள்ளலார் வாசிகசாலையொன்றை பெ. பொ. சி யின் உயர் நண்பன் எஸ். டி. சிவநாயகமும் பெ. பொ. சி. யும் நாடாத்தி வந்தார்கள். வள்ளலாரின் திருப்பாடல்களை உயர் திரு. குணசேகரம் சுவாமிகள் உணர்ச்சி பூர்வமாக இனிமையாகப் பாடச் சபையோரும் அவருக்குப் பின்னால் பாடி ஆனந்தப் பெருவெள்ளத்தில் மூழ்குவர். மாணவர்க ளுக்கும் இளஞ்சமுதாயத்திற்குமிடையில் கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளின் திருப்பாடல்களை இசைக்கும் போட்டிகளும் நடாத்தி வள்ளலாரின் குரு பூசையில் பரிசளிப்பு விழாவும் நடாத்தினர். இவ்விடயம் பற்றி உயர் திரு.எஸ். டி.சிவநாயகம் அவர்களுக்குத்தான் நன்கு தெரியும்

அவர் எழுத்து இப்பணிக்குச் சான்றாக அமையுமென்று அவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

திருக்கோணமலை காந்தி சேவா சங்கத்தலைவர் தியாகி கோ. இராஜகோபால் அவர்கள் பெ. பொ. சி. யின் மறைவுக்கு அனுப்பிய அனுதாபச் செய்தி 'இளைஞர்களுக்கு வழிகாட்டி' என்னும் தலைப்பில் உள்ளது. அதில் பெ. பொ. சி. யின் பணி திகதியுடன் தரப்பட்டுள்ளது. இதோ அது :-

கழகப் புலவர் சிவசேகரனார் எனது நண்பர். என்னோடு தோளோடு தோள் நின்று எல்லாப் பொதுப் பணிகளிலும் பங்கெடுக்கும் பங்காளன். இளைஞர்களை வழிப்படுத்துவதில் - நெறிப்படுத்துவதில் அவருக்கு அலாதியான விருப்பம். அதற்கேற்றாற் போல் இந்துக் கல்லூரியும் வந்து வாய்த்தது. இந்துக் கல்லூரி மாணவ சமூக சேவா சங்க ஆதரவில் 5 - 8 - 47 இல் அருள்மிகு விபுலாநந்த அடிகளாரின் திருவுருவப்படத்தை நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் திறந்து வைத்தார்கள். இவ்விழாவை இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்து நடத்தி வைத்தவர் கழகப் புலவர்.

சிவயோகி சுத்தானந்த பாரதியார் திருக்கோணமலைக்கு விஜயஞ் செய்தார்கள். 13 - 11 - 52 முதல் மூன்று நாள் நிகழ்சிகள் இனிது நிறைவேற என்னோடு சேர்ந்து அரும் பாடுபட்டுழைத்தார். வள்ளலார் அச்சகத்திலும் வாசிகசாலையிலும் பங்கெடுத்துப் பணியாற்றினார். அப்படியே காந்தி சேவா சங்கத்திலும் பெரும்பணி புரிந்தார்.

பாலம் போட்டாறு பத்தினியம்மன் ஆலய பலி நிறுத்தத்தின் போது துடிப்புடனும் துணிவுடனும் எங்களுடன் கூடிப் போராடினார். ஆயிரக் கணக்கான இளைஞர்களை நல்வழிப்படுத்திய பெருமை புலவருக்குரியது. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

தமிழ்நாடு கோயம்புத்தூர் ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலய கல்லூரியில் உதவிப் பேராசியராகக் கடமை யாற்றிய கலாநிதி. சி. சத்தியமூர்த்தி அவர்கள் (எம். ஏ) திருக்

கோணமலை மண்ணுக்குரியவர். (தம்பலகமத்தைச் சேர்ந்தவர்) கழகப் புலவரின் மறைவுச் செய்தி அவருக்கு எட்டியதும்.

"நான் அவர் மாணவன்" என்ற தலைப்பில் எழுதிய செய்தியை குறிப்பிடுவது இம்மலருக்குரிய உரிமையாக அமைகின்றது.

## நான் அவர் மாணவன்

**அஞ்சாத நெஞ்சும் அயராது உழைக்கும் அருந்திறமும்**
**நெஞ்சார வாழ்த்தும் பெருநிலையும் ஈயா நீசரிடம்**
**கெஞ்சாத வாழ்வும் கிறுங்காத நேர்மையும் கேட்டு நின்றேன்**
**பஞ்சாட் சரத்தில் ஒளிவீசும் பத்திர காளிகையே.**

என்று நிமிர்ந்த ஞானச் செருக்குடன் பாடிய திரு வாய் ஓய்ந்துவிட்டாலும், அவ்வாய் மொழி என்றும் நம் இதயங்களில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும். என் ஆசிரியப் பெருந்தகை பெ. பொ. சிவசேகரனாரின் மறைவு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

வகிக்கும் பதவிகளாலும் வாங்கிய பட்டங்களாலும் தரந்தாழ்ந்த எழுத்துக்களாலும் விளம்பரப் பித்தர்களாகிப் பிரபலமானோர் ஆர்ப்பரிக்கும் இன்றைய இலக்கிய உலகில், ஆழ்ந்த சிந்தனை, ஆணித்தரமான எழுத்து, சுவையான பேச்சு மூலம் அடக்கத்தோடு தமிழ்ப்பணி ஆற்றியவர் சிவசேகரனார் அவர்கள்.

அவர் ஊட்டிய தமிழ் உணர்வும் புகட்டிய தமிழறிவும் என்றும் என் நெஞ்சை விட்டகலாது. "நான் அவர் மாணவன்" என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

திருவாசகம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய தரமுயர்ந்த தமிழ் நூல்களிலுள்ள பாடல்களை அறுசுவை விருந்து அருந்துவது போல நாவால் சுவைத்து அவர்நவிலும் இனிமையை, தமிழ் நாட்டிற் கூட நான் யாரிடமும் கண்டதில்லை.

கருத்து வளஞ் சுமந்து கலாபூர்வமாகச் சொற்சுவையுடன் வேகநடை போடும் அவர் கவிதைகள், பலமுறை பாடித்திளைக்கும்படியான இலக்கியத்தரம் கொண்டவை.

அவருடன் உரையாடுவது, சலிப்பில்லாத இனிய அனுபவமாகும். அப்போதெல்லாம் புன்னகை பூத்த முகத்துடன் தமிழ் இலக்கியப் பரப்பிலிருந்து தேர்ந்தெடுத்த சிந்தனைகளை ரசனையோடு வாரி வழங்கி நம்மை மகிழ்விப்பார்.

இந்து மாகடலுக்கு இந்தப் பக்கமிருந்து இவற்றையெல்லாம் நினைக்கும் போதுகூடக் கண்கள் கலங்குகின்றன. நினைவுகள் நெருஞ்சிமுள் போல் நெஞ்சை வருத்துகின்றன.

அருள்நெறிமன்றம், திருவள்ளுவர் கழகம், கம்பன் கழகம், போன்ற தமிழியக்கங்கள், அவர் உந்து சக்தியால் தான் திருக்கோணமலை மண்ணில் செழித்து ஓங்கின என்பதை நாம் மறக்கலாகாது. அவர் மறைவால் திருக்கோணமலைத் தமிழ் வளர்ச்சியில் ஒரு வெற்றிடம் உருவாகி விட்டது. அதை நிரப்புவது என்பது கடினமான காரியமாகும்.

அவரை மறவாதிருப்பதோடு அவர் விட்டுச் சென்ற பணிகளையும் இலட்சியங்களையும் தொடர்ந்து நிறைவேற்றப் பாடுபடுவதே நாம் அவர்க்குச் செய்யும் நன்றிக் கடனாகும். முதற்கண் அவரது படைப்புக்கள் அனைத்தையும் அச்சேற்றி வெளிக்கொணர வேண்டும். அடுத்தாற் போல் அவர் பெயரால் அறக்கட்டளை நிறுவிப் பரிசளிப்பு, நூல் வெளியீடு, நினைவுச் சொற்பொழிவு ஆகியவற்றை நிகழ்வித்து அறிவுப் பணிக்கு ஆக்கம் சேர்க்க வேண்டும்.

அவர் நல்லுயிர் கோணமாமலை அமர்ந்த பெருமானின் பேரின்பத் திருவடியில் ஐக்கியமாகி விட்டது. அவரை இழந்து வருந்தும் குடும்பத்தினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரின் துன்பத்தில் நானும் பங்கு கொள்கிறேன்.

வாழும் அவர் புகழ் வளரும்.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் திரு. செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்கள் "இந்து இளைஞர்களின் இரங்கற் செய்தி" என்னும் தலைப்பில் அருளிய அனுதாப உரையில் ஒரு பகுதி.

"................ அன்னார் அன்பும் பண்பும் நிறைந்த ஒரு பெரியார். தமிழில் சிறப்புறப் பாண்டித்தியம் பெற்று விளங்கிய ஒரு பெருந்தகை. அவர் தனது தமிழ்ப் புலமையால் பல இளம் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் திருக்கோணமலையில் உருவாக்கியுள்ளார். சிவசேகரனார் அவர்கள் கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கிச் சிறப்புற நடாத்துவதே ஒரு தனித்தன்மை வாய்ந்ததாகும். அன்னார் திருக்கோணமலையிலும் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களிலும் நிகழ்த்திய பொருள் பொதிந்த சமயச் சொற்பொழிவுகள், என்றும் எம் நெஞ்சை விட்டு அகலா. குழந்தைகளுக்கும் புரியக் கூடிய விதத்தில் அழகாகச் சொற்பொழிவாற்றக் கூடிய தன்மை அவரின் சொற்பொழிவுகளிற் காணப்பட்டது........"

திருக்கோணமலை இந்துக்கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய திரு. அ. சிவலோகநாதன் அவர்களின் "பரமஹம்ஸ பக்தன் சிவசேகரனார்" என்ற தலைப்பில் அருளிய செய்தியை நோக்குவாம்.

பள்ளிப் படிப்பையும் படிப்பிக்குந் தொழிலையும் இராமகிருஷ்ண சங்க இந்துக்கல்லூரியில் ஆற்றியவர் பெ. பொ. சிவசேகரனார். உத்தம மாணவனாய், உயர் ஆசிரியராய், துறவிகளின் சீடராய்த் திருக்கோணமலையில் வாழ்ந்த பெ. பொ. சி. அவர்கள் இராமக்கிருஷ்ண பரமஹம்சர் அடிச்சுவட்டைப் பின் பற்றியவராவார்.

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழவை இந்துக் கல்லூரி சிறப்பாக நடத்துவதற்கு உறுதுணையாக உழைத்த பெரியார்களுள் சிவசேகரனாரும் ஒருவர்.

திருக்கோணமலை மாணவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் சாதி, சமய வேறுபாடின்றி விழாவெடுத்தும் பல விதப் போட்டிகளை நடத்தியும் பரமஹம்ஸ தேவரின் ஆத்மீகச் சிந்தனைகளை அலையலையாக எழுப்பிய ஓர் எழுச்சியாளன்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள் கையைக் கடைப்பிடித்த சிவசேகரனார் சைவப்பணிகளின் சிகரம் எனக் கூறலாம். எனினும் ஒவ்வொரு மனிதனும் உண்மைச் சைவனாய், புத்தனாய், கிறீஸ்தவனாய், இஸ் லாமியனாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்ற பரமஹம்ஸ தேவரின் ஆன்மீகக் கொள்கையை அசையாது பற்றியவரென்பதை அவரைச் சகல மத ஆசிரியர்களும் மாணவர்களும் தமது குருவாக, இனிய சகோதரராக, அன் பின் நண்பனாக ஏற்றுக் கொண்டதிலிருந்து புலனாகின்றது. அன்றியும் அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட கல்லூரி மாணவர்கள் அவரது திருவடிக்கு அஞ்சலி செய்து ஊர்வலத்தில் சோகமே மயமான காட்சியில் கலந்து கொண் டமை அவரின் பரந்த சமய வாழ்வின் பேருண்மைக்குச் சான்று

சிறந்த கணித ஆசிரியராய், நற்றமிழ்ப் புலவராய், எவ்வகைப் பாடங்களையும் அவ்வவ்வியல்புக் கேற்றதாகக் கற்பிக்கும் நல்லாசிரியராகத் திகழ்ந்த சிவசேகரனாரின் அறிவு, ஆற்றல் என்பன பரமஹம்ஸ தேவரின் பாதங்களைச் சரணடைந்த பயனேயாம் என்று கூறுவதில் நாமும் பரம ஹம்ஸ பக்தராய் இப்பாரினில் வாழவேண்டுமென்ற துணிவை ஏற்படுத்துகின்றது.

இந்துக் கல்லூரி மண்டபம் கவியரங்கு, கருத் தரங்கு, விவாத அரங்கு, சொற்பொழிவுகள் என்பன மூலம் எத்தனையோ முறை அவர் குரலைச் செவிமடுத்திருக்கும். அன்னாரின் பிரிவால் இம்மண்டபம் சோபையிழந்து காணப் படுவது போல் நமக்குத் தோன்றுகின்றது. பூதவுடம்பை நீத்த சிவசேகரனார் புகழுடம்புடன் திருக்கோணமலையில் விசேடமாக இந்துக்கல்லூரியில் ஒளிவீசிக் கொண்டேயிருப் பார்..........

திருக்கோணமலை இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ச. அம்பலவாணர் அவர்கள் B. Sc. அவர் களின் செய்தியில் ஒரு சிறு பகுதி.

அன்பர் சிவசேகரத்தின் சிநேகிதம் ஐம்பது ஆண்டு களாகக் கிடைத்த பாக்கியம் எனக்குண்டு. அவர் தனக் கும், இறைவனுக்கும் உள்ள இணைப்பை கணத்திற்குக்

கணம் உணர்ந்து வாழ எத்தனித்தவர்களில் ஒருவராவார். ஆகவே அவரில் ஒரு மலர்ச்சி எப்போதும் தோன்றும். வயது போனாலும், இளமை போகவில்லை. சுயநலத்தை வெறுப் பார். ஆனால் மற்றவர்களின் துன்பச் சுமையை இயன்றளவு குறைப்பதற்கு தன்னுடைய தோளைக் கொடுத்துதவ முயல் வது அவரின் இயல்பாகும். எளிய வாழ்க்கையில், அரிய ஆழ்ந்த சிந்தனைகளை ஆக்கும் ஆற்றல் இவரில் இயற்கை..

திருக்கோணமலை இந்துக்கல்லூரி முன்னாள் அதி பர் திரு. செ. இளையதம்பி அவர்கள் ஜே. பி. அருளிய "சிறந்தோன் அன்பிற் சிவசேகரனே" என்னும் தலையங்கத் தில் அருளிய உரையில் ஒருசில பகுதிகள்.

நெருனலுளனொருவன் இன்றில்லை என்றோதும் பெருமையுடையதாய இவ்வையகத்தே தம் பெருவிரற் தடங்களைப் பொறித்துச் சென்ற பெரியார் வரிசையில் கழகப் புலவர் பொன். சிவசேகரனார் வைத்தெண்ணற்பாலர். திருவள்ளுவர் கழகத்தை அமைத்து முதலாவது அகில இலங்கைத் திருக்குறள் மகா நாட்டைத் திருக்கோணமலை யில் 28-05-1993 தொடக்கம் அடுத்து மூன்று தினங்களாக நடத்தி நின்ற இப்பெரியார் தனது அருட்குரு முத்தமிழ் முனிவர் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் அடிச்சுவட் டைத் தொடர்ந்தவராவார். கம்பன் கழகத்தை அமைத்துக் கம்பனுக்கு விழா வெடுத்த தடத்தையும் இப்புனித தலத் தில் பொறித்தனர். இவர் யாத்த ஒரு நூறு பாக்களடங்கிய காளி கவிமாலை இவரது கவித்திறனையும் சமயப்பற்றை யும் நிலை நாட்டிக் காளி அம்பாளின் திருவதனத்தில் தாண்டவமாடித் தழைத்து நிற்கின்றது. -இது என்றுமே இவன் நிலையாய் நிற்கும். இன்னும் இவர் பொறித்துச் சென்ற தடங்கள் பலப்பல விரிக்கின் பெருகுமென விடுத்தாம். இவர் தடங்காத்தல் இவர் தமர் கடனே.

திருக்கோணமலையில் இ. கி. ச. இந்துக்கல்லூரி யின் புனரமைப்பு நிருவாகப் பணியை மேற் கொள்ளச் சென்ற முதனாள்.

நுங்கள் தலையாய கடன் இந்துக் கல்லூரியை இந்த மாவட்டத்தில் முதனிலைக் கல்விக் கூடமாக்குவதே. நாமும் நம்மவரனைவருமே இப்பணிக்குச் சகல ஒத்துழைப் பையும் வழங்கக் கங்கணங்கட்டி நிற்கின்றோம். திருமலை

வாழ் சிவனும் காளியம்பாளும் திருவருள் காப்பாராக என்ற படி கோணமலையான் கோயிலை நோக்கி இருங்கரங் கூப்பிக் காளியம்பாள் பக்கம் நோக்கி ஆனந்தக் கண்ணீர் மல்கிய விழிகளுடன் நின்ற சிவசேகரனார் என்றுமே எனது மனக் கண்களை விட்டு அகன்றதும் இல்லை. அகலப் போவதுமில்லை. திருக்கோணமலை மக்கள் கல்வி வளர்ச்சி யில் இவர் கொண்டிருந்த கவனத்துக்கும் சிரத்தைக்கும் வேறு சான்று வேண்டாம்.

மாணாக்கரை மக்களாகப் பேணிய இவர்மீது இந்துக் கல்லூரி மாணவர்குலம் நீங்காத அன்பு கொண் டுள்ளது...........

தமிழும் சைவமும் போற்றிய இவர் பெரு நாமம் நட்டார் நாவழி நாற்றிசையும் இசைக்கப் படுதலின் இவர் யாவர்க்குங் கேளிரானார். ஆதலினால் சிவசேகரனார் அன்று தோன்றி இன்று மறைந்தாரென்னாது, தோன்றி இருக்குமாறி ருந்து வாழ்வாங்கு வாழ்ந்து வாழ வைத்துத் தமது தடத்தை அழியாது பொறித்துப் பொன்றாப் புகழ் பூவுலகிருக்கப் பூதவுடல் பொன்றினாரென்போம்.

திருக்கோணமலை சட்டத்தரணி திரு. பொ. இரங்க நாதன் அவர்கள் ஜே. பி. "இலக்கிய நண்பன்" என்னும் தலைப்பிலருளிய ஒருபகுதி

தமிழ் அறிஞனாக, நல்லாசிரியனாகப் புகழ் பூத்த துடன் இறைவன் புகழ்பாடி அருள் நெறியில் ஓர் ஈக்குத் தானும் தீங்கு இழைக்காது வாழ்ந்த பெருமகனார் சிவசே கரம். இலைகள் சருகாவதும் பூக்கள் வாடி வீழ்வதும் போல் மனிதனும் தனக்குரிய வேளை வரும்போது உலகைப் பிரிவது ஒரு நியதி.

எனது இலக்கிய நண்பனும் ஆசானும் இன்று எம் மிடையே இல்லை. எனினும் அவர் நினைவு உண்டு. சக பாடிகளின் உள்ளங்களில் வாழ்வது மரணம் அல்லவே.

திருக்கோணமலை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் திரு. கா. இரத்தினலிங்கம் அவர்கள் பேரறிஞர் பெ. பொ. சி. என்னும் தலைப்பில்....

திருக்கோணமலை கலை இலக்கிய மன்றத்தினைப் பொறுத்தவரை கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நாம் நடாத்திய இலக்கிய விழாக்களுக்கும் கூட்டங்களுக்கும் தலைமை தாங்கியதுடன் மட்டுமன்றி, எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அமரர் பெ. பொ. சி. அவர்களை என்றென்றும் மறக்க முடியாது.

திருக்கோணமலை புனிதவளனார் வித்தியாலய அதிபரும் நகராட்சி மன்ற முன்னாள் உபதலைவருமான தாபி - சுப்பிரமணியம் அவர்களின் பாவஞ்சலி.

## பெருங் கவிக்கோ பெ. பொ. சி.

பெருங்கவிக்கோ சிவசேகரனார் பேராற்று நண்ணீர் அப்
பெருங்கவிக்கோ அஞ்சலி? பெருகுது கண்ணீர்.

சலங்கையின் காவியச் சிலம்புச் செல்வர் ம. பொ. சி எனின்
இலங்கையில் காவியச் சிந்தனைச் செல்வர் பெ. பொ. சி.

பழகப்பழகப் பாநயம் கேட்ட பாவலர் சேர்ந்து
கழகப் புலவர் கேடயம் தந்து பெற்றார் பெருமை.

பாநயம் விளக்க இளம் பாலர்களை ஒன்று சேர்த்து
நாணயம் கேட்காமலே நாநயம் தந்த வள்ளல்.

இந்துமா கல்லூரியில் இவரளித்த போதனைகள்
இந்துமா சமுத்திரம் இணையற்ற சாதனைகள்

தலைமைக்கு அழைப்பு சடுதியாய்த் தந்தாலும்
நிலைமைக்கு ஏற்க சமாளிக்கும் சான்றோன்.

வகுத்து அவர் யாத்த கவிமலர்கள் எமதுடமை
தொகுத்து புகழ் பூக்க நூலாக்கல் எம்கடமை.

## அருளன்பர் சிவசேகரனார்
## இளைஞர் அருள்நெறி மன்றத்தினர்
திருக்கோணமலை

குருமணி தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமான் அவர்களின் திருவுள்ளத்தின் அன்புக்கும் நல்லாதரவுக்கும் உரியவராக விளங்கியவர் நமது சிவசேகரனார் ஐயா அவர்கள்.

ஐயா அவர்களின் அறிவுத் திறமைக்கு ஒரு நற்சான்றாக அமைந்துள்ளது மன்றத்தின் வெள்ளிவிழா மலரில் இடம் பெற்றுள்ள ஆங்கில நாட்டுக் கலாநிதி. ஈவ்ளின் வூட் என்னும் பெரியார் அவர்களின் "ஆடவல்லான்" (நடராஜா) என்ற ஆங்கிலக் கவிதையின் தமிழ் வடிவத்தைத் தந்துதவியவர் நமது சிவசேகரனார் ஐயா அவர்களே. மன்றத்தின் துவக்கமே ஐயா அவர்களின் இல்லமாகிய "தனசக்தியிலிருந்து தான் என்பதைப் பெருமையுடன் நினைவு கொள்ள முடிகின்றது."

### மன்றத்தின் ஏழு ஆண்டுகால அறிக்கையிலிருந்து

இறைவன் திருவருட் பெருங்கருணையுடனும், அடிகளார் அவர்களின் அருளாசிகளுடனும், இளைஞர் அருள் நெறி மன்றம் என்னும் திருப்பெயருடன் முதலாவது துவக்க அவையினை, 09-01-55ஆம் நாளன்று உயர் திரு. பெ. பொ. சிவசேகரனார் அவர்களின் இல்லத்தில், திருவாட்டி க. இராச நாயகி அவர்கள் தலைமையின் கீழ்க் கூடினோம்.

### அருள் நெறி ஆர்வலர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் தமிழ்நாடு

ஆசிரியர் சிவசேகரன் புரவலன் போலும் தோற்றமுடையவர் இல்லை, தோற்றத்தில் மட்டுமல்ல அடையா

நெடுங்கதவுடையதாக அவர்தம் இல்லம் திகழும். விருந் தோம்புதல் அவர்தம் பிறவிக்குணம்!

நல்ல அன்பர்; அருள் நெறி ஆர்வலர்; முத்தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டுப் பணிசெய்தவர். திருக்கோணமலைத் தமிழ் மக்களுக்கு அவர் உற்ற துணையாக அமைந்திருந் தார்.........ஆசிரியர் சிவசேகரனாரின் நினைவை அவர் நமக் கென்று விட்டுச் சென்ற பணிகளைச் செய்யும் நெறியில் நினைவு கூர்வமாக!

சாந்தியுரை

**ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜி அவர்கள்**

சிவயோக சமாஜம் திருக்கோணமலை

கழகப் புலவரென்று மக்களால் பெருமதிப்புடன் அழைக்கப்பட்டு வந்த சிவசேகரனார் கற்றறிவதிலும் கற்றுக் கொடுப்பதிலும் வல்லுனராயிருந்தார். நல்லறிஞர் ஒருவருக் கிருக்கவேண்டிய உள்ளப் பண்புகளாலும் உத்தம ஆசிரியர் ஒருவருக்கிருக்க வேண்டிய ஆசிரியத் திறமை களாலும் திருக்கோணமலை மக்கள் மத்தியிலும் மாணாக்கர் களுக்கு கிடையிலும் சிறந்து விளங்கினார். இலக்கியத் துறையிலும் சமய சமுதாய சேவையிலும் தன்னுடைய அறிவாற்றலைச் சமுதாயத்திற்குப் பெருமளவில் பயன் படுத்திக் கொண்டிருந்தார். சாந்த சொரூபியாகிய இப்புலவர் ஆத்மார்த்தமான அன்புக் கசிவுடன் தனது அறிவுக் கனி களை மிக நுட்பமான முறையில் பிழந்து கொடுக்கும் அபூர்வ ஆற்றலுடையவராயிருந்தார். ஆசார சீலராயிருந்த இப்புலவர்மணி பல ஸ்தாபனங்கள் மூலமும் தனிப்பட்ட ரீதியிலும் ஆரவாரமின்றி அடக்கமாயிருந்து பல பணி களையும் ஆற்றி மறைந்தார். நற்குணம் நிறைந்த இந்த நல்லறிவாளனுடைய தேகம் நீங்கிய ஆத்மா என்றும் சிவ பதமடைந்து அதிலேயே லயப்பட்டிருப்பதாக.

## பெரியார் சிவசேகரனார்

திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்
தலைவர். தமிழ்நாடு சட்டமன்ற மேலவை சென்னை

திருக்கோணமலை திருவள்ளுவர் கழகத்தை அமைத்து அக்கழகத்தின் புலவராக இருந்து தமிழுக்கு அருந் தொண்டாற்றிய பெரியார் பெ. பொ. சிவசேகரனார் இயற்கை எய்திய செய்தி அறிந்து வருந்துகின்றேன். திருக் கோணமலையில் அவர் நடத்திய அனைத்து இலங்கை திருக்குறள் மகாநாட்டில் நான் கலந்து கொண்டது. இன்ற ளவில் எனது நினைவில் பசுமையாக இருக்கிறது. அவர் பழகுவதற்கேற்ற பண்பாளர்.

.......... திருக்குறளுக்குத் தொண்டாற்றியவர்கள் சாவதில்லை கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரனாரும் நமது நினைவில் என்றென்றும் நிலைத்திருப்பார். அவருக்காக நினைவுமலர் ஒன்று வெளியிடுவது எனக்கு ஆறுதலைத் தருகின்றது. அவர் புகழை இந்த மலர் மூலம் நிலைநிறுத்த முன் வந்துள்ள நண்பர்களைப் பாராட்டுகின்றேன்.

## உண்மைக் கவியே நீ வாழ்க!
## கவியோத எமலோகம் பறந்திட்டாயோ?

**நாவலர் ஈழமேகப் புலவர்**
**ஜனாப். எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி ஜே. பி. அவர்கள்**

### சம்மாந்துறை

கழகப்புவர் திருமலை தந்த
பேப்போ சிவசேகரனாரின்
மறவை யெண்ணித் தமிழ்ப்புலவன்
மனமே யுருகிக் கவிமாலை
இதனைப் பரிசாய் அவராத்மா
ஏற்கப் பணிந்து உருகின்ற
ஈழமேக நாவலனின்
இனிய நன்றிக் கடனாகும்.

பக்கீர்த் தம்பி என வென்னை
பண்பு குழைந்த உருக்கத்தால்
நக்கீரன் போல் வாழ் கென்று
நவிலும் சிவசேகரனாரை
என்று இனிமேல் 'காண்பேனோ

காளி கவி மாலையெனும் ஏடுதந்த
கவிமன்னா திருமலையாள் ஈன்ற முத்தே
பேழைக்குள் உனை வைத்துத் தமிழால் மூடிப்
பெட்டகத்துள் மறைந்தாலும் மறக்கேலுமோ
ஏழைக்குக் கவியோதக் கற்றுத் தந்த
என் குருவே! உனையென்று காண்பேனையா
கழகத்துப் புலவனே கற்கண்டாகக்
கவியோத எமலோகம் பறந்திட்டாயோ.

கழகப்புலவர் பெ. பொ. சி. யின் முதலாவது ஆண்டு நிறைவை யொட்டி டாக்டர் உயர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஒரு நினைவுக் கட்டுரையைப் பத்திரிகையிற் பிரசுரித்தார். இப் பத்திரிகைச் செய்தி கிடைத்ததும் பெ. பொ. சி. யின் உற்ற நண்பன் எஸ். டி. சிவநாயகமவர்கள், டாக்டர். திரு. ராமலிங்கம் ஆகியோர்; அக்காலத்தில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த உயர் திரு. இராசதுரை மூலமாக பெ. பொ. சி. யின் அறக்கட்டளை நிறுவப்பட்டது. அதற்காக ஒருசபையும் அமைக்கப்பட்டது. அவ்வளவு தான். டாக்டர். ச. இராமச்சந்திரன், டாக்டர். சி. அருள்ராமலிங்கம், திரு. எஸ். டி. சிவநாயகம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர் கௌரவ இராசதுரை ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

19 - 05 - 83 இல் மறைந்த பெ. பொ. சி யின் ஆக்கங்கள் வெளி வரவேண்டும் என்று பெரியார்கள் பலர் விரும்பினார்கள் என்பதை அவர்கள் அளித்த எழுத்துரை

மூலம் வெளிப்படையாயுள்ளது. பதினைந்து ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. தன்னைப் பாராட்டிப் பட்டமும் பதக்கமும் பொன்னாடையும் கௌரவமுளிக்க விரும்பாத பெ. பொ. சி அவரது குடும்பத்தினர் விழாவெடுப்பது பெ. பொ. சி யின் உண்மை உள்ள உணர்வுக்கும் நினை வுக்கும் களங்க மேற்படுத்து மென்ற அச்சமும் ..........

யாரிடமும் சென்று இரந்து பொருள் வேண்டிப் பணி யாற்றாத பெ. பொ. சி யின் ஆக்கங்களை வெளியிடுவதற்கு நாம் பொருளுதவி வேண்டிப் பெற அஞ்சியும் ............

தனது எண்ணங்கள் சிந்தனைகள் உருவாகும் அந்த நிமிடம் கிடைக்கும் கடதாசியிலோ புத்தகத்திலோ எழுதிய ஆக்கங்களைச் சேகரிப்போமா என்ற சந்தேகத்தா லும் காலந்தாழ்த்த வேண்டிய தாயிற்று.

கழகப்புலவர் பெ. பொ. சி யின் மகனார் ஓமானில் உத்தியோகம் புரிவதாலும், தனது தந்தையார் தன் ஆக்க வேலைகளுக்குத் தனிப்பட்டவர்களிடமோ அல்லது நிறுவ னத்தாரிடமோ உதவி பெறாத நிலையில் தகப்பனாரின் ஆக்க வேலைகள் கவிதைத் தொகுப்பு வெளி வரவிரும்பி னால், தம்மையொறுத்து தாமே பொருளாதாரப் பொறுப்பை ஏற்க முன் வந்ததினாலும், நமக்குத் துணிபேற்பட்டது.

கலாவிநோதன் த. சித்தி அமரசிங்கம் இருக்கிறாரே தன் நெஞ்சில் துணிந்து எடுத்த சிந்தனையைச் செயலாக் கும் உறுதி பூண்டவர். கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக நம்மைச் சந்திக்கும் போதெல்லாம் கழகப்புலவர் ஆக்கம் எந்நாள் வெளி வரும். தனது பொறுப்பில் அப்பணி நடக்க வேண்டுமென்ற நியதியில்லை. யாராவது கட்டாயம் தவறாது செய்ய வேண்டுமென்று நினைவூட்டுவார்; ஊக்குவிப்பார். நமது ஊக்கக் குறைவைக் கண்டு கண்டிப்பது போல் தொனியையும் மாற்றிக் கொள்வார். அவரது ஊக்க உள்ளம் நம்மைச் செயலாற்றச் செய்தது. அங்குமிங்குமாகக் கிடந்த கடதாசித் துண்டுகளிலும் காகித உறைகளிலும் கணிதப் பாட வினாத்தாள்களிலும் பெ. பொ. சி யின் தனித்தன்மை வாழ்ந்த எழுத்துக்களைப் பொறுக்கியெடுத்தோம். தன்புகழை

விரும்பியிருந்தாரென்றால் இவையெல்லாம் ஒழுங்கான முறையில் உருவாக்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கு மல்லவா. எத்தனையெத்தனை மேடைகளில் தோன்றிய போது எடுத்த புகைப்படங்களோ, துறவிகள், ஞானியர்க ளுடன் சேர்ந்து அழைத்துத் திரிந்த புகைப்படங்களோ, கம்பன் கழகத்தால் ஞாயிறு தோறும் மாணாக்கர்களுக்கு கம்பராமாயணம் பாடம் சொல்லிக் கொடுத்து, போட்டி நடாத்திய படங்களோ இன்னும் எவ்வெவ் வகையில் எடுத்த புகைப்படங்களோ சேகரித்து வைத்தாரில்லை.

இந்த நிலையில் கண்டெடுத்த கவிதைகளை மிகச் சிரமத்துடன் பிரதிபண்ண வேண்டியுள்ள பெரும் பொறுப்பு ஏற்பட்டது. பென்சிலால் ஏதோ எழுதப்பட்ட கடதாசியில் பெ. பொ. சி பேனாவால் கவிதையாக்கியிருப்பார். கணித உருவங்களடங்கிய வினாத்தாளில் கவிதையிருக்கும். நமது சிற்றறிவுக் கெட்டியவாறு பிரதிபண்ண வேண்டிய கடமையைச் செய்ய வேண்டியதாயிற்று.

தலையங்கமில்லா கவிதைகள், திகதியில்லாக் கவிதைகள் சிற்றறிவால் கூர்ந்து பிரதி பண்ணிய கவிதைத் தொகுப்பு உருவாகியது.

கவிதைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமே. ஆம்! பெ. பொ. சி யின் கவிதைகளை ஆங்காங்கு பெறப்பெற்றுச் சுவைத்த 'தாமரைத் தீவான்' உயர் திரு. இராசேந்திரம் ஐயா, (ஓய்வு பெற்ற அதிபர் - யாப்பிலக்கணமறிந்தவர்) நமது நினைவுக்கு வந்தது. அவர் நம்மை அடிக்கடி வந்து சந் திப்பது வழக்கம். பெரிய கட்டை அவர் கையிற் சேர்த்தோம். அப்போது கவனித்தோம், அவர் முகமலர்ச்சியை. தன்னை நாடி வந்த பெரும்பாக்கியமாக அகமும் முகமும் ஒருங்கிணைந்து பிரகாசித்து. ஒரு சில வாரங்களான பின் சரியான முறையில் தொகுத்தருளிய கடமையுணர்வையும் ஆனந்தத்தையும் அள்ளிப் பருகினோம். ஐயா அவர்களே! கழகப்புலவர் இவ்வுலகில் இருந்திருந்தால் தங்கள் கவிதை களை நூல்வடிவில் அரங்கேற்றி மகிழ்திருப்பாரன்றோ. தாங்கள் இப்பணியை நும்பணியாக ஏற்று முழுமனதுடனும் ஆர்வத்து டனும் நூல்வடிவுக்கு உருவமமைத்த உங்கள் பணியின் பெருமைக்கு நமது பணிவும் அன்பும் ஒருங்கிணைந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

இப்போ மகன் அமரசிங்கத்தைக் காணும் பயம் நீங்கி விட்டது. எப்போ சந்திப்போம் என்ற துணிவு. வந்தார். நீட் டினோம். பெ. பொ. சியின் ஆக்கத்தை. அடுத்த கதை இல்லை. அகமகிழ்ந்தார். தொகுப்பு உருவாக்கப்படும் பணி வேகமாக நடைபெற்றது. மகன் அமரசிங்ககத்தின் அயராத தூண்டுதல் இல்லையென்றால் பெ. பொ. சியின் கவிதை தொகுப்பு வெளியீடுமில்லையெனலாம். பெ. பொ. சி வேண்டி நின்ற இளஞ்சமுதாயம் நீர் தானோ. நன்றி மறப்பது நன் நன்று. நம் உள்ளம் துடித்ததோ உமது சேவையால் பெ. பொ. சி காண விழைந்த இளஞ்சந்ததியினரின் உத் வேகம் நிறைவு பெறுகின்றதல்லவா? கழகப்புலவர் நம் கனவில் தோன்றி "மகன் அமரசிங்கமே, என் கவிதைகளை ஏன் தொகுத்து அமைத்தாய்?" என்று வினாவினால் யாது விடை பகாவீர்கள் அவ்விடையை ஆதாரமாகக் கொண்டு நமது உளம் பூரித்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

நாம் பெ. பொ. சியைப் பற்றிக் கூறுவதிலும் அவர் காலத்துப் பெரியார்கள் கழகப்புலவரின் பண்பு, அறிவு, ஆற்றல், அடக்கம், தன்னலமற்ற சேவை, மாணாக்கர் இளம்சமுதாயருக்கான பணி இவற்றை அன்னாரின் நினைவு மலரில் பதித்துள்ள ஒரு சிலபகுதிகள் மூலம் யாம் இந்த பெ. பொ. சியை வெளிப்படுத்தியுள்ளோம். இதனால் பெ. பொ. சியின் கவிதை பெருமையடைகின்றதினால் பலபக்கங்கள் கொண்டு எண்ணியிருந்த எண்ணிக்கைக்கு மித மிஞ்சிப் போயிற்றதே என்ற குறையும் எம் மேல் சுமத்தப்படும். மலருக்கு மணம் வேண்டும் ஆகவே அவர் காலத்தில் உள்ளவர்களின் வாசனையும் ஒருங்கு சேர வேண்டும். என்ற துணிவுண்டு. அவர் நினைவுமலருக்குச் செய்திகள னுப்பிய யாவரையும் அவற்றில் சில செய்தி உரைகளை எடுத்து இம்மலரிற் கோர்க்க உதவிய சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பெ. பொ. சியின் கவிதை தொகுப்பு ஆக்கி மக்களுக்குச் சமர்ப்பிக்கும் பணியை மிக மிக சிரமப்பட்டு தன் தூய சேவையாக ஏற்றுப் பூரணப்படுத்தும் மகன் அமரசிங்கம் தன் பணியை இன்றுவரை இயன்றளவு பூரணப்படுத்த உதவிய சகலருக்கும் நன்றி தெரிவிப்பார்.

ஏழு வயதில் தந்தையையிழந்த சிவசேகரனான ஒழுக்க சீலராகவும் அறிவு ஆற்றல் நிரம்பிய அடக்கமான பணி யாளனாகவும் வளர்த்தெடுத்த அன்னைக்கும், என்றென்றும் எங்கெங்கும் சபைநடுவே நிமிர்ந்து நிற்கத்தக்க பரிபக் குவத்தை இளம் பராயந் தொட்டு ஊட்டி வளர்த்தெடுத்த மாமனாருக்கும். இலக்கண இலக்கிய ஆராய்ச்சித் துறை யிலும் இராமக்கிருஷ்ண சங்க ஈடுபாட்டில் இழுத்தெடுத்த அன்னாரின் அருட்குரு சுவாமி விபுலாந்த அடிகளாருக்கும், திருவருட்பா அளித்த வள்ளலாருக்கும், திருக்குறள் தந்த வள்ளுவருக்கும், மகா காவியமாம் கம்பராமயணத்தை அள்ளி வழங்கிய கம்பன் கவிச்சக்கரவர்த்திக்கும், பெ. பொ. சியின் கவிதைமலரை சமர்ப்பித்து ஆனந்த மடைகின்றோம்.

இம்மலர் அவர் திறமைகளைக் காட்டுவது ஒருபுற மிருக்க மாணவர்கள், ஆசிரியர்கள், இளஞ்சமுதாயத்தின ருக்கு ஒரு வேண்டு கோளை விடுப்பதாக அமையவேண்டு மென்பதே பெரும் விருப்பம்.

கழகப்புலவர் மாணவர்களுடனும் இளம் சமுதாயத்தி னருடனும் கலந்து நின்று பெருமிதமடைந்தார். அவர்கள் உயர்ச்சி தன் ஊதியம் என கொண்டவர். அவர் இறைவனடி சேர்ந்து பதினைந்து வருடங்களாகியும் மௌனமே அவருக் குச் சூட்டும் அணிகலமாக உள்ளது.

றஸ்கின் எழுதிய கடையனுக்கு கடைத்தேற்றம் (Unto the Last) எழுதிய நூல் மகாத்மா காந்திஜியை உலகுக்கு வாரி வழங்கியது. அது போல் கழகப் புலவர் பெ. பொ. சியின் பணியை மாணாக்கர்கள் அறியவும் அராச்சி செய்யவும் தனித்துவமான உள்ளம் படைத்த கோட்டக் கல்வி பிரதிக்கல்வி பணிப்பாளர் உயர் திரு. தங்கராஜா துடித்துச் செயற்படுத்தினார். இன்றைய மாணவர் சமுகம், கல்விப் பணிப்பாளரால் திருக்கோணமலை பெ. பொ. சியை அறிய நேர்ந்தது. அன்னாருக்கு ஆனந்தமான நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருக்கோணமலை மாவட்ட மாணவர்கள் திருக்குறளை கருத்தமையப் படித்து என்றோ ஓர் சந்தர்ப்பத்தில் திருக்குறள் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று மாதந்தோறும் மாணவர் மத்தியில் திருக்குறள் போட்டிகளை வைத்து வள்ளுவர் விழாவெடுதல், பரிசில்கள் வழங்கிய குறளமுதம் உயர் திரு. கா. விநாயகசோதி ஐயர் அவர்களை மறவாது நன்றிக் கடன் செய்ய வேண்டுமென்று மாணவர்களை வழி நடத்தும் ஆசான்களை வேண்டுகின்றோம்.

# வெளியீட்டுரை

கழகப்புலவர் பெ. பொ. சி கவிதைத் தொகுப்பு கவிதை உலகிற்குக் கிடைத்த பெரும் சொத்து.

திருக்கோணமலை கலை இலக்கிய விசயதானங்களைச் சேகரித்துவைப்பதில் நான்தான் கில்லாடி என்று எண்ணி யிருந்தேன். பெ. பொ. சி. யின் கவிதைகளையும் சேர்த்து வைத்திருந்தேன். ஆனால் திருமதி. இராசநாயகி கந்தையா அவர்கள் தமது சகோதரன் பெ. பொ. சி யின் கவிதைத் தொகுப்பை என்னிடம் கையளித்தபோதுதான் மலைத்தேன். "இத்தொகுப்பு எல்லோர்கைக்கும் கிட்ட வேண்டும். எனவே ஐம்பது ரூபாவிற்குக் கூடாமல் விலை இருக்க வேண்டும்", என்று என்னை அவர்கள் கேட்டுக் கொண்டபோது திகைத்தேன்.

250 பக்கங்களுக்குக் கூடுதலாக உள்ள இக்கவிதைத் தொகுப்பை அச்சிட்டு ஐம்பது ரூபாவிற்குக் கொடுத்தால் பெரிய அளவு பணம் துண்டு விழுமே எனத்துவண்டேன்.

"நீர் கவலைப்பட வேண்டியதில்லை. உமது பணி யில் - முயற்சியில் நீர் நட்டமடையாத வகையில் உமக்குப் பொருள் வந்து சேரும். நீர் தொகுப்பைச் சிறப்பாக செய்யும்" என்றார் காந்தி ஐயா அவர்கள்.

அச்சம் தவிர்ந்தது. ஆர்வம் பிறந்தது. இச்சையோடு ஏற்றேன். ஈற்றில் வெற்றியே என உடன் செயற்பட்டேன். அந்த வகையில் என்னிடமில்லாத ஏராளமான கவிதைக ளைத் தொகுத்துத் தந்த திருமதி. இராசநாயகி கந்தையா ஆசிரியை அவர்கட்கும், குறையாத செல்வத்தை மனம் குன்றாமல் வழங்கிய பெ. பொ. சி யின் மூத்தமகன் தனசேகரனுக்கும் அவர் தம் இல்லத்தரசியார்க்கும் எம் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம்.

கவிதைகளைக் குறைதிருத்தி, நிரைப்படுத்தி, நெறிப் படுத்தித் தந்த நல் ஆசான் "தாமரைத்தீவான்" அவர்களுக் கும் எம் நன்றி.

இம் மலரில் இடம்பெற்றுள்ள நிழற்படங்கள் மட்டு மின்றி, பெ. பொ. சி யின் நிகழ்வுகளின் தேதி மாதம் ஆண்டு அனைத்தையும் சேகரித்துத் தந்த, திருக்கோணமலையின் நீண்ட நெடுங்கால புகைப்படக் கலைஞரான மதிப்பிற்குரிய நாகராஜா கணபதிப்பிள்ளை அண்ணன் அவர்கட்கும் எம் நன்றிகள்.

இத் தொகுப்பிற்கு ஆசியுரை, அணிந்துரை நல்கிய அனைவர்க்கும் எமது நன்றிகள்.

தபால், தந்தி சேவையில் ஏற்பட்ட சீர்குலைவின் காரணமாக மட்டுநகர், கொழும்பு, இந்தியா ஆகிய இடங்க ளில் இருந்து கிடைக்கப்படவேண்டிய ஆசிச் செய்திகள் கிடைக்கப்பெறாமை வருத்தத்திற்குரியதே. இருந்தும் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

அட்டை வடிவமைத்துத் தந்த தாபிக்கும், சில பக்கங் களைச் சரவைபார்த்துதவிய அவர் தம் பாரியாருக்கும், அழகுற அச்சாக்கிய கணேசா அச்சகத்திற்கும், குறிப்பாக அதன் ஊழியர்களுக்கும் எமது நன்றிகள்.

இத் தொகுப்பை என் மூலம் வெளியீடு செய்விக்க வேண்டுமென்ற பேரவாவால் அனைத்துக் கவிதைகளையும் சேர்த்துக் கோர்த்துத் திருத்தி நிரைப்படுத்தி - நிதியோடு தந்த இராசநாயகி - காந்தி ஐயா தம்பதியினருக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகள்.

கழகப்புலவர். பெ. பொ. சி யார்? என்பதை இன் றைய பாடசாலை மாணவர்கள் அறியும் பொருட்டு பெ. பொ.சி நினைவுக் கவிதைப் போட்டிகளைப் பாடசாலை தோறும்

நடாத்தி ஒரு எழுச்சியை ஊட்டிய பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. தங்கராசா அவர்களின் மண்பற்றையும், பெரியாரைக் கனிம் பண்ணும் பண்பையும் நாம் நினைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அவருக்கும் எமது நன்றிகள்.

பாடசாலையில் மட்டுமன்றி அதிகாலை 4.30 மணிக்கு அவரது இல்லத்தில் புறநானூறு படிக்கச் சென்ற மாணவர்களுள் நானும் ஒருவன் (இலவசம்தான்). அந்த வகையில் இத் தொகுப்பை என் மூலம் வெளிட வைத்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுவதேடு என் பணி சிறப்புற அமைய வேண்டும் என்று "ஊர்மிளை"போல், அனைத்திலும் ஒத்துழைத்த என் மனைவிக்கும் நன்றி கூறி விடை பெறு முன்.

எமது வெளியீடுகளை, வெளியிட்டு அறிமுகப்படுத்தி வரும் திருக்கோணமலை கலைவாணி நாடக மன்றம் திருக்கோணமலை முத்தமிழ் வளர்கலை மன்றம் ஆகியவற்றிற்கும், எமது மன மார்ந்த நன்றிகளைக் கூறி விடை பெறுகின்றோம்.

நன்றி

21, ஔவையார் வீதி,
திருக்கோணலை.
10 - 05 - 1998

**த. சித்தி அமரசிங்கம்**
ஈழத்து இலக்கிய சேவை

01



# ஒருவன்

ஒன்றென உலகம் போற்றும்
ஒப்பிலா ஒருவன் தில்லை
மன்றுளே ஆடுங் கூத்தன்;
மறையொரு நான்கும் ஏத்தும்
கொன்றையங் கண்ணி வேய்ந்த
கோண மாமலையான் வாழும்
குன்றினைத் தொழுவார் தம்மை
கொடுவினை அணுகா தம்மா.

02

# (கோவைத்) தமிழ் அருள்வாய்!

நாவுக் கரசி நலந்தரு நாயகி நாவினின்று
பாவுக்கு வேண்டிய பண்பெலாந் தந்தருள் பாவரசி
தேவர்க் கரியோன் திருக்கோண மாமலைச் செஞ்சுடர்மேல்
கோவைத் தமிழ் பாடக் கொண்டருள் வாயருட் கோகிலமே.

வேலும் மயிலுந் துணையென்று மாதர்கள் வேண்டிநின்று
பாலும் பழமுஞ் சொரியும் வில்லூன்றிப் பதிமுருகா
ஆலுண்ட கண்டன் திருக்கோண மாமலை அண்ணலவன்
மேலுன் னடியேன் திருக்கோவை பாடுந் திறமெளிதே.!

நம்பித் தொழுவார் நலம்பெறு வார்நின் நளினமலர்
பம்பிடக் காண்பர்சீர்ப் பத்திர காளிப் பராபரையே
உம்பர்க்கு மெட்டாத் திருக்கோண மாமலை உத்தமன்மேல்
செம்பொற் கவிகொண்டு கோவைத் தமிழ்பாடச் செப்புவையே!

முத்துக் குமரா திருக்கோண மாமலை முன்னவன் மேல்
தித்திக்குங் கோவைத் திருத்தமிழ் பாடுந் திறமளிப்பாய்
சித்திக்குஞ் செந்தமிழ்க் காவலர் போற்றுஞ் சிறப்புடையாய்
பத்திக் கினியநற் பாவலர்க் குற்ற படைத்துணையே.

மாலவன் போற்றுந் திருக்கோண மாமலை மன்னவன் மேல்
நாலடி நானூறு கட்டளைப் பாக்கள் நறுந்தமிழில்
சாலவுங் கோவைத் தமிழ் நூலியற்றுந் தகவளிப்பாய்
ஆலடி பிள்ளை யென் அன்பரகத்தூறும் ஐங்கரனே!

# தக்ஷிண கைலை

தாயினும் நல்ல தலைவ ருறைந்திடும்
தக்ஷண கைலையைப் போற்றிடுவோம்!
தூயவராகிய அன்பர் தொழுதிடும்
தொன்மலை யீசனை ஏத்திடுவோம்.

மானின மோடுமே மந்தி கள்தாவிடும்
மாமலை யோன்புகழ் சாற்றிடுவோம்!
வானர சாளும் அத்தேவர் தொழும் கோண
மாமலை ஏறி மகிழ்ந்திடுவோம்!

நிரைகழ லரவ மோடு சிலம்பொலி
நெஞ்சினில் நின்றொலி செய்யுதம்மா!
குரை கட லோதம் நித்தம் ஒலித்திடும்
கோயிலைக் கைதொழச் செய்யுதம்மா!

ஆழ்கடல் வானம் சூழுந் திருமலை
ஆலயம் அன்பரை ஈர்க்குதம்மா
ஊழ்வினை ஓட்டிடுங் கோண மலையதன்
உள்ளொளி கண்டுயிர் துள்ளுதம்மா!

எம்பெரு மானது கோயில் இடித்தவர்
இயற்றிய பாதகச் செயலை யெண்ணி
அம்புவி யெங்குமே ஆறாய்ப் பெருகிட
அடியவர் கண் ணீருகுத் தாரம்மா.

எல்லையில் துன்பம் இயற்றி மகிழ்ந்தவர்
எவரையும் அழித்திட எண்ணாத
கல்லினுள் இருக்கும் கருணை உளத்தினைக்
காண்பவர் உள்ளமும் மாண்புறுமே.

04

# ஒப்பிலாக் கோணை அப்பா.

- சிவசேகனார் -

கருணையங் கடலே, மக்கள்
கற்பனை தனக்கு மெட்டாப்
பெருமையே, பெருமைக் கெல்லாம்
பெருமையாய் வளர்ந்து நின்ற
அருமையே, உரிமை யோடெம்
அடியவர் சொரியுங் கண்ணீர்
உருவமாய் அருளுங் கோணை
ஒருவனே வாழ்க நீயே!

உன்னருள் பெற்று நின்றுன்
அருட்புகழ் பாடும் பிள்ளை
பன்னரும் பதிகம் பாடிப்
பாவினான் தமிழில், கோணை
அண்ணலுன் பெருமை கேட்ட
அளவிலே உருகி யுள்ளம்;
உன்னடிக் கன்பு செய்ய
அறிகிலான் அறிவ தென்றே.

பொய்குடி களவு சூது
புரிகொலை பெருகி இந்த
வையகம் அடவி காடாய்
மக்களும் விலங்காய் மாறி
வெய்துயர்க் கடலில் வீழ்ந்து
வீயவோ பிறந்தார் வீணே
உய்நெறி இலையே, ஆமோ
ஒப்பிலாக் கோணையப்பா?

கோணநா யகனே போற்றி!
கோதிலா அமுதே போற்றி!
ஆணவ மழிய வாழ்த்தி
அகங்குழைந் தழுவார்க் கீயும்
ஞானமா மழையே போற்றி!
நாவலர் கருத்தில் நாவில்
ஊனமா நடனம் ஓய
உவந்தருள் அறிவே போற்றி!

மந்திர வடிவாய் வந்து
மலங்களைந் தருள்வாய் போற்றி!
ஐந்தெழுத் துருவாய் எண்ணி
அறிபவர்க் கருள்வாய் போற்றி!
முந்திவந் தடியார்க் கீயும்
மூவருள் முதல்வா போற்றி!
சிந்தனைச் செல்வர் ஓம்பும்
செந்தமிழ்ச் செல்வா போற்றி!

## ஆதி முதலே அருள் செய்வாய்

அண்டங்கள் யாவுக்கும் ஆதிமுதல் நீயே!
அம்மையாய் அப்பனாய் ஆனவனும் நீயே!
தண்டையம் பாதமலர் கொண்டவனும் நீயே!
சற்குருவாய் வந்தகுரு தேசிகனும் நீயே!
சண்டமாரு தங்களாய் வந்தவனும் நீயே!
சத்தியப் பொருளாகி நின்றவனும் நீயே!
தெண்டனிட் டுன்புகழைச் செந்தமிழிற் பாட
சிந்தையில் நின்றுதுணை புரிந்தருளுவாயே!

# எங்கள் மலையே

வரலாற்றுக் கெட்டாத காலமுதல் இன்று
வரை தெய்வப் புகழேற வளர்கின்ற மலையே!
அரனாரும் உமையாளும் விரும்பியமர் கின்ற
அருளூறும் அடியார்கள் தொழுகின்ற மலையே!
மரமேறி விளையாடும் மந்திகளும் பூசை
மணியோசை செவியேறப் படியேறி நின்று
பிரசாதம் உடையாரின் கரமேறி வந்தே
பிணையோடு உணவுண்டு மகிழ்வூறும் மலையே!

குளக்கோட்டு மகாராசன் கும்பிட்ட தெய்வம்
கொடி யார்க்கும் அருள் செய்யும் குணமான தெய்வம்
விளக்கேற்றும் அடியாரின் வினை தீர்க்குந் தெய்வம்
விடையேறி உமையோடு வருகின்ற தெய்வம்
உளக்கோட்டம் உடையாரின் இடர் தீர்க்கும் தெய்வம்
உயர் கோணப் பதியமரும் ஒப்பற்ற தெய்வம்
தளக் கோட்டை மதில் சூழுந் தலத்தமர் தெய்வம்
தவஞான சம்பந்தன் கவி சூடுந் தெய்வம்!

வட கைலைக் கிணையான தென்கைலை என்று
வரலாறு காட்டாத காலமுத லாக
வட கைலை மலையோடு தொடர்புடைய மலையாய்
வாயுபக வானெறிய வந்த திரு மலையே!
புடை சூழும் அடியார்கள் கவிபாடக் கேட்டுப்
புரியாத இளமான்கள் நடமாடும் மலையே
கடலோடி வருவார்கள் திடமாக நம்பிக்
கைகொண்டு தொழுதேத்தும் மலையெங்கள் மலையே!

மலையேறிச் சென்றவனைக் கண்டிடுவோம் வாரீர்
மனமாசு தனை நீக்கி வணங்கிடுவோம் வாரீர்
கலைமான்கள் பிணையோடு விளையாடும் கோண
மலையானுக் கிடமான மலை காண்போம் வாரீர்
தொலையாத வினைதீர்க்கும் மலைநாதன் பாதம்
துணையாக வந்தருளும் என்றவனைச் சேரும்
குலை வாழைக் கனியோடு மலர்கொண்டு நாளும்
கும்பிட்டு வருவார்க்குக் குறையேது மிலையே.

## இரங்கையா

**பல்லவி**

கொஞ்சம் இரங்கையா - முருகையா
(கொஞ்சம்)

**அனுபல்லவி**

குஞ்சித பாதன் கொஞ்சும் அழகையா
(கொஞ்சம்)

**சரணம்**

தஞ்சம் என்பவர்க்குக் கொஞ்சம் இரங்காத
நெஞ்சம் உனக்கேனையா - முருகையா
(கொஞ்சம்)

காக்கும் கதிர்காமக் கடவுள் நீ யென்றால்
பார்க்கா திருப்பதேன் ஐயா முருகையா
(கொஞ்சம்)

போதும் போதும் எனைப் போட்டு வருத்துவது
ஏதுக்கோ ஐயா - முருகையா
(கொஞ்சம்)

08

# பேர் பெற்றாய்!

அம்மா சிவகௌரி அற்புதங்கள் செய்பவளே
சும்மா இருக்காயே சுற்றியெங்கும் பார்ப்பாயே!
இம்மா னிலத்தில் உனைப்போல் ஒரு தெய்வம்
அம்மா இலையம்மா ஆதி சிவசக்தி யல்லோ?
சோதி வடிவான சுந்தரியே பூமியிலே
ஆதிசிவன் தன்னை அடையத் தவமிருந்தாய்!
பூமி வளம் பெருகப் பொற்கொடியே வந்திருந்தாய்!
நாம ஜெபஞ் செய்தாய் நாயகனை நீயடைய!
தேமதுரத் செந்தமிழால் தென்னவனைத் தோத்தரித்தாய்!
சாமமெலாம் கண்விழித்துச் சங்கரனை நீ தொழுதாய்!
ஐந்தெழுத்தை ஓதி அரனைத் தொழுதாயே!
சுந்தரனைக் காணத் துடியாய்த் துடித்தாயே!
சிந்தையிலே வைத்துச் சிவனைத் துதித்தாயே!
அந்தி பகலாக ஆழ்ந்து தவமிருந்தாய்!
உன் தவத்தைக் காணுதற்கு ஓடிவந்தான் எம்பெருமான்!
கன்னித் தவக் கோலங் காணுதற்கு ஓடிவந்தான்!
மண்ணுலகங் காண மணமுடித்தான் உன்னை யல்லோ?
பெண்ணுலகங் காணப் பெருமானும் மாலையிட்டான்!
கன்னியர்கள் கண்டு களிக்கமலர் மாலையிட்டான்!
வன்னி மரத்தடியில் வந்துனக்கு மாலையிட்டான்!
உன் தவத்தைக் கண்டீசன் உள்ளம் மகிழ்பூத்து
தன்னுடலில் பாதியினைத் தாயே உனக்களித்தான்!
இந்த அதிசயத்தை எல்லோருங் கண்டார்கள்.
சிந்தை மகிழ்ந்தார்கள் சேவடியில் வீழ்ந்தார்கள்!
வானவரும் வந்து வணங்கித் துதித்தார்கள்!
கான மிசைத்துக் கழலைத் தொழுதார்கள்!
ஞானியரும் வந்தடியில் வீழ்ந்து பணிந்தார்கள்!
மாலும் அயனும் மலரடியில் வீழ்ந்தார்கள்!
காலனும் வந்துசிவன் காலடியில் வீழ்ந்தானே!
கேதார கௌரியெனப் பேரும் நீ பெற்றாயே!

ஆதார மாகி நின்று அண்டமெலாம் காப்பவளே
தவமுகத்தைக் கண்டன்பர் தாயே தொழுதார்கள்!
பவமகற்றும் நின்னடியைப் பாடித் தொழுதார்கள்!
ஆராதனை செய்தே அர்ச்சித்தார் பூவாலே!
பாரமெலாந் தீர்க்கும் பரமென் றுனைத் தொழுதார்!
செந்நூலிற் காப்பணிந்து சேவடியைத் தோத்தரித்தார்!
இருபத் தொருநாள் விரதம் அனுட்டித்து
கரகத்தில் வைத்துன்னை காதலித்துப் பூசித்தார்!
பக்தியுடன் உன்னைப் பணிந்துதினம் பூசித்தார்!
சக்தி சிவகௌரி சங்கரியே வாருமம்மா!
நித்திய கல்யாணி நின்வரத்தைத் தாருமம்மா!
சித்து விளையாடச் சிற்பரையே வாருமம்மா!
யத்திரத்தைத் தாங்கிப் பராபரையே வாருமம்மா!
உத்தரமா காளி உடுக்கடித்து வாருமம்மா!
தீமையெலாம் ஓடத் திரிசூலி வாருமம்மா!
காமனைச் சுட்டெரித்த கண்ணாட்டி வாருமம்மா!
காலன் தனை உதைத்த காளிகையே வாருமம்மா!

## காட்சிதா!

சீலமணி மார்பு மருட் கண்களீ ராறுமுகச்
செந்தாமரை யினழகும்
திகழ்கடம் பலர்மாலை அணிவித்து மகிழ்செல்வர்
தினம்பரவு முடியு மணியும்
நாலுமுக னோடுதிரு மால்பணியுங் கழலடி
தினமொலிக்குங் கிண் கிணி
ஞான சிவ காமியிரு காதுகுளிர் மொழிபேசும்
நாவுந்தோள் ஈராறு
காலனெனை யணுகாமற் காக்கின்ற வடிவேலும்
காட்டியென்றன் கண்முனே
கருணைபொழி தெய்வமாய் கற்பூர ஜோதியுள்
காட்சி நீ தந் தருளுவாய்
கோலமயில் மீதுகுற வள்ளிமகிழ் வில்லூன்றிக்
கோயிலில் மகிழ் தெய்வமே
கோடிதவஞ் செய்தவர்கள் தேடிவரு கின்ற திருக்
கோணாசலக் குமரனே.!

# திருக்கோண நாயகர் ஊஞ்சல்

### காப்பு

ஆலடியான்* அன்பர் அகத்தடியான் கல்நெஞ்சில்
காலடியை வைத்துக் கனிவிப்பான் - நூலறியாப்
பேதைக் கருளானோ கோணமலைப் பெம்மான்மேல்
ஓதுதற்கோர் ' ஊஞ்சல் ' உவந்து.

### ஊஞ்சற் பதிகம்

சீராருங் கோணமலைச் செம்பவள நாயகரும்
ஏராரும் பூங்குழலி ஏந்திழையும் உண்மகிழப்
பாராரும் ஊஞ்சற் பதிகந் தனைப்பாடி
ஏராளர் வாழியவென் றாடுக பொன்னூசல்
இலங்கைவனம் ஓங்குகவென் றாடுக பொன்னூசல்

ஏடுகளுக் கெட்டாத எண்ணரிய காலத்தை
ஊடுருவி வென்றமலை ஓதரிய தேவாரப்
பாடல்பெறு கோணமலைப் பண்டைப் பெருமையெலாம்
தேடி எடுத்தோதி ஆடுக பொன்னூசல்
தென்கைலை வாழியவென் றாடுக பொன்னூசல்.

காணரிய மாமலையைக் காணுந் திறம்பெற்றும்
ஊனுடம்பாற் பேர்த்தெறிய உன்னியசீர் ராவணனார்
நாணித் தலைகுனிய வைத்த நடராஜன்
கோணமலை வாழியவென் றாடுக பொன்னூசல்
கொட்டம் ஒழிந்ததுவென் றாடுக பொன்னூசல்.

ஈழத் திருகண்ணில் ஒன்றாய் இலங்குநகர்
வாழையடி வாழையாய் வாழ்வார்க் கினியநகர்
ஆழிக் கடல்சூழும் ஐயன் அமர்ந்தநகர்
வாழி வளநகரென் றாடுக பொன்னூசல்
வயல்கள் விளைகவென் றாடுக பொன்னூசல்.

முன்னாள் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னாட் பறங்கியர்கள் பேதமையால் பேர்த்தனர்காண்
அன்னார் அறியாமல் அன்றிழைத்த மாபிழையை
என்னே பொறுத்தானென் றாடுக பொன்னூசல்
ஏதிலர்க்கும் நல்லானென் றாடுக பொன்னூசல்.

அம்பலத்தில் நின்றாடும் ஐயன் இருந்தாட
செம்பவள முத்தொளிரத் தேவி சிரித்தாட
அம்புவியின் கண்கள் களிப்பில் மிதந்தாட
உம்பர் உலகாட ஆடுக பொன்னூசல்
உயர்கோணை வாழியவென் றாடுக பொன்னூசல்.

மூவேந்தர் கையேந்த முத்தமிழ்தேர் நாவினிலே
பாவேந்தர் தேவாரப் பண்ணேந்த மாமறையோர்
பூவேந்தி மால்தேடும் பூங்கழலை அர்ச்சிக்கக்
கோவேந்தைக் கண்டோமென் றாடுக பொன்னூசல்
கோணமலை வாழியவென் றாடுக பொன்னூசல்

கொல்லா அறமோங்கக் கோணைநகர்ப் பேரோங்க
நல்லார் செயலோங்க நாவலர்கள் சீரோங்க
கல்லால் எறியுண்டு வில்லால் அடியுண்ட
வல்லான் திறம்பாடி ஆடுக பொன்னூசல்
வறுமை ஒழிகவென் றாடுக பொன்னூசல்

கற்பு நெறியோங்கக் கன்னியர்கள் வாழ்வோங்கச்
சற்புத் திரரின் சலியா உழைப்போங்கச்
சிற்பக் கலையின் திறமோங்கத் தென்கைலை
வெற்பன் புகழ்பாடி ஆடுக பொன்னூசல்
வீரம் விளைகவென் றாடுக பொன்னூசல்.

பேதம் அகலப் பிணக்குகளும் போயகலச்
சீதப் புனல்வயல்சூழ் தென்கோண மாமலையான்
கீத இசைகேட்டுக் கேடெல்லாம் கெட்டொழிய
நீதி நெறியோங்க ஆடுக பொன்னூசல்
நீற்றின் ஒளிவிளங்க ஆடுக பொன்னூசல்.

நீர்வாழி நெல்வாழி செங்கோல் நெறிவாழி
கார்வாழி ஈசன் கழல்வாழி கோணமலை
ஊர்வாழி ஊஞ்சற் கவிபாடும் நற்றொண்டர்
சீர்வாழி வாழியென் றாடுக பொன்னூசல்
செந்தமிழ்த்தாய் வாழியவென் றாடுக பொன்னூசல்.

* ( ஆலடியான்: திருக்கோணமலை காளிகோவில் முன் உள்ள ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கும் பிள்ளையார் )

**குங்குமம் :-** திருக்கோணமலை மானில மஞ்சரி 1971

# ஓங்காரமாய் ஒளிரும் தேவா

ஓங்கார ஒளியாகுந் தேவா
ஆங்காரந் தனையழித் தெனையாளும் ஐயா
நீங்காதென் மனக்கோயில் தனிலே
நிறை நாதப் பொருளாகும் அருட்சோதி வடிவே

\- ஓங்

ஓம் எனும் பிரணவத் துள்ளே
உம் நாத வடிவத்தின் ஒளி தோன்று தையா
ஓம் கண பதியென்னு முன்னே
ஓடிவந் தருள்செய்யுங் குருதெய்வம் நீயே

\- ஓங்

அறிவுக்குள் அறிவான பொருளே ஒளியே
அருளாளர் உள்ளத்துள் வெளியாகும் உருவே
பொறிஐந்திற் கெட்டாத பொருளே
புலனாள்வார்க் கெளிதாகி வெளிவந்த களிறே

\- ஓங்

வினையாக்கி வினைதீர்க்குங் குருவே
விதியாகிக் கதியாகி விளையாடும் அருளே
நினைவோரின் இடர்தீர்க்கும் நிமலா
நின்பாத சேவைக்கு நிகரில்லை ஐயா

\- ஓங்

# காத்தருள்

வையகந் தன்னிலே வறுமையில் கிடந்து நான்
வாடவும் வேதனைப்பட் டுழலவும்
வருநோயில் வருந்தவும் வல்வினையின் பிடியிலென்
வாழ்க்கையும் வெந்துயர் எய்தவும்
பொய் களவு சூதுகள் வந்தெனைத் தினந்தினம்
பொருதியே நின்றுளம் அலைக்கவும்
பொல்லாத வஞ்சகரின் பொறியினில் சிக்கிநான்
புத்திதடு மாறி வழி தவறவும்

ஐய நீ விடாதெனைக் காத்தருள் வாயென
ஆலயந் தன்னிலே வந்துனை
அடியனேன் தொழுகின்ற தறியாமல் இருப்பையோ
ஆழிசூழ் கோணமலைக் குமரனே
வெய்ய சூர் மார்பினை வெற்பினை ஒடித்தவா
விண்ணவர் வந்து பணி பாதனே
வில்லூன்றிக் கந்தனே வெற்றிவே லாயுதா
விரைந்தருள் வள்ளி மணவாளனே.

**வேறு**

வெற்றிவேற் பெருமாள் போற்றி
வேதநா யகனே போற்றி
அற்புதக் கனியே போற்றி
ஆறுமா முகனே போற்றி
சற்குரு நாதா போற்றி
சடாக்ஷர மணியே போற்றி
சொற்பதங் கடந்து நின்ற
சோதியே போற்றி போற்றி

அந்தணர் செல்வா போற்றி
அருமறை நிதியே போற்றி
செந்தமிழ்ப் புலவ ரேத்தும்
சேவலங் கொடியாய் போற்றி
கந்தனே கருணை யாளர்
கருத்தினுக் கினியாய் போற்றி
சிந்தையின் நிறைவே போற்றி
செந்திலோய் போற்றி போற்றி

## எல்லைக் காளி

பன்குளத்தாய் என்றுன்னைப் பரவிநின்றேன்
பாராயோ கண்திறந்து பாவி யேனை
நின்கரத்தை நீட்டியே அன்பர்க்காக
நீர்வளமும் நெல்வளமும் அளிக்குந் தாயே
பொன்கரத்தாய் என்றுதமிழ்ப் புலவர் பாடும்
புகழுடைய வனமாதே எல்லைக் காளி
வன்கரத்தாய் வஞ்சகர்தம் நெஞ்சம் அஞ்ச
வாளெடுத்து வீசிவரும் வாலைத் தாயே

வாலையாய் வந்தருளுந் தெய்வம் நீயே
வனவாசங் கொண்டகுல தெய்வம் நீயே
நீலியாய் நின்றருளுந் தெய்வம் நீயே
நின்றுவரந் தந்தருளுந் தெய்வம் நீயே
ஞாலமுழு தாளுகின்ற தெய்வம் நீயே
நள்ளிரவில் ஆடுகின்ற தெய்வம் நீயே
ஆலமழு தாக்கியருள் எல்லைக் காளி
அடியேனின் மிடியகல அருள்வாய் அம்மா

# குமரோனே!

சித்தாய் விளங்கும் பெருமானே
சிவனார் அருளின் உருவானே
பித்தா என்றே அழைத்தோற்கும்
பெரும்பே றளித்த திருவாளன்
முத்தாய் வந்து குமரேசா
முருகா நெஞ்சத் தாமரையில்
வைத்தா தரிக்கு நாயேற்குன்
வடிவேல் காட்டி அருளாயே!

அருளா திருக்க உன் கருணை
அகத்துக் கென்றும் முடியாதே
கருதா திருக்கும் என் நெஞ்சக்
கல்லை உருக்கி நீராக்கி
முருகா உனது பாதமலர்
முகிழ்க்கும் குளமாய் மாற்றாயோ?
திருவார் கோண மலையமருந்
தேவே முத்துக் குமரோனே!

குமரா கொன்றை மலர் சூடும்
கோமான் பெற்ற சீமானே
அமரா வதியார் தொழு தேத்தும்
அழகார் பாத மலர்க்கஞ்சி
நமனார் நடுக்கங் கொள்வாரே
நாதா முத்துக் குமரேசா
உமைசேர் கோண மலையீசன்
உவக்கும் பதிசேர் பெருமானே

உன்னை நினைந்து நினைந்தன்பால்
உருகும் மனத்தைப் படைக்காமல்
என்னைப் படைத்தும் என் மனத்தை
ஏனோ கல்லாய்ப் படைத்தானே?
முன்னம் பிரமன் பட்ட தெல்லாம்
முற்றாய் மறந்து போனானோ?
மன்னுங் கோண மலை விளங்கும்
மணியே முத்துக் குமரோனே!

கல்லில் உனது திருவுருவை
கண்டேன் ஊனக் கண்ணாலே
அல்லும் பகலும் உனதழகை
அகக்கண் காண அலைமனத்தை
வெல்லும் வழியைக் காட்டாயோ
வேலா கோண மலை விளங்கும்
செல்வா முத்துக் குமரோனே
செம்மான் மகளின் மணவாளா!

பெருமாள் அடியார் தாக்குலகில்
பேறும் வாழ்வும் கொடுக்கின்ற
பெருமான் திருமால் அறியாத
பெம்மான் வடிவேற் படை கொண்டு
செருமா களத்தல் கொடுஞ் சூரன்
சீற்றம் அடக்க செங்களத்தில்
பொருதா வண்ணம் பொருதழித்த
போரார் முத்துக் குமரோனோ!

17

# காலம் செலுமோ?

அராப்புனை வேணியன் சேயே வருக!
குராப்புனை தண்டையந் தாளா வருக!
பழனி முருகா வருக வருக!
தணிகைக் கந்தா வருக வருக!
அமரா வதியின் காவலா வருக!
பரம கல்யாணிப் பாலா வருக!
நிட்டூர சூர பயங்கரா வருக!
மைவருங் கண்டர் மைந்தா வருக!
காட்டிற் குறத்தி பிரானே வருக!
வேலாயுதனே வருக வருக!
கந்த சுவாமி வருக வருக!
அமராவதியின் பெருமான் வருக!
குமரா முருகா சரணம் சரணம்!
வடிவேலிறையே வருக வருக!
கிரிராச குமாரி மகனே வருக!
சூரமர் மடியத் தொடுவேல் வருக!
சுரலோக சிகாமணியே வருக!
முருகா வருக குமாரா வருக!
குரு புங்கவனே வருக வருக!
குணபஞ் சரனே வருக வருக!
சுரலோ கதுரந் தரனே வருக!
விதி மாலறியா விமலன் புதல்வா
அதிகா அநாகா அபயா வருக!
சூர பயங்கரனே வருக வருக!
அடியந்த மிலா அயில்வேல் வருக!
வரதா முருகா வருக வருக!
வள்ளி பதம்பணி வேளே வருக!
சுர பூ பதியே வருக வருக!

குணபூ தரனே வருக வருக!
மயிலே றியசே வகனே வருக!
வேதா கமஞான வினோதா வருக!
சுரலோ கசிகா மணியே வருக!
ஆனா அமுதே வருக வருக!
அயில் வே லரசே வருக வருக!
ஞானா கரனே வருக வருக!
சுடர்வே லவனே வருக வருக!
கந்தா முருகா வருக வருக!
கருணா கரனே வருக வருக!
விண்ணவர் சூடும் பாதா வருக!
குறமிள பதசேகரனே வருக!
வேதாள கணம் புகழ்வேலா வருக!
சிவசங் கரதே சிகனே வருக!
சிவஞா னோபதே சிகனே வருக!
வாகா முருகா வருக வருக!
மயில்வா கனனே வருக வருக!
குலிசா யுதகுஞ் சரவா வருக!
சிவயோ கதயா பரனே வருக!
சூரவா குமரா வருக வருக!
கந்தா கதிர்வே லவனே வருக!
உமையாள் மைந்தா குமரா வருக!
மறைநா யகனே வருக வருக!
தண்ணார் அமுதே வருக வருக!
சயிலப் பகையே வருக வருக!
கண்ணார் அமுதே களியே வருக!
கன்னங் கரியோன் மருகா வருக!
செய்யா முருகா திகழ்வே லரசே
ஐயா முருகா வருக வருக!
அருளா கரனே வருக வருக!
முத்திக் கனியே வருக வருக!
முனிபுங் கவனே வருக வருக!
பிள்ளைப் பெருமாள் வருக வருக!
கலிக்கட லடைத்தோன் மருகா வருக!

போர்வேள் முருகா வருக வருக!
வேற்கிரி துளைத்தோன் தாளே போற்றி!
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட
விரிக்குங் கலாப மயூரனே வருக!
சாடும் தனிவேல் முருகா சரணம்!
கந்தச் சுவாமி வருக வருக!
முகமா றுடைக்குரு நாதன் வருக!
புராந்த கற்குக் குருவே வருக!
சேயான வேற்கந்தா செந்திலாய் வருக!
பத்தித் திருமுக மாறுடன் வருக!
பன்னிரு தோளுடன் வருக வருக!
தித்தித் திருக்கு மமுதே வருக!
பரமா னந்தச் சாகரம் வருக!
தேவேந்திர லோகசி காமணி வருக!
சேந்தா வருக கந்தா வருக!
செங்கோட்டு வெற்பா வருக வருக!
செஞ்சுட ரின்வேல் வேந்தா வருக!
செந்தமி ழில்நூல் விரித்தோய் வருக!
விளங்கு வள்ளிக் காந்தா வருக!
கந்தா கடம்பா வருக வருக!
காரின மயில் வாகனா வருக வருக!
கந்த சுவாமி வருக வருக!
முகமா றுடைக்குரு நாதன் வருக!
விரிக்கும் கலாப மயூரனே வருக!
நீலச் சிகண்டியில் ஏறும் பெருமா
கோலக்கு றத்தியுடனே வருக!
வேலே விளங்கு கையான் வருக!
அனைதற் கரிய அருவுரு வருக!
ஒன்றா யிருக்கும் பொருளே வருக!
கடிதிற் குறத்தி பிரானே வருக!
கதிர்வேல் தொட்ட காவலா வருக!
வெற்றிவேற் பெருமாள் வருக வருக!
வெற்பைப் பொருத கந்தா வருக!
மயிலே றியமா ணிக்கமே வருக!

வேலையுஞ் சூரனும் வெற்பும் மயிலோன்
வேல்பட் டழிந்தன என்றால் என்றன்
தலைமேல் அயன்கை எழுத்தும் உன்றன்
கால் பட் டழியக் காலஞ் செலுமோ?
மாயோன் மருகா வருக வருகவே!

அடியார்க்கு நல்ல பெருமாள் போற்றி!
முகமா றுடைய தேசிகா போற்றி!
கழுதாட வேல்தொட்ட காவலா போற்றி!
குருந்தே குறிஞ்சிக் கிழவா போற்றி!
வள்ளியை புல்குதோள் அண்ணலே போற்றி!
கையாறி ரண்டுடைச் சண்முகா போற்றி!
சேவடி நீட்டும் பெருமான் மருகன்
மாவைக் (கந்தன்) மயிலோன் வருக!
வேதாகம சித்திர வேலா போற்றி!
வையிற் கதிர்வடி வேலோன் போற்றி!
கிரௌஞ்ச கிரியூ டுருவத் துளைத்த
வைவேன் மன்னன் வாழ்க வாழ்க!
தாவடி யோட்டும் மயிலோன் வருக!
குன்றந் துளைத்த வைவேல் போற்றி!
கோழிக் கொடியோன் அடியே போற்றி!
கிரணக்க லாபியும் வேலும் போற்றி!
கிண்கிணி முருகா சரணா போற்றி!
கிருபா கரனே போற்றி போற்றி!
ஞான கரனே போற்றி போற்றி!
உமையாள் பயந்த இலஞ்சியம் போற்றி!
செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடர் போற்றி!
வைவத்த வேற்படை வானவா போற்றி!

# நலியத் தகுமோ?

தொலையாச் சிறையுந் தொலையச் சுடர்வேல்
இலையோ இளைஞர் இடர்தீர்த் திடவே
மலையாள் குமரா மயில்வா கனனே
புலைவாய் அவுணர் புகழ்தேய்த் தவனே!

உண்ணா விரதம் உடையார் சிறையில்
புண்ணாய் வருந்தல் முறையோ புனிதா
கண்ணா முருகா கதிவே றிலையே
அண்ணா வருவாய் அயில்வே லுடனே!

இலங்கா புரியின் கொடுங்கோ லரசின்
பலங்கா லடியில் பணியத் தருவாய்
தலங்கா வலனே தமிழ்மா மணியே
முழங்காய் முரசை மூதா தையனே!

கெடுசிங் களவர்க் கெதுசொல் லினுமோர்
கடுகற் றளவும் அருள்சற் றிலையே
திடுதிப் பெனவெஞ் சிறையுஞ் சரிய
எடுஇப் பொழுதே இடரற் றிடவே!

ஆளும் படையின் அநியா யமதால்
நாளும் பொழுதும் நலியத் தகுமோ
கோளும் பகையும் குலையப் படையை
ஏவுங் குமரா எடுவே லினையே.

# தம்பலகமக் கோணநாயகர் போற்றி விருத்தம்

அரகர சிவனே போற்றி!
அடைக்கலம் அருள்வாய் போற்றி
திரிபுரம் எரித்தாய் போற்றி!
திகழொளிப் பிழம்பே போற்றி!
வரமருள் முகத்தாய் போற்றி!
வாசகன் பாசம் நீங்கக்
குருமணி யாக வந்து
கோகழி ஆண்டாய் போற்றி!

ஆலயத் தமர்ந்து பூசை
அனுதினம் ஏற்பாய் போற்றி!
மூலமாய் நின்ற சோதி
முக்கணா முதல்வா போற்றி!
மாலயன் தேட நின்ற
மாபெருந் தேவா போற்றி!
காலனைக் காலால் மாய்த்த
கடவுளே போற்றி போற்றி!

இனியவர்க் கினியாய் போற்றி!
இன்பமே அமுதே போற்றி!
கனியினுட் சுவையே பேற்றி!
கண்ணினுள் மணியே போற்றி!
நினைவினுள் ஊறி நின்று
நித்தமும் உன்னை ஏத்தக்
கனவிலும் மறவா வண்ணம்
காத்தருள் சிவமே போற்றி!

ஈசனே பாசம் மூன்றும்
இரிந்திட அருள்வாய் போற்றி!
வாசமா மலர்கள் வைத்து
வணங்கிடும் அடியார் போற்றும்
நேசனே நிமலா போற்றி!
நித்தியப் பொருளே போற்றி!
பேசுதற் கரியாய் போற்றி!
பிஞ்ஞகா போற்றி போற்றி!

உம்பருக் கரியாய் போற்றி!
உமையவள் பாகா போற்றி!
நம்புவார் உள்ளே நின்று
நடம்புரி நாதா போற்றி!
அம்பலத் தரசே போற்றி!
அருட் பெருஞ் சுடரே போற்றி!
தம்பல காமத்துள் வாழ்
தனிப் பரம் பொருளே போற்றி!

ஊனினை உருக்கி என்னை
உள்ளொளி காண வைப்பாய்!
தேனினைச் சொரிவாய் அன்பில்
திளைத்திட வைப்பாய் என்றும்
பானினைந் தூட்டுந் தாயின்
பரிவினும் மிக்காய் துள்ளும்
மானினைக் கையில் ஏந்தி
மகிழ்நடங் கொண்டாய் போற்றி!

எண்ணிய பொருள்கள் எல்லாம்
எளிதில்வந் தெய்த வைப்பாய்!
கண்ணுதற் பெருமான் நின்னைக்
காதல் கொண் - டிறைஞ்சி நிற்கும்
விண்ணவர்க் கிரங்கி நஞ்சை
விழுங்கியே மிடற்றில் வைத்தாய்!
மண்ணவர்க் காக இங்கே
மகிழ்ந்திடம் கொண்டாய் போற்றி!

ஏரணி குலங்கள் போற்றும்
ஈசனே போற்றி! போற்றி!
நீரணி வயல்கள் சூழ
நின்றவா போற்றி போற்றி!
தாரணி புகழும் எங்கள்
தம்பல காமத் தாரின்
சீரணி விளங்கச் செய்யும்
சிவபெரு மானே போற்றி!

ஐயுறு வார்க்கும் உன்றன்
அருள்சுரந் திடுமே ஐயா!
பொய்யரும் உன்னை - யன்றிப்
புகலிடம் பிறிது காணார்
உய்யவுன் னருளை வேண்டி
உற்றவர் எவர்க்கும் ஈவாய்!
கையகம் கூப்பி நின்றேன்
காத்தருள் சிவனே போற்றி!

ஒன்பது கிரகந் தன்னால்
உறுமிடர் தவிர்ப்பாய் போற்றி!
துன்பமும் வருமோ உன்னைத்
துதிப்பவர் தமக்கு மையா?
நின்பதம் வழுத்து வாரின்
நெஞ்சமே இடமாக் கொண்ட
தம்பல காமத்தோர் நேர்
தாண்டவா போற்றி போற்றி!

ஓடுடன் பொன்னும் வாழ்வில்
ஒக்கவே நோக்கும் அன்பர்
சூடிடும் கமலப் பாதா
சொர்ணமா மன்றுள் நின்று
ஆடிடும் அழகா கங்கை
ஆறணி சடையா போற்றி!
தேடரும் பொருளே மக்கள்
தெய்வமே போற்றி போற்றி!

ஔவுடன் சௌவு மானாய்!
ஐந்தெழுத் துருவு மானாய்!
செவ்விதழ்க் கமலம் பூத்துச்
செய்யெலாம் அழகு சொட்டத்
தைவருந் தென்றல் சூழுந்
தம்பல காமத்துள் வாழ்
தெய்வமும் ஆனாய் கோணைத்
தேவனே போற்றி போற்றி!

<<<<>>>>

# கந்தளாய்ப் பிள்ளையார் தோத்திரம்

(கும்பாபிஷேடக தினத் தன்று (14 - 09 - 78) பாடியது)

வாணியும் தாமரைச் செல்வியும் தேவ
வனிதையர் யாவரும் வரங்கிடந் தாலும்
காணுதற் கரியதோர் கடவுளாய் நின்ற
கண்ணுதற் கடவுளன் றருளிய களிறே
கோணையம் பதியினுக் கண்மையில் கோயில்
கொண்டருள் கந்தளாய்ப் பிள்ளையே நினது
தாணினைந் துருகிடும் அடியவர் தம்மைத்
தரித்திரம் நோய்பிணி தாக்கிடா தருளே!

ஊணினைப் பெறுவதற் குலகியல் மாந்தர்
உறுதுயர் ஆயிரம் ஆயிரம் எனினும்
பூணணி பூவையர் புதிரெடுத் துள்ளம்
பொங்கிடப் பொங்குவர் ஆண்டுகள் தோறும்
கோணையம் பதியினுக் கண்மையில் கோயில்
கொண்டருள் கந்தளாய்ப் பிள்ளையே நினது
தாணினைந் துருகிடும் அடியவர் தம்மைத்
தரித்திரம் நோய்பிணி தாக்கிடா தருளே.

ஆணவங் கொண்டவர் அஞ்சிட நெஞ்சம்
அலறிடப் பிளிறிடும் ஆனைமா முகனே
காணிகள் செய்நிலம் கழனிகள் யாவும்
காத்தருள் கற்பக விநாயகா தெய்வக்
கோணையம் பதியினுக் கண்மையில் கோயில்
கொண்டருள் கந்தளாய்ப் பிள்ளையே நினது
தாள்நினைந் துருகிடும் அடியவர் தம்மைத்
தரித்திரம் நோய்பிணி தாக்கிடா தருளே.

ஆணுமாய் பெண்ணுமாய் அவனியாய் நீராய்
அனலதாய் வாயுவாய் வெளியதாய் வானின்
மாணொளி தரும்இரு கதிர்களாய் நின்று
மாறிலா வளந்தரும் விநாயக மணியே
கோணையம் பதியினுக் கண்மையில் கோயில்
கொண்டருள் கந்தளாய்ப் பிள்ளையே நினது
தாணினைந் துருகிடும் அடியவர் தம்மைத்
தரித்திரம் நோய்பிணி தாக்கிடா தருளே.

சாணியில் நின்னுரு சமைத்திடு வார்க்குஞ்
சஞ்சலந் தீர்த்திடும் ஐங்கரத் தோனே
காணவுங் கருதவும் அரியநீ அன்பர்
கண்ணுறக் கண்டுனைக் கைதொழ வருவாய்
கோணையம் பதியினுக் கண்மையில் கோயில்
கொண்டருள் கந்தளாய்ப் பிள்ளையே நினது
தாள்நினைந் துருகிடும் அடியவர்க் கிரங்கித்
தரித்திரம் நோய்பிணி தாக்கிடா தருளோ.

✧✧✧✧✧

பேயும் பிணியும் பிணக்கும் வறுமைகளும்
நோயும் நொடியும் நோவுகளும் - தூயதமிழ்
ஐம்பாவால் கந்தளாய் ஐங்கரனைப் பூசிப்பார்
தம்பால் அணுகுமோ தான்!

வயலும் விளையும் வருவினைகள் நீங்கும்
கயலும் புரண்டு களி கொள்ளும் - பெயு மழையும்
ஆறுகளும் நீராய் அருள் ஊறும் கந்தளாய்ச்
சேறுதரும் பிள்ளையிடம் செல்.!

வஞ்சனை கொடிதேவல் சூனியம் வைத்தவரை
அஞ்ச உதைத்தே அணு அணுவாய்ப் - பிய்த் தெறியும்
கந்தளாய்ப் பிள்ளையார் காவல் இருக்கும்போ
தெந்த இடரும் இலை!.

# 28

# சம்பூர்த்தாயே!

பேசரிய பிறவிதனைப் பெற்ற பின்பும்
பெருமாட்டி என்று மனம் உருகி உந்தன்
வாசலிலே தினந் தோறும் வந்து நின்று
வழிபடுதற் கறியாத வறியனேனை
நேசமுடன் நினது புகழ் பரவி மாறும்
நினையன்றி வேறொன்றில் நினைவைப் போக்கிப்
பாசவலைப் பட்டுழலா வாறுஞ் சம்பூர்
பத்திரநற்கா ளியருள்பா லிப்பாயே!

தீராத நோயெல்லாம் தீர்க்க வல்ல
திருவென்று தெருவெல்லாம் திறந்து பேசும்
பேரான தெய்வமன்றோ எங்கள் சம்பூர்ப்
பெருமாட்டி யுனை அறியாப் பேர்களுண்டோ?
ஏராளர் கைஏந்தி இரவு நாளாய்
ஏத்துகின்ற தெய்வமன்றோ எவர்க்குந் தெய்வம்
வாராமற் காத்து நின்று வரங்களீயும்
வல்லமை நீ யென்றுணர்ந்து வந்தேன் அம்மா!

ஆயிரம் புத்தகத்தை அடித்து வீழ்ந்து
அடுக்கடுக்காய் படித்தாலும் அந்தோ இந்தக்
காயத்தை எடுத்த பயன் காட்ட வல்ல
கடை நூல்கள் இவ்வுலகக் கடையில் இல்லை!
மாயத்தால் எதை எதையோ காட்டி உன்னை
மறக்க வைத்துப் பிறக்கவைக்கும் மாய நூல்கள்
ஈயைப் போல் பெருகுதம்மா சம்பூர்த் தாயே
என் செய்வேன் இரங்கியருள் பாலிப் பாயே!

எண்ணிக்கை யாலிந்த உலகில் இன்று
எவராலுந் தடைசெய்ய முடியா தெங்கும்
மண்ணத்தை போலின்று மனிதக் கூட்டம்
மள மளவென் றோயாது பெருகுதம்மா
எண்ணத்தை உயர்வாக்கும் சம்பூர்த் தாயே
இச்சைவழி நடக்குமிவ் இழிவைப் போக்கி
உண்ணெக்கு நின்றுருகி உன்னைப் போற்றும்
உயர்வளியா விடினுலகம் உய்யு மாமோ?

# புறப்பட்டார்!

காசுகள் வெடிப் பறக்கும்
கடவுளும் திடுக்கிட்டே செய்
பூசைகள் வேண்டாம் என்று
புறப்பட் டார் வெளியிலேயே!
தாசிகள் ஆட்டங் கண்டு
தாங்கிடார் ஓடு கின்றார்!
ஆசைகள் வளர்ப்ப தற்கோ
ஆலயம் கட்டி வைத்தார்?
ஆசை கட் கடிமை யாகி
ஆலயந் தனைக் கெடுக்கும்
நீசரின் செயலைக் கேட்கும்
நீதிகள் இலையோ இங்கே?
நீசரின் செயலால் கோயில்
நிலை குலைந் தழியுதந்தோ!

# வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி

## திருப்பதிகம்

வெருகலம் பதியோய் வெற்றி
வேலினைத் தாங்கும் கையோய்
அரிதிரு மருகா அடியார்க்
கருள் செயும் அபய கரத்தோய்
குருவடி வாகி வந்து
குறை தவிர்த் தருளுங் கருணை
முருகனே பிணிகள் தீர்க்கும்
முதல்வனே திருத்தாள் போற்றி!

போற்றிடும் அடியார் உள்ளப்
பூவினில் அமர்ந்தே இன்ப
ஊற்றினைப் பருக வைக்கும்
உத்தமா வெருகல் வேலோய்
கூற்றினை உதைத்தோன் மைந்தா
கூர்வடி வேலைத் தாங்கும்
ஆற்றல்சேர் முருகா நின்றன்
அணிமலர்த் திருத்தாள் போற்றி!

திருநிறை மலர்த்தாள் முன்பு
தேவர்கள் கூடி நின்று
முருகனே எம்மைக் காத்த
முதல்வனே என்று போற்ற
அருள்நிறை உருவந் தாங்கி
அசுரரைக் கொன்ற வேலை
ஒரு கையில் தாங்கும் வெருகல்
உத்தமா போற்றி போற்றி!

உத்தமர் போற்றி செய்யும்
உயர்தவக் குன்றே அன்பால்
பத்தர்கள் பரவி நிற்கும்
பதமலர் உடையோய் வெருகல்
சித்திர வேலா யுதனே
சித்துகள் செய்யுங் கருணை
உத்தமா போற்றி போற்றி
ஒப்பிலா மணியே போற்றி

மணியினுள் ஒளியே சோலை
மலரினுள் மணமே தூய
குணமணிக் குன்றே வேடர்
குலமணி யாய கோவே
பிணியினை நீக்கும் சாறே
பெறலரும் பேறே தெய்வ
அணிதிகழ் வெருகற் காசேர்
ஐயனே போற்றி போற்றி

ஐயனே முருகா வா வா
அருள்நிறை அரசே வா வா
கையினில் வேலைத் தாங்கும்
கந்தனே வா வா வெருகுத்
தெய்வமே வா வா வள்ளி
தேவியின் கணவா வா வா
வையகப் பிணிகள் தீர்த்து
வரமருள் குருவே வா வா

வரங்கொடுத் தருளுந் தெய்வம்
வந்தடி பணிவார் தம்மைக்
கரங் கொடுத் துயர்த்துந் தெய்வம்
கருணை சேர் வெருகற் றெய்வம்
பரம்பரை யாகத் தமிழர்
பணிந்திடுந் தெய்வம் அன்பர்க்
கிரங்கிடுந் தெய்வம் எம்மை
இராப்பகல் காக்குந் தெய்வம்!

காத்திடுங் கடமை பூண்ட
கலியுக வரத னாகி
ஏத்திடும் அடியார் வாழ்வை
எழிலுறச் செய்யும் வெருகல்
தீர்த்தமாம் கங்கை பாயும்
திருவருட் பதியில் வைகும்
தோத்திரப் பெருமை கொண்ட
துணை வடி வேலா போற்றி

துணைவடி வேலால் எங்கள்
துயரினை நீக்குந் தெய்வம்
அணிதிகழ் மயிலின் மீதே
அமர்ந்தருள் கருணைத் தெய்வம்
இணையிலாத் தெய்வம் வெருகல்
இருந்தருள் புரியுந் தெய்வம்
கணையுடை வேடர் போற்றும்
கந்தனாய் வந்த தெய்வம்!

வந்துனைப் பணிவார் கோடி
வரமுனைக் கேட்பார் கோடி
செந்தமிழ் முருகன் என்று
சேவிப்பார் கோடி உன்னைப்
பைந்தமிழ்ப் பாவால் நின்று
பரவுவார் கோடி; கோடி
தந்தருள் வெருகல் ஆளும்
சரவண பவனே போற்றி!

(இப்பதிகம் சகல நோய்களையும் நீக்கும் பதிகமாகும்)

# சித்தாண்டிமுருகன்

பாட அறியானென் பாட்டின் சுவையறியான்
மூடனிவ னென்று முனிவாயோ? - வேடனுக்கும்
முன்னின் றருள்செய்த முக்கண்ணன் மைந்தா நீ
என்முன் வா வாராயோ இயம்பு?

வாரா திருந்தால் வடிவேலா உன்னையார்
ஆராதிப் பாரிவ் வவனியிலே - காராகிப்
பெய்யும் மழையாகிப் பேரருளைத் தாராயேல்
வையமுனை வாழ்த்துமோ வந்து?

வந்தேன் கவி பாட வாயெடுத்தேன் நாயேனின்
சந்தேகந் தீராயோ சண்முகனே - செந்தேன்
பொழியும் மலர்கொண்டு பூசிப்பார் உள்ளக்
கிழியினுரு வேயுன்னைக் கேட்டு!

கேட்ட வரமீந்து கீரன் மனத்தெழுந்த
கோட்டந் தவிர்த்த குமரேசா - காட்டினிலே
வள்ளிக் கருள்செய்ய வந்த பெருமானே
வெள்ளைக் கவிதா விரைந்து!

விரைந்தே வருவான் வினையெல்லாம் மாயக்
கரைந்துருக வைப்பானென் கந்தன் - நிரந்தரமாய்
நெஞ்சத் திருந்து நினைத்த பொழுதெல்லாம்
செஞ்சொல் அருளானோ செப்பு?

அருளாளா கந்தா அயில்வேலா என்றே
உருகாத பேருக்கு உய்வுண்டோ - முருகோனே
சொன்மாலை கொண்டு சுகமாய் உனைப்பாட
என்னாவில் வந்தே இரு!

இருத்தி மனதில் இருளகல நோற்குங்
கருத்தில் ஒளிருங் கதிரோன் - குறத்தியரின்
தேனுந் தினைமாவுந் தின்று தினைப்புனத்தின்
மானை மணந்தபெரு மான்!

மான்கள் விளையாடும் மாமலையின் மீதேறி
தேன்கள் குடித்தாடுந் தெய்வமே - காந்தள்
விரல்காட்டி ஆளும் விறலோனே மாயத்
திரையகல வந்தே திற!

திறந்த மனத்தில் திருவடியை வைக்கப்
பறந்து வரும் பார்வதியாள் பாலன் - மறந்தென்னைப்
பாரா திருப்பனோ பன்னிருகண் ணாலருள்
கூரா திருப்பனோ கூறு!

கூறு மடியார் குறைதீர்க்க ஓடிவரும்
ஆறு முகனை அடைந்தக் கால் - சீறும்
பழவினைக ளெல்லாம் பறந்தோடிப் போமே
கழலணிந்த சேவடியைக் கண்டு!

கண்டு களிக்கவென் கண்ணிரண்டும் போதாதே
உண்டு விழுங்கி உயிர்களிக்கும் - தொண்டரிடை
வந்து புகுந்து வரமளிக்குஞ் சித்தாண்டிக்
கந்தன் வெளிவந்தக் கால்?

காலிற் கழலொலியும் கையிற் றுடியொலியும்
நீலச் சடாமுடியில் நீரொலியும் - மேலெங்கும்
ஓடு மரவத் தொலியும் ஒலிக்க நடம்
ஆடுவான் சேயே அருள்!

❋❋❋❋❋❋❋❋❋

# மண்டூரன்

கொண்டவினைக் கண்டுகளி கொண்டாடும் மாமயிலைக்
கண்டுகளி கொள்ளும் கதிர்வேலா - மண்டூர்
முருகா வனவேடர் முன்னிலையில் வேங்கை
மரமான தேனோ மலைத்து?

அற்புதங்கள் காட்டி யருள்காட்டும் மண்டூரின்
கற்பகத்தைப் பன்னிருகைக் காவலனை - நற்கவியால்
பாடக் கயமுகனார் பக்கத் திருந்து கவி
தேடிக் கொடுப்பார் தெரிந்து!

தெரிந்து கவிபாடுந் திறமிலேன் என்றாலும்
புரிந்த அளவிற் புனைந்திடுவேன் - விரிந்தபுகழ்
காட்டுதற்கு மண்டூரிற் காத்திருக்கும் வேன்முருகா
வேட்டுவனேன் ஆனாய் விளம்பு!

வேட்டுவனாய் ஓடிவந்து வேடர் குலக்கொடியைக்
காட்டிலே நீ மணந்த காரணமென்? - வேட்டுவிச்சி
என்று தடுத்தாரோ மண்டூரா இல்லையென்றால்
குன்றுதோ றாடுவதேன் கொண்டு?

மலையின் முடியில் மகிழ்ந்து விளையாடும்
கலையில் மயங்கியுனைக் கட்டி - முலையால்
தழுவு மயிலைத் தடந்தோள்கொண் டாரக்
கொழுவுவதோ மண்டூர்க் குணம்.

# ஸ்ரீ வல்லபசக்தி அம்பாள் காவியம்

சைவநெறி தழைத்தோங்கும் கோணையம் பதியின்
தனிமையாம் இராசமலை (மனையா வெளிக்கருகில்)
தானாக வந்துதித்த வல்லபை மீது
விரும்பியே செந்தமிழ் காவியம் உரைக்க
ஓங்கார ரூபியே வல்லவை கணபதி
ஐங்கரனே ஆதிசிவன் தந்த மகனே
திருச் சிற்றம் பலவி நாயகப் பிள்ளாய்
ஊக்கமாய் அனுக்கிரகஞ் செய்யுமப்பா!

புனித யமுனைக் கரைதன்னிலே தாயே
புகழ்சேர் தடாகத்துத் தாமரையில் அம்மா
இனியோய் உதித்தாய் நீ எந்தாயே அம்மா
இதன்சேர் மலரோன் ஒருமகளும் அம்மா
முனிவன் மரீசியின் இல்லத்தே தாயே
மகிழ்ந்து வளர்ந்தாய் மங்காய் நீ அம்மா
பனித்த சடையோன் திருச்செல்வியே தாயே
புகழ்சேர்ந்த வல்லப சக்தியரே தாயே!

அம்மையும் அப்பனும் ஆனவரும் நீயே
ஆதிசிவ காமியாய் வந்தவளும் நீயே!
அப்பனின் ஆலயந் தன்னிலே அம்மா
அரசாள வந்த அம்மை சிவகாமி
ஆடாத பேய்களை ஓட்டியே விட்டாய்
அபய மென்று வந்தவர்க்கு நீயம்மா
அருள் புரியும் வல்லப சக்தியும் நீயே
அடியார் குறைதீர்த்து ஆளுவதும் நீயே!

ஆதி சிவத்திற்கு உகந்தவளும் நீயே
ஆதியாம் இவ்வுலகை ஆளவந் தாயே
உக்கிரக சாமாளா தேவியும் நீயே
உன்புதுமை சொல்லவும் முடியுமோ அம்மா
செவ்வாயும் வெள்ளியும் பூசைக்கு வந்து
சிந்தை கலங்கியே நிற்போர் தமக்கு
அன்புடனே அருள்புரியும் ஆச்சியும் நீயே
ஆனந்த வல்லப சக்தியும் நீயே!

இந்து மணிமகுட சங்காரி நீயே
ஏகமுறு படபத்திர காளியும் நீயே
பேச்சி கிழத்தி ஆனவளும் நீயே
பேர்பெற்ற சாமுண்டி சங்கரியும் நீயே
வெள்ளிப் பிரம்போடு வேப்பிலையும் தாங்கி
விளையாடி வேண்டி வரங்கொடுத்தவளும் நீயே
முடியா தென்றதை முடித்தவளும் நீயே
மூர்க்க முள்ள வல்லபசக்தியும் நீயே!

இறைவனுடன் வாதாட வல்லவள் நீயே
ஏகமுறு கோதாரி தீர்த்தவளும் நீயே
எருமைக் கடாவிலே ஏறியதும் நீயே
ஏக கானகத்தில் தவம் செய்தவளும் நீயே
ஈசருக்கே முத்தை எறிந்தவளும் நீயே
ஏகமுறு சிவமுத்து மாரியும் நீயே
கனகமுயர் கண்ணனூர்க் கண்ணகையும் நீயே
காக்கவே வந்திட்ட சக்தியும் நீயே!

உத்தண்ட உக்கிரக சக்தி நீயம்மா
ஊழிவினை கோதாரி தீரவரு ளம்மா
வழியான கரகமுடன் உடுக்கை பெற்றாயே
வாழிநீ நீடூழி வாழி நீயம்மா
தூயஉயர் பொற்பிரம்பும் எடுத்தாயே
பத்தினிக் கண்ணகை யானவளும் நீயே
ஆனந்தி துர்க்கை யானவளும் நீயே
ஆதரிப்பா யாதிவல்லபயும் நீயே!

உத்தண்ட ஓம குண்டத்தி நீயம்மா
பேய்பில்லி வஞ்சனை சூனியமு மம்மா
வந்து மோதுதே யுன் குண்டத்தில் அம்மா
சகல கிரகங்களு முன். சந்நிதியி லம்மா
சாட்டாங்கம் பண்ணியே பணியுமே யம்மா
சர்வ பூத பேய்பிசாசுக ளுமம்மா
சகலவித கொடிய மாநோயுமே தீர்ப்பாய்
சக்தியே வல்லப சக்தியும் நீயே!

எண்ணற்ற புதுமைபல செய்தவளும் நீயே
என்றும் உன்மக்களைக் காப் பவளும் நீயே
"கன்னி மீதில் கரகம்" என்றவளும் நீயே
(அடுத்தாண்டில்) அவள்சிரசில் கரகம் ஆடியதும் நீயே
உன்னுடன் வாதாட முடியுமோ அம்மா
உன் ஓமகுண்ட திருநீற்றின் மகிமையோ அம்மா
நீ பிடித்த வேப்பின் மகிமையோ அம்மா
நேரிலே பேசும் என்சக்தியும் நீயே!

ஏகமுறும் அஞ்செழுத்தானவளும் நீயே
ஈசனுடன் வாதாட வல்லவளும் நீயே
வேகமுறு நவகோண வித்தகியும் நீயே
விரிவான ஐம்பத்தோர் அட்சரமும் நீயே
ஆகமுற நின்றசிவ சக்தியும் நீயே
ஆதியுட னேயாடி நின்றவளும் நீயே
போகமுறு திரிலோக லட்சுமியும் நீயே
புவியேறி நடமாடும் வல்லபையும் நீயே!

ஐயனார் பரிகலத் தலைவிநீ யம்மா
அரகர சிவாயநம சுந்தரி நீயம்மா
நடலை சுடலை ஆடிய சக்தியும் நீயே
நல்வரம் ஈயும் ஈஸ்வரியும் நீயே
வெள்ளை சிவப்பு மஞ்சள் புஷ்பம் நீயம்மா
வெற்றி யொடு வேப்பிலை தாங்கியே அம்மா
கஸ்தூரி மஞ்சள் குங்குமமும் நீயம்மா
கலந்தாடும் தீர்த்தம் நீ வல்லவயும் நீயே!

ஒண்மைசேர் திரிகோண காத்தருள்சூலி
ஒப்பற்ற காமாட்சி மீனாட்சி நீயே
ஆதி மனோன்மணி ஆனவளும் நீயே
ஓம் நம சிவாயமதில் வீற்றிருப்பவளே
துர்க்கை அபிராமியாய் வந்தவளும் நீயே
வேதனைகள் வராமல் கிருபை நீ புரிவாய்
சித்தி புத்தி யானவல்லவளும் நீயே
செவ்வலரியை விரும்பும் சக்தியும் நீயே!

ஓதுமென் உள்ளம்நிறை ஆதிவல் லவியே
ஒன்று மறியேன்யான் உன்னடியை நம்பி
நித்தமும் எந்தனைக் காக்க நியம்மா
நின்புகழ் ஓங்கவே நின்ற பத்தினியே
பஞ்சா லாத்தி என வந்தருளும் தாயே
வந்துமே கூக்குரல் கேட்டதும் அம்மா
ஓடியே உன்னுடைய பரிகலங்கள் அம்மா
ஆலயம் வரும் ஆதி சக்தியும் நீயே!

ஔவும் நெளவும் ஐயுமான வல்லவியே
ஓம் நம சிவாய மதில் வந்து தித்தவளே
வேப்பம் தீயை விரும்புவளும் நீயே
விளையாடி வேடிக்கை காட்ட வந்தாயே
சங்கு சக்கர முடையவளும் நீயே
சாம்பிராணி வாசகி சக்தியும் நீயே
செந்தாமரைப் பூவில் உதித்தவளும் நீயே
தீராதநோய் பிணிகள் தீர்ப்பவளும் நீயே!

அருளான அப்பனே அம்மையே வாழி
ஆனந்த வல்லபசக்தியும் வாழி
ஐங்கரனும் வல்லவியும் ஆதியும் வாழி
கதிர வேற் பிள்ளைகுலம் தானுமே வாழி
இந்துமத சைவநெறி என்றுமே வாழி
குணசேக ரம்(பிள்ளை) லிங்கராசனும் வாழி
கோணயம் பதிவாழி குளக் கோட்ட டன்வாழி
ஆதி வல்ல பசக்தி வாழி நீ தாயே!

# குமரவேளே!

அருளினால் அடைந்தே னில்லை!
அன்பு கொண் டழுதே னில்லை!
இருளினால் மூடி நிற்கும்
என்னுளம் உன்னை நாடக்
கருதினால் போதும் ஐயா
கரு நிறக் குறத்திக் காக
அருகிலே வந்து நின்றங்
கருள் செய்த குமர வேளே!

அடியவர் கூடி நின்றுன்
அழகெலாம் பாடிப் பாடிப்
படிதமிழ் உணர்ச்சி ஓங்கிப்
பரவச முற்று நிற்க
கடிய வென் சிந்தை மட்டும்
கருங் கலாய்க் கிடக்கு தையோ
கொடிய சூர் மடிய வேல் கைக்
கொண்டவா குமரவேளே!

அருட் கணைக் கொடுத்த தாலே
அடியவர் எங்கும் உன்றன்
திருப்பத எழிலைக் கண்டு
திளைத்ததில் ஊன்றி நின்றார்!
உருப்பட அறியாப் பேதைக்கு
உணர்ந்திட உணர்த்தாய் என்னில்
இருப்பதிக் கேனோ யானைக்
கினிய நற் குமரவேளே!

❖❖❖❖❖

# குல தெய்வமே!

காளி உனது கருணைக் கழல்கள்
நாளும் பொழுதும் நடனம் புரியும்
தாளிற் கிடந்து தமிழிற் பாட
நீளும் அருள்நா நிறையத் தருவாய்!

அஞ்சேன் எதற்கும் அலையேன் புறமே அணுவளவும்
கெஞ்சேன் பிறரை கெடுதிவந் தாலும் கிலிகொள்ளேன்
மஞ்சேய் திருமால் மருகன் குறத்தி மனமகழுஞ்
செஞ்சேய் முருகன் அயில்வேல் எனக்குத் துணையுண்டே!

உள்ளம் உருகி உனைப்பாடும் அன்பர் உளந்திருந்த
கள்ளம் அகற்றுந் திருக்கோணைப் பத்திர காளியம்மா
தள்ளி எனைவிட்டால் தஞ்சம்வே றுண்டோ தரணியிலே
பிள்ளை பிழைசெய்தால் தள்ளுமோ பெற்றதாய் பேசுதியே!

பேசுந் தமிழால் பெருமாட்டி உனது பெரும் புகழை
நேசிக்கு மன்பர் நினைவில் இருந்து நிருத்தமிடும்
மாசற்ற பாதம் வினையேன் மனத்தை மருவிடத்தாள்
கூசிற்றோ சொல் பத்திரகாளி யம்மா குலதெய்வமே!

# வடிவேலா

வடிவே லாஓம் வடிவே லா - குற
மாதை மணந்தருள் வடிவே லா!
சுடர்வடி வாகிய வடிவே லா - சிவ
சுப்ர மணியெனும் வடிவே லா!

கருணா கரனே வடிவே லா - கதிர்
காம மமர்ந்தருள் வடிவே லா!
அருணோ தயனே வடிவே லா - எம
தற்புத சற்குரு வடிவே லா!

பன்னிரு கையா வடிவே லா - உன்
பாத மடைக்கலம் வடிவேலா!
எண்ணிய தெல்லாம் வடிவே லா - உன
திணையடி தருமே வடிவே லா!

அரகர முருகா வடிவே லா - உமை
அம்பிகை பாலா வடிவே லா!
வரமருள் கரனே வடிவே லா - எழில்
மயின்மிசை வருவாய் வடிவே லா!

# தருவாய்!

வேலும் மயிலுந் துணையென் றோதி
ஏலும் வரையுன் இதயங் குளிர
மேலும் மேலும் பாடிப் பணிய
நூலும் இசையுந் நிறையத் தருவாய்!

ஐயா முருகா அடியார் துணையே
பொய்யில் வாழும் புலையேன் தன்னை
உய்யும் படியுன் வழிநின் றொழுகுங்
கையும் காலுங் கசிவுந் தருவாய்!

பசிவந் திடினும் ருசி வந்திடினும்
திசை வந்திடினும் வசை வந்திடினும்
அசையா திருந்துன் அடியைப் போற்ற
இசையும் கசிவும் உரமுந் தருவாய்!

அலையும் மனத்தின் அசைவைப் போக்கி
நிலையும் நினைவுந் நிறையத் தருவாய்!
மலைநா டுடையார் இறைநீ யன்றோ
தலைவா அடியார் இடர்தீர்த் தவனே!



45

# ஆலடியோன்

வில்லூன்றிக் கந்தன் விரிபுகழைப் பாடுதற்குச்
சொல்லுகின்ற எந்நாவில் சூழ்ந்திருந்து - நெல்லூன்றி
நித்தம் விளைத்து நிறைசெல்வம் சேர்ப்பது போல்
அத்தி முகனே அருள்!

அல்லும் பகலும் அடியேன் திருநாவில்
வில்லூன்றிக் கந்தன் விரிபுகழைச் - சொல்லிடவே
ஆலடியில் வீற்றிருக்கும் அப்பாநின் தாமரைப்பூக்
காலடியைச் சேர்ந்தேன் கனிந்து!

தம்பி முருகன் தகு புலவன் வில்லூன்றி
நம்பியவன் புகழை நான் பாட - தும்பிமுகத்(து)
ஐங்கரனாய் நின்றருள் செய்யும் ஆலடியோன்
பங்கயத் தாள் நெஞ்சிற் பதி !

அள்ளிச் சொரிவாய் அடியடியாய்த் தந்திடுவாய்
வள்ளிக்கு வாய்த்த வடிவேலன் - வில்லூன்றிக்
கந்தன் புகழைக் கவியாக்க ஆலடிவாழ்
ஐந்து கரத் தண்ணா அருள்!

# சௌந்தரீய லஹரீ

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மங்கள மூர்த்தி யான
    மகாதேவன் உன்னோ டுள்ள
பங்கமில் பெருமை இன்றேல்
    பலமவர்க் கில்லை யன்றோ?
பொங்கு முன் புகழில் மூழ்கும்
    புண்ணியஞ் செய்தேன் இல்லை!
அங்கயற் கண்ணி உன்னை
    அடைவனோ தகுதி இல்லேன்?

தூயவுன் பதாம் புயத்தின்
    தூளியால் படைப்பான் ஞாலன்
ஆயிரந் தலையால் சேடன்
    அம்புவி வடிவா ம.·.தை
ஓயுத லின்றித் தாங்கும்
    உருத்திரன் பொடிய தாக்கி
நாயக மேனி வாச
    நயந்தணி வானே அம்மா!

குதிகொளும் அவத்தை உள்ளம்
    குடி கொண்டார்க் கிருளை நீக்கும்
கதிரவன் உதயத் தீவின்
    களிநகர் பாதத் தூளி
அதியறி யாமை கொண்டார்க்
    காத்தும ஞான மாய
மதுமலர்க் கற்பகக்கா
    மகரந்தம் ஆகுமன்றே!

இல்லையென் றிரப்போர்க் கெல்லாம்
　　எளிதிலே கொடுக்க வல்ல
சொல்லருஞ் சிந்தா மணியின்
　　சுடரொளிக் குவிய லாமே!
எல்லையில் பிறவி மூழ்கி
　　இளைத்தவர்க் காதிக் கேழல்
பல்லினைப் போலு முன்றன்
　　பாதமார் தூளி யம்மா!

கைகளால் அபயம் என்றே
　　காட்டுவர் தேவ ரானோர்
கை களால் அபிந யித்துக்
　　காட்டுவ தில்லை நீயே!
வைகலும் பயத்தைப் போக்கி
　　வந்தவர்க் கருளும் உன்றன்
பெய்கழ லுண்டே ஞாலப்
　　புகலிட மான தாயே!

சரணென வணங்கு வார்க்குச்
　　சகலசௌ பாக்கி யங்கள்
திரமுட னளிக்கு முன்னைத்
　　திருமாலும் வேண்டிப் பெண்ணாய்த்
திரிபுர மெரித்தார் நெஞ்சம்
　　சலித்திடக் கவர்ந்து நின்றாள்!
மருமலர்ப்பாணி முன் கண்
　　மகிமையால் சக்தி பெற்றாள்!

மலர்களால் ஆன வில்லு
　　மதுகரக் கயிறும் ஐம்பூ
வலர்களில் அம்புங் கொண்டு
　　வசந்தமே அமைச்சனாக
மலய மாருதமே தேராய்
　　மன்மதன் தனியன் ஆகி
உலகெலாம் ஜெபித்தான் என்றாள்
　　உன் கடைக் கண்ணால் அன்றோ?

உ

முருகன் துணை

கதிர்காமப் பெருமாள்

# திருவருட்பாமாலை

வரைமகளின் திருமகனே! வற்றா ஊற்றே!
வடித்தெடுத்த முக்கனியின் சாறே! பாகே!
விரைகமழும் நறுமணமே! தேனே பாலே!
வீசுமிளந் தென்றற்காற்றே! என் கண்ணே!
உரையறியாப் பெரும்பெயரின் முருகா! அன்பர்
உளம் பூத்து விளங்குமருட் பாதா! இன்பக்
கரைநாடித் திரைதவழுங் கங்கை மேவுங்
கதிர்காமந் தனிலமர்ந்த கந்த வேளே!

கொலைபுலைகள் சூதுநெறி கொள்வார் எல்லாம்
குற்றமின்றி விடுதலைபெற் றுய்யு மிந்த
நிலைகெட்ட அரசிலறம் தழைப்ப தென்றோ!
நீதியொளிர் செங்கோலைத் தாங்கும் அரசே!
மலையரசி பெற்றெடுத்த புதல்வா! மன்றில்
மறந்தேய அறம்வளர நடனஞ் செய்யும்
கலையொளிரும் நடராஜர்க் குகந்த கனியே!
கதிர்காமந் தனிலமர்ந்த கந்த வேளே.

செயலுரையும் ஐம்புலனும் மனமும் புறத்தே
சென்றலைய வொட்டாது தினமும் நின்னை
மயலொழிய வாழ்த்துமருட் பேறு தந்து
மங்காத வாழ்வளித்தல் எப்போ தெந்தாய்
தயவுடனே வேண்டுகின்றேன்; நின்னை யன்றித்
தற்காப்பு வேறொருவர் காணேன்; அந்தோ!
கயல்புரளும் மாணிக்க கங்கை மேவும்
கதிர்காமந் தனிலமர்ந்த கந்த வேளே.

களாத்தில் தொழில்செய்வா ரன்றி மற்றைக்
களங்கமிலாப் பணிபுரிவார் எல்லாம் இன்று
கொள்ளிக்கும் வழியின்றிக் கூழு மின்றிக்
குடம்பைதனைச் சுற்றுதற்கும் ஆடை யின்றி
வெள்ளத்தில் அகப்பட்ட கலம்போல் சிக்கி
வீழ்கின்றார் உய்யவருட் கருணை செய்வாய்
கள்ளத்தார் உள்ளத்தில் கலவா அன்பே!
கதிர்காமந் தனிலமர்ந்த கந்த வேளே.

நாழியரி சிக்கேநாம் என்று பண்டு
நரைமூதாட் டிநல்லாள் நவின்ற வார்த்தை
ஆழிசூழ் உலகெலாம் அறிந்தும் அதற்கோர்
அரண்தேடா இவ்வரசில் வாழ்வும் உண்டோ?
ஊழியெலாம் அலைந்தலைந்தும் வேலை யில்லார்
உறுந்துயரைத் தீர்க்கவழி யொன்றுண்டோ? சீர்
காழியருட் சம்பந்த னாய குருவே!
கதிர்காமந் தனிலமர்ந்த கந்த வேளே.

மாலையணி மார்பழகா! மருவார் கொன்றை
மதிசூடி மகிழ்ந்தணைக்கும் மணியே! ஞான
வேலையருட் கரத்தேந்தும் குமரா! அடியார்
வினையகற்றி வாழ்வளிக்கும் குருவே! ஆடும்
சோலைமயில் ஏறிவரும் அரசே! வெய்ய
சூருடலங் கிழித்தமரர் சிறைமீட்டகோவே!
காலையெழு மிளங்கதிரே! கருணை செய்வாய்
கதிர்காமந் தனிலமர்ந்த கந்தவேளே.

ஆறுமுகங் கொண்டருளுங் குருவே! அன்பர்
அகத்தொளிரும் திருவிளக்கே! வள்ளி என்னும்
நாறுமலர்க் கோதைமகிழ் நாயகனே! விண்
நாடுபுகழ் வேலவனே! அடியார்க்காளாய்
ஏறுமயில் ஏறிவரும் அழகா! மலைமீ
தேறிவிளை யாடிவரும் ஏறே! தெய்வப்
பேறுதருங் கதிரைமலை வாழ்வே! யான்செய்
பிழையனைத்தும் பொறுத்தருள வேண்டினேனே

குன்றெறிந்த திறல்வீரா! தணிகைக் கரசே!
    குரைகடலிற் சூர்தடிந்த குமரா! கனக
மன்றுணடம் புரிந்தருளும் பெம்மா னேத்தும்
    மணிமார்பா! மறைஞானத் தலைவா! யானைக்
கன்றினருள் நாடியொரு வள்ளி தன்னைக்
    காதல்மணங் கொண்டணைந்த கனியே!
இன்றெனக்குன் னருள்வருமோ? இல்லை யென்றால்
    என்செய்வேன் கதிரைமலை மேவுங் கோவே.

மறைதவழுந் திருவாயால் வார்த்தை ஒன்று
    மன்னவனே கூறாயோ? பசிநோய் பகையாம்
குறைதவிரக் கடைக்கணருள் செய்யும் இன்பக்
    குணமணியே! தெய்வசிகா மணியே! வினையின்
கறைபோக்கி ஆட்கொள்ளும் அருளார் அமுதே!
    கற்பகமே! கதிரைமலை வாழ்வே! யான்சொல்
முறையீட்டைக் கேட்டொருசொல் கூறாய் என்னில்
முன்வினையேன் என்செய்வேன் முனியேல் ஐயா!

பாருலகில் மக்களெலாம் உணவு கொள்ளும்
    படியரச வமைப்பிருப்பின் வறுமை என்னும்
சீரழிக்கும் பாவியவன் கொடுங்கோல் ஆட்சி
    சிறந்திடுமோ? செல்வாக்கும் உண்டோ? சொல்வாய்
தாரணிந்த மணிமார்பா! தக்கோர் போற்றுந்
    தருமநெறி இவ்வுலகில் பரவ வேண்டும்
காரளக்கும் மணிவண்ணன் மருகா! செல்வக்
    கதிர்காமப் பிள்ளைமகிழ் கதிரை வாழ்வே!



# அருள் வேண்டல்

வாழ்வுதருங் கதிரைமலை வடிவைக் கண்டு
வாழ்த்தாத நாவெனக்கேன் ஐயா, இந்தத்
தாழ்வுதரும் ஐம்புலனுக் காளாய் உள்ளத்
தயவுசற்று மில்லாத கயவனாய் நான்
ஏழ்பிறவிக் கடலழுந்தி இறுமாப் புற்றே
இறந்திறந்திங் குழல்வதற்கோ இதயம் வைத்தாய்
கேழ்வாகுந் திணைமாவுந் தேனும் அன்பும்
கிழவனுருக் கொண்டுணவாய்க் கொண்ட கோவே

விடைகொண்டு பற்றின்றி எண்ண மெல்லாம்
விரைமலர்ச்சே வடியிணைக்கே வைத்துக் காவி
உடையணிந்து வெண்ணீறுந் தரித்தே அடியார்
உடன்கூடிச் சாதிமதபேத மென்னும்
தடையின்றி உன்நாம முழக்கஞ் செய்து
தரணியெலாம் இரந்திரந்தே இறுமாப்பற்று
நடைகொண்டார் தமைக்கண்டு நாணி நிற்கும்
நாயேற்குன் அருள்வருமோ கதிரை வாழ்வே

பன்னிரண்டு கரமுடைய வள்ளால் நின்னைப்
பார்த்திருகண் களிகூர வந்து நிற்கும்
எண்ணமுள்ள நாயேன்றன் இதயக் கருத்தை
ஈண்டறியார் போன்றுநீ இருத்தல் நன்றோ
வண்ணமணித் திரைநீக்கி வடிவு காட்டி
வாய்திறந்து நீயொரு சொல் வழங்காய் என்னில்
கண்மணியே என்செய்வேன் எண்ணி வந்த
கருமத்தை யார்முடிப்பார் கதிரை வாழ்வே

திரைமூடி மௌனியாகி இருக்கும் உன்றன்
திறமறிய விரும்பிவலம் வந்து நின்பால்
உரையாடி நின் கருத்தை அறிய வேண்டி
உடல்சுமந்து கேட்டுநிற்கும் கடைய னேற்குன்
விரையார்ந்த மலர்காட்டி வேலுங் காட்டி
விண்ணொளிசேர் முகங்காட்டி அருளாய் என்னில்
குறைநாயேன் என்செய்வேன் குறித்து வந்த
குறைமுடிப்பார் உண்டோசொல் கதிரை வாழ்வே

கட்டழகா உனைக்காணும் விருப்பம் உந்தக்
கைகுவித்து வணங்கிநின்றேன் கவிகள் கொண்டு
பட்டதுயர் ஒவ்வொன்றாய்ச் சொல்லி சொல்லிப்
பாடிவரின் மலைமலையாக் குவியு மல்லால்
விட்டொழிய மாட்டாமை கண்டேன் ஐயா
வேறொருவர் துணைநாடேன் விழைந்து நின்றேன்
மட்டவிழ்தார் மணிமார்பா! கதிரை வாழ்வே
மனமிரங்கா யெனிற்செய்வ தறியேன் அந்தோ

பேரிடும்பை வரும்போது நினைப்ப தல்லால்
பின்னொருகால் நினைத்தறியேன் பொய்மை வாழ்வில்
சீரிய காலமெல்லாம் சிதைத்துதேன் வீணே
செப்பரிய கதிரைமலைத் தேவே நின்றன்
பேரரிய புகழ்பேசக் கற்றேன் அல்லேன்
பிறப்பறுக்க என்செய்வேன் பேத ஞானக்
காரிருளால் உண்மையொளி மறைக்கப் பெற்றேன்
கடைத்தேற அருள்புரிவாய் கருணை வாழ்வே

காமவெறி பிடித்தலையுங் கசட னேனைக்
கற்றவழி ஒழுகாத கயவ னேனைத்
தாமதமே கொண்டெதற்குஞ் சாட்டுக் கூறிச்
சாலமெலாம் பண்ணிநிதம் நடித்துக் காட்டும்

பாமரனின் செய்கையெல்லாம் திருத்த முற்றுப்
படிமீது நல்லவனாய் வாழ்வ தெப்போ
தேமதுர மாணிக்க கங்கை பாயும்
திருப்பதிசேர் கதிர்காமத் தேவ தேவே.

பலபலவாம் நூல்களைநான் புரட்டி நின்று
படித்ததெல்லாம் ஆடுகுழை மேய்வ தொக்கும்;
கலைதெரியாப் பாமரர்க்குக் கற்றான் போலக்
காட்டியவர் பிரமிக்கச் செய்தே னன்றி
நிலைதெரிய மனத்திருத்திக் கற்றேன் அல்லேன்
நிர்மலமே அறிவாகி நிறைந்த பரமே
அலையெறியக் கயல்புரளும் கங்கை மேவும்
அருள்ஞானக் கதிரைமகிழ் அமரர் ஏறே

கலைபயிற்றுந் தொழிலமர்ந்து மாண வர்க்குக்
கருத்திருத்திப் படிப்பித்தும் வாழ்க்கை தன்னை
நிலைபெறச்செய் பொருள்வருவாய் இன்றி வாடும்
நிலைமையினைப் போக்கவழி சொல்லாய் கதிரை
மலைவளருங் கற்பகமே! கருணை வாழ்வே!
மங்காத பெருஞ்சுடரே! மாயாத நிதியே!
விலைமதிக்க முடியாத முத்தே! அழியா
விளைவே! என் ஆருயிரிற் கலந்த கோவே.

தீராத துயர்க்கடலைத் தீர்க்க வெண்ணித்
திருவடியே தஞ்சமென்று சூழும் அன்பர்
நேராகக் கண்களிக்கக் காட்சி தந்து
நித்தியமே நிர்மலனே பொய்யர் நெஞ்சில்
வாராமற் கரந்திருக்கும் கள்வா! பச்சை
வளரிமயப் பிடிமகிழும் பிடியே! கருணை
சேராதார் காண்பரிய பரமே! நின்சீர்
சிறந்திடுக ஞாலமெல்லாம் கதிரை வாழ்வே.

# கூவியழை சங்கே

ஆறுமுக நாதனைநீ கூவியழை சங்கே
அச்சந் தவிர்ப்பவனைக் கூவியழை சங்கே
நாறுமலர்ப் பாதனைநீ கூவியழை சங்கே
நல்லான் அழகனைநீ கூவியழை சங்கே
பேறுதரும் வள்ளலைநீ கூவியழை சங்கே
பெம்மான் முருகனைநீ கூவியழை சங்கே
ஈறுமுதல் இல்லவனைக் கூவியழை சங்கே
இன்பக் கடலமுதைக் கூவியழை சங்கே.

சித்திரப்பூ மாலையனைக் கூவியழை சங்கே
செகசோதி நாயகனைக் கூவியழை சங்கே
அத்திமுகற் கிளையவனைக் கூவியழை சங்கே
ஆடுமயில் வாகனனைக் கூவியழை சங்கே
சத்திவடி வேலவனைக் கூவியழை சங்கே
சாமிசிவ சண்முகனைக் கூவியழை சங்கே
முத்திதரும் வித்தகனைக் கூவியழை சங்கே
மூவா முதற்பொருளைக் கூவியழை சங்கே.

வேதமுடி வானவனைக் கூவியழை சங்கே
வெற்றிவே லாயுதனைக் கூவியழை சங்கே
நாதவடி வானவனைக் கூவியழை சங்கே
நற்றாயின் நல்லவனைக் கூவியழை சங்கே
சூதறியார் நெஞ்சவனைக் கூவியழை சங்கே
சூரனைத் தடிந்தவனைக் கூவியழை சங்கே
மாதுகுற வள்ளியனைக் கூவியழை சங்கே
மந்திரத்தின் உட்பொருளைக் கூவியழை சங்கே.

பூவின்மண மானவனைக் கூவியழை சங்கே
புண்ணிய மூர்த்தியினைக் கூவியழை சங்கே
தேவர்புகழ் வேலவனைக் கூவியழை சங்கே
செந்தமிழ்ப் பாவலனைக் கூவியழை சங்கே
சாவகற்றும் சண்முகனைக் கூவியழை சங்கே
சந்தண மேனியனைக் கூவியழை சங்கே
நாவரசர் ஓவியத்தைக் கூவியழை சங்கே
ஞானமணிப் பண்டிதனைக் கூவியழை சங்கே.

வண்ணமயில் வாகனனைக் கூவியழை சங்கே
வாழ்வளிக்கும் வள்ளலைநீ கூவியழை சங்கே
கண்மணியைக் காதலனைக் கூவியழை சங்கே
கதிரைமலை அப்பனைநீ கூவியழை சங்கே
சண்முக சாமியனைக் கூவியழை சங்கே
சங்கப் புலவனைநீ கூவியழை சங்கே
நண்ணினார்க் கினியவனைக் கூவியழை சங்கே
ஞாலம்புகழ் வேலவனைக் கூவியழை சங்கே.

சாகாக் கலையருளக் கூவியழை சங்கே
சாமிசிவ சண்முகனைக் கூவியழை சங்கே
வேகா உடம்பருளக் கூவியழை சங்கே
வித்தக சித்தனை நீ கூவியழை சங்கே
போகாப் பிறப் பொழியக் கூவியழை சங்கே
புண்ணிய மூர்த்தியினைக் கூவியழை சங்கே
காகா முருகாவெனக் கூவியழை சங்கே
கதிர்காமா காவெனநீ கூவியழை சங்கே.

# கதிரைமலைக் கந்தன்

# சரணத் தோத்திரம்

அம்மை அப்பா சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
எம்மை ஆளும் பரனே சரணம்
ஏற்றுக் கொடியான் மகனே சரணம்
மம்மர் அறுக்கும் மருந்தே சரணம்
மயில்வா கனனே சரணம் சரணம்
கம்மற் குறத்தி கணவா சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்.

ஆறு முகங்கொள் அழகா சரணம்
அயில்வேல் அரசே சரணம் சரணம்
கூறும் அன்பர்க் கினியாய், சரணம்
குமரா முருகா சரணம் சரணம்
பேறும் வாழ்வும் தருவாய் சரணம்
பெருமா மணியே சரணம் சரணம்
காறைக் குறத்தி கணவா சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்.

இயலே இசையே கூத்தே சரணம்
இன்பத் தமிழின் இறைவா சரணம்
மயல்தீர் ஒளியே சரணம் சரணம்
மறைநா யகனே சரணம் சரணம்
துயரந் தீர்க்குந் துணையே சரணம்
தூய்மைப் பொருளே சரணம் சரணம்
கயவர்க் கரியாய் சரணம் சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்.

ஈளை இருமல் ஒழிப்பாய் சரணம்
  இறவாப் பெருவாழ் வளிப்பாய் சரணம்
தாளைப் பிடிப்பார் தயவே சரணம்
  தனிநா யகனே சரணம் சரணம்
வேளைக் கருளும் விமலா சரணம்
  வேல்கைத் தாங்கும் பெருமாள் சரணம்
காளைப் பருவக் கந்தா சரணம்
  கதிரை வாழ்வே சரணம் சரணம்.

உலகுக் கொருமா முதலே சரணம்
  உயர்வுந் தாழ்வும் இல்லாய் சரணம்
மலரும் மணமும் ஆனாய் சரணம்
  மணியே ஒளியே சரணம் சரணம்
அலகில் மறைதேர் அரசே சரணம்
  அமரர் இடர்தீர்த் தாண்டாய் சரணம்
கலகந் தருநெஞ் சடையாய் சரணம்
  கதிரை வாழ்வே சரணம் சரணம்.

ஊரும் பேரும் இல்லாய் சரணம்
  உரிமைப் பொருளாய் நின்றாய் சரணம்
சேரும் அன்பர்க் கினியாய் சரணம்
  சிவசண் முகனே சரணம் சரணம்
சூரன் உடலைக் கிழித்தாய் சரணம்
  சுரர்வே தனைநீ ஒழித்தாய் சரணம்
காரும் வணங்கும் கரனே சரணம்
  கதிரை வாழ்வே சரணம் சரணம்.

எண்ணும் எழுத்தும் ஆனாய் சரணம்
ஏழைக் கருளும் செல்வா சரணம்
பண்ணும் இசையும் ஆனாய் சரணம்
பனிமா மலையான் புதல்வா சணைம்
மண்ணும் விண்ணும் ஆனாய் சரணம்
மலைமா தருளும் மணியே சரணம்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்..

எட்டுக் கலையின் பொருளே சரணம்
எழுதா மறையின் பயனே சரணம்
பாட்டுக் கலையின் பண்பே சரணம்
படைவே லரசே சரணம் சரணம்
வீட்டுக் கலையின் விளைவே சரணம்
வினைதீர்த் தென்னை ஆள்வாய் சரணம்
காட்டுக் குறத்தி கணவா சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்.

ஐயா றடக்கும் அரசே சரணம்
அமரா வதியார் புகழே சரணம்
மெய்யாய் ஒளிருஞ் சுடரே சரணம்
மெச்சும் வள்ளி கணவா சரணம்
செய்ய மேனிப் பிழம்பே சரணம்
சேவற் கொடியாய் சரணம் சரணம்
கையிற் றனிவே லுடையாய் சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்.

ஒன்றாய் பலவாய் ஒளிர்வாய் சரணம்
ஒருமா மணியே சரணம் சரணம்
நன்றாய் புலவர்க் கணியே சரணம்
நாதத் தொலியே சரணம் சரணம்
தின்றே தினைமா சுவைத்தாய் சரணம்
செல்வா வள்ளி கணவா சரணம்
கன்றுக் கிளைய குமரா சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்.

ஓதியுணர்தற் கரியாய் சரணம்
உருவாய் அருவாய் சரணம் சரணம்
பாதி மதியான் புதல்வா சரணம்
படிமீ தருளுங் குருவே சரணம்
பேதங் கடந்த பொருளே சரணம்
பிறப்பு மிறப்பு மில்லாய் சரணம்
காதற் குறத்தி கணவா சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்.

ஔவை யிறுமாப் படைத்தாய் சரணம்
அன்பே அமுதே அருளே சரணம்
கொவ்வை இதழை அணைந்தாய் சரணம்
கொடிய சூரைத் தடிந்தாய் சரணம்
ஒவ்வாப் பொருளே உயர்வே சரணம்
உடையாய் கடையேற் கருள்வாய் சரணம்
கவ்வை தீர்க்கும் கரத்தாய் சரணம்
கதிரை வாழ்வே சரணம் சரணம்.

**(★ இந்தக் கவிதைகள் அனைத்தும், திருக்கோணமலையில் இராஜவரோதயம் வீதியில் தனசக்தி இல்லத்தில் நடாத்திய கல்வி நிலையத்தால் வெளியிடப்பட்டது.)**

### தேவாரப் பாடல்பெற்ற தென்கயிலாயம்
### என்னும் திருக்கோணமலையில்
### கோயில் கொண்டருளிய

# ஆலடி விநாயகப் பெருமான்

## தமிழ் அர்ச்சனை

### காப்பு

அன்னை அருள்விளங்கும் ஆலடியாய் எப்பொருட்கும்
முன்னிற்கும் ஓங்கார மூர்த்தியே - தென்கைலை
வாசனே மூஷிக வாகனனே அங்குச
பாசனே முன்னின் றருள்.

முத்தி யளிக்கும் முதல்வா போற்றி
மூவுல குக்கும் முதலே போற்றி
சித்தி யளிக்குஞ் சிவமே போற்றி
சிவபெரு மானின் சேயே போற்றி
தித்திக் குஞ்செந் தேனே போற்றி
தென்கயி லாயத் தேவே போற்றி
அத்தி முகத்தெம் மரசே போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

துன்பந் துடைக்குந் துரையே போற்றி
தூயவர் உள்ளத் துணையே போற்றி
இன்ப மளிக்கும் எழிலே போற்றி
இருமையும் என்னைக் காப்பாய் போற்றி
என்பை உருக்கும் இசையே போற்றி
எண்ணிய முடிக்கும் இறைவா போற்றி
அன்பில் விளைந்த அமுதே போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

தாங்கி யணைக்குந் தயாளா போற்றி
தண்ணளி உடைய கண்ணா போற்றி
நீங்கா தெங்கும் நிறைந்தாய் போற்றி
நித்தியப் பொருளே நிமலா போற்றி
ஓங்கா ரத்துள் ளொளியே போற்றி
உயிர்க்குயி ராகி நின்றாய் போற்றி
ஆங்கா ரத்தார்க் கரியாய் போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி

சோதிச் சுடரே சுகமே போற்றி
சுந்தரத் தமிழின் சுவையே போற்றி
வேதப் பொருளே விமலா போற்றி
வேழமா முகத்து வேந்தே போற்றி
ஓதற் கரிய உணர்வே போற்றி
ஒப்பிலாப் பொருளே உயர்வே போற்றி
ஆதிப் பொருளே அரசே போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

நாத வடிவ மானாய் போற்றி
நாதங் கடந்த பொருளே போற்றி
பேத வடிவ மானாய் போற்றி
பேதங் கடந்த பொருளே போற்றி
பூத வடிவ மானாய் போற்றி
பூதங் கடந்த பொருளே போற்றி
ஆதி வடிவ மானாய் போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

கால வடிவ மானாய் போற்றி
காலங் கடந்த பொருளே போற்றி
மேலுங் கீழு மானாய் போற்றி
மேல்கீழ் கடந்த பொருளே போற்றி
தூல வடிவ மானாய் போற்றி
தூலங் கடந்த பொருளே போற்றி
ஆலின் கீழே அமர்ந்தாய் போற்றி
ஆனை முகனே போற்றி போற்றி.

வைப்பே வாழ்வின் வளமே போற்றி
வையகம் போற்றும் வரனே போற்றி
தப்பா தெல்லாந் தருவாய் போற்றி
தருமமும் பொருளும் ஆனாய் போற்றி
எப்போ தும்முன் னிற்பாய் போற்றி
ஏழை யேற்கிரங்கி அருள்வாய் போற்றி
அப்பா போற்றி ஐயா போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

மண்ணும் விண்ணும் ஆனாய் போற்றி
மாலயன் காணா மணியே போற்றி
எண்ணும் எழுத்தும் ஆனாய் போற்றி
எளியனே அடியார்க்கென்றும் போற்றி
பண்ணும் பாவும் ஆனாய் போற்றி
பாவியேற் கருளும் பண்பா போற்றி
அண்ணா அரனார் புதல்வா போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

நோயும் பிணியுந் தீர்ப்பாய் போற்றி
நொந்தவர்க் குற்ற துணையே போற்றி
நாயேற் கருளும் நலமே போற்றி
நலிந்தவர் தம்மைக் காப்பாய் போற்றி
நேயர் நெஞ்சின் நிறைவே போற்றி
நினைத்தவை முடிக்கும் நிமலா போற்றி
ஆயும் உள்ளத் தறிவே போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

மனநோய் தீர்க்கும் மருந்தே போற்றி
மந்திரப் பொருளே மறையே போற்றி
தனமும் பொருளும் தருவாய் போற்றி
தந்திரப் பொருளின் தலைவா போற்றி
தினமும் என்னோ டிருப்பாய் போற்றி
தீமையி னின்றும் காப்பாய் போற்றி
அனலாய் நீராய் நின்றாய் போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

பகர வொண்ணாப் பலமே போற்றி
பரவெளி யாகி நின்றாய் போற்றி
தகரா லயத்தின் ஒளியே போற்றி
தனிப்பெருங் கருணா நிதியே போற்றி
இகமும் பரமும் ஆனாய் போற்றி
இன்பத்துள் இன்பம் ஆனாய் போற்றி
அகர உகரப் பொருளே போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

நன்றுந் தீதும் ஆனாய் போற்றி
நான்மறைப் பொருளே நலமே போற்றி
குன்றே யானைக் கன்றே போற்றி
கோணமா மலையின் கோவே போற்றி
என்றும் உள்ள பொருளே போற்றி
ஏறமர் செல்வன் புதல்வா போற்றி
அன்றும் இன்றும் ஆனாய் போற்றி
ஆலடிப் பிள்ளை யாரே போற்றி.

கண்ணே அருமைக் களிறே போற்றி
காதலிப் பாரின் கனியே போற்றி
உண்ணும் அமுதே உறவே போற்றி
உத்தமர் போற்றுங் கர்த்தா போற்றி
விண்ணில் ஒளிரும் விளக்கே போற்றி
விக்கினந் தீர்க்கும் வேந்தே போற்றி
அண்மைப் பொருளே அறமே போற்றி
ஆலடி பிள்ளை யாரே போற்றி.

இஷ்ட சித்தி தருவாய் போற்றி
இடர்களைந் தென்னைக் காப்பாய் போற்றி
கஷ்ட நஷ்டம் தீர்ப்பாய் போற்றி
கலியணு காமல் காப்பாய் போற்றி
துஷ்டர் தம்மை அழிப்பாய் போற்றி
துயரணு காமல் காப்பாய் போற்றி
அஷ்ட செல்வந் தருவாய் போற்றி
ஆலடி வாழ்வே போற்றி போற்றி.

**(மகா கும்பாபிஷேகத் தினத்தன்று வெளியிடப்பட்டது. - 28-01-1972)**

# ஆலடி விநாயகர்

## திருப்பள்ளி எழுச்சி

போற்றியாம் நினைத்தவை முடித்திடும் பொருளே
    புண்ணியா நின்புகழ் பரவுதற் கென்றே
ஏற்றஇப் பிறவியில் நின்னருள் பெறுமா(று)
    இவ்விடம் வந்தனம்; பருதியும் வானில்
தோற்றினன்; புவியினை மூடிய இருளுந்
    தொலைவினிற் போயது; தொன்மைசேர் கோணை
ஊற்றென ஆலடி உவந்தருள் கின்ற
    உயிர்க்குயி ரேபள்ளி எழுந்தரு ளாயே.

சேவல்கள் கூவின; சிலம்பின புட்கள்;
    சீரணி முரசுகள் முழங்கின எங்கும்;
நாவல ராகிய அந்தனர் ஓதும்
    நான்மறை யிசையினின் றெழுந்தது நாதம்;
தேவர்தம் வாழ்த்தொலி பரந்தது வானில்
    திசையெலாஞ் சங்கினம் முழங்கின; அன்பர்
ஆவலோ டடைந்தனர் கோணையம் பதிசேர்
    ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

மாலயன் தேடியுங் காணுதற் கரிய
    மதியணி சடைமுடி எம்பெரு மானின்
பாலக னாகிய பழமறைப் பொருளே
    பாவலர் நாவலர் புகழ்முதற் பொருளே
ஞாலமீ துயாந்தநற் கோணமா மலையில்
    நம்பினோர்க் கருள்செயும் ஞானமா மலையே
ஆலடி யாய்அடி யவர்தமக் கெளியாய்
    ஆருயிரே பள்ளி எழுந்தரு ளாயே.

பூமலர் ஏந்திய கையினர் ஓர்பால்
புகழினைப் பண்ணினில் இசைப்பவர் ஓர்பால்
பாமலர் கொண்டடி பரவுநர் ஓர்பால்
பணிந்துளங் கசிந்திட உருகுநர் ஓர்பால்
ஓமெனும் மந்திரம் ஓதுநர் ஓர்பால்
உன்னருட் கொடையினுக் கிரங்கினர் காணாய்
ஆமலி கோணையம் பதியமர்ந் தோனே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

நீதியாய் நிமலனாய் நித்தனாய் எங்கும்
நிறைந்திட நின்றபே ரறிவுமாய் வாழ்வின்
சோதியாய்ச் சுடரொளிப் பிழம்புமாய் அழியாத்
தோற்றமாய்ப் பேரருட் கருணையு மாகி
ஓதுதற் கரியதாய்க் கோணையம் பதியில்
உறைந்தருள் தெய்வமாய் உலகினுக் கெல்லாம்
ஆதியாய் நின்றசீர் விநாயக மணியே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

வேழமா முகத்தெழில் காண்பதற் காக
விரைந்தனர் அடியவர் விடிவதன் முன்னே
காழியர் பெருமகன் திருவுளம் மகிழ்ந்து
கனிந்தருள் திருமுறைப் புகழினை உடைய
ஈழமா மணித்திரு நாட்டினில் இயற்கை
எழில்நலங் கெழுமிய முதுபதி யாய
ஆழிசூழ் கோணையம் பதியமர்ந் தோனே
ஆலடி யாய்பள்ளி எழுந்தருளாயே.

காலையும் மாலையும் நண்பகற் போதும்
　　கருத்துடன் நின்திரு வுருவினைத் தீண்டி
பாலையும் பழத்தையும் அமுதையும் படைத்துப்
　　பரிவுடன் செய்திடும் பூசனை ஏற்போய்
வேலவன் தனக்கருள் புரிந்திட அன்று
　　வேழமாய் வள்ளிமுன் விளங்கிய துணையே
ஆலயத் தமர்ந்தருள் கோணையம் பதியோய்
　　ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

ஓமெனும் மந்திர ஒலியினை எழுப்பி
　　உலகெலாம் உன்னடி பரவுதல் கேளாய்
காமமுங் குரோதமும் அகன்றிட உன்றன்
　　கழலடி தஞ்சமென் றடைந்தனர் நின்பால்
பூமலி கோணையம் பதியினில் வாழ்வோர்
　　புகழுற ஆலடி அமர்ந்தருள் வோனே
நாமகள் திருமகள் தொழுபரம் பொருளே
　　நாயகனே பள்ளி எழுந்தரு ளாயே.

உலகினில் முதன்மொழி ஆகிய மொழியில்
　　உன்புகழ் பாடிடும் அடியவர் தமக்குப்
பலமுறை அருளிய நின்னருட் பண்பை
　　பார்த்துன தருள்பெறக் காத்துநிற் கின்றோம்
நிலவுமிழ் பிறைமதிச் சடையணி பெருமான்
　　நினைத்திட உமையவள் களித்திட உதித்தோய்
அலகில்நற் கோணையம் பதியமர்ந் தோனே
　　ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

குறைவிலாக் கோணையம் பதியினில் அன்பர்
　　கூடிநின் றுன்பதம் தொழுதிட முன்னோர்
நிறைவுடன் வைத்தசீ ராலடி அதனில்
　　நீயருள் வழங்கிடும் மாண்பினைக் கேட்டு
நறுமலர் ஏந்திநாம் வந்துநிற் கின்றோம்
　　நாதமே நினைத்தவை முடித்திடும் நலமே
இறைவனே ஈசனே எம்பெரு மானே
　　இன்னுயிரே பள்ளி எழுந்தரு ளாயே.

உ

**தேவாரப் பாடல்பெற்ற திருக்கோணமலைப் பதியில்**
**அற்புதாம்பிகையாய் கோயில்கொண்டு அருள்பொழியும்**
**பத்திரகாளி அம்பாள்மீது பாடிய**

# காளி கவிமாலை

## காப்பு

கல்வியிலான் ஞானமிலான் காதல் மிகுதியினால்
சொல்லுங் கவிமாலை சோர்வின்றி - எல்லாமே
நல்லாய் முடியுமே நற்காளி தன்னருளால்
கல்லானு மாவான் கவி.

பத்திரத்தை ஏந்திப் படியில் விளையாடும்
உத்தமியாள் காளி உபாசகரின் - புத்தியிலே
நின்று நடம்புரிவாள் நெஞ்சத்தில் சித்துருவாய்
என்றும் ஒளிர்வாள் இருந்து.

## நூல்

அகர வுயிராகி அண்டங்கள் தானாகி அன்பருளச்
சிகர மிசைநிற்குஞ் செய்யாள் சிவானந்தி செம்பவளந்
திகழுந் திருவாயாள் தென்கோணைப் பெருமாட்டி தேவருக்கும்
பகர வொணாப்பத் திரகாளி தன்னைப் பணிமின்களே

முத்தியும் வாழ்வு மளித்திடு வாள்முடை தீர்த்திடுவாள்
புத்தியும் ஞானமுந் தந்திடு வாள்வினை போக்கிடுவாள்
இத்தரை மீதினில் எண்ணிய யாவையு மெய்துவிப்பாள்
பத்திர காளித்தா யின்பதம் போற்றிப் பணிமின்களே

கல்லாய் கிடந்து கலையாய் வெளிவந்து காண்பவர்தம்
எல்லாப் புலனும் ஒடுங்கி நிலைபெற உள்ளகத்தே
பல்லா ருயிரும் பணிந்திடும் பத்திர காளிகையாய்
வல்லாண்மை கொண்ட வராகியை வாழ்த்தி வணங்குதுமே

பாடுங் கவிதையிற் காளி பசுந்தேன் பரிமளிக்கச்
சூடுந் தொடையில் சுவையும் பொருளுஞ் சுரந்திடுவாள்
ஆடும் மயில்போ லழகும் நடையு மணிபெறவே
கூடும் படிசெய்வாள் கொற்றவை யாள்மனக் கோயிலிலே.

ஒன்று மறியே னுனைப்பாட நெஞ்சி லுறுதியிலேன்
நின்று திகைக்கின்றேன் நீயன்றி வேறோர் நினைவுமிலேன்
மன்றுள்நின் றாடும் பெருமா னமரும் மலைவிளக்கே
பன்றியும் பாடுமே பத்திர காளியுன் பார்வையிலே.

யாப்பும் பொருளும் அணியும் நலம்பெற யாவையுமே
பாப்பண் ணிசையுடன் பாடிட நல்லருள் பாலிக்குஞ்சொற்
காப்புங் கவசமும் நீயன்றோ பத்திர காளியுனைக்
கூப்புங் கரங்கொண்டு கும்பிட்டேன் நாவில் கொழிதமிழே.

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீமெனும் மந்திரத்தாளை உளத்திருத்தி
ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீமென் றயராமல் எந்நாளு முச்சரித்தால்
ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீமாக வுந்துநிற் பாள்காளி யோவியமாய்
ஓம் ஐம்ஹ்ரீம் ஸ்ரீம்மந் திரத்தை உவந்துவந் தோதுமினோ.

பாரும் விசும்பும் பரந்து விளங்கும் பராபரையைத்
தேரு மறிவின் திருமுடி யேறித் திகழ்ந்திடினும்
ஆரு மறிய முடியா தவளி னருளிலையேல்
வாருந் தொழுது வளம்பெறு வோங்காளி வார்கழலே

அந்தணர் போற்றும் அழியாத வேத அரும்பொருளைச்
சந்தணம் பூசி யபிடேகஞ் செய்கின்ற சாம்பவியை.
முந்தையர் பூசித்து வந்தமுக் கண்ணன் முதல்விதனை
மந்திர மாய்நிற்கும் மாகாளி யம்பாளை வாழ்த்துமினோ.

பத்திர காளியின் பாதம் பணிந்தேத்தும் பாவிகளும்
இத்தரை மீதினில் தேவரு மெய்தா விருஞ்சிறப்பும்
முத்தியும் எய்துவர் கண்டாய் முதலு முடிவுமிலாச்
சக்தியைப் போற்றுமின் காக்கு மவள்பொற் சரணங்களே

பாடும் பொருட்டுப் பலகால் முயன்று பரிதவித்தேன்
கூடும் படியருள் கூட்டுவித் தால்குரல் காட்டிநின்றால்
நாடும் பொருளும் நயமும் விளங்கிட நற்றமிழால்
பாடுங் கவிமாலை பத்திர காளிக்கே பாடுவனே

பூரித்து மலர்தூவி அர்ச்சித்து நெஞ்சாரப் பூசைசெய்மின்
ஈரெட்டுத் திக்கும் இடமாகக் கொள்ளும் எழிற்புயத்தில்
தாரிட்டு மாலை தரித்திட்ட கைகள் தனம்பெருக
நேரிட் டருள்செய் வாள்பத் திரகாளி நித்தமுமே

ஓதி யுணர்ந்துணர்ந் துள்ளம் உருகி யுருகிநின்றால்
சோதி வடிவாகிச் சொர்ண உருவாகிச் சூழ்ந்துநிற்பள்
பாதி யுருவாகி பரம னிடப்பாகம் பங்குகொண்டாள்
பூதி யுருவாகிப் பத்திர காளியாய்ப் பூரிப்பளே

நோயாகி நோய்க்கு மருந்தாகிப் பாரினில் நொந்தவரை
மாயாது காக்கும் மகமாயி கோண மலையினிலே
தாயா யிருந்துந் தருங்கைகள் கொண்டுந் தரித்திரறகின்(று)
ஈயா மனமெனக் கேன்படைத் தாய்காளி ஈஸ்வரியே

வாழ்த்தாத நாவும் வலம்வராக் காலும் வணங்கிநிதம்
தாழ்த்தாத சென்னியும் தஞ்சமென் றுன்பாதத் தாமரையில்
வீழ்த்தாத நெஞ்சும் தொழாக்கை யுமேனோ விதித்தனையே
ஆழ்த்தாமல் தூக்கி எடுப்பாயே பத்திர காளிகையே

நீறணி மேனியன் நெற்றிக்கண் கொண்ட நிமலனைத்தன்
பேறெனக் கொண்ட பெருமாட்டி கோணைப் பெருநிலத்தில்
வீறுகொண் டெட்டுத் திசைகளுந் தன்பேர் விளக்கிநிற்கும்
மாறிலாக் காளி மனம்வைத்தால் துன்பம் மறைந்திடுமே

பேயு மடங்கும் பிசாசு மடங்கும் பெருஞ்சுடலை
வாயிற் கிடக்கும் வகையற்ற மாடனும் வந்தடங்கும்
பாயும் முனியும் பிணந்தின்னுங் கூளியும் பாய்ந்தடங்கும்
நோயு மடங்குமே பத்திர காளிமுன் நோற்றவர்க்கே

கற்றாருங் கல்லாத பேர்களுங் கையேந்திக் காளியென்றால்
எற்பூர்ந்து நிற்பாள் இதயத்தில் ஏறிநின் றின்பளிப்பாள்
கற்பூர தீபத்தின் கண்ணின்று யாவர்க்குங் காட்டிடுவாள்
சொற்கோண மாமலை யின்சோதி கண்டீர்யான் சொல்லரிதே

பத்திர காளியின் பாதச் சிலம்பொலி பட்டிடவே
வித்தகர் தம்முடன் விஞ்ஞையர் யாவரும் வீணையினை
வைத்தடி போற்றி வணங்குதல் கண்டுயர் வானவர்கள்
இத்தரை மீதில் இறங்கினர் தாயை இறைஞ்சினரே

வேப்பங் குழைக்கொத்தும் வெள்ளிப் பிரம்பும் விளங்குகையில்
காப்பு மணிந்து கடைக்காற் சிலம்பு கலகலென
மூப்பும்பிணியு முடையார் பணிந்து முறையிடுவார்
கூப்பிட் டழைக்கக் குறைதீர்ப்பாள் காளி குலதெய்வமே

உள்ளத் திருந்தே உருகவைப் பாள்நம்மை ஊட்டுவிப்பாள்
மெள்ளத் திருத்தி மிடுக்கர் தமைவாட்டி மீட்டெடுப்பாள்
பள்ளத்தில் வீழ்ந்த பறையர் கடைத்தேறப் பாட்டிசைத்தாள்
கள்ளி யெனை ஈர்க்கும் காளி கருணைக் கடைக்கண்களே

தினமும் வலம்வந்து தென்கைலை யாளின் திருவடியை
மனதி லிருத்தி மறைந்த பொருள்மீட்க வந்துநிற்பார்
அனையே எடுத்தாரைக் கண்முன்னே காட்டம்மா என்றிரக்கக்
கனவில் வெளிவந்து காட்டுவாள் பத்திர காளிகையே

கற்சிலைக் குள்நிற்குங் காளிகா தேவி கனவினிலே
அற்புத மாய்த் தோன்றும் அம்பிகையே கோணையம் பதியோர்
நற்றவத் தின்சான்றே ஞானக் கொழுந்தே நளிர்கமலப்
பெற்கொடி யேபுரம் மூன்றும் எரித்தவளே போற்றிபோற்றி

மாதர் குலம் போற்றும் மாதே மனைவாழ்வே மறையவர்கள்
ஓதுகின்ற வேதத்தின் உட்பொரு ளாய்நின் றுணர்வித்துப்
பேத மகற்றும் பெருமாட்டி ஏழை எளியவர்கள்
காதலிக் குங்கற் பகமேயென் கறைநீக்குங் காளித்தாயே

அம்பிகை கௌரி அமிர்த வசனி அழகுவல்லி
உம்பர் தொழு நாயகி உமாபிராட்டி உதயசோதி
செம்பவளப் பெம்மான் சேரும் பெருமாட்டி செந்தமிழீ
கம்பத்தில் நிற்குங் கழைக்கூத்தர் வாழ்த்துங் காளிகையே

படையை வளர்க்கும் பணியன்றி வேறோர் பணியறியா
மடையர் பெருகிக் களித்து விளையாடும் மானிலத்தில்
அடையும் பயனேது முண்டு கொலோவுன் அடிபணியுங்
கடையர் தமக்கு மருள்கூரும் பத்திர காளிகையே

ஏறும் விலையும் இறங்காதோ இந்த இழி நிலத்தில்
நாறும் பொருள்களும் நல்ல விலைகொள நாடிடுவார்
கூறுந் தரும நெறிகொள்ளார் கொள்ளை அடித்திடுவார்
தேறும் விதியிலையோ சொல்லாய் பத்திர காளிகையே

ஆட்டிப் படைக்கு மதிகாரப் பேய்பிடித் தாடுகின்றார்
போட்டி பொறாமையால் பூசலிடு கின்றாரிப் பூதலமும்
வாட்டி வதைக்குமிவ் வல்லாளர் கைப்பட்ட வாசியினால்
ஊட்ட மிழந்து கலங்குதே பத்திர காளிகையே

பொல்லாப் பகைஞர் புரண்டோட முன்னர் புரமெரித்த
வில்லால் அடித்து விரட்டித் துரத்தும் விறலுடையாள்
மல்லாடுந் தோளாள் மகிஷா சுரனின் வலியடங்கப்
பல்லா யிரங்கைப் படைகொண்ட பத்திர காளிகையே

ஏடுஞ் செபமா லையுந்திருக் கைகளி லேந்திமலர்
சூடும் முடியும் முகத்தா மரையுந் துலங்கியிட்க்
கூடு மடியார் குழாம்வாழ்த்த என்றன் குறையகலக்
காடும் மலையுங் கடந்து வருங்கன்னி காளிகையே

பொங்கிப் படைத்துனைப் போற்றிப் பணிபவர் புரிதொழிலில்
பங்கம் வராமற் கடைக்கண் செலுத்தும் பராபரையே
சங்கத் திருந்து தமிழாய்ந்த பெம்மான் சடாமுடியில்
கங்கை யணிந்தான் பெருமாட்டி பத்திர காளிகையே

பாரும் விசும்பும் பரவித் துதிக்கும் பதாம்புயத்தின்
சீருஞ் சிறப்பு மறியாத மூடர் செருக்கடங்கத்
தேரி லிவர்ந்து திரிபுரம் மாயச் சிரித்தவளே
சேருமடியார் தமைக் காக்கும் பத்திர காளிகையே

ஆயுதந் தாங்கி அநியாயஞ் செய்யு மரக்கரினால்
மாயிரு ஞாலம் கொலைக்கள மாயின்று மாறுதம்மா
தீயினும் வெய்யவித் தீவினையாளர் திருந்துதற்கு
நீயுளம் வைத்திடில் காணுமே பத்திர காளிகையே

அஞ்சிப் பயந்தே அடிமையாய் வாழும் அவலமெலாம்
பஞ்சிற் பொறிபட்ட வாபோல் நொடியிற் பறந்திடுமே
தஞ்ச மடைந்தாரைத் தாங்கும் பெருமாட்டி தாழ்ந்தவர்தம்
நெஞ்சுக் குரமூட்டும் நின்பார்வை பத்திர காளிகையே

காவி யுடுத்தாலுங் காட்டிற் றிரிந்தாலுங் கால்நடையில்
கோவிற் றலங்கள் தரிசித்து வந்தாலும் கூடிநின்று
பூவிலை யாலர்ச்சித் தாலுமென் யாவையும் போலியன்றோ
தேவியுனக் கன்புசெய் யாராகில் பத்திர காளிகையே

கும்பா பிடேகப் பெருமாட்டி தென்கைலைக் கோணமலை
அம்பாள் திருமேனிக் கெண்ணெய்க் காப்பிட்ட அன்புடையார்
தம்பாதந் தொட்டுத் தொழுதாலும் போதுமே தாழ்வினைகள்
நம்பா லணுகா வகைசெய்யும் காளி நயனங்களே

உலகளந் தானோடு கூடிப் பிறந்தநல் லுத்தமியைக்
குலமாதைக் கோணா சலத்தோர் புகழ்ந்தேத்துங் கோமளத்தை
மலர்மாலை சூடித் தினமு மடியார் மகிழுமருட்
சிலைமாதைப் பத்திர காளியைச் சேர்வார்க் கிடரிலையே

கோணப் பொருப்பில் குடிகொண்ட காளியைக் கோமளத்தைக்
காணப் பெற்றார்வேறொன் றும்வேண்டுவரோ கவினுலகம்
மாணப் படைத்தானும் மாலும் அறியா மலைமகளின்
பூணில் அணியில் புதையுண்டு நிற்பர் புலனழிந்தே

தீராப் பிணியாவுந் தீர்த்திடு வாள்வெய்ய தீவினைகள்
வாராமல் வந்தெம்மைக் காத்திடு வாளெங்கள் வாழ்வினிலே
போராடு மைம்புலக் கொற்ற மடங்கப் பொசுக்கிடுவாள்
சீராரும் பத்திரகாளிப் பெருமாட்டி செய்திறமே

அஞ்சா ரெவர்க்கு மடிபணி யார்வே தனையுடையார்
கெஞ்சார் பசித்தாலும் கேளார் கிறுங்காரெக் கேடுறினு
மஞ்சார் திருக்கோண மாமலை வாழ்மக்கள் மாந்திநிதம்
நெஞ்சாரக் கொண்டாடுங் காளி யருள்பெற்ற நித்தியரே

நீரும் நெருப்பும் நிலனும் வளியும் நெடுவிசும்பும்
ஊருஞ் சுடரும் உயிரும் உடம்பும் உறுபுலன்கள்
சேரு மிடங்க ளடங்கலுமெங்குஞ் செறிந்து நிற்பள்
ஆரும் அறியார்காண் பத்திர காளியின் ஆற்றலையே

பாலாற் சொரிந்து குடமுழுக் காட்டும் பராபரையுன்
காலால் மிதியுண்ட காரணத் தால்நெற்றிக் கண்ணுடையோன்
மேலாய் விளங்கும் பெருமையும் பெற்றான் மிதிபிறையோன்
ஏலாதே காளியுன் பாதப் பெருமை இயம்புதற்கே

நித்திய வாழ்வில் நினைப்பவர் நெஞ்சில் நிலைப்பவளைப்
பத்திர காளியைப் பார்முத லண்டம் படைத்தவளை
வித்தகி யாள்தனை வேள்விக் குமுதல் வியைவெளியில்
நர்த்தனஞ் செய்திடும் நாயகி யைநெஞ்சில் நாடுமினோ

தித்திக்க முன்நாமம் என்னாவி லேற்றித் துதித்திடுவேன்
முத்திப் பொருளே முதலந்த மில்லா முதியவளே
சித்த மடங்கிச் சிவத்யானஞ் செய்வார் சிரோமணியே
பக்தர்க் கினிய பராசக்தி பத்திர காளிகையே

கூப்புங் கரங்கொண் டுனைப்போற்றுஞ் செய்கை குறைபடாமல்
மூப்பும் பிணியு மெனைவந்து தாக்கமுன் முன்னருள்வாய்
நாப்பண் ணிசைக்கு மடியார் நடுவுள் நயந்திருக்கும்
காப்பே கருணைப் பெருமாட்டி பத்திர காளிகையே

ஆக்கும் பெருமாட்டி அன்னை யபிராமி அந்தணர்தம்
தீக்குள் விளங்குஞ் செழுஞ்சோதி வேதத் திருமறையின்
வாக்கில் விளங்கும் வடிவே வினையின் வலியழிய
நோக்குங் கருணை நயனத்தி பத்திர காளிகையே

பாயும் மனமும் அடங்கிப் பணியும் படையுடையாள்
நோயும் பிணியும் நொடியில் அகற்றும் நுதல்விழியாள்
வாயிலும் நெஞ்சிலும் வந்திருப் பாள்வாக்கு வாகினியாள்
காயத் திரியில் களித்தாடும் பத்திர காளிகையே

மெய்யாய் விளங்கும் விழுப்பொருளே யுனை வேண்டித்தவஞ்
செய்யா தவனன்பர் கூட்டஞ்சே ராதவள் சிந்தையுள்ளே
வையா தவனுனை வாழ்த்தா தவனென்செய் வானவனைக்
கையா லணைக்கா விடிலம்மா பத்திர காளிகையே

நாவிற் கிடந்து தவழ்ந்து புரண்டு நடைபயிலும்
தேவிக் கிணையான தெய்வமுண் டோதினந் தேடிவந்த
பாவிக் கிரங்கிப் பரிந்தரு ளாயோ பனிமலர்ப்பூங்
காவிக் கருங்கண்ணி காமாட்சி பத்திர காளிகையே

அல்லும் பகலும் அருள்செய்வாள் நாவில் அணியணியாய்ச்
சொல்லும் பொருளுந் தருவாள் சுருதிச் சுடரொளியாள்
நெல்லுந் தருவாள் நிலமுந் தருவாள் நினைந்தவர்க்கே
கல்லுங் கரையக் கனிவிப்பாள் பத்திர காளிகையே

ஆடும் பெருமான் அழகில் களித்தாடும் ஆரணங்கே
தேடு மடியார்த முள்ளத்தில் தித்திக்குந் தெள்ளமுதே
வாடும் பயிர்நோக்கும் வான்முகி லேசிங்க வாகனத்தி
காடு மதிர்ந்திடக் கர்ச்சிக்கும் பத்திர காளிகையே

விடமார் அரவும் பிறையும் விளங்குஞ்செவ் வேணியனின்
இடமார்செம் பாகத் திருப்பாளென் னாவிலும் வந்திருப்பாள்
திடமாருளமுந் தருவாள் தெளிஞானக் கண்திறப்பாள்
கடல்சூழ் திருக்கோண மாமலைப் பத்திர காளிகையே

அறிவுந் திருவும் அழகுங் குணமுமருள்நலமும்
பெறுதற் கரிய பெருவாழ்வுமன்பர் பெருநிலையும்
திறமுந் தருஞ்சித்தி யெல்லாந் தருமே தொழுதெழுவார்
கறைநீக்குங் கண்ணுடை யாள்கன்னி காளிகையே

நாளும் பொழுதும் நறுமலர் மாலை நயந்தணிவார்
கோளும் பிணியும் கொடுந்தீ வினையின் குறைபலவும்
தூளும் பொடியுமாய்த் தூற்றிடுவாளெங்கள் தொல்லைநகர்க்
காளி யபிராமி காணெங்கள் பத்திர காளிகையே

மாலு மயனு மழுதுமன் றாடத்தன் மார்பு விம்மிப்
பாலுங் கொடுத்துப் பசுந்தோகை மீதேற்றிப் பங்கயப்பூங்
காலிற் கழல்பூட்டி வெஞ்சூர்கண்டஞ்சக் களம் விடுத்தே
பாலன் திறங்கண்டு பூரித்த பத்திர காளிகையே

அச்ச மகற்றி அடியாரைக் காக்குங்கை யாயிரமும்
பச்சைத் திருமேனிப் பட்டொளியும் பாதப் பண்சிலம்பும்
உச்சித் திலகமும் கொவ்வை யிதழும் உடையமணிக்
கச்சைப் பறிக்குங் கலசத்தாள் பத்திர காளிகையே

தடையேது முண்டோ தமியேற் கருளத் தளர்ந்துநிற்கும்
அடியாரைத் தாங்கி யணைக்குமரசி அடைந்தவரைக்
கொடையால் உயர்த்துங் குலமாதே கூற்றின் குலம்நடுங்கப்
படையேந்துங் கொற்றவை யேசக்தி பத்தர காளிகையே

அள்ளிக் கொடுப்பாள் அடியார் மிடிகள் அகன்றிடவே
துள்ளிக் குதிப்பாள் பகைஞர் நடுங்கத் துடியடிப்பாள்
வெள்ளிப் பிரம்பை விசுக்குவாள் சூலத்தை வீசிநிற்பாள்
கள்ளக் கபடர் வெருண்டோடப் பத்திர காளிகையே

தஞ்ச மடைந்தாரைத் தாங்குந் திருப்பாதம் தாகமுறும்
நெஞ்சங் கனிய நினைவில் நடமாடும் நீள்கழல்கள்
செஞ்சொல் மலர்தூவிச் சேவிப்பார் போற்றுஞ் சிவந்தமலர்க்
கஞ்சமுடையாள் எமைக்காக்கும் பத்திர காளிகையே

சேலார் நெடுங்கண்ணி செந்தமிழ்ப் பாவை சிதம்பரத்தின்
மேலாய் விளங்குஞ் சிவசக்தி மேவார் புரமெரித்த
ஆலால கண்டன் அழியா திருக்க அருள்நயனி
காலா யுதக்கட வுள்போற்றும் பத்திர காளிகையே

தாமதி யாமல் வரந்தரு வாள்பெற்ற தாயனையாள்
ஊமைகளும் வாய் திறந்துரையாட உவந் தளிப்பாள்
சாமளை யாளுமை சச்சிதா னந்தி சமர்புரிந்த
காமனைக் கண்ணால் எரித்திடும் பத்திர காளிகையே

ஒன்றாய்ப் பலவாய் உயிராய்ச் சடமாய் உலகமெலாம்
நின்றாள் பராசக்தி நீலி திரிசூலி நீறணிந்தே
மன்றாடும் ஈசன் மனையாட்டி விம்மும் மடிசுரந்து
கன்றார வூட்டுங் கறவையாள் பத்திர காளிகையே

புவனை பகவதீ பூரணி பொய்யர் புரமெரித்த
சிவபரை மாரி சியாமளை சாமுண்டி சித்திதரும்
நவயுகத் தாள்சக்தி நாயகி நாரா யணிநளினி
கவுரி சுமங்கலி காமாட்சி பத்திர காளிகையே

ஆக்கி உலகின் அசுரத் தனத்தை அழித் தொழித்துக்
காக்கும் பராசக்தி காமாட்சி முக்கண்ணி கண்சிவந்து
நோக்கின் வினைகள் தடம்புரண்டோடும் நொடியினிலே
பார்க்குள் விளங்கும் பரஞ்சோதி பத்திர காளிகையே

நேர்ந்து நினைப்பார் இழைகட்டி நிற்பார் நினைந்தபடி
ஈந்து மகிழும் இதயத்தாள் ஈயா விழிகுலத்து
மாந்தர்க் கிடருந் தடையும் வழியில் மலியவைப்பாள்
காந்தம்போ லீர்க்குங் கலைகொண்டாள் பத்திர காளிகையே

பாவம் பொடிபடப் பார்க்குங் கருணைப் பராபரையாள்
தேவர் குலத்துத் திருமாதர் போற்றுந் திருப்பதத்தாள்
பூவை யபிராமி பொற்பாவை நின்று பொருமுகத்தில்
காவல் செயுஞ்சக்தி காமாட்சி பத்திர காளிகையே

வெப்பால் விழையும் பிணிகள் விலகிட வேண்டிநின்று
கர்ப்பூரங் காட்டிக் கரங்கூப்பு வார்வாழ்த்துங் கற்பகமே
ஒப்பாரு மில்லாப் பெருமாட்டி ஓங்காரி ஓங்குசுடர்க்
கப்பாலும் நிற்கும் அருட்சோதி பத்திர காளிகையே

கல்லா தவருங் கரங்கூப்பி உள்ளங் கசிந்துருகிப்
பல்லா யிரங்கோடி நாமங்கள் கூறிப் பரிந்தழைத்தால்
நில்லாள் கருணைப் பெருமாட்டி முன்வந்து நின்றிடுவாள்
வல்லாள் அபிராமி காமாட்சி பத்திர காளிகையே

வாட்டுந் துயரம் பலகோடி வைத்து வழிமறித்தே
மீட்டிங் கெடுக்க நினைத்தாலும் வெய்ய விதிவழியே
ஓட்டங் கொடுக்கு முளத்தை உடையாறுக் குள்ளொளியைக்
காட்டுங் கருணைக் கதிரன்றோ பத்திர காளிகையே

வாணாள் முழுதும் வணங்கும் படியென்னை வைத்துவிட்டால்
வீணாள் கழிக்கும் வினையேனை வாட்டும் விதியிலையே
கோணா மலையின் குலதெய் வமாய் வந்த கோமளமே
காணாதவரும் கடைத்தேறக் கண்வைப்பாள் பத்திர காளிகையே

கூண்டி லடைத்துக் குவலயத் தில்வாழக் கோடிவைத்தாய்
மாண்டு மடியவோர் எல்லையும் முன்னே வரைந்துவைத்தாய்
தூண்டு முனைச்சேரத் தொல்லை களும்வைத்தாய் தொல் வினையேன்
காண்டற்குத் தண்ணளியும் வைத்தாய் பத்திர காளிகையே

ஓடித் திரியும் உழலும் அலையு முலகமெலாந்
தேடித் திரியும் மனத்தை யுனது திருப்பதத்தில்
கூடிப் பதியக் குவியத் திருவுளங் கூடிவிட்டால்
பாடிப் பணியும் உனைநாளும் பத்திர காளிகையே

ஆடேன் அகங்குழைந் துன்பால் உருகு மன்புகொண்டு
கூடேன் கொடுவினை சூழக் கிடந்தேன் குறையிரந்து
பாடேன் பணியேன்என் செய்வேன் எளியேன் பசியகுழற்
காடேந்துஞ் சென்னி யுடையாளே பத்திர காளிகையே

பாராளும் மன்னரும் பாவலரும் வந்து பாட்டிசைக்குஞ்
சீரார் அரவிந்தச் சேவடி யாளன்பர் சிந்தையிலே
நேராகத் தோன்றி நிலையான முத்தி நிலையளிப்பாள்
காரார் குழற்கண்ணி காமாட்சி பத்திர காளிகையே

குடியுண்டு கூடிக்குடித்து மகிழ்ந்தாடும் கூட்டமுண்டு
விடியும் வரையும் விழுந்து கிடந்துபின் விட்டெழுந்தால்
கடியும் விலைமாதர் காம ...வையின் களியுமுண்டே
படியில்யா னுய்யக் கதியு... பத்திர காளிகையே

பீடையுந் தீராப் பிணியும் பெருந் தொல்லைப் பீதிகளும்
நீடிய பஞ்சத்தில் ஆழ்த்தி வருத்தும் நெடுந்துயரும்
பாடுபட் டுழைப்பார் பணத்தைப் பறிக்கும் பயங்கரமும்
காடையரு மோடக் கசை கொள்வாள் பத்திர காளிகையே

சாதிப் பிரிவும் சமயப் பிரிவுஞ் சடைத்தெழுந்த
வாதக் களத்தில் வளரும் பலகட்சி வாதிகளின்
பேதப் பிரிவும் பிணக்கை வளர்க்கும் பிறபிரிவும்
மோதிக் குலைத்திட்டால் வாழ்வெங்கே பத்திர காளிகையே

எல்லா வுயிர்களும் ஈடேறுங் காலந்தான் என்றுளதோ
நல்லாய் அது வரையும்நான் பிறந்து நலிந்தவர்க்குப்
பல்லா யிரந்தொண்டு பாரினிற் செய்யப் பணித்தருள்வாய்
வல்லாய் சிவசத்தி காமாட்சி பத்திர காளிகையே

இரக்கஞ் சிறிதின்றி ஈயும் மனமின்றி யிவ்வுலகம்
அரக்கர் செயல்மிஞ்சி ஆதிக்கப் பேய்பிடித் தாடுதம்மா
பரத்தை மறந்து கொடும்பாவங் கள்செய்யும் பாதகருன்
உரத்தை அறிய வுளங்கொள்வாய் பத்திர காளிகையே

காவி யுடுத்தாலுங் காட்டிற் கிடந்து கடுந்தவத்தால்
ஆவியிளைத்தாலும் ஆருமே காணல் அரிதரிதே
பாவிக ளானாலும் பாதத்தில் வீழ்ந்து பணிந்துநின்றால்
தாவி யணைப்பாளே தன்கையால் பத்திர காளிகையே

தியானிப் பார்நெஞ்சில் தேனாகித் தித்திக்குந் தெள்ளமுதே
தயாநிதி யேயுனைத் தஞ்ச மடைந்தாரைத் தாழவிடல்
நியாயமோ நீதியோ நேர்மையோ சொல்லம்மா நீலகண்டி
சியாமளை யேசிவை யேசத்தீ பத்திர காளிகையே

அணையாது நித்தம் அடித்திட்டார் தம்பால் அணுகுவரோ
துணையாரு மில்லார்க்கு நீயன்றி வேறோர் துணையுளதோ
இணையாரு மில்லாப் பெருமாட்டி மாறிட்ட ஏதிலரைக்
கணையால் அழித்திட்ட காமாட்சி பத்திர காளிகையே

காராகி விண்ணில் கறுத்தெழுந் தெங்குங் கலகலென
நீராய்ச் சொரிந்து நிலத்தைக் குளிர்விக்கும் நின்னருளை
ஏராளர் கூடி எழில்மாரித் தாயென் றிறைஞ்சிநிற்பர்
பாராகி விண்ணாகிப் பாலிக்கும் பத்திர காளிகையே

கொலையே புரியுங் குணக்கேடர் கயவர் குலம்நடுங்கச்
சிலையேவுங் கொற்றவை யாள்நெற்றிக் கண்சிவந்
தால் நிலத்தில்
நிலையார் பகைவர் நெடுந்தூரஞ் சென்று நிலைகுலைவர்
கலைகோடி வீசுந்தாய் காமாட்சி பத்திர காளிகையே

காடும் மலையுங் களமாய்க் கணஞ்சூழுங் காரிருட்டில்
ஆடும் பெருமாட்டி அண்டங் குலுங்க அயன்திருமால்
தேடும் பெருமான் ஒருபாகங் கொண்டாய் தினமுமுனைப்
பாடும் பணியில் எனைவைப்பாய் பத்திர காளிகையே .

மதத்தால் பிரிந்து மலைவுற்று மோதும் மனிதகுலத்
துதித்தார் ஒருமித்து வாழும் உறவின் உயர்நலத்தை
மதித்தால் உலகம் மறவழியிற் சென்று மாய்ந்திடுமே
கதித்தாடுஞ் சாமுண்டி காமாட்சி பத்திர காளிகையே

அஞ்சாத நெஞ்சும் அயரா துழைக்கும் அருந்திறமும்
நெஞ்சார வாழ்த்தும் பெருநிலையும் ஈயா நீசரிடம்
கெஞ்சாத வாழ்வுங் கிறுங்காத நேர்மையுங் கேட்டுநின்றேன்
பஞ்சாட் சரத்தில் ஒளிவீசும் பத்திர காளிகையே

மாலும் அயனும் மகிழ்ந்தாட ஆடும் மலர்ப்பதத்தாள்
வேலும் மயிலும் உடையானைப் பெற்ற விறலுடையாள்
காலும் விசும்புங் கதிரும் ஒளியுமாய்க் காட்டிநிற்பாள்
பாலுந் தெளிதேனும் பாலிப்பாள் பத்திர காளிகையே.

பாதஞ் சிவக்கப் பரத்தில் நடமாடும் பார்வதியாள்
பூதம் புடைசூழப் போர்க்கோலம் பூண்டு புரமெரித்தாள்
சாதந் தருமன்ன பூரணியா ளின்பத் தாரணியாள்
ஏதங் கெடுத்தாளுங் காமாட்சி பத்திர காளிகையே.

ஆதித் தமிழ்நாட்டின் அன்னை தமிழ்த்தெய்வம் ஆகமத்தை
ஓதி யுணர்ந்த உரவோர் முதற்கண்ட உண்மையவள்
பேதித்து நம்மை வளர்த்தெடுக் கும்பெருமாட்டி பொய்யை
ஊதித் துடைத்துக் களித்தாடும் பத்திர காளிகையே

துர்க்கையாய் வந்து துயரங்கள் போக்குந் துடியிடையாள்
தக்கன் தலையினை வீழ்த்திய மொய்ம்புயத் தானையினாள்
சக்கரத் துள்நிற்குஞ் சக்திப் பிழம்பாகுஞ் சாம்பவியாள்
திக்கெலாம் ஆளுந் திகம்பரி பத்திர காளிகையே

பாலைப் பொழியும் பசுவாய்ப் பிறந்தாலும் பால்கறப்பர்
சோலைக் கிளியாய்ப் பிறந்தாலும் எங்குஞ் சுதந்திரமாம்
ஓலைக் குடிலிற் பிறந்தார் தமக்கிங் கொளியுமுண்டோ
வாலைக் குமரியே வாராகி பத்திர காளிகையே

கொடுப்பாருக் கொன்றுங் குறைவில்லை என்னுமிக் கொள்கைகடைப்
பிடிப்பாரைக் காண்ப தரிதம்மா இந்தப் பெருநிலத்தில்
தடுத்தாளுந் தாயென்றுன் பாதத் திலேதலை தாழ்த்தி நின்றேன்
கடத்தாது வந்தென்னைக் காத்தருள் பத்திர காளிகையே

காட்டு மிருகக் குணமின்னும் மாறாக் கடைநிலையில்
நீட்டி நிமிர்ந்த மிருகமாய் வாழ்கின்றான் நீள்நிலத்தில்
போட்டி பொறாமை கபடம்பொய் ஒன்றுமே போகவில்லை
மீட்டிங் கிவனை யெடுக்காயோ பத்திர காளிகையே.

மக்கள் மனையென்றும் மாடென்றும் வீடென்றும் மண்ணுலகில்
சிக்கி யலைகின்றான் செத்து மடிகின்றான் சீரழிந்தே
மிக்க பொருள்தேடி மீளாத ஆசையில் மின்னுகின்றான்
தக்கபடி வாழான் என்செய்வான் பத்திர காளிகையே

வீட்டை யமைத்து விளக்கேற்றி [illegible]த்தெங்கும் வீதிகளால்
பாட்டை யமைத்துப்பண் பாடு வி[illegible]சகப் பணிபுரிந்தான்
நாட்டை யழிக்கும் நரசிங்க மாய்மாறி நலிவுசெய்யுங்
கேட்டை யழிக்காயோ காமாட்சி பத்திர காளிகையே

கல்லுஞ் சிலையாய்க் கடவுளாய் மாறுங் கலைவடிவில்
எல்லாந் தரவல்ல சக்தியாய்க் காட்சிக் கெளியவளாய்
பல்லா யிரம்பேர் பரவும் பரமாய்ப் பராபரையாய்
வல்லபை யாய்நின்றாய் காமாட்சி பத்திர காளிகையே.

காளி யருளுண்டேல் கண்ணில் ஒளியுண்டாம் கஞ்சமலர்த்
தாளி னருளுண்டேல் தானியப் பேறுண்டாம் தங்கமுண்டாம்
கோளின் குறைநீங்கிக் கொற்றமுண் டாம்நற் குணமுமுண்டாம்
வாளி பிடித்திட்ட வல்லபை நாமத்தில் வாழுமினோ

கனவில் அவள்செய்யுங் காரியம் ஒன்றல்லக் கண்ணுறங்காள்
தினமும் அவள்போகுந் 'தேசம் பலவாகுந் தேடிச்செல்வாள்
மனதில் விளையாடும் ,மாதா அவளேகாண் மாமலையாம்
புனித பதியாளைப் பத்திர காளியைப் போற்றுதுமே.

கோடிப்பொன் கொண்டாரும் உன்பால் அணுகிக் குறையிரப்பர்
வாடிக் கிடந்து வரங்கேட்பர் அன்னார் வருத்தமெலாம்
தேடிப் பிடித்துத் திருத்தி வழிகாட்டுந்தேவி மன்றுள்
ஆடித் திகழும் அருட்காளி உன்தாள் அடைக்கலமே.

சுபம்

# NATARAJH

BY - EVELYN WOOD -

Dance made vivid the dynamic rhythm of wheeling Birth and Death. Shiva rose, heaven-tall in his ice-castle of Kailasa, rent the still Centre of Being with the swing of Becoming, started the cyclic eternity of Karma, the man-made, and Dharma, human unmaking..... and the cosmos spiralled in close on the ego's awaking...

Tandava! Ballet of born and reborn!
Tandava! Separate Time and Space torn

raw from the bosom of Brahma.
Tandava! Spin into rhythm the sky and the ocean, even
the spherical cosmos itself, thy still centre :
Axis unmoving,
loved one and love,
lover and loving;
neither above
nor yet below,
but here, in the present
Being - the glow,
painful and pleasant,
merged in Thy swing
of Thee I sing!

Tandava! Clothed with Directions, the crystal emotion,
dance me to life! By the death resurrection I enter;

spring into living.
instant reborn.
all my heart giving:
part that is torn
mindful. yet never
trapped by its thought.
intellect's clever
twisting to nought:
moment and point
racked out of joint.

Tandava! Dakshina! Ego's insensate devotion turns on itself. universal Becoming's inventor!
it is neither the future. no past: it is now!
it is not the elsewhere. no dim heaven: but Here!

When body and mind
bend low to the storm:
when eyes that were blind
in watching transform
a vision. sharp-lined
to the act of the Norm........

In this ballet of fire. little I and great Thou from duality's pattern stand forth. lightly clear

Darkness lifts: we are merged
by a spark that is urged
beyond Sun's incandescence.
enternally fusing

to Love's coalescence.
swept out of choosing
Becoming's begun
to disintegrate
into Being's state.
where all is one :

OM!

NATARAJ. Nritiya's Lord.
rise. till Thy Head touch the stars.
Sweep of the torch and the sword.
shatter our habits' iron bars
Swing of the bell tolling doom.
crumble the walls of our cage:
tell us for souls there's no room:
humble ourselves in Thy rage.
The lion's million - volt spring:
the steam - hammer blow of the tiger:
the elephant's ponderous swing:
the rush of the salmon upstream.
through rapids and cataracts leaping:
the dragonfly's hovering dream:
the plummeting swoop of the falcon:
the surge and the spout of the whale:
the compass - straight flight of the swalows:
the swan in their regal full - sail
the duck in their phalanx - jet! rocket:
the charge of rhinoceros hurtling:
the deer in their rut. antlers locked:
the oak in its centuries' growth:

the bursting of leaves and bright petals;
the ivy on stone, that is loth
to clothe the sleek rawness of concrete;
convolvulus, blooming an hour;
the bees, with their ritual ballet;
the ant, in his disciplined power,
and totalitarian Man
all move in thee,
bound in thy dance,
for ever free
through random chance.

O! Let
me forget
that life in me
makes Rhythm to Be.

Doing. the Doer, the Done;
how much remains
under the Tandava sun;
to face our errors;
to curb our dreams,
to calm our errors,
to prune Big Schemes,
to stop our craving
for power and name,
to drop the raving
and let the Flame
sear us with love,
Compassion's child.

Come! Let us act
to dam the wild
waste of self - praise,
to lock at the Fact.
to cut through the haze
of fear and desire.
Let us aspire
only to prove
one single thing
in all appearance;
that interference
with lives of others
brings out suffering
and hate that smothers
life, from the sperm
to death's full - term.
Till we have grown,
ourselves, mature,
let us secure
what we have sown:
let us be sure
of our ignorance
in all but Thy dance:
Knowing, the Knower, the Known
are the Monad, all One.

In Kailas' ice, great Shiva begins
to turn the Wheel of deaths and lives.
some look, and find a faith which shrives
the living soul, redeems all sins:

others, reincarnation's chains
of pleasures linked with balancing pains.
    The whole man sees
    neither of these,
but in his own self the Dance contains.
The lightning stabs; the thunder wakes!
    On calmest lakes
    under the sun,
    the surface quivers...
    its mirror breaks;
    and vapours, spun
    in clouds, bear rivers.

Yet who, as man, has identified
those molecules, when once dispersed!
The drop the sun has atomised,
does it assemble from some thirst
to be the newly synthesised
speck of terrestial pressure - form?
Do such fresh groups continue mind
and character, from norm to norm,
all different, in successive Ages?
Is water purified in stages?
Tandava! Lord of the living and dying:
    born and unborn,
    evening and morning,
    growth and decay,
    night and broad day.....

Tandava! Lord of the diving and thd flying.
swimming and crawling,
treading and spawning, obscurely mated.
total - created.......

Tandava! Lord of the galloping, crying
centaur and faun;
reindeer calling.
elephants pacing.
caracals racing...........

Tandava! Lord of affirming and denying.
Ambulant Man.
valuing, planning.
whose spirit konws
not whither it goes.....

Tandava! Lord of the Rhythm which pervades
and evolves the whole Creation
ever - solving each equation
In its variable grades
with dynamic differential.
it resolves each permutation
to its final fact - essential.

Man accepts the Dance. resigns
all his drift to isolation,
plans to rival God's designs.
intellectual innovation
finds its level, sets his pace

to a partial integration
with What lies behind God's Face.

Tandava sweeps us, one and all.
into the cyclic heat and light,
stygian darkness, blazing white,
noise and deep silence, rise and fall;
every form of the Norm:
North - South - East - West
Ballet that is syncopating, evenly stressed,
super - accented rhythm of reverberating,
uninvented moment - massive miracles of Spring and
mating, Instantly through death creating:
passionate - passive birth and the Breath
inspired by flesh that vanisheth
when limbs thresh in sex, or death:
activity or agony.

Tandava swings the unthought things
into its Dance by no mere chance.
Fear, disappear! Desire, take fire, ignorance
die, in Dance - and we come free

OM!

ஓம்
சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

# நடராஜா

('ஈவ்ளின் வூட்')

(இ∴து ஆங்கில அறிஞர் கலாநிதி ஈவ்ளின் வூட் அவர்களால் ஆடல்வல்லானாகிய நடராஜப்பெருமானின் திருநடனத்தை நினைந்து ஆக்கிய ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம்: ஆங்கிலக்கவிதையை தமிழில் ஆக்கித் தந்தருளியவர் உயர்திரு. பெ. பொ. சிவசேகரனார் அவர்கள்.)

ஜனன மரணச் சக்கரச் சுழற்சியின் ஒழுங்கு நியதியை விளக்க எழுந்த இயக்கமே நடராஜத் தாண்டவமாகும். வானளாவிய கைலாசமலை என்னும் பனிமாளிகையிலிருந்து சிவன் எழுந்து மோனத் தவநிலையைக் குலைத்து சிருஷ்டிக்கும் ஆட்டத்துடன் மனிதன் செய்த கர்மவினையின் சுழற்சியையும், மனிதனின் படைப்புக்கு உட்படாத தர்மத்தையும் ஆணவ எழுச்சியை முடிவுக்குக் கொண்டுவர அவனைச் சூழவரப் பிரபஞ்சத்தையும் முடுக்கித் தன் நடனத்தை ஆரம்பித்தார்.

தாண்டவா! பிறப்பு மறுபிறப்பின் ஆட்டமாய்
இருப்பவனே!
தாண்டவா! பிரம்ம அந்தரங்கத்திலிருந்து புத்தம்
புதிதாகக்
கிழித்தெறியப்பட்ட காலமும் இடமுமாக நிற்பவனே.

தாண்டவா! விண்ணையுங் கடலையும், ஏன்? கோள வடிவான பிரபஞ்சத்தையும் கூட மோனத் தவநிலையிலிருநது ஒழுங்கு நியதியாகிய லயத்துடன் தோற்றுவித்தவனே.

அச்சுச் சுழலாத உன் ஆட்டத்தில்
உன்னால் அன்பு செய்யப்பட்டவரும் உன் அன்பும்
உனது அன்பர்களும் அவர்களின் அன்பும்
மேலுமின்றிக் கீழுமின்றி
ஆனால் இங்கேயே, இப்பொழுதே
ஜோதிமயமாய் இருப்பவனே
துன்பப்படுவோரும் இன்பமுறுவோரும்
உனது ஆட்டத்தில் மூழ்கிநிற்கிறார்கள்
அவர்களில் ஒருவனாக நின்று
நானுன்னைப் பாடுகின்றேன்

தாண்டவா! திசைகளை ஆடையாக அணிந்திருப்பவனே
பளிங்குபோன்ற தெள்ளத்தெளிந்த உணர்ச்சி வடிவானவனே
நான் உன்னில் உயிர்த்தெழுந்து ஆட என்னை ஆட்டுவிப்பாயாக
சாவிலிருந்து என்னை மீட்கும் உனது திருவருளின் துணையால்
நான் உன்னை நாடி வந்துள்ளேன்.

புத்துயிர் பெற்று
மறுபிறவி எடுத்து
இருதயம் முழுவதையும் உனக்கர்ப்பணித்து
உடைந்த சிந்தையுடனும்
நிறைந்த நெஞ்சுடனும், ஆனால்
மனத்தின் எண்ணங்களுக்குள் சிக்காமல்
எனது திறமை படைத்த அறிவெல்லாம்
சூனியமாக
கணமும் பொழுதும்
என் என்பு மூட்டுகளெல்லாம்
நெக்கு நெக்குருக
உன்னை நாடி வந்துள்ளேன்.

தாண்டவா! தக்ஷிணாமூர்த்தியே! புலன்களெல்லாம் தன்னில் அடங்கி ஒடுங்குமாறு அருள் செய்பவனே! அகில உலகத்தையும் படைத்தருளும் பரம்பொருளே.

இது வருங்காலமுமல்ல, இது இறந்தகாலமுமல்ல, இப்பொழுதே இது வேறெங்காகிலுமுள்ளதல்ல! மங்கிக் கிடக்கும் விண்ணுமல்ல; ஆனால் இங்கேயே உள்ளது.

உடலும் உயிரும்
புயலுக்கஞ்சி பணிந்து வரும்பொழுது
குருடாயிருந்த கண்கள்
பார்க்கும் பொழுது
ஓர் காட்சியை உருமாறிக் காட்ட
அது ஓர் ஒழுங்கின் செயலுக்கு
கூரிய கோடிட்டாற்போல்
தோன்றுகின்றது.

இந்த அக்கினி ஆட்டத்தில் சிறியேனாகிய நானுப் பெரியோனாகிய நீயும் இரண்டாய் இருக்கும் தன்மை நீங்குவது சிறிது தெளிவாகிறது

இருள் அகல்கிறது
சூரியனது ஒளிப் பிழம்புக்கு அப்பாலுள்ள
ஓர் சுடர்ப் பொறியால் தூண்டப்பட்டு
நாங்கள் ஒன்றாகி விடுகின்றோம்
நீயா நானா என்று பிரித்தறிய முடியாவண்ணம்
ஒன்றாய் நித்தியமாய் அன்புருவாய்
ஒரே மயமாகி விடுகின்றோம்.
படைப்புத் தொடங்கியதும்
உன்னிடத்திலிருந்து பிரியத் தொடங்கியவை எல்லாம்
பின்னர் ஒன்றாகி உன்மோனத் தவநிலையில்
ஒன்றாகி விடுகின்றனவே.

ஓம்!

நடராஜா, நிருத்தியத்தின் தலைவா.
உன்னுடைய சடாமுடி, நட்சத்திரங்களை எட்டும்வரை எழுந்துநில்.
உன்னுடைய அக்கினிப் பிழம்பின் ஆட்டத்தாலும் மழுவின் ஆட்டத்தாலும்
எங்கள் இரும்புச் சட்டங்களாகிய பழக்கவழக்கங்களைத் தகர்த்தெறி.
உனது சங்காரஞ்செய்யும் மணியோசையின் ஆட்டத்தால்
எங்களை அடைத்திருக்கும் கூட்டின் சுவர்களையும் நொருங்கச்செய்.
எங்கள் ஆத்மாக்களை அடைத்து வைக்க எந்த அறைகளுக்கும் முடியாது என்று
முழக்கஞ்செய் .

உனது கோபாக்கினியில் நான் என்னும் எங்கள் அகங் காரத்தைப் பணியச்செய்.

இலட்சம் மின்வேகம் கொண்டு துள்ளும் இரும்புச் சுருள் போன்று துள்ளியெழும்புஞ் சிங்கமும்;
நீராவியினால் இயங்குஞ் சம்மட்டியின் சப்தம்போன்று உறுமும் புலியும்;
பருத்த தேகத்தை ஆட்டி அசைத்து வரும் யானையும்;
செங்குத்திலிருந்து குப்பென வீழ்ந்தெழுந்து நீர்வீழ்ச் சிகளையும் தாண்டி
நீரின் ஓட்டத்துக்கு எதிர்நீச்சலடித்துவரும் சமன்மீனும்;

ஆகாயத்தில் வட்டமிட்டு ரீங்காரஞ்செய்யும் பருத்த சிறகுகளையுடைய ஈயும்;
இரையை நாடி மேலிருந்து கீழே குப்பெனப் பாய்ந்து விழும் வல்லூறும்;

அலையை எழுப்பி நீரைத் தள்ளிவருந் திமிங்கலமும்;
திசைகாட்டி, காட்டும் திசைக்கு நேரே செல்வதுபோன்று பறந்து செல்லும் தூக்கணங்குருவியும்;

அரசபவனி போன்று ஆற்றில் மிதந்து செல்லும் அன்னங்களும்;
விண்ணில் பறந்துசெல்லும் வெடிவாணக்கப்பல் போன்று அணிவகுத்துக் கூட்டங்கூட்டமாகச் செல்லும் புறாக்களும்;

அடித்து மோதிக் கத்திவரும் காண்டாமிருகமும்;
பருவகாலக் காமக்கிளர்ச்சியில் கவரிமான்களோடு பிணைந்துகிடக்கும் பிணைமான்களும்;

குபீரென இலைகள் தளிர்த்து அழகொழுக இதழ்விரித்து நிற்கும் பலநூற்றாண்டுகளின் வளர்ச்சியைக் கண்ட ஓக்கு மரங்களும்;
இஷ்டமில்லாமல் சாந்துத் தரையின் புதிய பளபளப்பின் மேல் ஆடையாகப் போர்த்துநிற்கும் கல்லில் படரும் பசுங்கொடியும்;
மலர்ந்து ஒருமணி நேரத்துள் மறைந்துவிடும் சுற்றிப்படரும் மலர்க்கொடியும்;

தேன்குடித்து களிகொண்டாடும் தேனீக்களும் ;
ஒழுங்காக ஊர்ந்து செல்லும் எறும்புகளும்;
சர்வவல்லமை படைத்த மனிதனும்
அங்கிங் கெனாதபடி
கிடைத்த தருணத்தில்
என்றுஞ் சுதந்திரமாக
உன் ஆட்டத்தில் கட்டுண்டு
உன்னில் எல்லாரும் ஆடுகிறார்கள்
ஓ! நானும் என்னை மறந்து
என் வாழ்வும்
உன் லயத்தில் அமிழ்ந்து விடட்டும்.

செயலும் செயல் புரிபவரும், செய்து முடித்தவைகளும்
இந்தத் தாண்டவச் சூரியனுக்குக்கீழ்
இன்னும் எவ்வளவோ இருக்கின்றன
எங்கள் குற்றங்களை நேருக்குநேர் சந்திக்கவும் ;
எங்கள் கனவுகளை மட்டுப்படுத்தவும் ;
எங்கள் பயங்கரங்களை சாந்தப்படுத்தவும்;
எங்கள் பெரிய திட்டங்களை மேலால் கிள்ளிவிடவும்;
பேருக்கும் அதிகாரத்துக்கும் வாஞ்சைப்படும்
எங்கள் ஆவல்களை நிறுத்தவும்;
கட்டுக்கடங்காமல் கொந்தளித்துப் பேசுவதைப் போக்கவும்
அருளின் குழந்தையாகிய அன்பினால்
அந்தத் தீப்பிழம்பு ஆட்கொள்ளட்டும்
வம்மின்! தற்புகழ்ச்சியென்னும் காட்டுமிராண்டிக் குப்பையை
அழித்தொழிக்க எல்லோரும் செயல் புரிவோம்;
அச்சம், ஆசை ஆகிய மனப்பிரேமைக் கூடாக வெளிவர
நாம் சத்தியத்தை நேரில் காண்போம்.
எல்லாத்தோற்றங்களிலும் ஒன்றையே காண்பதற்கு ஆர்வங்
கொள்வோம்.
மற்றவர்களின் வாழ்க்கையில் தலையிடுவது நமக்குத்
துன்பத்தையே தரும்.
தாயின் கருவிலிருந்து மரணப்பரியந்தம் வாழ்நாள் முழுவதும்
பொறாமையே எங்கள் வாழ்க்கையை அரித்துக்கொண்டிருப்பதை
உணர்வோம்.

நாம் வளர்ந்து முதியவராகும்வரை எதைப் பெறுவதற்கு உறுதிப்பாடு செய்து கொண்டோமோ அதை அடைவதில் நிலைத்து நிற்போமாக.

உன்செயல் தவிர்ந்த எல்லாவற்றிலும் எங்கள் அறியாமை இருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்வோமாக.

காண்பதும் காண்பவனும் காட்சியும் எல்லாம் ஒன்றே.
பனிமலையாகிய கைலாசத்தில் மரணங்களினதும் உயிர்
வாழ்க்கையினதும் சக்கரத்தைச் சுழற்றத் தொடங்குகிறாய்
வாழும் உயிர் தன் குறைகளையெல்லாம் முறையிட்டுப்
பாவங்களினின்றும் விடுபடுகின்ற அந்த விசுவாச பக்தியைக்
காண்கிறார்கள் சிலர்.

இன்பத்தோடும் அதைச் சமப்படுத்துந் துன்பத்தோடும்
தொடரும் பிறவிக்குள் புகுவதைக் காண்கின்றார்கள்
மற்றுஞ் சிலர்.

ஆனால் பூரண மனிதன் இவற்றில் எதையும் காண்பதில்லை.
அவன் ஆத்மாவுக்குள்ளேயே அந்த நடனம் நிறைந்து
விடுகிறது.

மின்னல் வெட்டுகிறது; இடி விழித்தெழச் செய்கிறது!
சூரியனின் கீழ் கிடக்கும் அமைதியான வாவிகளின்
மேற்பரப்பு நடுங்குகிறது.........

அதனுடைய கண்ணாடி உடைகிறது;
மேகங்களை ஆக்கிய நீராவித் துளிகள்
ஆறுகளை அள்ளிச் சொரிகின்றன.
அவை விட்டுப் பிரிந்ததும் அந்த அணுத்திரள்களைப்
பிரித்தறியக் கண்டவன் மனிதனைப்போல் வேறு யாருளன்?
பூமியின் அமுக்கத்தினால் புதிதாக ஒன்றுசேர்ந்து துளி
யாவதற்குக் கொண்ட தாகத்தினால் அந்தச் சூரியன்
அணுவாகிய துளி ஒன்றாக
வந்து கூடியதோ.
அத்தகைய புதிய தொகுதிகள் ஒரு வடிவத்திலிருந்து
இன்னொரு வடிவத்துக்கு மணத்தையும் பண்புகளையும்
எடுத்துச் சென்றனவோ?

தொடர்ந்து வரும் காலங்களிலெல்லாம் வெவ்வேறு வடிவங்கட்கு இட்டுச் சென்றனவோ?
படிப்படியாக நீர் சுத்திகரிக்கப்பட்டதோ?
தாண்டவா! வாழ்பவர்களினதும் இறப்பவர்களினதும் தலைவனே!

பிறந்தும் பிறவாததும்
மாலையுங் காலையும்
வளர்ச்சியுந் தேய்வும்
இரவும் நெடும்பகலும்
ஆகிய இவைகளின் தலைவனே.

தாண்டவா! சுழியோடுவன, பறப்பன,
நீந்துவன, ஊர்வன,
நடப்பன, முட்டையிடுவன,
கண்காணாமல் புணர்வன,
முற்றாகப் படைக்கப்படுவன
இவற்றின் தலைவனே

தாண்டவா! பாய்வன அழுவனவற்றின் தலைவா,
மனித முகமும் கைகளும் கொண்ட குதிரை,
கொம்பும் வாலுமுடைய பிராணி ,
கூவியழைக்கும் பனிமான்,
வேகநடை போடும் யானைகள்,
போட்டியிட்டோடி வரும்
புள்ளிமயிர்ப் பூனைகள்
இவைகளின் தலைவா,

தாண்டவா! உடன்படுபவன், மறுப்பவன்,
தன் ஆத்மா எங்கே போகிறது
என்பதை அறியாத
மதிப்பீடு செய்பவனும் திட்டமிடுபவனும்
ஆகிய அலைந்து திரியும் மனிதன்
இவர்களின் தலைவா.

தாண்டவா! இயக்க வேறுபாடுகள் கொண்ட
பல்வேறு தரங்களிலுள்ள
சமன்பாடுகளாகிய பிரச்சனைகளை விடுவிப்பதும்
ஒழுங்காய் அமைந்த பல்வேறு
பொருட் கூட்டங்களையும்
அதன் அத்தியாவசியமான
கடைசி உண்மைக்குத்
திருப்பி விடுவிப்பதும்
ஆகிய படைப்பு முழுவதிலும்
ஊடுருவி நின்று வெளிப்படுத்தும்
லயத்தின் தலைவா.
மனிதன் நடனத்தை ஏற்றுக்கொண்டு
அதனின்றும் தன்னைப் பிரித்துவைக்கும்
எல்லாவற்றினின்றும் விட்டு விலகி
கடவுளின் திட்டங்களை
எதிர்ப்பதினின்றும் தவிர்த்துக்கொள்கின்றான்.
புதுமைகளைக் கண்டுபிடிக்கும்
அறிவின் எல்லை
கடவுளின் திருமுகத்துக்குப் பின்னால் கிடக்கும்
அரைகுறையான ஒன்றிப்புக்கு
எட்டி அடி வைப்பதை உணர்கின்றான்.
தாண்டவன் எங்கள் எல்லாரையும்
ஒருவரையும் விடாமல்
வெப்பமும் ஒளியுஞ் சேர்ந்த சுழற்சிக்குள்ளும்,
அமாவாசை இருட்டிற்குள்ளும், தூய பிரகாசத்துக்குள்ளும்
சப்த சந்தடிக்குள்ளும், அமைதிக்குள்ளும்,
ஏறிவிழ அடித்துக் கொண்டு செல்கின்றான்.
ஒவ்வொரு ரூபமும்
அதற்குள் அடங்கி விடுகின்றது.
வடக்கு - தெற்கு - கிழக்கு - மேற்கு
ஆகிய திசைகள் சுருங்குகின்றன.
எங்கும் ஜாதக அழுத்தம் பெற்று
மகோன்னதமான ஸ்வர எழுச்சியுடன்
எதிரொலிக்கும் ஓசைலயத்துடன்
நிகழ்கிறது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்படாத ஒன்றாய்
சணப்பொழுது சடமாய்
வசந்தகால அற்புதங்களும் புணர்ச்சி இன்பங்களும்
சாவினூடாக உடனுக்குடன்
படைக்கப்படுவதைக் காண்கின்றோம்.
தசையினால் உணர்ச்சியூட்டப்பெற்ற
பாசம் நிறைந்த அடக்கமான
பிறப்பும் மூச்சும்
பாலியல் வாழ்க்கையில் அல்லது சாவில்
அங்கங்களெல்லாம் ஒடிந்து முறிய
அழிந்துபோவதையும் காண்கின்றோம்.

செயலா
சித்திரவதையா
எல்லாவற்றிலும் தாண்டவனின்
ஆட்டம் நிகழ்கிறது

தாண்டவன்

நாம் நினைக்காத காரியங்களை எல்லாம்
சந்தர்ப்ப வசத்தால் அல்ல
எப்பொழுதும் தன் ஆட்டத்துக்குள்
அகப்படுத்தி ஆட்டுகின்றான்.

அச்சம் இருந்த இடம் தெரியாமல் மறைகிறது!
ஆசை எரிந்து சாம்பராகிறது!
அறியாமை செத்து மடிகிறது!
எல்லாம் அவன் ஆட்டத்தில் -

நாங்கள் விடுதலை பெற்று
சுதந்திர புருஷர்களாக
வெளியேறுகின்றோம்.

ஓம்
திருச்சிற்றம்பலம்

அன்பளிப்பு

# கோணநாயகர் திருப்பொன்னூசல்

- கோணாசலக் கவிஞர்

## காப்பு

தந்தை அணியும் தமிழூசல் பாடற்கு
மைந்தன் அருள்கூர மாட்டானோ! - சந்ததமும்
ஆலடியில் வீற்றிருந்து அன்பர்க் கருள்சுரக்கு
மூலவடி வான முதல்

## ஊசல்

(கலித்தாழிசை)

மேகக் குழலாட மேலணிந்த தாராட
பூகக் கழுத்தொளிரும் பூண்முலையைத் தொட்டாட
பாகத் துமையணிந்த கோணையப்பன் சீர்பாடி
ஆகத் திருள்ஓட ஆடுகபொன் னூசல்
அழகின் உருவானீர் ஆடுகபொன் னூசல்

கொண்டை மலரிருந்த வண்டிருந்து பண்பாடக்
கெண்டை விழியிரண்டும் கேள்விக் குரையாட
கொண்டருளும் எங்களப்பன் கோணைத் திறம்பாட
அண்டம் புகழ்ந்தேத்த ஆடுகபொன் னூசல்
அழகின் உருவானீர் ஆடுகபொன் னூசல்

விண்ணோடு நீங்கி விழைந்தமரர் கை கூப்பிக்
கண்ணுதலே உய்யக் கருணைபுரி என்றேத்தும்
எண்ணார் புரமெரித்த ஈசன்மலை பாடி
அண்ணா அருளுகவென் றாடுகபொன் னூசல்
அழகின் உருவானீர் ஆடுகபொன் னூசல்

உங்கள் முகத்தழகுக் கொவ்வோமென் றந்தரத்தில்
திங்களவன் சென்ற சிரிப்பில் கலந்தாடி
இங்கோதும் கோணமலை ஈசனுளான் என்றாடி
அங்கம் புளகமுற ஆடுகபொன் னூசல்
அழகின் உருவானீர் ஆடுக பொன்னூசல்

மானை இடங்கொண்ட மாநதியை மேற்கொண்ட
தேனை இடங்கொண்ட தென்கோணமா மலையில்
கோணை இடர் நீங்கக் கூவிப் புகழ்பாடி
ஆனைமருப் பசைய ஆடுக பொன் னூசல்
அழகின் உருவானீர் ஆடுகபொன் னூசல்

கொத்தலர் தார்சூடும் கோணமலை அப்பனுக்குச்
சித்தம் மகிழும் சிவனடியார் சீர்பாடி
தத்தை மொழிபயிலும் தாயடிகள் தாம்பாடி
அத்தரணி பூண்முலையீர் ஆடுகபொன் னூசல்
அழகின் உருவானீர் ஆடுகபொன் னூசல்

முப்புரங்கள் தீய முடுகி விழித்தானை
அப்பர் இடர்தீர்க்க ஆங்கோடிச் சென்றானை
ஒப்பிலாக் கோணைநகர் ஓங்கல் அமர்ந்தானை
இப்புவியில் ஏத்திநிதம் ஆடுகபொன் னூசல்
எழிலின் உருவானீர் ஆடகபொன் னூசல்

கல்லானை தின்னக் கரும்பை அழித்தானை
வல்லானை மேனின்று வானதியைக் கொண்டானைக்
கொல்லானை போர்த்தானைக் கோணமலை அம்மானை
எல்லாரும் பாடிநிற்க ஆடுகபொன் னூசல்
எழிலின் உருவானீர் ஆடுகபொன் னூசல்

தேவாரம் பாடித் திருவாசகம் பாடிப்
பாவார் புராணமுடன் பல்லாண்டு தான்பாடி
காவார் கோணமலைக் கண்ணப்பன் சீர்பாடி
பூவார் சரண்பாடி ஆடுகபொன் னூசல்
புகழின் உருவானீர் ஆடுகபொன் னூசல்

பாணற் கருள்சுரந்த பாதமலர்ச் சீர்வாழி
காணற் கரியநற் கற்பகத்தின் சீர்வாழி
கோணைப் பதியமர்ந்த கோன்கழல்கள் தாம்வாழி
ஆணிப்பொன் னம்பலத்தாள் வாழியெனப் பாடி
அழகின் உருவானீர் ஆடுகபொன் னூசல்

(- யாழ் - தைப்பொங்கல் இதழ் 1995 -)

# 10ம் குறிச்சி சீராளம்மன்

## திருவூஞ்சல்

### காப்பு

ஆலடியில் கோயில் கொண்டடியார்க் கருள் சுரக்கும்
மூலவடி வான முழு முதலே - ஆலமுண்டோன்.
தேவி சீராளம்மை திருவூஞ்சல் சிறந்திடவே
நாவில் அருள்வாய் நயந்து.

காமருவு கருங்காலிக் கால்கள் நாட்டி
கமழரிய சந்தணத்தின் வளையுங்கவித்து
பூ முதிரை மரமரிந்து பலகை செய்து
பொன்னிழையாய் கோத்தமணி வடமும் பூட்டி
தாமமணி கன்னியர்கள் வடந்தொட்டாட்ட
தாளமுடன் கடலலைகள் கீதம் பாட
தேமதுரத் தமிழோசை கேட்குங் கோணைத்
தேவி சீராளம்மை நீ யாடாய் ஊஞ்சல்.

பூ மாதும் கலைமாதும் வடந்தொட்டாட்ட
புவி மாதர் கவிபாடி வடந்தொட்டாட்ட
காமாட்சி என்றன்பர் வடந்தொட்டாட்ட
காளையரும் பூவையரும் வடந்தொட்டாட்ட
சீமாட்டி யென்றுனது கால்மாட்டினின்று
தேவி சீராளம்மையினார் புகழைப்பாட
ஏமாற்றம் தீர்த்தருளும் அம்மா கோணை
எறிதரங்கக் கரையமர்ந்தாய் ஆடாய் ஊஞ்சல்.

பொன்னான உன்னழகு வதனமோர் கமலம்
　　பொழிகருணை விழிகமலம், பூண் தங்கு மார்பும்
வன்னமலர்க் கமலமொரு கைகள் நான்கும்
　　வற்றாத சுனைநீரில் வளர்ந்தோங்குகமலம்
பன்னரிய திருவடிகள் இரண்டும் அடியார்
　　பக்தியுடன் போற்றி செயும் கமலம் அம்மா
மன்னுதிருக் கோணைநகர் கடல்வாய் அமர்ந்த
　　மாது சீராளம்மை நீ ஆடாய் ஊஞ்சல்.

உலகமெலாம் ஈன்றளித்துங் கன்னியானாய்
　　உயர்வுதருங் கற்பனையின் சிற்பமானாய்
குலமகளாம் கண்ணகியாய்க் கோயில் கொண்டாய்
　　குன்றெறிந்த வடிவேலன் தாயுமானாய்
கலகலவென் றலைவீசுங் கடலின் பாங்கர்
　　கருணையுடன் எழுந்தருளுங்கோணைத்தாயே
கலகமொழிந் துலகமெலாம் அமைதிகாண
　　காளி சீராளம்மை நீ ஆடாய் ஊஞ்சல்.

மூவேந்தர் வளர்த்த தமிழ் மாதும் இன்று
　　முடிசூடா மன்னர்களின் தயவை நாடி
நாவேந்தி இரந்து நிற்கும் இழிவு தீர
　　நாயகியே கடைக்கணருள் சுரக்கவேண்டி
பூவேந்திப் பணிகின்ற தமிழர் உள்ளப்
　　புண்மாறக் கண்மணியே ஆடாய் ஊஞ்சல்
பாவேந்தர் புகழ் கோணைச் சீராளம்மை
　　பராசக்தி ஓம்சக்தி ஆடாய் ஊஞ்சல்.

சாதிமதப் பிரிவினைகள் இன்றி மக்கள்
சகலருமே ஒருகுலமாய் வாழவேண்டும்
நீதிநெறி தவறாமல் ஆட்சி மன்றம்
நிலையான நற்கருமம் ஆற்றல் வேண்டும்
ஆதிவடி வானபரா சக்தி உன்தன்
அருள்பரவ என்றென்றும் ஆடாய் ஊஞ்சல்
மோதிவருங் கடலலை சேர் கோணைத்தாயே
மூர்த்தி சீராளம்மை நீ ஆடாய் ஊஞ்சல்.

காணிநிலம் பூமியெலாம் அம்மா உனது
கருணையினால் கிடைத்ததொரு சொத்தென்றெண்ணா
மானிடர்க்குள் நல்லறிவை ஈந்தே அன்னார்
மண்ணாசை களைந்துள்ளத் துறுமா அகற்றி
பேணியுறங் கடைப்பிடித்துப் பிணக்கு நீங்கி
பெருவாழ்வு பெற்றுயர ஆடாய் ஊஞ்சல்
வாணி சீராளம்மை நீ யாடாய் ஊஞ்சல்
வளர்கோணைப் பதியரசி ஆடாய் ஊஞ்சல்.

மன்னனுடன் மதுரைநகர்த் தீயோன் மாய
மாநாய்கனின் மகளாக வந்தாய் நீயே
இன்னல்பல செய்தமரர் அஞ்சி வாழ
இருந்தகொடும் பாவிதனை அழித்தாய் நீயே
கன்னிதிரி சூலி சாமுண் டிமகமாரி
காளி அபிராமி சிவகாமி நீயே
தென்னைவளர் கோணேநகர் கோயில் கொண்ட
தேவி சீராளம்மை நீயாடாய் ஊஞ்சல்.

மையாருங் கண்ணழகி ஆடாய் ஊஞ்சல்
மதிவதனப் பேரழகி ஆடாய் ஊஞ்சல்
செய்யாத வனப்புடையாய் ஆடாய் ஊஞ்சல்
சிவகாம சுந்தரி நீ ஆடாய் ஊஞ்சல்
கொய்யாத கருங்குழலி கோணைத் தாயே
கோதில் சீராளம்மை நீ ஆடாய் ஊஞ்சல்
பொய்யாத கடல்முழக்கம் கேட்கும் கோயில்
பொலிந்தருளும் தவப்பேறே ஆடாய் ஊஞ்சல்.

காரோங்கி மழைபொழிய ஆடாய் ஊஞ்சல்
கலைஞானப் பொருளோங்க ஆடாய் ஊஞ்சல்
ஏரோங்கி வளமோங்க ஆடாய் ஊஞ்சல்
எழின்மாதர் குலமோங்க ஆடாய் ஊஞ்சல்
பாரோங்கப் பணிபுரியுங் கடல்சூழ் கோணைப்
பதியோங்க சிவகாமி ஆடாய் ஊஞ்சல்
சீரோங்கி உலகமெலாம் செழித்து வாழ
தேவி சீராளம்மை நீ ஆடாய் ஊஞ்சல்.



## 108

# கம்பன் புகழ்

நாவினில் நல்ல நாக்கு,
நற்றமிழ்க் கம்பன் நாக்கு!
பாவினின் நல்ல பாட்டு,
பாவலன் கம்பன் பாட்டு!
ஓவியப் புலவன் கம்பன்
உணர்ச்சியால் உந்தப் பட்ட
காவியக் கைகள் யாத்த
கவிதையே கவிதை அம்மா!

இன்றிருந் தெண்ணூ றாண்டை
எண்ணிநாம் முன்பு சென்றால்
அன்றிருந் தவனி யாண்ட
அழகிய சோழ நாட்டில்
குன்றினில் ஏற்றி வைத்த
குலவிளக் காய கம்பன்
பொன்திருக் கைகள் இராமன்
புகழினை வடிக்கக் காண்போம்!

கம்பனின் கனவில் நெஞ்சில்
கருக்கொண்ட கருத்துக் குப்பை
செம்பொருள் உயிரைத் தாங்கிச்
செந்தமிழ் மேனி பெற்றுக்
கம்பனின் நாவில் தோன்று
கவிதைபல் லாயிரங்கள்
கம்பகா வியமாய் வையம்
கண்டிடச் செய்த வள்ளல்!

இல்லிலே இருந்து கம்பன்
இயற்றிடுங் காட்சி காண்போம்!
நல்லெழுத் தாணி கொண்டு
நவ நவ மாய்த் தொடுத்து
வில்லிலே அம்பைக் கோத்து
விடுவதைப் போலக் கம்பன்
மல்லிடுஞ் சொற்போர் கண்டு
மகிழலாம் அங்கே தானே!

நல்லதோர் வேலை செய்த
நண்பரை நினைக்கும் போது
கொல்லெனச் சிரிப்பு வந்து
கொடுப்பினில் அடங்கி நிற்கச்
சொல்லெனப் பெயரும் பூண்டு
சொல்லொரு கவிதை யென்றால்
கல்லினைப் பாட வைக்கும்
கம்பன் என் றெண்ணி னாரோ?

காலையில் எழுந்து வந்த
கதிரவன் சாயு முன்னர்
ஓலையில் ஏழு நூறு
எழுதிய கவிஞன் எங்கே?
பாலையில் ஏங்கி நிற்கும்
படுமரம் யானும் எங்கே?
மூலையில் முடக்க மான
முடவனின் நடையே சாலும்!

சந்தமும் அணியும் சேரச்
சரயுநீர் போலக் காரை
சுந்தரம் பிள்ளை யோடு
சொற்றமிழ் மாறன் பாடும்
செந்தமிழ் அரங்கே வாழி!
செந்திலான் பெயரைப் பெற்ற
இந்நல் லரங்கின் தலைவா
இயலிசைப் புலவர் வாழி!

திருமலை யூரான் எங்கள்
தினபதிக் காசான் தமிழை
நரைதிரை யின்றிக் காக்கும்
நற்சிவ நாயகன் நல்
லுரைநடை வழங்குங் கையான்
உள்ளன்பு கொண்டு வித்யா
தரனெனை அழைக்க வைத்தான்
தகவுசேர் நண்பன் வாழி!

தந்தையின் சொல்லைக் காத்த
தருமத்தை எண்ணி எண்ணி
வந்தனை செய்கின்றேன் உன்
வாழ்வினால் உயர்ந்து நின்றேன்
நிந்தனை வாரா தென்னை
நிலத்தினிற் காத்த வீரா
தந்தனை எனக்கு வாழ்வு
தந்துநீ உயர்ந்து விட்டாய்!

என்னறம் காத்த தாலே
இராமநின் நாமம் பூவில்
மன்னுறப் பெற்ற தென்று
மகிழ்வதில் என்ன மாண்பு?
உன்னுற வெனக்கு வந்த
உரிமையா லன்றோ என்னை
இந்நிலம் அறமென் றோம்ப
இதயத்தில் இருக்கப் பெற்றேன்!

முடியினைச் சூடிக் காண
முதல்வனும் முனிவர் தாமும்
குடிகளும் ஆர்வங் கொண்டு
கோநகர் அழகு கொள்ள
விடிவதற் குள்ளே வேறோர்
விதியது நுழைந்த தாலே
கொடியனாய் வந்த என்னைக்
கொற்றவன் ஆக்கி வைத்தாய்!

தந்தையும் பாசத் தாலே
தன்னுயிர் நீக்க நேர்ந்தும்
சிந்தையிற் சலன மின்றிச்
செந்நெறி விளங்கி ஓங்க
வந்தனை செய்து போற்றி
வைத்தனை என்னை வாழ்வில்
முந்தநின் றென்னைக் காத்த
முறையினால் கறையு மற்றே!

பெற்றதாய் கலங்கி நின்று
பேதுறக் கண்ட செம்மல்
பற்றினை என்மேல் வைத்துப்
பரிதவித் திடாதே போய்நீ
உற்றவுன் கணவற் காதல்
உன்கடன் அம்மா என்றான்
நற்றமிழச் சொல்லை நத்தி
நானுமவ் வாறா னேனே!

# பாரதி இதயம்

யாமறிந்த கவிஞரிலே பாரதிபோல்
தமிழ்ப் புலமை தன்னைக் கல்லாப்
பாமரனின் வாழ்க்கையிலே பரந்துசென்று
பணிசெய்ய வைத்தார் உண்டோ?
ஊமையராய்க் குருடர்களாய் வாழ்ந்தவரை
உயிரூட்டி உணர்வு மூட்டிப்
பூமிதனில் நிமிரவைத்த பாரதியின்
புலமையை யார்பெற்றார் அம்மா?

சங்கத்தில் தமிழாய்ந்த புலவருண்டு!
சமயத்தை வளர்த்ததமிழ்க் கவிஞருண்டு!
பொங்குதமிழ்க் காவியங்கள் செய்தார் உண்டு!
பொய்யறியா நீதிநூல் புகன்றார் உண்டு!
இங்கிதமாய்ப் பிரபந்தம் இசைத்தாருண்டு!
இலக்கணங்கள் செய்தளித்த புலவருண்டு!
அங்கமெலாந் தமிழார்வம் பொங்கச் செய்தார்,
ஆருமுண்டோ பாரதிபோல் கவியில் அம்மா?

யாமறிந்த கவிஞரிலே பாரதிபோல்
தமிழ் நாட்டின் தாழ்வைக் கண்டு
பாமொழியைப் பாமரரின் நிலையுயரப்
பணிசெய்ய வைத்தார் உண்டோ?
யாமறிந்த கவிஞரிலே பாரதிபோல்
யாழ்நகரில் ஒருவருண்டோ
சோமசுந்தரப் புலவர் உண்டென்று
சொல்லி மகிழ் வாருமுண்டே!

பெண்ணுலகங் களிகூரப் பாடல்செய்தான்!
　　பேதையருந் தமிழ் மொழியைப் படிக்கச் செய்தான்!
மண்ணுலகில் சாதியெலாம் மடியச் செய்தான்!
　　மனிதரெல்லாம் ஓர் குலமாய் விளங்கச் செய்தான்!
உண்மையினைக் காட்டி ஒளி ஊட்டி வந்தான்!
　　ஊமையராய்க் கிடந்தவரைப் பேச வைத்தான்!
எண்ணி எண்ணிக் கவிசெய்த பாரதியின்
　　எழுச்சியிலே தமிழன்னை எழுந்து நின்றாள்!

அடிமைக்கும் மிடிமைக்கும் கவிகள் செய்தான்!
　　அஞ்சுவார் நெஞ்சுக்கும் கவிகள் செய்தான்!
கொடுமைக்கும் மடமைக்கும் கவிகள் செய்தான்!
　　கோலுக்கும் வேலுக்குங் கவிகள் செய்தான்!
விடிவுக்கும் இருளுக்கும் கவிகள் செய்தான்!
　　வீழ்வுக்கும் வாழ்வுக்கும் கவிகள் செய்தான்!
இனிதான தமிழுக்காய் முழக்கஞ் செய்தான்!
　　இதுவன்றோ பாரதியின் இதயம் அம்மா!



# மாகவி உள்ளம்

பாட்டுக் கொருபுலவன் பாரதியான் என்றேதான்
நாட்டுக் கறிவித்தார் நம்புலவர் தேசிகனார்!
பாவுலகில் வாழ்ந்தாலும் பாரதியார் உள்ளத்தைத்
தேவி பராசக்தி தெய்வத் திருவடியில்
ஆவி முழுவதையும் அவளுக்கே அர்ப்பணித்து
ஆத்மீகத் துறையில் பழுத்த பெரு ஞானியாய்த்
திகழ்ந்த சரித்திரத்தைத் தேசம் அறிந்திட்டால்
பாரதியின் உண்மைநிலை பாரில் ஒளிவீசி
நாட்டில் அமைதி சமாதானம் பரவிடுமே!

மண்டியிட்டு வானை மகிழ்வோடு பார்க்கின்றார்!
அண்டப் பெருவெளியை அண்ணாந்து பார்க்கின்றார்!
மையிருட்டு நேரமது, மாநிலத்து மாந்தரெலாம்
மெய்யயர்ந்து தூங்கும் நடுநிசியில் பாரதியார்
புதுவை மனையொன்றில் பூவை யொருத்தியுடன்
வதுவை புரிந்துமே வாழ்ந்திருந்த நேரமது!
கண்முன்னே வந்தவரைக் கட்டியணைத்திட்ட
பெண்ணழகைக் கன்னி வடிவெடுத்த காரிருளைக்
கண்டு களித்த கவியரசர் பாடுகின்றார்:-

"அன்னை வடிவமடா - இவள்
ஆதி பராசக்தி தேவியடா - இவள்
இன்னருள் வேண்டுமடா - பின்னர்
யாவுமுலகில் வசப்பட்டுப் போமடா"

பாரதியின் நெஞ்சம் பராசக்தி நின்றாடும்
ஆடல் அரங்காகி ஆன்மீகப் பேரொளியை
உண்ட களிப்பால் உலகமெலாந் தாவியது!
வீட்டுக் குலதெய்வம் வீரம்மை காக்குமென்று!
பாட்டில் எடுத்துரைக்கும் பாரதியைக் காண்கின்றோம்!

விண்ணின் ரகசியத்தை விஞ்ஞானக் கண்கொண்டு
மண்ணில் அளந்தாலும் மாகவியின் உள்ளத்தை
ஆரே அளப்பர்? அளக்க முடியாதே!
ஆழ்ந்தகன்ற ஞானியரும் அறிந்துணர மாட்டாரே?

பாரதியே எட்டய புரத்துதித்த மாகவியே,
விண்ணில் இருந்து விழைவை அனலாக்கிச்
சாகும் வரைக்கும் தமிழில் கவிபொழிந்து
பூகம்பம் போலக் கவிதை பொழிந்தாயே?

நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே - இந்த
நேரமிருந்தால்யாம் என் படுவோம்?
காற்றென வந்தது கூற்ற மிங்கே - நம்மைக்
காத்தது தெய்வ வலிமையன்றோ?

பலநாள் இருந்து பணிசெய்த வீட்டை
மனைவியுடன் பெற்றெடுத்த மக்களையும் சேர்த்து விட்டு
விறு விறென்று வேறோர் மனையிற் குடிபுகுந்து
வாழ்ந்து வரும்போது வந்தடித்த பேய்க்காற்றால்

முன்னிருந்த வீடு முழுதும் தகர்ந்திடவே
அன்னை பராசக்தி அம்மை அருளாலே
தப்பிப் பிழைத்தேன் தாயின் அருளாலே
அப்போது நிகழ்ந்த அதிசயத்தைச் சொல்கின்றார்!



# பாரதியைப் பாடுங்கள்

எழுந்துகவி பாடுங்கள் என்னருமை மாணவர்காள்!
எழுந்துகவி பாடுங்கள் ஆசிரியப் பெருமக்காள்!
காணலாம் பாரதியை உங்கள் கவிதைகளில்!
மாணவரும் பாரதியாய் ஆயிடலாம் பாரதியின்
பாட்டைப் படித்துப் பலகால் பயின்றிட்டால்!
நாட்டுக் குழைத்தகவி நாமெல்லாம் பாடுதற்குப்
பாட்டுக்கள் தந்தகவி பாரதியைப் பாடுங்கள்!
பாட்டுக் கொருபுலவன் பாரதியைப் பாடுங்கள்!
நாட்டுக் குழைத்தகவி நாயகனைப் பாடுங்கள்!
நாடோறும் பாடுங்கள் நல்லகவி யாகிடலாம்!
வாடா தவன்கவிதை கோடியுகம் சென்றாலும்
தேடிப் படியுங்கள் எந்நாளும் பாரதியை!
கூடிப் படியுங்கள் கூடாத கொள்கையெலாம்
ஓடி மறைந்திடுமே உண்மைஒளி வீசிடுமே!
கோட்டுப் புலவனவன் கோடையிடி போன்றதமிழ்ப்
பாட்டுக்களால் புதிய பாரதப்போர் பாடியவன்!
காந்திமகான் காலத்தில் வாழ்ந்தகவி பாட்டாலே
மாந்தர்தமை மீட்டெடுத்த மாகவிஞன் பாரதியே!
எட்டைய புரத்தெழுந்த எங்கள்கவி பாரதியைத்
தொட்டாலே போதுமடா தோள்கள் நிமிர்ந்து நிற்கும்!
நெஞ்சில் உரமேறும் நீதி நெறியெல்லாம்
அஞ்சாது வந்துங்கள் ஆட்சியிலே வெற்றிதரும்!
பூசுரனாய்ப் பிறந்தான் பூணூலைத் தள்ளிவிட்டான்!
மீசை வளர்த்தான் மிடுக்காய் நடை போட்டான்!
தலைப்பாகை கட்டி கவியரசாய் நிமிர்ந்து
பெண்குலத்தை உயர்த்தி வைத்தான்! பேடியர்கள் வீரமுறப்
பண்ணிசைத்தான் - பாட்டிசைத்தான்! வீழ்ச்சியுற்ற பாரதத்தை

தூக்கி நிமிர்த்தி துயரங்கள் போக வைத்தான்!
சாதிக் கடிபோட்டான் சாத்திரத்தை வீசிவிட்டான்!
வீரம் எழுப்பி விளையாட வைத்த கவி
பாரதியை நாள்தோறும் பாடி மகிழுங்கள்!
உங்கள் கவிகேட்க உயிர்த்தெழுவான் பாரதியும்!
பொங்கி எழுவான் புவியில் தமிழோசை
எங்கும் பரவ எழிற்கவிதை பாடியவன்!
தங்குவனோ வானில் தரியான் ஒருகணமும்
வந்து பிறக்க வளமுள்ள நற்கவிதை
தந்திடுங்கள் பாரதியைக் காணலாம் பாரினிலே!

## ****** பொன்னம்பலம் ******

வல்லரசர் புகழ்ந்தேத்தும் சொல்லின் செல்வன்
வந்துவிட்டான் சைவநெறிக் குயிரளித்த
சொல்லரசர் சம்பந்தர் பாடல் ஓங்கும்
தொல்பதியாம் திருக்கோண மலையினுக்கே!
செல்வர்களே அறிஞர்களே வாரீர் வாரீர்!
செயல்வீரச் சிங்கத்தைப் போற்றிப் போற்றி
நல்வரவு கூறுவோம் பொன்னம் பலத்தின்
தலைகண்டால் நிமிராத தமிழர் உண்டோ?

அறிவுடைய தமிழ்மகனே வாராய் வாராய்!
அயல்நாட்டார் புகழ்மகனே வாராய் வாராய்!
குறைகூறி வசைகூறித் தமிழர் வாழ்வைக்
குப்பையிலே தள்ளுவதைக் கண்டும் நெஞ்சில்
பொறுமையொடு கருமத்தில் கண்ணே யாகிப்
பொருந்தாத உள்ளங்கள் பொருந்த வைக்கும்
உறுதியுடன் தலைநிமிர்ந்து தமிழர் முன்னே
ஓங்கிநிற்கும் தமிழ்மகனே வாராய் வாராய்!

# பாரதி தரிசனம்

கான மழைபோல் கவிபொழிந்த பாரதியை
வானொலியில் தரிசிக்க வாய்திறந்து பாடுகின்றேன்.

எளிய தமிழ்ச் சொல்லால் உலகுபுகழ்க் கீதைக் (கு)
அரியவுரை செய்த அமரகவி பாரதியின்
தரிசனத்தைப் பெற்றதனால் தண்டமிழ்த்தாய் இன்று
புதிய கவி பாடும் புலவர் நடுவினிலே
கவியரசி யாகிக் களிக்கின்றாள் நாளுமெழிற்
புத்தாடை வேய்ந்து புதுநடையும் போடுகின்றாள்!

பாசி படிந்த பழங்காலக் கொள்கையிலே
ஊறிக் கிடந்தவர்கள் உண்மைநிலை பெற்றுயர
அடிமை உணர்ச்சியிலே ஆழ்ந்து கிடந்தவரின்
மடமைத் தனமெல்லாம் மானிலத்தை விட்டோட
அம்பு தொடுத்த அமரகவி பாரதியின்
காலத் தெழுந்த கவிதை வளமென்றும்
காலத்தால் தேயாது காலத்தை வென்று நிற்கு ஞ்
சீலத்தை எண்ணியெண்ணிச் செய்தவனை வாழ்த்துகின்றாள்.

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
அஞ்சியஞ்சிச் சாகும் அடிமைகளின் நெஞ்சத்தில்
வீரம் பிறக்க விடுதலையின் பாதையிலே
தீர நடைபோடத் தெம்பூட்டி வாழ்வளித்த
பாரதியை வானவர்கள் பல்லாண்டு வாழ்கவெனத்
தான்பிறந்த நாட்டின் தலையிடிகள் தீரத்
தேன் கவிகள் பாடித் தெருவில் திரிந்த கவி
வான் வழியில் நின்று நின்று வையத்தை நோக்குகிறான்
ஊனுடம்பைப் போக்கி உலகத்தை நீத்தாலும்
தான் பிறந்த நாட்டின் தரித்திரத்தை ஓட்டுதற்கு
மீண்டும் ஒரு பிறவி மேதினியில் தானெடுக்க
வேண்டு மெனப் பாரதியார் விண்ணில் தவங்கிடந்தார்.

தூண்டும் ஒலிகேட்டுத் தூரத்தே நின்ற கவி
மூண்டெழுந்து தேர்க்காலின் அச்சாணி தன்னையே
சுண்டிப் பறந்தோடிச் சூரியனுக் கெட்டாத
பாதலத்தில் சென்று பதுங்கிக் கிடக்கின்றான்.
நடந்து முடிந்ததுவே நற்றோரும் நின்றதுவே
வான வெளியெங்கும் வாழ்த்தொலிகள் நின்றிடவே
பாரதியார் தேவரிடம் பண்பாக வேண்டுகின்றார்.
உம்மை மறந்தேன் உலகத்தை நாடுகின்றேன்
அம்மை அருள் நோக்கம் அம்புவியில் பட்டதனால்
செம்மை நெறி நாட்டச் சேயர் அழைக்கின்றார்.
இம்மி யளவும் இனியிங்கே தாமதியேன்
விண்ணவரே என்னை விடுங்கள் விடுங்க ளென்று
அண்ணல் அவனும் அருணகிரி நாதரைப் போல்
கண்களிலே நீர்பாயக் கைதொழுதார் தாங்காமல்

வான் துறந்து மண்ணின் வடிவெடுத்தார் பாரதியார்
தான் பிறந்த முன்னாட் தரணிக் கடிவைக்க
நீ பிறந்த நூற்றாண்டில் நின்னிலத்துக் குன்னாலே
ஆன மட்டுந் தொண்டு செய்யென் றன்னை அனுப்பிவைத்தாள்
பெரிதும் மனமுவந்து முன் பிறந்த தாய் நாட்டார்
என் வரவை நோக்கி எதிர்பார்த்துக் கொண்டிருக்க
அன்பால் உமைநாடி ஆர்வமுடன் வந்தேன் காண்
வரும் வழியில் உங்கள் வளமார் இலங்கையிலே
தங்கிச் சிலபோழ்து தான் கழிக்க எண்ணியதால்
இங்குமே நிற்கின்றேன் இனியதமிழ் வானொலியார்க்
கென்தன் தரிசனத்தை இப்போதே தந்து நின்றேன்
என்னோடு கூடிநின்று எல்லோரும் பாடுங்கள்
இலங்கைநகர் வானொலியில் என்னிசையைக் கேளுங்கள்
எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர் நிறை
எல்லோரும் இந்நாட்டு மன்னரென வாழுங்கள்
வானொலியும் ஆசையுடன் வார்த்தையினை நாற்றிசையும்
கொண்டு செல்லக் கண்டு குதூகலித்துப் பாரதியார்
விண்டுமே சென்றாரே தான் பிறந்த வீட்டுக்கு

விண்ணைப் பிளந்து விரியுமிருள் தான்கிழிய
மண்ணுக் கிறங்கி வரும் மாய ஒளி கண்ட
இலங்கை வாழ்மக்கள் அதிசயத்தில் ஆழ்ந்து
துலங்கிவரு பேரொளியைக் கண்டு தொழுதார்கள்
வீரத் திருவிழியும் வீறுகொண்ட பார்வையுமாய்ப்
போர் வீரன் போலப் பொலியுந் திருமுகமும்
சேட்டும் அதன் அதன்மேலே கோட்டும் அணிந்து கொண்டு
கோபுரம் போல் ஓங்கி நின்ற கோலத் தலைப்பாவும்
நெற்றிக்கு மேலே நிமிர்ந்தழகுதான் செய்ய
மீசையுடன் வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள்
கண்ணிரண்டும் மூடாமல் கைகூப்பி நின்றார்கள்
பாரதியார்! பாரதியார்!! என்றவொலி எங்கும்
ஊர்முழுதும் தானொலிக்க ஓடிவந்து பார்த்தார்கள்
மூடி முழிப்பதற்குள் முன்னின்றார் பாரதியார்
கூடி நின்றார் யாவருமே கும்பிட்டுத் தாள் பணிந்தார்!



காந்தி ஐயா,
தம்பிராசா., வெ. பொ. சிவசேகரம்,
மோனேஸ்பரசிங்கம், தேவேஸ்பரசிங்கம்
ஆகியோர்.

# நாவலர் நா

ஆறுமுக நாவலரை அனுதினமும் நீபாடு!
அழியாமல் சைவநெறி காத்தவரை நீபாடு!

நல்லூரிற் பிறந்தவராம் நால்வர்வழி நின்றவராம்!
கல்லாத பேர்களுக்கும் கற்றவர்க்கும் உற்றவராம்!

ஈழமணித் திருநாட்டின் எழிலோங்கும் பாரதத்தில்
ஆழமிகு சித்தாந்த அறிவுரைகள் ஆற்றியவர்!

நெற்றியிலே நீறிலங்கும் நெஞ்சினிலே நீறிலங்கும்!
உற்றநெடும் புயங்களிலே ஓங்குதிரு நீறிலங்கும்!

மார்பினிலும் சென்னியிலும் மற்றுமிரு புயங்களிலும்
சீரிலங்கு கண்டிகையின் திருவிளங்கு மேனியராம்!

அழியாமல் ஏடுகளை அச்சேற்றிக் காத்தவராம்
ஒழியாமல் உண்மைகளை ஓயாமல் உரைத்தவராம்!

பாட்டினிலே கிடந்ததமிழ் பழகுதமிழ் நடையினிலே
வீட்டினிலே பயின்றுவர விசையேற்றி விட்டவர் காண்!

செந்தமிழின் திறமெல்லாம் சிந்தையிலே ஆய்ந்துணர்ந்து
பந்தியிலே வைத்தவராம் பழமை தெளி வித்தவராம்!

பள்ளியிலே பயில்பவர்க்கும் பாடநூல் செய்தவராம்
வெள்ளையர்க்குந் தமிழ் விளங்க வைத்தமிழ் வித்தகராம்!

பிறநாட்டுப் பாதிரிமார் பிரச்சாரச் சுழியினிலே
இறவாமல் காத்தெம்மை ஏற்றிவந்த மீகாமன்!

பாதிரிமார் போதனையின் பாதையிலே சென்றவரை
வீதியிலே மறித்தவராம் வேதநெறிப் படுத்தவராம்!

பாதிரியார் வேண்டிடவே பைபிளினைத் தமிழ் மொழியில்
ஓதிடவே மொழிபெயர்த்துக் கொடுத்த பெரும் உத்தமராம்!

சைவநெறிக் குலத்தவரைச் சமயத்தால் பிரிக்கவந்த
ஐயருக்கு மெய்நெறியை அஞ்சாமல் காட்டியவர்

ஆலயத்தில் பூசைநெறி ஆகமத்தின் வழிநடக்க
காலமெலாம் கொதித்தெழுந்து கண்டனங்கள் விட்டவர் காண்

பாடல்பெறு தலமழியப் பார்த்திருக்க மாட்டாமல்
நாடறியப் பேசியநா நாவலனார் நாவம்மா!

## கணபதிப்பிள்ளை

ஆசிரிய கலாசாலை அளித்த நண்பன்
அடக்கமாய் நின்று பணி புரியும் ஆசான்
மாசகலத் திருக்கோயில் முன்பு சென்று
வணங்கிவலம் வந்து நிலந் தோய வீழ்ந்து
வாசனைகள் அகன்றிடத் தோத்திரங்கள் பாடும்
வழக்கத்தைத் தவறாது வாழ்வில் கொண்டு
பூசனையில் ஊன்றி யுளங் கலந்து நிற்கும்
புலமை மிகு கணபதிப்பிள்ளை காண்க!

# நா வல்லார்

நாவலர் ஏறை வாழ்த்திடுவோம்!
நாமும் அவர்பணி செய்திடுவோம்!
நாவலர் எங்கள் நாவலரே!
பூவின் பொய்மை இருள்கடிய
போந்தனர் செம்மை நாவலரே!
சிவநெறி காக்கப் பிறந்திட்டார்!
சேவைகளாலே உயர்ந்திட்டார்!
தவநெறி வாழ்வைத் தரித்திட்டார்!
தனிவழி பற்றி உழைத்திட்டார்!
பாதிரி மாரின் மதமாற்றப்
பாதையில் நின்று தடுத்திட்டார்!
நீதியில் ஏறி நிலைத்திட்டார்!
நீசரின் போக்கைக் குலைத்திட்டார்!
சைவர்கள் எல்லாம் கிறீஸ்தவராய்ச்
சதிசெய் பவரின் பிடியினிலே
உய்வகை காணா துழல்கையிலே
உறுதுணை யானவர் நாவலரே!
தீமைகள் ஓடி வருகையிலே
ஊமைக ளாக இருப்பதற்கோ
பூமியில் நாங்கள் பிறந்திட்டோம்?
புரிபணி என்று புறப்பட்டார்!
பூசைகள் தோறும் ' பிரசங்கம் '
பொழி பொழி என்று பொழிந்திட்டார்!
மீசைகள் இல்லை என்றாலும்
மிரண்டனர் வெள்ளைச் சுரண்டர்கள்!
ஆயிரம் ஆயிரம் கூட்டங்கள்
அனைத்தும் சிவநெறித் தோட்டங்கள்!
காயுங் கனியும் தந்திடவே
கண்டார் எமது நாவலரே!

பாரதம் வேண்டி நின்றதுவே
பரம ஹம்ஸரின் சீடரையே!
சீரிய நாவலர் சேவைகளை
செந்தமிழ்த் தாயும் வேண்டினளே!
வசனம் வசனம் வசனமடா
வளரும் தமிழில் வளருதடா!
வசன நடையும் வளருதடா
வளருந் தமிழில் வளருதடா!
வசன நடையின் வளத்திற்கு
வகை செய்தவரை வாழ்த்திடடா!
ஏட்டில் கிடந்து மறையாமல்
எடுத்துப் பதிப்பித் தச்சேற்றி
வீட்டில் வாழுஞ் சொத்தாக்கி
விட்டார் தமிழை முத்தாக்கி!
பாட்டில் படுத்துக் கிடந்தவளை
பலரும் புகழ வசனநடை
போட்டுப் பழக்கி வைத்தாரே
புதுமைத் துறவி நாவலரே!
நல்லார் உள்ளக் கருத்தெல்லாம்
நாவலர் கண்டார் பாவினிலே!
வல்லார் உண்ட வளமெல்லாம்
வடிவாழ்த் தமிழர்க் குரைசெய்தார்!
கல்லார்க் கெழுந்த கதையாவும்
காவியப் பாவில் இருந்திட்டால்
எல்லார் கைக்கும் எட்டாவே
என்றே வசனம் படைத்திட்டார்
நுழையும் நூல்கள் பிழையின்றி
நுழைதல் வேண்டும் தமிழ்வாழ்வில்!
விளைவில் களையைப் பிடுங்காமல்
விடுவார் உழவர் விடுவாரே?
பிழையைக் காணப் பொறுக்காத
பெருமான் நாவலர் பெருமானே!
பிழைகள் நீக்கி அச்சிட்ட
பெரிய நூல்கள் அவர்நூலே!

ஆழ்ந்த புலமை உடையவரை
அச்சுத் தொழிலில் வைத்திட்டால்
தாழ்ந்த நூல்கட் கிடமின்றி
தரணி செழிக்குந் தடையின்றி!
அச்சுப் பிழைகள் வாராமல்
அடிப்பார் உண்டோ இந்நாளில்
பிச்சுப் பிடுங்கிப் படித்தாலும்
பிழையைப் போக்கல் அரிதம்மா!
பழைய நூல்கள் பலவற்றைப்
பதித்தார் அச்சுப் பிழையின்றி
பிழையைக் காணப் பொறுக்காத
பெரியார் நாவலர் பெருமானே!
பள்ளிக்கூடம் கட்டியவர் பிள்ளைகட்குப்
பாலபாடம் நூல் வரிசை
வெள்ளைப் புலவர் வியந்தேத்த
வெளியிட் டுள்ளம் மகிழ்ந்தாரே!
கந்த புராணக் காவியமாய்க்
காட்சி அளித்தார் நாவலரே!
அந்த நாளில் வாழ்ந்திருந்தால்
ஆகா அதுவே பாக்கியமே!
புராணஞ் சொல்லி உரைசொல்லிப்
புதைந்து கிடக்கும் பொருள் அள்ளி
தரானோ தரானோ எனச்சொல்லித்
தவஞ்செய் தாரைத் தந்தாரே!
தருவா ருண்டோ இந்நாளில்
தகைசேர் நாவலர் பெருமான்போல்?
புராணஞ் சொல்லும் உரைசொல்லும்
புதைந்து கிடக்கும் பொருள்சொல்லும்
கிராமப் புறத்துக் கிழஞ்சொல்லும்
கீர்த்தி பெற்றார் நாவலரே!
நாவலர் பரம்பரை என்றாலே
நன்கு மதிப்பர் பெரும்புலவர்!
கேவலம் எதையும் எழுதிவரக்
கீர்த்தி பெருகுது இந்நாளில்!

# தனிநாயகம் I

ஆவணி யிரண்டில் அந்த
அலை நெடுந்தீவில் தோன்றிக்
காவலூர்ப் பள்ளிக் கன்று
கால்நடை யாகச் சென்றே
ஆவலோ டணைந்து கற்ற
அச்சிறு பிள்ளை தானே
சேவியர் தனிநாயகமாய்த்
திகழுமென் றெவரே கண்டார்?

அன்றவன் ஆலம் காயின்
அழகிய சிறிய வித்தாய்
முன்றிலில் கிடந்து பின்னர்
முகில்தரு மழையால் தோன்றிக்
கன்றென வளர்ச்சி யுற்றுக்
கவையுடன் இலை பரப்பி
நின்றிடும் விருட்ச மாகி
நிழல்தர வந்தான் பூவில்!

பெற்றவள் நோன்பும் தந்தைப்
பெருமகன் நினைவும் வையப்
பற்றறுத் திட்டோர் செய்கைப்
பலன்களும் ஈழ நாட்டின்
வற்றிய தமிழர் விட்ட
வான்பெரு மூச்சும் ஒன்றாய்
நற்றவத் தனிநா யகமாய்
நானிலத் துதித்த தம்மா!

சேற்றினில் முளைத்தால் என்ன?
சிப்பியில் கிடந்தால் என்ன?
ஈற்றினில் பூவாய் முத்தாய்
இலங்கிடும் அவையே போல
நாற்புறங் கடலால் சூழ்ந்த
நகுநெடுந் தீவிற் வந்து
சாற்றருந் தனிநா யகமாய்த்
தமிழொளி பரப்பி நின்றான்!

துறந்தனன் வாழ்வில் ஒழியாத்
துயர்தரும் வேட்கை யெல்லாம்!
மறந்திட முடியாத் தமிழின்
மாண்பினைக் கண்டு துள்ளிப்
பறந்தனன் செய்தி கொண்டு
பார்மகள் வியந்து நின்றாள்!
சிறந்தனன் தமிழால் தெய்வத்
திருமறை செய்யும் வாயான்!

பல்கலைக் கழகப் படிப்பும்
பட்டமும் பதவிப் பேறும்
எல்லையில் புகழும் மதிப்பும்
ஏறினும் இலக்கில் நின்று
வல்லவன் இறங்க வில்லை
வாழ்வெலாந் தமிழுக்காக்கிச்
சொல்லரும் பணிகள் செய்தான்
சொர்க்கமும் வேண்டிடா தான்!

உள்ளமுந் தமிழாய்ப் பொங்கும்
உணர்ச்சியுந் தமிழாய் ஆயும்!
தெள்ளிய அறிவும் அஃதாய்த்
தேன்மொழி நாவும் அஃதாய்
கள்ளமில் புலனும் அஃதாய்க்
காயமும் உயிரும் அஃதாய்
வெள்ளைமே லங்கி பூண்டே
விளங்கினன் களங்க மில்லான்!

ஏசுவின் நாமத் தாலே
இயங்கிடும் நெஞ்சில் பக்தி
வீசிடும் அலைகள் கண்டேன்
விரிதமிழ்க் கடலுங் கண்டேன்
ஆசிய நாடு கண்டேன்
அகிலமும் கண்டேன் சர்வ
தேசிய உறவு கண்டேன்
திருமறை விளங்கக் கண்டேன்.

மூவுல களந்த மாலும்
முத்தமிழ் தந்த வெற்பும்
பாவணி தந்த பெஸ்கிப்
பாதிரி முனியும் போன்றான்
மாவலி கங்கை பாயும்
மலிவள நாட்டுக் காசன்
காவிரி தமிழை இந்தக்
காசினி காணச் செய்தான்!

உலகினில் உயர்ந்த உள்ளம்
உடையவர் தமிழர் என்றும்,
உலகினில் உயர் அமைப்பை
உடையது தமிழே என்றும்
உலகினர் அறிய வைத்தான்!
உலகமா நாடு கூட்டி
உலகிலோர் இயக்கங் கண்டான்
உலகமாய் மாறி நின்றான்!

தூரநா டிருந்து வந்து
துணிவுடன் தமிழைக் கற்றுப்
பாரகம் புகழும் நற்றேம்
பாவணி தமிழிற் றந்த
வீரமா முனிவன் போல
விதிவழி அறுபத் தேழில்
தாரணி நாயகன் தன்
தமிழ்ப்பணி விட்டுச் சென்றான்!

அப்பெரு மகன் பணியை
ஆரினிச் செய்ய வல்லார்?
செப்பருங் குணத்தின் மிக்கான்
சிவநெறிக் கிடுக்கன் எண்ணா
ஒப்பருஞ் சமயச் சான்றோன்
உடல்பொருள் ஆவி எல்லாம்
இப்புவித் தமிழுக் கீந்த
இதயமே (தனி)நா யகங்காண்!

அன்னவன் வருவா னென்றோ!
அவன்பணி தொடர்வான் என்றோ
கன்னலுந் தேனும் பாலுங்
களிநடம் புரியும் நாட்டின்
இன்னலைத் தீர்ப்பான் என்றோ
எழிலுடம் பெடுப்பான் என்றோ
முன்னிய எண்ண மெல்லாம்
முடித்திட அவனே வேண்டும்!

நீரினில் தண்மை உண்டு!
நிலத்தினில் பொறுமை உண்டு!
காரினில் மழையும் உண்டு!
கல்லினுள் ஒளியும் உண்டு!
ஏரினில் உலக முண்டு!
இளைஞரில் சக்தி உண்டு!
சீரியன் (தனி)நா யகத்தின்
சிறப்பெலாந் தமிழில் உண்டு!

# தனிநாயகம் 2

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செயுமாறே"
அன்று அவன் வாயில் முழங்கிய மந்திரம்
இன்றும் என்னுளே முழங்கிடக் காண்பேன்!

எடுத்தநற் பிறவி கண்ட
இன்னுயிர் விட்டுப் போகத்
தடுத்தது தமிழும் ஆகா
தவத் தனிநாயகத்தை
விடுத்திட வேண்டு மென்று
வேண்டிய தமிழ்த்தாய் முன்பு
படுத்தவன் அடியை வேண்டிப்
பறந்தது தமிழை விட்டே!

பழந்தமிழ்ப் புலவர் மூச்சுப்
படியினில் உடலைத் தாங்கித்
தொழுந்தக வுடனே நின்ற
தோழனும் இலங்கை நாட்டில்
எழுந்தொளி வீசி நின்ற
இரவியும் மறைந்து விட்டான்
செழுஞ்சுவைத் தமிழன் சென்ற
செய்தியால் வருந்திற் றிப்பூ

மந்திரம் ஒலித்த வாயும்,
மலர்ந்தநல் முகமும், கண்ணும்,
செந்தமிழ் தந்த நாவும்,
திருச்சபை உடையும், நிமிர்ந்த
மைந்துடைத் தோளும், இன்று
மாயமாய் மறைந்த தென்னே?
அந்தமில் வாழ்வை நோக்கி
அகன்றனை கொல்லோ ஐயா?

# நாயகம்

**பல்லவி**

ஞானப் பேரொளி வீசிடவே
நபிகள் நாயகம் அவதரித்தார்
ஈனப் பிறவியை மீட்பதற்கே
எங்கள் நாயகம் அவதரித்தார்!

**சரணம்**

ஆண்டவன் அல்லா அவன் எம்மை
அற்புத மாகப் படைத்திட்டான்
தாண்டவ மாடும் உலகுய்ய
தந்தனன் ஞானத் தனிச்சுடரை
ஈண்டவன் சென்ற பாதையிலே
எய்திடின் இன்பம் எய்திடுமே!

பேர்புகழ் நாடி வாழுந்திலரே
பெருமைகள் அவரைத் தேடினவே.
நேர்மையின் சின்னம் எனவுலகம்.
நினைத்திட வாழ்வை அமைத்தவரே.
பூரணன் ஒருவன் உலகினுக்கே
புரிபணி என்றான் அவனுக்கே!

திருநபி ஈசன் கனி அன்றோ
திருமறை காட்டும் வாழ்வன்றோ.
கருவழி வந்த மாந்தர்களின்
கவலையைப் போக்கும் மருந்தன்றோ.
அருளொளி யாகிய ஆண்டவனே!
அனுதினம் பேசிய வடிவன்றோ?

# கங்காதரர்

தெய்வச் சுடரொளியாய்த் தென்கோண மாமலையில்
வையத் திருளகல வந்துதித்த - மையல்
அகற்றும் சிவயோகத் தாச்சிரமம் வாழ்வின்
பகட்டை அழிக்கும் படை!

பிறவிப் பிணிநீக்கும் பேரின்பம் நல்கும்
உறுநோ யகற்றியுடல் காக்கும் - துறவி
தவயோகி கங்கா தரானந்தன் ஈயும்
சிவயோகத் தாச்சிரமத் தேன்!

அல்லும் பகலும் அயரா துழைத்த பயன்
கல்லாய்ச் சுவராகிக் கட்டிடமாய் - இல்லாகி
கங்கா தரானந்தன் வாழிடமாய்க் காணுங்கால்
பொங்காதோ உள்ளப் புனல்!

வாட்டம் அடைந்தக்கால் வாரும் சிவயோகக்
கோட்டம் அடைந்து குறைநீங்கித் - தேட்டம்
பெறலாம் தெளிவும் பெறலாமே கங்கா
தரனாரைக் கண்டுதரி சித்து!

வாழ்க சிவயோக வாழ்வின் திருக்கோயில்!
வாழ்க சிவயோகி வான்கழல்கள்! - வாழ்க
திருமறைகள் என்றென்றும் தென்கோணை ஈசன்
குருவருளை உள்ளத்துட் கொண்டு!



இமாலய ஜோதி சுவாமி சிவானந்தர் ரிஷிகேசத்தில் ஸ்தாபித்த திவ்யஜீவன சங்கத்தின் இன்றைய தலைவர் சுவாமி சித்தானந்த மகராஜ் இலங்கை வந்தபோது சச்சிதானந்த மாதாஜி திருக்கோணமலையில் ஸ்தாபித்த திவ்ய ஜீவன சங்க கிளையான சிவானந்த இல்லப் புதிய கட்டிடத்திற்கு வருகை தந்து சிவானந்தரின் சிலையை திரை நீக்கம் செய்து வைத்தார். படத்தில் கழகப்புலவர். பெ. பொ. சி., Dr. சித்திரவேல், கணபதிப்பிள்ளை, காசிநாதர் ஆகியோர் சுவாமிகளுடன்.

# மண்ணகம் வருவான் மயில்வாகனனே!

காவி உடையான், கருணைத் திருமாலின்
நாவல் நிறமுடையான் - நற்றமிழான் - மாவைக்
கவுணியனார் நண்பன்கா ரைவிபுலா னந்தன்
புவிபுகழும் யாழ்நூற் புகழ்!

காட்டுக் கோடுங் கடுந்தவம் புரியும்
மோட்டுத் துறவும் முறைகளும் வேண்டான்
நாட்டுக் குழைக்கும் நல்லறம் பூண்டான்
ஈட்டும் பொருளும் இளமையும் வாழ்வும்
ஊட்டுங் கல்விக் குடமைக ளாக்கி
வாட்டந் தீர்த்த வண்டமி ழாசான்
வீட்டுத் துறவி விபுலா னந்தன்
மீட்டும் ஈழ நாட்டினில் பிறப்பான்!

சேரன் தந்த செந்தமி ழாய்ந்து
பாரம் பரியப் பைந்தமி ழிசையை
ஆரத் தந்த அமிர்தசஞ் சீவி
ஊரும் பேரும் உறவுக ளனைத்துஞ்
சேரத் துறந்த செந்தமிழ் வாழ்வு
காரை தீவுக் கண்ணகை அம்மன்
வாரப் பாட்டில் வளர்ந்தவான் மயில்தனில்
ஈழ நாட்டிற் கெழுந்தரு ளானோ?

கண்ணகை அம்மன் காற்சிலம் போசை
மண்ணகத் தொலிக்க மாதவத் தோர்கள்
கண்ணகந் திறந்து காரையூர் தந்த
அண்ணலை யாழ்நூல் அறிஞனைப் போற்றும்
பண்ணிசை கேட்டு பழந்தமிழ் யாழின்
இன்னிசை கேட்க இறங்கினர் ஈழம்
விண்ணவர் கைகள் விரிமலர் சொரிய
மண்ணகம் வருவான் மயில்வா கனனே.

# எழுகவில்லே!

அம்புவி எங்கும் கற்றோர்க்
கருள் செயுங் கருணைச் செல்வி
தம்புகழ் நிறுவிச் சென்ற
தண்ணளி யாளர் வாழ்த்தும்
அம்புயச் செல்வி எங்கள்
அருட்திரு விபுலா னந்த
நம்பியின் சரிதை வில்லில்
நடந்திடக் கருனை செய்வாய்!

வில்வடிவ யாழினுக்கும் தமிழர்நாட்டின்
விறலியரும் பாணர்களும் மீட்டிநின்ற
பல்வடிவ யாழினுக்கும் ஈழநாட்டின்
பாலுதித்த விபுலானந்தர் கொடுத்த
சொல்வடிவ மில்லையெனில் அழிந்தொழிந்த
சுருதியினை ஆரறிவார் மறைந்த யாழின்
நல்வடிவை நமக்களித்த மாமணிதன்
நற்சரிதைத் தேன்பொழிய எழுகவில்லே!

முத்தமிழ் அறிஞன் முன்னை
யாழினை மீட்டோன் காவி
வத்திரம் தரித்தோன் ஈழம்
வளர்தமிழ் உலகுக் கீந்த
வித்தகன் விபுலா னந்தன்
வியன்தமிழ்ச் சரிதை தன்னை
வைத்திசைக் கின்றேன் வில்லே
வையகம் அறியு மாறே!

# புலவர்மணி பெரியதம்பி

முன்னேயக் கீதை மொழிபெயர்த் தாரெல்லாம்
சொன்னார் உரையிலதன் சொற்பொருளை - என்னே
பெரியதம்பி யென்னும் பெரும்புலவன் அன்றி
அரிய பொருள் பாடுவார் ஆர்?

நீண்டு பெருகிக் கிடக்கும் நிலைகண்டே
யாண்டும் நிலைக்கு மொரு யாப்பினால் - வேண்டும்
அழியா வுருவம் அளித்தான் கீதைக்குப்
பெரியான் பெரியதம்பி

இன்று தமிழ்நாட்டில் எத்தனையோ பேர்கவிகள்
என்று பெயர் சூடி யிருக்கின்றார் - நன்று, ஒருகால்
கீதைவெண் பாவில் கிடக்கு மருமையினை
ஓதுவரேல் காண்பருண் மை!

வெண்பாவில் கீதை விளக்கேற்றிச் செந்தமிழர்
பண்பா லுயரப் பணி செய்தான் - வெண்பாவில்
தேர்ந்தபுக ழேந்தி தெருவிற்கை யேந்தி கவி
வேய்ந்தே பெரியதம்பி

முன்னோன் மொழிகீதை மூவாத் தமிழ்மொழியில்
சொன்னார் பலருமுரைப் பாணியிலே - என்னே
பாட்டிற் பெரியதம்பிப் பாவலனா ரீண்டிருக்க
தீட்டத் துணியார் திறந்து

கலைமகள் ஆசிரியர்

**திருவாளர் கி. வா. ஜகந்நாதன் அவர்களின்**

மணிவிழா பாராட்டு வைபவத்தின் போது திருக்கோணமலை
இந்து வாலிபர் சங்கத்தினர் மனமுவந்து பாடியளித்த

# மணி விழா வாழ்த்து

கந்தன் முருகன் கதிர்வேலன்
கருணை உமையாள் தருபாலன்
தந்தம் இதயத் தாமரையில்
தவழ்ந்து புரண்டு விளையாட
சிந்தைக் கணியாய் செவிக்கணியாய்த்
திகழும் அருண கிரியாரின்
விந்தைத் தமிழை விழுந்தடித்து
விழுங்கத் தருநின் நா வாழ்க!

வையம் புகழும் தமிழ்மொழியின்
வளமும் இளமைத் திருவடிவும்
பொய்யில் புலவன் செய்த தமிழ்ப்
புலமைக் குறளின் பொருளழகும்
ஐயன் அடிக்கே தமிழ் செய்த
அடியார் தமிழின் தனியழகும்
உய்யக் காட்டி உரைசெய்யும்
உரவோன் உள்ளம் வாழியவே!

சங்கத் திருந்து தமிழாய்ந்த
சான்றோர் தந்த தமிழாழம்
கங்குல் பகலாய்க் காட்சிதரக்
கண்டு மகிழ்ந்து களிதுள்ளிப்
பொங்கி யுள்ளம் பூரித்துப்
புலமைக் கரத்தால் புதையுண்ட
தங்கக் குவியல் தனையள்ளித்
தருநின் தரளக் கைவாழ்க!

சோழர் காலச் சுடர்விளக்காய்த்
தோன்றித் தமிழில் விளையாடி
ஆழிக் கடல்போல் வடமொழியில்
அகன்று கிடந்த கதையெடுத்து
வாழத் தமிழின் சுவையூட்டி
வைத்த கம்பன் கவிச்சோலை
சூழ அதனிற் புகுந்தழியா
அழகைச் சொரிந்தான் கரம்வாழ்க!

நந்தமிழ் இலக்கி யத்தின்
நறுமணங் கமழுந் தெய்வச்
சந்தனத் திலகம் தூய
சற்குரு சாமி நாதச்
செந்தமிழ்ச் சிவனார் பூணும்
சிவமணி செம்மை சான்ற
அந்தணர் மரபில் வந்த
அருள் ஜகந்நாதன் வாழ்க!

நற்றமிழ்ப் புலமை யாளன்
நாவலன் இனிய செய்யுள்
பற்பல பாடும் வாயான்
பழந்தமிழ்ப் பண்பு மிக்கான்
சொற்றிறம் தெரிந்து காட்டிச்
சுவைபட இனிமை சொட்டும்
அற்புதத் தமிழில் வல்லான்
ஆம் ஜகந் நாதன் வாழ்க!

அணிவிழாக் கொடு தமிழ்த்தாய்
அகமகிழ்ந் தணைக்கச் சைவப்
பணிபுரி சந்தி தானப்
பயன்திரன் டெழுந்து வாழ்த்த
அணியணி யாகக் கற்றோர்
அவைமகிழ்ந் தேத்தக் கண்ணார்
மணி விழாக் கண்ட கி. வா.
ஜகந்நாத மணிநீ வாழ்க!

## வெண்பா

நிரைகழலும் ஒண்சிலம்பும் நித்தம் ஒலிக்க
வரைமகளோர் பாகமாய் வைத்தான் - திருவருளால்
வாழ்க ஜகந்நாத வள்ளல் குருநாமம்
வாழ்க குருநாதர் வழி!

வாழி திருக்கோண மாமலையான் தேன்பாதம்
வாழி அவனடியார் வான்கழல்கள் - வாழியநின்
நாவாலும் கையாலும் நான்மறை தேர்நெஞ்சாலும்
பாவாலும் செய்யும் பணி!

# காந்தி நூற்றாண்டு

உலகமெலாம் இன்றெங்கள் உத்தமனார் காந்திக்கு
மலர் தூவி அஞ்சலிக்கு நன்நாளில் எங்களூர்
மாவட்டப் பேரவையின் ஆதரவில் கூடுமிந்த
பாவட்டப் பேரரங்கில் பங்குபற்று மாறென்னைக்
கேட்டார் ஒரு தியாகி; கேட்டவுடன் யான் மறுப்புக்
காட்டாது ஓமென்றேன் கற்றுவல்ல பாவலர்கள்
காந்திமகான் நூற்றாண்டைக் கொண்டாடும் இவ்வேளை
சேர்ந்து கவிபாடும் போதினிலே யானுமவர்
சேர்க்கை வாசனையால் செஞ்சொற் கவிபாடும்
ஆற்றல் பெறலாம் எனுந்துணிவால் இங்குவந்து
நிற்கின்றேன்; நின்று கரங்கூப்பி எல்லோர்க்கும்
வற்றாத அன்பை வழங்கி வரும் காந்திமகான்
'வாழ்க' எனவாழ்த்தி வணக்கஞ் செலுத்துகின்றேன்.
மக்களுக்குக் காந்திமகான் வைத்துவிட்டுச் சென்ற உயர்
சொத்தாக நிற்பதுவும், துன்பந் துடைக்குமலர்க்
கற்பகமாய் ஓங்குவதும், காசினியில் வாழ்ந்து வரும்
கடைமகனும் வாழ்வில் கடைத்தேறக் காட்டுவதும்,
நின்றுலகை வாழ்விக்கும் நீள்பனையாய் வாழ்வதுவும்
எல்லா நலனும் தருவதுமாய் வந்துதித்த
சர்வோ தயமெனும் சஞ்சீவி தன்னையே
எல்லார்க்குந் தந்த இனிய மகாத்மாவின்
பொன்னடிகள் வாழி! புனிதன் கருணைவழி
எல்லோரும் வாழ்ந்து இன்பநிலை எய்த
வழிகாட்டும் சர்வோ தயவழியில் வாழ்ந்துலகம்
பொய்யைப் பொறாமையை புலைவாழ்வை விட்டென்றும்
மெய்யைக் கடைப்பிடிக்கத் தொடங்கின், அழிவூட்டும்
போரில்லைப், பொல்லாப் பகையில்லை, பூமியிலே
மக்களெலாம் ஓர்குலமாய் வாழ்வர் வசையின்றி.
அன்பும் அருளுமிக்கு ஆட்சிசெயக் காணலாம்,
இன்பநிலை எங்கும் நிலவும், இருள் சேர்ந்த
துன்பநிலை நீங்கும், துயரமெலாம் ஓடிவிடும்

நான் வாழ்ந்தால் போதுமென்று நாட்டினிலே எல்லோரும்
ஊன் வாழ்க்கை வாழ்ந்தால் உறுதுயரம் விட்டெம்மை
போகாது! ஆகையினால் பூவுலகில் எல்லாரும்
வாழவேண்டும் என்று வழிவழியே வந்து விட்டால்
தோழமைகள் ஓங்கும் துயரம் அணுகாது
காதல் பிறந்துவிட்டால் சாதலுக்கு வேலையில்லை.
காணிநிலம் பூமியெல்லாம் காற்றைப்போல் மக்களுக்கு
கடவுள்தந்த சொத்தென்று கண்டுவிட்டால் காணியால்
மக்களுக்கு மக்கள் அநீதியாய் நடக்கின்ற
இக்கட்டுத் தீரும் இனியவழி வந்துதிக்கும்,
ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் ஓர்குலமாய்
காற்றைக் குடித்தாலும் கடன்பட்டு வாழ்ந்தாலும்
வேற்றுமைகள் இன்றி விளங்கும் சமுதாயம்
தோற்றப் பணிசெய்வோம் தோழர்காள், காந்திமகான்
நூற்றாண்டு வாழ்வில் நுவலுகிற இக்கருத்தை
ஏற்று நடந்தால் இனிய சமுதாய
வாழ்வைப் பெறலாம் வளம் பெறலாம் வையகத்தை
தெய்வ மனிதர்கள் திரியும் உலகமாய்க்
காணலாம் எல்லாங் கடந்து!



# இலிங்கன்

அரசியல் வாழ்வில் தோல்விகள் கண்டும்
ஒருமுறை யேனும் உடைந்திலன் உள்ளம்
கரவுடை யார்கள் அஞ்சிடச் சொற்போர்
திறமுடன் புரிந்தங் கீட்டினன் வெற்றி!

ஐக்கிய அமரிக் காவினுக் கன்று
தக்கநற் றலைமை தாங்கிய லிங்கன்
மக்களை மக்கள் மதித்திடச் சட்டம்
இக்கணம் செய்வேன் ஆணையீ தென்றான்!

பிறந்தது ,சட்டம் பேதமை ஒழிந்தது
திறந்தன கண்கள் தெறித்தது விலங்கு
அறுந்தது அடிமைச் சங்கிலி வாழ்வில்
பிறந்தது இன்பம் பேரிகை கொட்ட !

நீக்கிரோ மக்கள் நெடுந்துயர் ஒழிய
ஆக்கினான் சட்டம், அழிந்தன எங்கள்
சோக்குகள் என்று துள்ளின வெள்ளை
நாக்குகள், லிங்கன் நகைத்தனன் கண்டு!

நல்லவ னாக வாழ்வது என்றும்
அல்லலை விளைக்கும் அறிகுறி யாகும்
புல்லனின் கையால் புவியினில் சரிந்தான்
இல்லையேல் அழியாச் சரித்திரம் ஏது?

# திருக்கவிராயர்

திருக்கோணமலை யூற்று
செந்தமிழின் ஊற்று
தருக்கோடு கவிபொழியும்
தனிக் கவிதையூற்று
பெருக்கோடிப் பாய்கின்ற
பெருவெள்ளப் பெருக்கு
திருக்கோணமாமலையின் கவிராயர் என்னும்
செந்தமிழுக் குரம் கொடுத்து வளர்ந்தோங்கும் ஊற்று!

கவியைப் படையாக்கி
கயமைச் சிரமறுக்கும்
புவியைக் கவியாக்கும்
புலமைப் பேரூற்று
என்றீழக் கவிஞரெலாம்
எண்ணிப் பெருமையுறும்
அன்புக் கவிஞன் என் அருமைக் கவிஞன் இதோ
பாட வருகின்றான் பாட்டில் திளைத்தேநீர்
பயனடைய வேண்டு மென்று
கேட்டுக் கவியேறு வருக வருக வென
வாழ்த்தி அழைக்கின்றேன்
வாழி தமிழ்த் தாயே!

இந்தக் கவியரங்கு இன்று நிறைவேறி
வந்து கவிபாடி நின்ற கவிஞருக்கும்
வணக்கம் தனைச் செலுத்தி
செந்தமிழே வாழ்க சிறந் தென்று
முடிக்கின்றேன்!

# கலைஞர் வாழி

சீர்வளம் பொலியுங் கோண
மாமலை ஊரின் அமர்ந்து
பார்வளம் பொலியக் காக்கும்
பத்திரகாளி அம்பாள்
தேர்வளம் பொலியச் செய்த
திருமகன் சீவரத்னம்
பேர்வளம் பொலிய அன்னை
பெரும்பதம் போற்று கின்றோம்!

பண்புக ழாளர் போற்றும்
பாவிசை திருநெல் வேலி
சண்முக சிற்பா லயத்தின்
சாற்றருஞ் சிற்பி யாய
கண்மணி சீவ ரத்னக்
கலைஞரும் அவரோ டிணங்கி
எண்ணருந் தேரைச் செய்த
யாவரும் இனிது வாழி!

அன்னைநீ அருள வேண்டும்
அவர்தமக் கெல்லாம் நல்ல
பொன்னைநீ அருளல் வேண்டும்
புவிபுகழ் தேர்கள் செய்யும்
வன்மைநீ அருளல் வேண்டும்
வையகத் தவர்கள் வாழ்வு
நன்மையோ டிலங்க எல்லா
நன்மையும் வழங்கு வாயே!

வேம்புடன் மருதும் மற்றும்
விலையுறு மரங்கள் கொண்டு
கூம்பணி தேரில் கலைகள்
கூர்ந்திடப் பணிகள் செய்து
ஓம்புகழ் பவனி கொள்ளும்
உத்தமி பத்ர காளி
பூம்புகழ் காட்சி காணப்
புனைந்தவர் வாழி வாழி!

# வடிவேல்

எங்கும் வடிவேல் எனவழங்கும் பேர் பூண்ட
மங்காப் புகழ்படைத்த மாபுலவன் - எங்கள்
தலைமைத் தமிழாசான் தந்தைபோல்வான் செல்லத்
துரைவாழி; வாழியவன் தொண்டு!

பல்லாண்டு காலம் பணியாற்றி ஆசிரியச்
சொல்லாண்ட செல்லத் துரை மணியே - பல்லாண்டு
கோணேஸ் வரவித் தியாலயத்தின் குருவாய்
ஞானேஸ் வரமளித்தாய் நன்று!

வாழ்ந்தாய் வளர்ந்தாய் வரலாற்றுக் குன் பேரை
ஈந்தாய் இளமை தனைத்துறந்தாய் - ஏந்துபுகழ்
செல்லத் துரையேநின் செய்பணிகள் மேலோங்கி
வெல்கவே எங்கும் விரைந்து!

எம்மோடு கூடி இனிது பணியாற்றிச்
சிம்மா சனத்தமர்ந்த செம்மலே - இம்மண்ணில்
என்றுமே எங்கள் இதயத்தில் எந்நாளும்
நின்றுமே வாழ்வீர் நிலைத்து!

பெற்றாரின் அன்பும் பெரியோரின் கூட்டுறவும்
பெற்றாய் அதனால் பெரியோனாய் வாழ்ந்திட்டாய்!
நற்றாயாய் மாணவர்க்கு நன்றே பணி செய்தாய்!
மற்றார் உனக்குவமை ஆசிரிய மாமணியே?

# சிவச் செம்மல்

நூல்பல ஆய்ந்து கற்றோன்
நுண்ணிய புலமை மிக்கோன்
தோல்நிறஞ் சிவந்த மேனி
தோற்றமும் பொலிவு முள்ளோன்
சால்புகள் பலவுங் கொண்டோன்
சக்தியின் பாதம் வேண்டி
மேல்வருங் குலத்தில் வந்த
மேன்மைகொள் சைவச் சான்றோன்!

நெஞ்சினில் தமிழும் நாவில்
நித்தமும் ஓதி ஓதி
அஞ்சலி செய்யுந் தெய்வ
அருண்மொழி வளமும் முற்றாப்
பிஞ்சுள, மகளிர் போன்ற
பெண்மையும் பெரியோர் வேட்கும்
செஞ்சொலும் பணிவும் பூண்டு
சிவநெறி வளர்க்கும் செம்மல்!

பட்டமேற் படிப்பைப் 'பூனா'ப்
பல்கலைக் கழகந் தன்னில்
இட்டமாய்ப் படித்து வென்று
இலங்கையின் அறிஞர் போற்ற
அட்டமா திக்கும் வாழ்த்த
அயல்சமஸ் கிருதந் தன்னில்
மட்டிலாப் புலமை பெற்று
மாபெரும் பட்டம் பெற்றோன்!



# சிவஞானம்

தவஞானச் செல்வர்களின் தண்ணளியால் இவ்வுலகில்
ஜெப ஞானம் பெருகிவர ஜென்மவினைத் தளைநீங்கிச்
செவி ஞானம் இல்லாரும் சிவஞானக் கனியருந்தச்
சிவநாமப் பணிபுரியும் சிவஞானம் வாழியவே!

பொய் கண்டார் கக்குகின்ற புகையொடுங்கப் பணிபுரியும்
மெய் கண்டார் ஆதீனக் குருமகா சந்நிதானம்
கை கண்ட இசைஞானி சிவஞானக் கருமுகிலின்
பெய் கண்டு பொன்னாடை போர்த்திட்டான் வாழியவே!

சித்தமிசை குடிகொண்டு சிவமாக்கி எமையாளும்
பத்திரமா காளியருள் பாலிக்கும் ஆலயத்தில்
பக்தியொடு இசைகூட்டிப் பஜனைசெயும் சிவஞானப்
புத்தமுதப் பெருவெள்ளப் பூம்புனலே வாழியவே!

பண்ணிசைப் புலவனென்று
பட்டமும் பணியுந் தந்து
இன்னிசைப் புலமையாலே
இறைபணி ஓங்கச் செய்த
கண்மணி குருவின் (நாமம்) தூய
கடாட்சத்தால் கருணை வாழ்வில்
தண்ணொளி பரவி நின்று
தழைத்திட வாழி வாழி!

திருஞான சம்பந்தப் பெருமானின் தேவாரத்
திருப்பாடல் பெற்றதலப் பெருமையினால் இத்தலத்தில்
விருப்போடு நீ புரியும் பணிவளரக் கோணமலைப்
பெருமானின் திருவருளை வேண்டுகின்றோம். வாழியவே!

ஞானமும் இசையும் உண்டு!
ஞானியர் அருளும் உண்டு!
கோணமா மலைக்கே உன்னைக்
கூட்டிய தவமும் உண்டு!
பேணியுன் தொண்டைக் காக்கும்
பெருந்தவச் செல்வர் உண்டு!
வாணியின் கருணை உண்டு
வாழிய நினது தொண்டே!

# நாகநாதன்

'கமந்'தனில் விளைந்த நெல்லைக்
களத்தினில் அடித்துக் கட்டிச்
சுமந்தவர் தோள்கள் விம்மச்
சுதந்திரத் தமிழ்ப்பா பாடி
நிமிர்ந்திடச் செய்தான் எஃகு
நிகர்த்திடும் நாக நாதன்
அமர்ந்திடக் கண்டால் மாற்றார்
அமர்க்களம் ஏறார் அம்மா

ஈழநாட் டெழுச்சி வீரன்
இரும்புமா மனிதன் தமிழன்
ஊழினை மாற்ற வந்த
உரங்கொளும் அறிவு சான்றோன்
ஆழி வாய் அமுழ்த்தினாலும்
அஞ்சிடாக் கரும ஞானி
ஊழியன் நாக நாதன்
உயிர் தமிழ் நூலில் வாழும்

# பூபாலபிள்ளை

பொன்னும் மணியும் புகழ்சேர் முத்தமும்
முன்னங் கொழித்த முதுபதி இயற்கைத்
துறைசேர் இனிய திருப்பதி அடியார்
குறைதீர்த் தருளும் கோணமா மலையார்
உமையா ளோடும் உறைபதி வாழ்வின்
சுமையெலாந் தீர்க்குந் தொல்பதி; மக்கள்
தென்கை லாயம் எனக்கரங் கூப்பி
அன்பால் சிவாய நமவென் றரற்றி
அல்லும் பகலும் தொழுநற் பதியாம்
குரைகடல் சூழ்ந்த கோணமா மலையில்
சொல்லும் பொருளும் இசையுடன் கலந்து
ஞானசம் பந்தன் நவின்றநற் பாடற்
கானங் கேட்டுக் கண்ணுதற் பெருமான்
கழலுஞ் சிலம்பும் கலந்துடன் ஆர்ப்பத்
தளிரடி தூக்கித் தாள மிசைக்கும்
கோணமா மலையில் தோன்றிய செம்மல்
ஞானமா மலையாய் நற்றமிழ் முனியாய்
விளங்கிய விபுலா னந்தரைக் குருவாய்
இளம்பிரா யத்தே ஏற்றதன் பயனால்
அறிவும் பண்பும் ஆற்றலும் வளர
உறுபுகழ் சேர்க்கும் உயரிய தொண்டே
வாழ்வின் இலட்சிய மாக்கிக் கொண்டு
ஆழ்கடற் றுன்பம் அசைப்பினும் அசையா
நெஞ்சுரத் தோடு நெடும்பணி புரியும்
வீரப்பன் பெற்ற வீரச் செம்மலாய்
தீரமும் அன்புஞ் செயலிற் காட்டும்
பூபால பிள்ளை யெனும் பெயர் பூண்ட
சீரார் செல்வன் சீரியோர் புகழ
செய்த பணிகளுக் களவுதா னுண்டோ?

சிவானந்த சங்கத் திருப்பணி ஓங்க
ஓய்விலா துழைத்த உயரியோய் வாழ்க!
இந்து வாலிபர் சங்கத்திருந்து
முந்துறப் பணிகள் ஆற்றியோய் வாழ்க!
இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்
சங்கம் வளரச் சாலவும் ஆற்றிப்
பெரும்பணி புரிந்த பெரியோய் வாழ்க!
உயர்ந்த பாட்டுக் கரைவலை மீன்பிடி
சங்கத் தாறு ஆண்டுகள் சேவை
செய்த நினது திறமையை மறவோம்
கோணேசப் பரிபாலன சபையில்
அங்கம் வகித்து அரும்பணி யாற்றும்
நின்திறம் கண்டு மகிழ்ந்தனம் நாட்டில்!
கூட்டுற வோங்க கூட்டுறவாளர்
போற்றப் பெரும்பணி புரிந்தோய் வாழ்க!
நினது சேவையின் திறமையைக் கண்டு
சமாதான நீதி அரசர்ப் பட்டமும்
அளித்து நின்றன் அரும்பெருஞ் சேவையைக்
கணித்துக் கௌரவம் அளித்தனர் இன்றே!
என்றும் நினது சேவை நிலைக்க
இன்றுபோல் என்றும் இனிய பணிகள்
நன்றுநீ ஆற்றி நாடெல்லாம் புகழ
வாழி கோணை அப்பன் திருவருள்
என்றும் நின்று நின்னைத் தூண்ட
நற்பணி புரிந்து வாழிய நீடே!

# ஈழத் தமிழ் நாடே

சீரார் இலங்கைத் திருநாட்டில் செந்தமிழ்த்தாய்
ஊராள் உரிமை பெறுவாள்; உயர் நீதி
மன்றில் அவளாட்சி வந்தெய்தும்; மாநிலத்தாய்
கண்டு களி கொள்வாள் காண்!

புயல் வளம் பொழியப் பொய்கை
புது மணம் பரப்பச் செந்நெல்
வயல் வளங் கொழிக்கும் மூதூர்
வாழ் நிலம் எடுக்கும் இந்த
நய வளங் கொழிக்கும் பாடல்
நல்லரங் கேறிப் பாடும்
இயல் வளம் நிறைந்த கவிஞர்
ஈழநா வலர்கள் வாழி!

பாட சாலை கல்லூரி
பள்ளிக் கூடம் யாவினுமே
நாடு செழிக்க நல்லமைச்சர்
நன்கு வகுத்துத் திட்டமிட்டுப்
பீடு பெற நம் மாணவர்கள்
பிறந்த நாட்டிற் கணி செய்ய
வீடு வீடாய்த் தமிழ் மணக்க
விரைந்து செய்யும் பணி வாழ்க!

கலைகள் பயிலும் மாணவர்கள்
கற்றுத் தேர்ந்து தமிழ் மொழியை
உலகில் பயிலும் மொழிகளைப் போல்
உயர்ந்து விளங்கி மேன்மையுற

புலமை வளரச் செய்து வரும்
புகழ்சேர் அமைச்சர் பெருமானார்
நலமார் தொண்டு இலங்கை வள
நாட்டில் ஓங்கி வாழியவே

வாழி கல்வி அமைச்சரணி!
வாழி கல்வி அலுவலகம்!
வாழி கல்வித் திணைக்களங்கள்!
வாழி கல்வி பயிற்றிடுவோர்!
வாழி கல்வி கற்று வரும்
வளமார் இளமைச் சமுதாயம்
வாழி கல்விக் கூடங்கள்!
வாழி தமிழை வளர்ப்பவரே!

தினத்தினுள் சிறந்த தமிழ்தினம் அமைச்சர்
மனத்தினுள் பிறந்தது தமிழ் மணங் கொழிப்பது
நினைத்திடற் கரியது நிறைதவப் புதல்வர்
இனத்தினை உயர்த்திட எழுந்தது இன்றே!

சிங்களமுஞ் செந்தமிழும் சேர்ந்திலங்கைப் பேரவையில்
மங்களமாய்க் கூடி மகிழ்ந்துலவும் - பொங்கொளிசேர்
நன்னாளும் தூரத்தில் இல்லையிதன் உண்மைகளைக்
கண்ணாரக் காணபோம் களித்து!

# ஈழத்து மக்களே

எத்தனை இலக்கிய இதழ்களிங் குள்ளன
என்பதை அறிந்த துண்டா?
எத்தனை அவைகளுள் ஏன் பிறந் தோமென
இடையிலே பணமில்லாமல்
செத்தன என்பதும் செந்தமிழ் மக்களே
தெரியுமா நம்ம நாட்டில்
எத்தனை முத்தெழுத் தாளர்கள் இருக்கிறார்
என்னபேர் சொல்லு வீரா?

எழுதுகின்றார் மிக நன்றாய் - அதை
எத்தனை பேர் படிக்கின்றார்?
தொழுதுபின் சென்றடிக் காலை - அட
தொட்டு விற்கின்றனர் நூலை?
சொந்தப் பணத்தினைக் கொட்டித் - தனித்
துணிவுடன் நூலென்று விட்டும்
வந்து பணங் கொடுத்திங்கே - அதை
வாங்கிப் படிப்பவர் எங்கே?

இலக்கிய நூல்களோ நாளும் - படித்
தின்புறுவா ரின்றி மாளும்!
அலக்கழிக் கின்றனர் எழுத்தை - இவண்
ஆக்கிக் கொடுத்தவர் கழுத்தை !
செத்தபின் நாட்டுவர் கல்லை - அவர்
திறமைகள் காட்டிடும் சொல்லை!
மெத்த அடுக்குவர் ஆகா - இந்த
"மேன்மைத்" தனங்கள் விட்டேக!



திருவள்ளுவர் கழகத்தில் சுத்தானந்த
பாரதியாருக்கு வரவேற்பு.
கழகப்புலவர். பெ. பொ. சி., சோமாஸ்கந்தர், கோணாமலை,
காந்திராஜகோபால், காசிநாதர் ஆகியோர்.

13–11–1952

# அக்காலம்..........?

மூவேந்தர் கொடிகட்டி முன்னாண்ட தமிழ் நாட்டில்
பாவேந்தர் பலர் தோன்றிக் காவியங்கள் பல செய்தார்!
காவலர்கள் அதைக் கேட்டுக் கைநிறையப் பொன் கொடுத்தார்!
பாவளித்த வாயினுக்குப் பல்சுவையும் தேர்ந்தளித்து
நாவினிக்க அவரோடு நல்விருந்து செய்திட்டார்!
சாவொழிக்கும் கனிகொடுத்துச் சல்லாபஞ் செய்திட்டார்!
யானையிலே பாவலரை முன்னிருத்தி தாமவரின்
சேனையினைக் காக்குமொரு சேவகனாய்ப் பின்னிருந்தார்
காவியத்தை தந்த தமிழ்க் கையினுக்கு நெய்யிட்டுச்
சேவை செய்யப் பாவையர்கள் முன்னின்றார் அக்காலம்!
பாவலர்கள் நாவசைந்தால் பார்முழுதும் தானசையும்!
காவலர்கள் அவர்க்காகப் பலகாலம் காத்திருப்பர்
பாடிவரும் பாவலர்க்குப் பரிசளிக்கும் வள்ளல்களின்
மாடியெலாம் தமிழ்மணக்கும் மலர்ச்செடியுங் கவிசொரியும்
தமிழ்ப்பாவின் சுவையுணர்ந்து தமிழ்ப் புலவர் தரமறிந்து
உமைப்பாகா மகனோடும் உயர்புலவர் கூட்டத்துள்
பல்லாண்டு தமிழாய்ந்த பழம் கதையை விட்டாலும்
செல்லரித்த செய்திகளை இல்லையென்று சொன்னாலும்
இன்றிருக்குந் தமிழ் நூல்கள் அன்றிருந்த தமிழ் வளத்தை
நின்றெமக்குக் காட்டுவதை இல்லையென்று சொல்லுவதோ?

# ஊருணியே!

பெற்றெடுத்த பிள்ளையினும் பேணி எமைக் காத்த
கற்பகமே நாங்களுனைக் காண்பதெப்போ - வற்றாத
ஊருணியே எங்கள் உறுதுணையே வந்தெமது
சோர்வகற்ற மாட்டாயோ சொல்?

உங்களுக்கு வாய்த்த உயிரனைய மாமனைப்போல்
எங்களுக்கு வாய்த்த திலையென்றே - தங்களைத்தாம்
நொந்தார் முகம் பார்க்க நோகுதையா ஆயிரந்தான்
வந்தார்க்கென் சொல்வோம் வகை?

என்னைத் தமிழில் இரும்புலவ னாக்குதற்காய்
முன்னே எடுத்த முயற்சியெல்லாம் - முன்வந்து
நித்தம் உனை நினைக்கச் செய்யுதே உன்நிகண்டு ப்
புத்தகத்தைக் காணும் பொழுது!

வந்து முகம்பார்த்து வார்த்தையொன்று பேசுதற்குள்
முந்திவிட்டாய் கண்ணை மூடிவிட்டாய் - சிந்தனையை
வாட்டி யுனைவதைத்த வாதைகளுக் கென் செய்தாய்
கேட்டாரை நொந்தாய் கிடந்து

# ஏழையின் கண்ணீர்

மூன்றுசிலின் கொண்டுபோய் முன்னாள் ஒருகொத்து
வாங்கியுண்டு வந்தோம் வயிற்றுப் பசிதீர
மூன்றுரூபாய் கொண்டு போனாலும் இன்று நாம்
வாங்க முடியாதே அம்மம்மா என் செய்வோம்?
காசுபணம் உள்ளவர்கள் கைநிறைய வாங்குகின்றார்
தேசத்தில் நாங்கள் திரிகின்றோம் யாரப்பா
எங்கள் பரிதாபந் தன்னை எடுத்துரைப்பார்?
அரிசியரிசி யென்றே அலைகின்றோம் ஊரூராய் !
ஒரு கொத்துக் காக உழன்று திரிகின்றோம்!
கூலி கொடுப்பவரும் கூடக் கொடுப்பதில்லை!
வேலையால் வந்து வெறுவயிறாய்த் தூங்குகின்றார்!
பெண்டுபிள்ளை எல்லாம் பசியால் தவிக்கின்றார்!
கண்டாலும் காசுள்ளார் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை!
காசில்லா வாழ்வதற்கோ காசினியில் இல்லையிடம்
எங்கள் பசிதீர்ப்பார் இவர்!

# ஏழையின் குரல்

ஆதித்தன் கடையின் அருகே தெருவோரம்
மோதி யடிக்கும் முகங்களெல்லாம் மூன்று கொத்துத்
தாவென் றொருவர் தலைநீட்ட முன்னமே
காகிதத்தால் செய்த கடுதாசிப் பைநீட்டி
இரண்டு கொத்துப் போடு இதற்குள் என நெருங்கி
முன்னிற்கும் அந்த முதியவனைப் பார்த்து
காசை எடுங்கள் எனக்கூற பத்துரூபாத்
தாளை எடுத்துத் தரப்போகும் வேளையிலே
சில்லறைகள் இல்லையின்னுஞ் சேரவில்லைக் காசு
தள்ளிப் போய் அக்கடையில் தாளை மாற்றி வா
என்றவுடன் அந்த முதியோன் அகன்றவுடன்
மூன்று கொத்துக் கேட்ட மூதாட்டி முகமலர
ஊன்றி அளந்தான் உலகப் பசிதீர
காசு கனத்தாலும் கடும் பசியைப் போக்க வரும்
ஆசைத் தனத்தால் அளந்தவனை வாழ்த்தியே
வீடுபோய்ச் சேர்ந்தாள் விரைந்து.

# சமாஜம் வாழ்க!

ஆசையினால் இவ்வுலகம் ஐயோ படும் பாட்டைப்
பேச முடியாதே - பேச்சில் அடங்காதே!
எங்குஞ் சிவமயமென் றெல்லோரும் கூறுவதை
இங்கே மறுத்துரைக்கும் என்னைப் பழித்தாலும்
உள்ளத் திருந்தே உறுத்தி வருத்துகிற
கள்ளத் தனத்தை கழறாது விட்டுவிட்டால்
உண்மை நிலையை உணர்ந்துமே வாழ்கின்ற
புன்மை பெருகிப் புவியில் அதனாட்டம்
பல்கிப் பெருகிப் படுமோசம் செய்து விடும்
நல்லவரும் மெல்லமெல்ல நாசத்தில் போய் விடுவார்!
ஆதலால் இந்த அரிய திருநாளில்
வேதமுனிவர் விரித்துரைத்த உண்மைகளை
ஓதுகின்றேன் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுகின்றேன்!
நீதியெலாம் வாழ்க்கை நெறியாக வந்து விட்டால்
பாதை திறக்கும் பராபரையைக் கண்டிடலாம்!

இந்திய நாட்டு மக்கள்
இதயத்தை ஈர்த்து வந்த
செந்தமி ழோடு சைவத்
திருமலி கோணை தன்னில்
சிந்தையிற் பெரியர் வாழும்
சிவயோக சமாஜந் தன்னில்
வந்தடி வைத்தால் போதும்
வளர் தமிழ்ப் புலமை ஓங்கும்!

என்று நான் சொல்லு கின்றேன்
ஏனென்று கேட்பீராகில்
அன்றைய அரசர் செய்த
அருந்தமிழச் சேவை தன்னை
இன்று தன் கடமை யாக
இருந்தவச் செம்மல் செய்வார்
நன்றென நாட்டில் உள்ளார்
நவில்கிறார் வாழ்த்துகின்றார்!

நாட்டியக் கல்வி ஓங்க
நாவலர் பெருமை ஓங்க
வீட்டினில் வாழ்க்கை ஓங்க
வியன் தமிழ்ப் புலமை ஓங்க
ஈட்டிய பொருளை மக்கள்
அடுத்திடும் பணிக்கே ஆக்கி
நாட்டினைக் காக்கும் சமாஜ
நற்பணி ஓங்கி வாழ்க!

# அருள்நெறி மன்றம் வாழி!

அப்பனே முருகா உன்றன்
அடியிணை தொழுது செய்யும்
இப்பணி நாளும் ஓங்கி
எண்ணரும் கிளைகள் தாங்கி
ஒப்பிலா இயக்க மாகி
ஊரெல்லாம் செழிக்க வேண்டும்
செப்பரும் பணிகள் செய்யுந்
திரு நெறித் தொண்டு வாழி!

நிறைகதிர்ச் செல்வங் கொண்டு
நிலமகள் உவகை பூக்க
குறைவிலா வாறு மக்கட்
குதவியாய் வைர ஊற்றில்
நிறைவுறுஞ் சன சமூக
நிலைநற் பணிகள் செல்லுந்
துறையெலாம் முருகன் நின்று
துணை செய்வான் கருணை கூர்ந்தே!

திருக்கோண மலையில் முத்துக்
குமரவேள் அருளினாலே
திருநிறை கோணை யப்பன்
திருவருட் துணையால் தூய
அருள் நெறி ஆற்றும் உள்ளூர்
ஆட்சி செய் மன்றம் வாழி!
அருள் நெறி யாளர் வாழி
அடியவர் கூட்டம் வாழி!

அருள் நெறி வாழி, உள்ளூர்
ஆட்சிசெய் மன்றம் வாழி!
அருள் நெறித் தொண்டு செய்யும்
அடியவர் கூட்டம் வாழி
அருள் நெறி இயக்கங் கண்ட
அடிகளார் பணிகள் வாழி
அருள் நெறிக் கோணை வாழி
வாழிய வைர ஊற்றே.

159

# கோணமலை

கோணமா மலையே உன்றன்
குறையினை எடுத்துச் சொல்ல
நாணினேன் எனினும் உண்மை
நவின்றிட விரும்பு கின்றேன்!
ஆணவம் உடையார்க் கென்றன்
அறிவுரை கசப்பே யாகும்!
நீணிலம் புகழ உன்பேர்
நிலைத்திட வேண்டு மம்மா!

பற்பல கோவி லுண்டு
பணிந்தவை தொழுவார் உண்டு!
கற்றிடப் பள்ளி உண்டு
கடலுமோ அருகி லுண்டு!
அற்புதக் கதைகள் பேசும்
அடியவர் பலரு முண்டு!
நற்பயன் விளைந்த தாக
நான்சொல்லச் சான்றே இல்லை!

தெருவெலாம் இளைஞர் கூட்டம்
திரிவதைப் பார்த்தால் உள்ளம்
கருகுதோ! வேலை தேடிக்
களைத்தவர் கூட்டம் ஊரில்
பெருகுதே! படித்து விட்டு
பிழைத்திட முடியார் தங்கள்
குருவினை நோவர், இந்தக்
கொடுமையை உரைக்க லாமோ!

# 160

# சந்நிதியின் சாந்தி நிலையைக் கெடுக்காதே

சாந்திதரும் ஆலயங்கள்
சத்தமிட்டுக் கொக்கரித்து
வாந்தியெடுத் தோலமிடும்
வாயாக மாறிவருஞ்
சீரழிவைக் கண்டுமனஞ்
சிந்தையெலாம் வேகுதையா!
பேரழிவைச் செய்யாதீர்
பேதமையால் ஊரிலுள்ளோர்
காதடைக்கச் செய்யாதீர்
காந்தமடா ஆலயங்கள்
பூதலத்தோர் நெஞ்சினுள்ளே
பூந்திழுக்குங் காந்தமடா!
சத்தங்கள் போட்டம்மன்
சந்நிதிக்குள் ஆள்திரட்டும்
பித்தங்கள் ஓயட்டும்
பேதமைகள் சாயட்டும்!
பத்திரமா காளியம்மன்
பத்தர்களை ஈர்த்திடுவாள்
சத்தியமாய்ச் சொல்கின்றேன்
சாந்திதரும் ஆலயத்தைப்
புத்தியிலாச் செய்கையினால்
பொய்யாக்கிப் போடாதே!
சந்தடியால் சஞ்சலத்தால்
சங்கடத்தால் வாடிநிற்போர்
வந்தணையும் ஆலயத்தின்
வாசனையைப் பாழ்படுத்தும்
வேதனைகள் செய்யாது
விட்டுவிட்டால் போதுமடா!
காதலித்து மக்கள்
கசிந்துருகி நிற்குமுயர்
சாந்தி நிலையமடா
சந்நிதிகள் காந்தமடா
ஆய்ந்தறிந்தால் செய்யாய் அடாத்து.



செந்தில்வேலின் திருமண வரவேற்பு. இராஜவரோதயம் வீதியில் உள்ள வள்ளுவர் கழகத்தில் கழகப்புலவர் பெ.பொ.சியின் தலைமையில்

161

# கொடுங் கோலைத் தடுப்பார் யாரே?

படுகொலைக் களமாய்க் கீழைப்
பாகிஸ்தான் துடிக்கு தந்தோ
கடுகள விரக்க மில்லாக்
கான் செயும் பாத கத்தால்
விடுதலை வீரன் தூயன்
முஜிபரைச் சிறையி லிட்டுக்
கொடுமைகள் புரியு மிந்தக்
கொடுங்கோலைத் தடுப்பார் யாரே?

கருவுற்ற பெண்கள், பாலர்,
கவினிளம் பெண்டிர், இளைஞர்
திரமற்ற முதியோ ரோடு
தேசமும் பாழாய்ப் போக
நரகத்தில் நின்று 'கானு' ம்
நடம்புரி கின்றான் ஐயோ
தருமத்தின் வலிமை இன்று
தரணியில் அடங்கிற் றேயோ?

நல்லவர் ஒருவ ரேனும்
நானிலத் திலையோ ஐயா?
வல்லவன் தனக்கோ எங்கள்
வங்காள தேசம் என்று
கல்லையும் உருக்கி நின்று
கதறிடும் பாகிஸ் தானின்
அல்லலைத் தீர்க்கா இந்த
அவனியோர் அடவி காடே!

தேசத்தைப் பிரிக்கும் முஜிபர்
திட்டத்தை அழித்துக் கட்ட
நாசத்தை ஏற்று நின்றேன்
"நான்"என்று பாகிஸ் தானில்
கோஷத்தை எழுப்பி நாட்டைக்
கொலைக்கள மாக்கி விட்டான்
வேஷத்தை அறிந்தால் வையம்
விழித்திடும் உண்மை கண்டே!

விடுதலை கோரி நிற்கும்
வீரரை விலங்காய் எண்ணிச்
சுடுதலோ அரச நீதி
சுதந்திரத் தாகந் தன்னைப்
படுகொலை நெருப்பால் போக்கப்
பார்க்கிறான் பழம் அரக்கர்
வடிவெலாந் திரண்டு வந்தோன்
வங்கத்தைச் சிதைக் கின்றானே?

உரிமையைக் கேட்டு நிற்கும்
உறவினர் தலையைப் பற்றி
அரிவதோ அரச நீதி?
அறமகள் சீறுகின்றாள்
எரிதவழ் கண்கள் தாங்கி
இருக்கின்றாள் இனிப் பொறுக்காள்
தரியென்று சொன்னால் கூடத்
தரித்திடாள் எழுந்து விட்டாள்!

# குணமலை

தமிழ் நாட்டில் தெய்வ நலம் பெற்ற ஊர்கள் பெரும் பாலும் திரு என்னும் அடை பெற்றுத் திகழ்கின்றன. ஆயினும் சில ஊர்ப் பெயர்களில் உள்ள திரு. நாளடைவில் உருக்குலைந்திருக்கின்றது.

தமிழர் வாழ்ந்த தொல்பதி திருக்கோணமலை. தமிழர்கள் இத் தொல்பதிக்குக் குணமலை என்று பெயரிட் டனர். இலங்கையின் குணதிசையில் அமைந்த மலையாத லால் இது குணமலை என்னும் பெயரைப் பெற்றது. குணமலை நாளடைவில் மருவிக் கோணமலை ஆயிற்று. பழந்தமிழ் வழக்காறுகள் இதற்குச் சான்று பகருகின்றன. குணதிசை, குணகடல், குடதிசை, என்ற பழந்தமிழ் வழக் குகளை உற்று நோக்கி அறிக. எழுத்துக்கள் பிறக்குமிடம் நோக்கின் உகரமும் ஒகரமும் மிக நெருங்கியிருப்பதை யறி யலாம். ஆகவே குணமலை பேச்சு வழக்கில் கோணமலை ஆவது இயற்கையே. திசை குறித்து ஊர்களுக்குப் பெயரிடும் வழக்கம் உண்டு. குணமலையும் திசை குறித்த ஊர்ப் பெயரென்று கொள்வதே பொருத்தமுடையதாகும். கிழக்கு, மேற்கு, என்ற வழக்குகள் பிற்காலத்தில் தோன்றி யவை. பழந்தமிழ் நாட்டில் கிழக்கு, மேற்குத் திசைகளை குணக்கு என்றும் குடக்கு என்றுமே வழங்கி வந்தனர். குணவாயில் கோட்டம், குடவாயில் போன்ற திசை குறித் தெழுந்த ஊர்ப்பெயர்களும் இவ் வழக்காற்றின் உண்மையை உறுதிப் படுத்துகின்றன. இதுவரை கூறியதி லிருந்து ஈழநாட்டில் வாழ்ந்த பழந்தமிழ் மக்கள் இவ்வூருக்கு இட்ட இயற்பெயர் குணமலை யென்பதும், அது நாளடைவில் மக்கள் நாவில் மருவிக் கோணமலை ஆகி, அதன் தெய்வத் தன்மையால் திருக்கோணமலையாயிற்று என்பதும் பெறப்படுகின்றது. கோணமலையை நீட்டிக் கோணாமலை யென்றும் வழங்கப் படுகின்றது. தமிழ்த் தாய் தந்தையர் தாம் பெற்ற குழந்தைகளுக்கு கோணா மலை என்று பெயரிட்டுப் பெருமை கொள்ளும் அளவுக்கு இவ்வூரின் தெய்வத்தன்மை மக்கள் உள்ளத்தில் ஊறியி ருப்பதைக் காணலாம். தெய்வ நலம் சான்ற மலை ஆகையினாலேயே திருஞானசம்பந்தரும் கோணமலை ஈசரை தம் தேவாரப் பதிகத்தில் "கோணமாமலை அமர்ந்தாரே" என்று குறிப்பிடுமிடத்தில் கோணமலையை மாமலை, என்று சிறப்பித்துள்ளார்.

# இல்லை எழில்

ஏரிலார்க் கில்லை எழில் - உண்ணச்
சோறிலார்க் கில்லைச் சுகம் - ஊறும்
நீரிலார்க் கில்லை நிலம் - ஓடக்
காரிலார்க் கில்லைக் கணிப்பு!

பண்மிலார்க் கில்லைப் பலம் - நல்ல
குணமிலார்க் கில்லைக் குலம் - கெடுக்குஞ்
சினமிலார்க் கில்லைச் சிதைவு - கொடுக்கும்
மனமிலார்க் கில்லை மகிழ்வு

கருணை யிலார்க் கில்லை கரம் - செய்யும்
தருமமிலார்க் கில்லைத் தனம் - பொறியின்
உருசியிலார்க் கில்லை உலகு - கூப்பன்
அரிசியிலார்க் கில்லை அரண்!

பந்தமிலார்க் கில்லைப் பகை - எதிலுஞ்
சொந்த மிலார்க் கில்லைச் சோர்வு - தொழிலில்
மந்தமிலார்க் கில்லை மடி - ஆயும்
சிந்தையிலார்க் கில்லை அறிவு!

கள்ளமிலார்க் கில்லைக் கழிம்பு - கெட்ட
உள்ளமிலார்க் கில்லை உவர்ப்பு - மேடு
பள்ளமிலார்க் கில்லை பதைப்பு - கடக்கும்
வள்ளமிலார்க் கில்லை வழி!

மேலோர் விருந்தில் மிதந்துவிளை யாடுவது
பாலோ பழமோ பல்சுவையோ? - மேலோர்
மனதுக் கிதமான மதுபானமோ அன்றோ
தின துக்கம் தீர்க்கும் மருந்து!

# குமரருக்கு!

கோணமா மலையில் வாழுங்
குமரருக் கொன்று சொல்வேன்!
வீணில்நீர் காலந் தன்னை
விரயமே செய்தல் வேண்டாம்!
காணிகள் உம்மை நோக்கிக்
கடுந்தவம் புரியு திங்கே
ஊணிலார்க் கிரங்கி யேனும்
உழுதொழிற் கெழுவீர் இன்றே!

ஊக்கமும் உறவும் வேண்டும்!
உழுதொழில் ஏற்று நாட்டின்
ஏக்கத்தைப் போக்கல் வேண்டும்!
எதிர்வருங் கால மும்மைத்
தாக்கிடா வகையில் ஏரைத்
தாங்கிட வேண்டும் கையில்
சீக்கிரம் இதுநும் வேலை
செய்தலை நோக்கி வாரீர்!

ஆற்றலும் அறிவுங் கொண்ட
அணிதிகழ் இளைஞர் கூட்டம்
சேற்றினில் புகுந்து நாட்டின்
செழிப்பினை யுயர்த்தா விட்டால்
சோற்றுக்கு இரங்கி நிற்கும்
சுய மரியாதை யின்றித்
தூற்றிட இழிவை நோக்கித்
தொடர்வதைத் தடுப்பார் யாரே?

காமத்தில் உங்கள் நல்ல
காலத்தைப் போக்கல் வேண்டாம்!
ஊமத்தங் காயென் ற:.தை
உதறிநீர் தள்ளி விட்டுச்
சேமத்தை ஈழ நாட்டின்
செழிப்பினைப் பெருக்கி உங்கள்
நாமத்தை நாட்டி ஈழ
நங்கையர் போற்ற வாழ்க!

# ஏர் தொட்டு வாழ்க

படித்தாலும் கிடைக்காதே உனக்கான வேலை
உனக்கான வேலை - இனிப்
படித்தாலும் கிடைக்காதே உனக்கான வேலை
உனக்கானவேலை!
கடைத்தேற வழியுண்டு கமக்காரனாகு
கமக்காரனாகு - உனைக்
காக்குமே ஊக்கமாய்க் கலப்பையைத் தூக்கு
கலப்பையைத் தூக்கு!
கையுண்டு காலுண்டு கமக்காரனாகு
கமக்காரனாகு - உன்
கதையெல்லாம் வேறாகும் கமக்காரனாகு
கமக்காரனாகு!
செய்யுண்டு நீருண்டு சிறுபோகஞ் செய்ய - வருஞ்
சீருண்டு வரவுண்டு ஏர்கொண்டு வாழ்க!
உழைக்காத பேருக்கு வாழ்வில்லைப் பாரில்
மழைக்கால மேகங்கள் வானேறி நின்று - உனை
வயலுக்கு வாவென்று கேட்குதே வந்து!
ஏட்டுக்கும் வாழ்வுக்குந் தொடர்பில்லை - மற்றும்
ஏனிந்த நோட்டுக்கும் மதிப்பில்லை இன்று!
நாட்டுக்கும் வீட்டுக்கும் உதவாத கல்வி - இதில்
நாட்டத்தை வையாது தோட்டத்தை நாடு!
பேருக்கும் புகழுக்கும் படிக்காதே தம்பி - உன்
பேனைக்கும் வாழ்வுக்கும் தொடர்பில்லைத் தம்பி!
ஏருக்கும் வாழ்வுக்குந் தொடர்புண்டு தம்பி - இதை
எக்கட்டம் வந்தாலும் கைக்கொள்ளு நம்பி!

# மாவலி நாட்டீர் வாழி!

சிங்கள மக்காள் ஈழத்
தீவுமக் குரிய தென்பீர்
வங்க நாடிருந்து வந்த
வடவர்நீர் என்று தானே
உங்களின் வரவு கூறும்
உயர்மகா வம்சம் பொய்யோ?
எங்களைக் கள்ளத் தோணி
என்பிரேல் நீங்கள் யாரோ?

நெஞ்சினை வருத்தும் இந்த
நீர்மையை நீக்கி விட்டு
வஞ்சக மின்றி யொன்றாய்
வாழ்வதற் குரிய தான
செஞ்சொலை வளர்த்தல் வேண்டும்
சிறுமையை ஒழித்தல் வேண்டும்
மஞ்சுசூழ் மலையில் வந்த
மாவலி நாட்டீர் வாழி.

# தேசிய சேமிப்பு

சிக்கன வாழ்வே சிறந்தநல் வாழ்வு - எங்கும்
தேசிய சேமிப்பை யாவர்க்கும் ஓது!
பழகுதல் வேண்டும் என்றும் - சிக்கன வாழ்வைப்
பழகுதல் வேண்டும்!

உள்ளவராயினும் இல்லவராயினும்
உழைப்பினில் ஒருபங்கை விருப்பொடு சேமிக்க
படிப்பவராயினும் உழைப்பவராயினும்
கிடைப்பதி லொருபங்கை விருப்பொடு சேமிக்க

தேசிய சேமிப்பில் ஆசையை வைத்துன்றன்
தேட்டத்தில் ஒருபங்கை நாட்டினுக் களித்திட
வையக வாழ்வினில் உய்ய வைக்கும் நல்ல
தெய்வமிதை யுணர்ந்தென்று விருப்பொடு சேமிக்க

தேசம் உயர்ந்திட மாசம் ஒரு - ரூபாய்
தேசிய சேமிப்பில் சேர்ந்திடடா!
காசைக் கரியாக்கும் மோசடியில் - வந்து
காத்திடுஞ் சேமிப்பைக் காத்திடடா!
மாத வருவாயில் மாசமொரு ரூபாய்
மக்களின் சேவைக் களித்திடடா!
காத லுடனென்றுந் தேசிய சேமிப்பைக்
காத்திடில் வந்துனைக் காக்குமடா!
ஈட்டும் பொருளினில் எள்ளள வாயினும்
ஈந்தெங்கள் தேசிய சேமிப்பினை
ஊட்டி வளர்த்ததை ஓங்கிடச் செய்திடல்
உண்மையில் தேசிய சேவையடா!

# மலரே வாழி

ஈழத் தெழுந்த எழுத்தாளர்
இதயத் தெழுந்த உணர்ச்சிகளை
வாழும் மனித இலக்கியமாய்
வளரும் இளைஞர் மத்தியிலே
வாழ வைப்போம் என்றெழுந்த
வைரத் துடிப்பால் பிறந்த திரு
வாழி மலையில் பூத்த தமிழ்
வாடா 'மலரே' வாழியவே!

வண்ணக் கதைகள் வளங்காட்டும்
வளரும் கவிதை உளங்காட்டும்
சின்னஞ் சிறுவர் விளையாட்டில்
சிறுகப் பூத்த பெரு 'மலரே'
உன்னைக் கண்டு உரையாட
உவந்து களித்து வருகின்றார்
பொன்னே நீரின் பூத்த மலர்ப்
பூவே வாழி வழி வழியாய்!

அறுசுவையோ டுயர்மனைவி தருமமுதை அருந்தினாலும்
சிறுமகனார் தந்துமகிழ் ஒருபிடிக்கு நிகரும் உண்டோ
உறுபுலவர் புகழ்கோண மலை இளைஞர் உள்ளம் உவப்ப
மறுமலர்ச்சித் தமிழ்மன்றம் மகிழ்ந்தளிக்கும் 'மலரே' வாழி!

# காலப் போக்கு

பகையன்றி வேறொன்றுங் காணேன், இந்தப்
பாருலகம் படையெடுப்பில் மகிழ தந்தோ
வகை வகையாய்ப் படைக்கலத்தின் வரிசை காட்டி
வாழுலகை அச்சத்தின் வடிவ மாக்கி
புகை புகையாய்க் கக்குகின்ற விஞ்ஞா னத்தின்
புரியாத போக்குகளைப் புரிந்து கொண்டு
மிக விரைவாய்ப் பணிசெய்யும் மேதை ஒன்றின்
விழிப் புணர்ச்சி இல்லையெனில் இல்லை நாமே!

மிருகத்தை அவிழ்த்து விட்டுக் கூத்துப் பார்க்கும்
விளையாட்டில் இவ்வுலக வாழ்வு சிக்கிக்
கருகிப் போய்க் கலங்கிநிற்கும் காலப் போக்கைக்
காண்கின்றேன் காலமெல்லாம் கருணையாளர்
எரு விட்டு நீரிட்டுக் காத்து வந்த
எழில் ஞானக் கருத்துகளை எறிந்து விட்டுத்
தெருவுக்குந் திண்ணைக்குந் திருத்தம் பேசும்
தீரத்தை ஞானமெனில் தெரு சிரிக்கும்.

# திட்டம் வேண்டும்

படித்தவருள் ஒருசிலரைப் பொறுக்கி வைத்து
பார்த்தவர்க்கே வேலையினைக் கொடுக்கும் இந்த
வடித்தெடுக்கும் திட்டத்தால் வானில் நின்று
வரங்கொடுக்க நினைக்கின்றாய்: ஆகா உன்றன்
கொடைத்திறத்தில் ஒருசிலது வாழ்வு பெற்றுக்
குதூகலிக்கும் பிரேமையினால் சூழ்ந்து சுற்றிப்
பிடித்திழுக்கும் பிரச்சனைக்கோர் தீர்வு கண்டு
பிடித்துவிட லாமென்று நினைக்கின்றாயோ?

படித்துயர்ந்த பட்டங்கள் பெற்றவர்க்கே
பணிசெய்யும் உலகத்தைப் படைத்து விட்டாய்!
படித்துவிட்டு அரைகுறையாய்த் திரியுங் கூட்டம்
பாரினிலே அதிகரிக்கச் செய்தும் விட்டாய்!
அடித்தடித்தே அடக்குவதில் அமைதி காணும்
அறியாமைப் படுகுழியில் வீழ்ந்தும் விட்டாய்!
மடைத்தனத்தை அறிவென்று மயங்கி நிற்கும்
மனுக்குலமே! ஏனிந்த மயக்க மாமோ?

கற்றவர்க்கு மட்டுந்தான் வேலைஎன்றால்
கல்லாதார் என்செய்வர்? கடையர் தம்மைப்
பெற்றெடுத்த குறை உம்மைச் சேருமன்றோ?
பெரும்பாவம் வந்துலகைப் பிடிக்கு மன்றோ?
அற்றவர்க்கே பணிசெய்ய வேண்டு மென்ற
அறநெறியை அறியாத அரசும் உண்டோ?
பற்றுடையீர் அரைகுறையாய்ப் படித்தவர்கள்
பலருண்டே அவர்தமக்கே திட்டம் வேண்டும்!

ஆடவரே வேலையின்றி அலையும் போது
அது போதா தென்றெமது மடவார் கூட்டம்
மாடங்கள் மீதேறும் படியி லேறி
மாவட்ட அதிபதிகள் முன்னே வந்து
கூடுகின்றார் வேலைக்கு விந்தை விந்தை
கொதி நெருப்பில் விளையாட்டா கூர்ந்து பார்நீ!
கோடானு கோடிப்பேர் கூடிக் கூடிக்
கொடுவேலை என்கின்றார் கொடுப்பார் யாரே?

காலையிலே எழுந்து நாம் கடைக்குப் போனால்
கடுவிலைகள் சொல்கின்றார் கடையில் நிற்போர்
சேலையினைக் கட்டுதற்கோ வழியுமில்லை
செத்தல் மிள காயினது விலையோ மோசம்!
பால் பிழியத் தேங்காய்க்குப் போனால் அந்தப்
பக்கமே பாராது திரும்ப வேண்டும்
கால் கடுக்க நின்றுவிட்டு திரும்புகின்ற
கண்றாவிக் காட்சிகளே கடையி லெங்கும்.

# பாதகம்

★★★★★★

விஞ்ஞானக் கலையோங்கத் தமிழில் இன்று
விதம் விதமாய்க் கலைச் சொற்கள் உதித்த போதும்
அஞ்ஞானக் கலைச் சொற்கள் எல்லாம் மக்கள்
ஆதரவைப் பெற்றுலகில் வாழவில்லை!
இஞ்ஞாலத் தறிஞரெலாம் கூடி ஆய்ந்த
எத்தனையோ கலைச் சொற்கள் வாழ்விற் காக
அஞ்ஞாத வாசத்தில் அலைந்து நிற்க
அழகான தமிழ்ச் சொற்கள் வாழக் காண்பீர்!

ஒரு மொழியில் உள்ளகலைச் சொல்லைத் தமிழ்
ஒலியுருவம் பிறழாது பெயர்த்த லாலே
வரு மொழிகள் தமிழ்மொழியில் புகுந்து தமிழ்
வடிவத்தைச் சிதைத்துவரும் மாற்றம் நன்றோ?
உருவழகைத் தமிழ் மொழியின் உயிரைச் சற்றும்
உன்னாமல் ஆய்ந்துணர்ந்து பாராமற் செய்
கருவழிக்குஞ் செயலன்றோ பாதகத்தைக்
கலையறியா மூடருமே கருதார் அம்மா.

# வாவென் றழைக்கின்றாள் மாநிலத்தாய்

வேலை யில்லாத் தமிழ் வாலிபனை - ஓடி
வாவென் றழைக்கிறாள் மாநிலத்தாய்
கோலம் புனையத் தன்மேனியிலே - தினம்
கூவி அழைக்கின்றாள் மாநிலத்தாய்!

காதும் உனக்குச் செவிடாமோ? - அவள்
காத்துக் கிடப்பதுங் காணாயோ?
கூதல் குளிரினைப் பாராமல் - எனைக்
கொத்து கொத்தென்றுமே கூவுகின்றாள்!

வேதம் உனக்கின்று வேளாண்மை - உயர்
வேள்வி உனக்கின்று வேளாண்மை!
சாதந் தருபவள் கூறுகின்றாள் - வெறுஞ்
சாதனை செய்துநீ மாளுகின்றாய்!

பாலும் பழமுந் தருகின்றேன் - எனைப்
பசுமை யாக்கிடும் ஊழியற்கே!
காலமெல்லா மவள் கூறுகின்றாள் - உளங்
கனியக் கனியக் கூறுகின்றாள்!

வாழ வழியவள் சொல்லுகின்றாள் - உந்தன்
வறுமைக் கிரங்கியே சொல்லுகின்றாள்!
ஈழத் திளைஞர்க்குச் சொல்லுகின்றாள் - இதை
இன்னும் உணரார்க்குஞ் சொல்லுகின்றாள்!

ஓங்கி வளர்ந்தெழுந் தோள்களிலே - நல்ல
உள்ளம் வளர்ந்தெழக் காணுகின்றாள்!
நீங்குந் துயரினி நிச்சயமாய் - உனை
நித்தம் அழைக்கின்றாள் மாநிலத்தாய்!

# நாவலர் சிலை

சைவத் திருவுருவம் சான்றோரின் நல்லுருவம்
தெய்வத் தமிழின் திருவுருவம் - பொய்வலார்
அஞ்சி நடுங்கும் ஆறுமுக நாவலராம்
செஞ் சொல்லார்க் கிட்ட சிலை!

வார்த்து வடித்திட்ட வான்சிலையில் நாவலரின்
கூர்த்த மதிவிளங்கும் கோலத்தைப் - பார்த்தோர்
மறவாரே சீரார் மணியின் சிற்பத்
திறத்தினைக் கண்டோர் செப்பு!

பார்த்தார் பரசமயப் பாதிரிமார் செய்கைகளை
நீத்தார் சுகபோக நேசத்தை - ஆர்த்தார்
அரன் பணிக்கே தன்வாழ்வையே அர்ப்பணித்தார்
சிரந்தாழ்த்த தந்தார் சிலை

# சனியன்

சாதியைக் காட்டி நாட்டின்
சமநிலை கெடுக்கும் மாந்தர்
நீதியை உணர மாட்டார்;
நேர்மையைக் கொள்ளார் நெஞ்சில்
வாதுகள் புரிவார்; கோட்டில்
வழக்குகள் வைப்பார்; முட்டி
மோதுவார்; முனிவார்; நல்லோர்
முயல்வதைத் தடுப்பார் இன்றே!

மனிதரைப் பிரித்து வைக்கும்
மடைமைக்குச் சாதி என்று
முனமொரு பேருஞ் சூட்டி
மூடியே காத்து வந்தார்!
சனியனென் றதனை மக்கள்
சக்தியின் றொதுக்கக் கண்டு
சினமுடன் எழும்பு கின்றார்
சீரியர் பேரும் நன்றே!

வேதனை புரிந்து நாட்டின்
வேரினை அறுக்கும் வாளென்
றோதினும் உளத்திற் கொள்ளார்!
உண்மையை மறைத்துக் கூறிச்
சாதியில் உயர்ந்த வர்க்கே
சகமெலாம் உரிமை என்றும்
ஆதியில் இருந்த தென்றும்
அறைகுவர் அறியார் வீழ்ச்சி?

பிறப்பினால் உயர்வு தாழ்வு
பேணிடும் வழக்கம் மக்கள்
வெறுப்பினை வளர்த்து அன்பின்
விரிவினைத் தடுத்து நிற்கும்!
பிறப்பினால் உயர்ந்தோன் பேசும்
பிதற்றலோ இந்த வார்த்தை?
சிறப்பியல் பான இந்தச்
சீரினுக் கிழுக்கு வேண்டாம்!

மேற்குலம் என்று பேசும்
மேன்மைகள் இந்தக் காலம்
ஏற்குமோ? ஒதுக்கி வைக்கும்
இதயத்துக் கிடமு முண்டோ?
நாற்குலம் சாதி எல்லாம்
நடுங்கிட மனித வாழ்வு
போற்றிடும் ஒருமை என்னும்
புனிதத்தைத் தாங்கும் போதே!

# ஏற்றம்

அரிசியின் விலையும் ஏற்றம்! ஆடையின் விலையும் ஏற்றம்!
எரிபொருள் எண்ணெய் பெற்றோல் இவையொடு
விறகும் ஏற்றம்!
தெருவினில் கடையில் விற்கும் தேவைகள் யாவும் ஏற்றம்!
வரிகளும் ஏற்றம் ஆனால் வாழ்வினில் ஏற்றம் இல்லை!

அழுகிய பொருளைத் தானும் ஆருமே குறைய விற்கார்!
பொழுதொடு பொழுதாய் நின்று பொன்னெனப் போற்றி விற்பர்!
பழுதினில் நல்ல பார்த்துப் பாவையர் பொறுக்கிப் போட
பிழையுடைத் தராசில் தீர்த்துப் போட்டதும் கொடுத்துச் செல்வர்!

வேலையை வென்று நிற்கும் விலையினைப் பகர்வோர் போடும்
ஓலமும் ஒழியாச் சந்தை உடையதை உறிஞ்ச வேண்டிக்
காலமும் வரவும் பார்க்கும் கடையரின் கடையை நோக்கிச்
சீலமும் நடையுங் காட்டிச் சிதைந்ததைச் சுமப்பர் பல்லோர்!

நல்லதை வாங்கி ஆக்கி நாமெலாம் உண்ட காலம்
இல்லையாய் கனவாய்ப் போக இன்று நாம் மலிவுக் காகக்
கொல்லையுட் புழுக்கள் பூச்சி கோதிய கறிகள் வாங்கி
அல்லலும் நோயுமுற்று அலைகிறோம் விலைகளாலே!

கழனியில் விளைந்த நெல்லை கையினால் குற்றிக் குற்றி
அழகுற உமியை நீக்கி அழிவுறாத் தவிட்டி னோடு
உழவரின் விளைவை உண்டு உறுதியாய் வாழ்ந்த வாழ்வு
பழையதாய்ப் பறந்ததாலே பற்றின துயரம் நூறாம்!

நஞ்சினை ஊட்டி யூட்டி நாளெலாம் வளர்த்த நெல்லின்
கஞ்சியைக் குடிப்பார் கொல்லும் காலனை ஏற்பார் அன்றோ?
துஞ்சிடப் புழுக்கள் பூச்சி தொலைத்திடத் தெளி மருந்தே
தஞ்சமென் றிருந்தால் இந்த தாரணிக் குய்வுமுண்டோ?

கூடிய விளைவை நோக்கி கொடுவிட மருந்தை வீசி
நாடிய பலனைப் பெற்று நகையொடு சேலை வாங்கி
மாடியும் வீடுங் கட்டி மகிழ்ந்திட நினைக்கும் மாந்தர்
பீடையைப் பெருக்கி நிற்கும் பிழைபுரி மாந்தரன்றோ?

கத்தியால் வெட்டி மக்கள் கையினால் பிழியும் அந்தச்
சத்திலாத் தேசிக்காயும் சந்தையில் றாத்தல் ஒன்று
சுத்தமாய்ப் பத்துரூபாய் சொல்லியே விற்பர் என்றால்
இத்தரை மீதில் ஐயோ எப்படி வாழ்வர் மாந்தர்?

சீனியை வாங்கலாமோ? தேயிலை வாங்கலாமோ?
மானிடர் என்ன செய்வார் மலையென விலைகள் ஏறின்?
பானலம் பேசுவார்கள் பாலினை வாங்கலாமோ?
ஊனினை வளர்க்கத் தானும் உழைப்பினால் முடியவில்லை.

மாதமோர் முடிவில் மக்கள் மருந்தெனப் பெற்ற காசும்
சாதமும் கறியும் வாங்குந் தகுதியைத் தானும் காணா!
போதிய உணவு வாங்கப் போதுவதில்லை! அந்த
வேதனம் கிடைத்த போதே வேதனை மிகுமே வீட்டில்!

# திருக்குறள்

கண்ட கண்ட நூலையெல்லாம் கற்கு மிந்தக்
காலத்தில் வள்ளுவரைக் கற்பார் இல்லை!
கொண்டலென முழக்கிவரும் அறிஞர் கூடக்
குறள் மொழியைச் சரியாகக் கற்க வில்லை!
பண்டிதரும் குறளைத்தான் படிக்கின் றார்கள்
படித்த தெல்லாம் சோதனையில் சித்தி எய்த!
தண்டமிழை உயர்வாக்கும் குறளே; உன்னை
உண்மையுடன் கற்பவரைக் காணோம் இங்கே!

வள்ளுவரை வையத்தில் காண வேண்டும்
வாழ்விலே அவர்மொழியைக் காண வேண்டும்
உள்ளமெலாம் வள்ளுவரால் நிரப்ப வேண்டும்
உலகமெலாம் வள்ளுவர்பின் செல்ல வேண்டும்
பள்ளியெலாம் குறள் மணக்கச் செய்ய வேண்டும்
பாதையெலாம் வள்ளுவரைப் பார்க்க வேண்டும்
அள்ளி அள்ளி வள்ளுவரைப் பருக வேண்டும்
அப்பொழுதே புத்துலகம் உதயமாகும்!

அன்பளிப்பு
கழிபுரம்)



கடல் மார்க்கமாக குன்றக்குடி அடிகளார் மூதூர் புறப்பட்டுப் போகும் போது திருக்கோணமலை துறைமுகத்தில் கழகப்புலவர் பெ. பொ. சி, தொண்டர் ஆகியோருடன்

# திருக்குறளின் பொருள் காணக் கலைமகளின் அருள் வேண்டல்

தெய்வப் புலமைத் திருவள் ளுவர்செய்த
பொய்யிற் குறளின் பொருள் காண - மெய்யறிவைத்
தந்தருள்வாய் வெள்ளைத் தவிசொளிரும் வான்மதியே!
வந்தென் மனத்துள் வளர்ந்து!

அகர உயிரேபோல் ஆருயிர்க்குள் ஒன்றாய்த்
திகழும் அறிவின் திருவே - புகழ் மிக்க
பூவிருக்கை நீத்தென் னுளம்புகுந்து வான்குறளின்
பாவிருக்கும் அர்த்தம் பகர்!

வள்ளுவரின் உள்ளக் கருத்தை வடித்தெடுத்து
தெள்ளுதமிழ்ச் சொல்லால் தெருட்டுதற்கு - வெள்ளை
தாமரையில் மேவும் தனியரசி! நல்லுணர்வைத்
தாமதியா தென்றென்றுந் தா!

வெள்ளைக் கலையுடுத்த வெண்டா மரையாட்டி
தெள்ளுதமிழ்ப் பாவாய் திருக்குறளின் - உள்ளிருக்கும்
நுட்பமெலாம் ஆய்ந்து நுகர அருள்புரிவாய்
திட்பமுடன் என்றுந் தெளிந்து!

உன்னை நினைந்தே உருப்போட்டால் உள்ளத்தில்
பன்னுங் குறள்கள் பதியாவோ? - அன்னையே!
எண்ணிய வெல்லாம் எளிதில் வந் தெய்திடவே
பண்ணுவாய் பாரதியன் பால்!

இன்னாசெய் யாமைமுதல் எண்ணில் அறங்கூறும்
பொன்னார் குறளின் பொருட்கடலுள் ஏந்நாளும்
மூழ்கி விலையுயர்ந்த முத்துக்கள் தேர்ந்தெடுக்க
வாழ்வே; தருவாய் வரம்!

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
தாயேயென் நாவில் தரித்திடவே - நாயேற்குன்
நல்லருளை நல்கி நலமளிப்பாய் நல்லோர்கள்
சொல்விருந்தை ஏற்குஞ் சுகம்!

## பொது மறை

**எடுப்பு**

எதை இழந்தாலும் தமிழன் - திருக்
குறள்தனை இழக்க ஒருப்பட மாட்டான்!
- (எதை) -

**தொடுப்பு**

எத்தனை நூல்கள் இத்தமிழ் மொழியில்
அத்தனைக்கும் மேலாம் அருமைத்திரு மறைகள்
- (எதை) -

**முடிப்பு**

பலமொழிகள் வல்ல பண்டிதரும் பொல்லாப்
பாமரரும் கற்றுப் பயனடையத் தந்த
உலகப் பொதுமறையாய் வளருந் தமிழமுதை
உண்டு சுவைத்து மனம் நன்று வளர்ந்து விட்டால்
(எதை) -

□

# எமதீழம் கவி புரண்டு விளையாடும் ஆழம்.

ஆற்றல் நிறைந்த தமிழ்ப் பாட்டு - கவி
ஆழம் நிறைந்த தமிழ்ப் பாட்டு
கூற்றை எதிர்க்குந் தமிழ்ப் பாட்டு - மனக்
கோட்டம் அகற்றுந் தமிழ்ப்பாட்டு

வீரம் அளிக்குந் தமிழ்ப்பாட்டு - வடி
வேலை நிகர்க்குந் தமிழ்ப் பாட்டு
ஈரம் அளிக்குந் தமிழ்ப்பாட்டு - கல்
இரும்பை உருக்குந் தமிழ்ப் பாட்டு

புன்மை ஒழிக்குந் தமிழ்ப் பாட்டு - பொய்
புரட்டை ஒழிக்குந் தமிழ்ப் பாட்டு
தன்னே ரிலாத் தமிழ்ப் பாட்டு - சமு
தாயம் ஏற்குந் தமிழ்ப் பாட்டு

உள்ளம் வளர்க்குந் தமிழ்ப் பாட்டு - கறை
ஓட்டத் துடிக்குந் தமிழ்ப் பாட்டு
வெள்ளம் களிக்குந் தமிழ்ப் பாட்டு - வயல்
விளைவைப் பெருக்குந் தமிழ்ப் பாட்டு

எங்குந் தமிழ்ப் பாட்டின் வேகம் - தடை
இன்றிப் பாயும் பிர வாகம்
பொங்கி வழியும் எமதீழம் - கவி
புரண்டு விளையாடும் ஆழம்.

(- குங்குமம் - மார்கழி 1971 -)

# தூய்மை

இன்பம் பிறக்கும் இடம் எங்கே? - அதன்
இருப்பை அறிவார் பெரியோரே!
துன்பம் இல்லை இல்லை யம்மா - அவர்
தூய்மைப் பிறவி ஆவரம்மா!

உலகப் பொருளில் இன்பமில்லை - அவை
உதவும் உயர்வில் இன்பமில்லை!
அலையும் மனத்தில் இன்பமில்லை - இந்த
அறிவைப் பெற்றால் துன்பமில்லை!

ஆசை வழியில் செல்லாதே - அதன்
அன்புப் பிடியில் சிக்காதே!
காசும் பணமும் வாழ்வல்ல - உயர்
கருணை வாழ்வே வாழ்வம்மா !

பலதும் பத்தும் கதைக்காதே - உன்
பகைமைத் தீயை வளர்க்காதே!
உலகப் பிணக்கில் இன்பமில்லை - இதை
உணர்ந்தால் உலகில் துன்பமில்லை!

27.04.69

# மாசற்ற மனிதனாய் வாழ்வாய்!

நெஞ்சில் வஞ்சனை கொள்ளாதே!
நஞ்சினைப் பாய்ச்சி நலியாதே!

அஞ்சி எதற்கும் பணியாதே!
நெஞ்சில் துணிவுடன் செல்வாயே!

கஞ்சிக்குப் பஞ்சம்நீ கூறாதே!
கிஞ்சித்தும் சோம்பலைக் கொள்ளாதே!

மடமைக்கு மண்டிநீ போடாதே!
மதியினால் சிந்தித்துச் செய்வாயே!

கல்லாத மூடனாய் வாழாதே!
கற்றறி வாலொளி கொள்வாயே!

கற்றறி மூடர்போல் வாழாதே!
கற்றதை வாழ்வினில் கொள்வாயே!

ஜாதிப் பிரிவினை காட்டாதே!
யாவரும் ஓர்குலம் தேர்வாயே!

நாளினை வீணாய்க் கழிக்காதே!
நற்றொழி லால்நீ உயர்வாயே!

ஆசைப் பிடியில் அலையாதே!
அடுத்தவர் வாழ்வைக் கெடுக்காதே!

மதுவைக் குடித்து மடியாதே!
மான மழிந்து விழியாதே!

உணவிற் குயிர்வதை செய்யாதே!
ஊத்தைப் பிணமதை உண்ணாதே!

பொல்லாப் பொறாமையைக் கொள்ளாதே!
எல்லாம் இறைவன் அறிவானே!

அபகரித் தால்நீ அழிவாயே!
ஆண்டவன் கோபம் அடைவானே!

## எல்லாந் தமிழ்

ஆங்கில மோகத்தை ஓட்டு - தமிழ்
ஆர்வத்தை மக்களுக்கு ஊட்டு
தீங்கறக் கல்வியைத் தீட்டு - உள்
தேசத்தில் உன்புகழ் நாட்டு!

எல்லாந் தமிழிலே ஆகும் - இடர்
எண்ணித் துணிந்திடப் போகும்
பொல்லாப் புலமைகள் சாகும் - வெறும்
போலிகள் வாய்மூடிப் போகும்!

ஆற்றல் படைத்தவர் இன்று - தமிழ்
அன்னைக் குழைத்திடல் நன்று
வேற்று மொழியினர் தொண்டு மனோ
வேகத்தை வெல்லுது சென்று!

## நம் நாடு

கண்ணகியின் தெய்வநிலை கண்டுதொழும் நாடு!
கயவாகு மன்னனுயர் புகழ்பாடும் நாடு!
பெண்குலத்தின் பெருமையினைப் பேசுமுயர் நாடு!
பெரியார்வி புலானந்தர் பிறந்தபெரு நாடு!
காவியங்கள் பாடிமழை பொழிவிக்கும் நாடு!
கமக்காரர் இசை இசைகேட்டுக் கதிர் விளையும் நாடு!
வாவியிலும் மீன்பாடி மகிழ்விக்கும் நாடு!
வடமோடி தென்மோடி நடமாடும் நாடு!

# திருநாடு

ஈழ மென்றொரு திருநாடாம் - அதற்
கிலங்கை யென்பது மறுபேராம்!
ஆழியினாலது சூழ்ந்ததுவாம் - பல
அழகிய துறைகள் சேர்ந்ததுவாம்!

தெற்கைத் தழுவிய கிழக்கினிலே - பல
தென்னந் தோப்புக் கிடையினிலே
அற்புதக் கண்ணகி ஆலயத்தைத் - தன்
அகம் கொள் காரையூரதுவாம்!

மாவலி கங்கை ஆற்று வளம் - வயல்
வாவிகள் தந்த சோற்றுவளம்
தேவர்கள் போற்றுந் தென்னைவளம் - குளிர்
தேசங்கள் ஏத்து தேயிலை வளமே!

பால்தரு றப்பர் கொக்கோவும் - மலைப்
பாங்கினில் வளருங் கறிவகையும்
சால்புறப் பெற்ற திரு நாடாம் - பல
சாதிகள் வாழுஞ் சிறு தீவாம்!

# குழந்தை

கொடியிற் பூத்த மலர்கள் - அருமைக்
குழந்தை மலர்கள் அம்மா
தடியால் அடிக்க வேண்டாம் - அன்பு
தயவு காட்டி வளர்ப்பாய்!

அன்பு காட்டி வளர்த்தால் - அவன்
அடங்க மாட்டான் என்பார்
இன்று நேற்றே யல்ல - இது
எண்ணில் யுகத்துக் கதையே!

என்ன செய்த போதும் - குழந்தை
எதை எடுத்த போதும்
சின்னப் புத்தி கொண்டு - தடை
செய்ய வேண்டாம் அம்மா!

மனிதப் பிறவி யென்று - என்றும்
மதிக்க வேண்டு மம்மா
புனிதக் குழந்தை மேலே - புலி
போலப் பாயலாமோ?

# பெண் குழந்தை

பெண் குழந்தை வந்தாள் - தன்
பேரும் அல்லி என்றாள்
கண் குளிரக் கண்டேன் - இரு
கையால் வாங்கிக் கொண்டேன்!

பன்னிரண்டு மாதம் - தாய்ப்
பாலை உண்ட அல்லிப்
பெண் குழந்தை சொன்ன - கதைப்
பேச்சில் ஆழ்ந்து போனேன்!

கவிகள் பாடி என்னை - இன்பக்
கடலில் மூழ்கச் செய்தாள்!
செவிகள் நுகரும் கனிகள் - சொல்லித்
தேனை வாரி இறைத்தாள்!

வாழ்க அல்லிக் குழந்தாய் - நீ
வளர்க இன்பத் தமிழ்போல்!
வாழ்க அல்லிக் குழந்தாய் - என்றும்
வாழ்க வாழ்க வாழ்க!

சங்கத்திருந்து தமிழாய்ந்த
சான்றார் தந்த தமிழோடு
கங்குல் பகலாய்க் காட்சி தர
கதைத்து மகிழ்ந்து உறவாடி
பொங்கி உள்ளம் பூரித்து
புலமைக் கரத்தால் புதையுண்ட
தங்கக் குவியல் தனையள்ளித்
தருநின் தரளக்கை வாழ்க.

# கோணமலை

பூசைமணி கேட்டவுடன்
புள்ளிமான் கூட்ட மெலாம்
வாசலிடை வந்து நின்று
வணங்கு மருட் கோணமலை!

தாவி விளையாடி வரும்
தாரமுடன் வானரங்கள்
கோவிலிலே வந்து நின்று
கும்பிடு நற் கோணமலை!

கால் நடையில் ஓடி வந்து
கன்னியரும் காதலரும்
மாலையணிந் தின்பமுற
மாண்பளிக்கும் கோணமலை!

பாசமுள்ள கன்றினுக்குப்
பால்சுரக்கும் தாயனையான்
பூசையினில் ஈசனருட்
பொன்பொழியும் கோணமலை!

# (கிளிவெட்டி) வித்தியாலயம்

விரிசுடர் ஒளியே கிளிவெட்டி
வித்தியா சாலை யெனும் விளக்கே
திருநிறை கல்வி பெருகிடவே
தினமும் வாழி வாழியவே!

- விரிசுடரொளியே -

கண்மணி போலப் போற்றிடு வோம்
கலைதரு முன்னைக் கைகூப்பி
பண்ணிசை பாடிப் பரவிடுவோம்
பல்துறைப் பயிற்சி பெற்றிடுவோம்!

- விரிசுடரொளியே -

கிளைநதி பாயுங் கிளிவெட்டிக்
கெழில்தரும் கதிர்கள் நாமன்றோ?
ஒளிபெற எங்கள் ஆலயத்தை
உயர்த்துதல் எங்கள் கடனன்றோ?

- விரிசுடரொளியே -

எங்களின் வித்தியா சாலையிதே
எமதுயி ராகும் நிலையமிதே
எங்கும் இதன்புகழ் ஓங்கிடவே
என்றும் ஓயா துழைத்திடுவோம்!

- விரிசுடரொளியே -

திங்கள் செவ்வாய் புதனோடு
தினசரி வியாழன் வெள்ளியிலே
பொங்குங் காலைப் பொலிவினிலே
பூரித் துள்ளம் பூரிப்போம்!

- விரிசுடரொளியே -

# சிரி பெண்ணே

காலைப் போதில் கதிரவனைக்
கைகள் நீட்டி வரவேற்குஞ்
சோலைப் பெண்ணே அவனுன்னைச்
சுட்டுப் பொசுக்குங் காரணமென்?

அன்பு செலுத்தி வழுத்துகிற
அடியார் தம்மை வருத்துவதும்
அன்புக் கழகோ ஆண்டவனைப்
பின்பற் றினனோ பேசுதியே?

மரமாய்ப் பிறந்தும் மணம்வீசும்
மலரை உலகுக் களித்திடுவாய்!
நரனாய்ப் பிறந்தும் பிறர்க்கீயா
நம்மைப் பார்த்துச் சிரிபெண்ணே!

# காவலன்



காடு வெட்டிக் கழனி ஆக்குங்
கருணை மிக்க காவலன்!
பாடுபட்டுப் பயிர்வி ளைத்துப்
பலன ளிக்குஞ் சேவகன்!

வாடிநின்று வறுமை ஏற்க
வைத்த காலம் ஓடுதே!
தேடித் தேடி அவனை நாடும்
தேவை எங்குங் கூடுதே!

கோடி கோடியாய்க் குடிசனம் புவியினில்
கூடி வருவதைக் குறைத்திடும் வழிவகை
நாடிப் பலபல நாடொறும் செய்யினும்
ஓடி எங்கணும் ஓய்வின்றிப் பெருகுதே?

# குடிகாரா

எங்கே இருந்து வந்தாய் நீ ?
எங்கே போகப் போகின்றாய் ?
தங்கும் இடமொன் றில்லாமல்
தாவித் தாவிச் செல்கின்றாய்!

ஓடிச் செல்லும் வாழ்க்கையிலே
உன்னை மறந்து விட்டாய் நீ!
தேடித் தேடித் திரிகின்றாய்
தெருவில் எதையும் போட்டாயோ?

இன்பம் இன்பம் என்றுலகை
இரவு பகலாய் வலம்வந்து
துன்பக் கிணறு பலதோண்டித்
தோய்கின் றாயே ஓய்வின்றி?

எங்கே இருந்து வந்தாயோ
அங்கே செல்ல முடியாமல்
மங்கும் இன்பப் போதையிலே
மயங்கி மகிழுங் குடிகாரா?

# [ நாவலர் ]

சிவநெறி காக்கப் பிறந்தவராா்?
சேவைக ளாலே உயர்ந்தவராா்?
தவநெறி வாழ்வைத் தரித்தவராா்?
தனிவழி பற்றி உழைத்தவராா்?
பாதிரி மாரின் மதமாற்றப்
பாதையில் நின்று தடுத்தவராா்?
நீதியில் ஏறி நிலைத்தவராா்?
நீசரின் போக்கைக் குலைத்தவராா்?
சைவர்கள் எல்லாம் கிறீஸ்தவராய்
சதிசெய்பவரின் பிடியினிலே
உய்வகை காணா துழல்கையிலே
உறுதுணை யானவர் ஆரையா?
அவரே நாவலர் பெருமானாா்!
தவமே வடிவாய் உருவானாா்
ஆறு முகனாா் அவர்நாமம்
ஊறும் நாவில் தமிழ் ஆழம்!
ஊழை வென்ற உரமுடையான்
பாழும் வயிற்றுக் குழைத்திட்ட
பண்டித வரிசை தலைகுனிய
ஈழந் தந்த இளஞ்சிங்கம்
வாழ்க வாழ்க வாழ்ந்திடுக!

# பாரதிப் புலவன்

வெள்ளைக் காரன் வீட்டில் - அடிமை
வேலைக் காரனாகி
எள்ளி நகைக்க வாழ்ந்த - தமிழன்
இழிவைப் போக்க வந்தான்!

பள்ளன் நளவன் என்று - பிறர்
படைத்த சாதி எல்லாம்
கிள்ளி யெறியத் தமிழில் - புதுக்
கீதம் பாடி வந்தான்!

சேர்ந்து வாழ மாட்டாத் - தமிழன்
சிறுமைக் குணங்கள் நீக்கி
காந்த சக்தியாலே - ஒன்று
கட்டி வைக்க வந்தான்!

ஈன மான தொழிலில் - மனம்
ஈடுபட்ட தமிழன்
மான மாக வாழத் - தமிழ்
மறத்தை ஊட்ட வந்தான்!

பாரதிக்கு நிகராய்த் - தமிழைப்
பாய்ச்சிக் கரும மாற்ற
வீர மளித்த புலவன் - உலகில்
வேறு யாரு முண்டோ?

# பூமகள்

நீல வான நெடுவெளியை
நித்தம் பார்த்துக் கிடக்கின்ற
கோல மகளே, குளிர் நிழலைக்
கொடுக்குந் தருக்கள் ஈன்றளிக்கும்
அன்னாய், அழுகி மணமெடுக்கும்
அவற்றை உண்டுண்டமுதாக்கும்
பொன்நா வன்றோ உன்மேனி?
இன்னார் இனியார் எனப் பாரா(து)
ஈயும் உளத்தின் விரிவாகி
காயுங் கனியுங் களிநறவும்,
மேயும் விலங்கின் புல்லுணவும்
நீரும் நெல்லுங் கோதுமையும்
வேரில் விளையுங் கிழங்குகளும்
காரின் துணையைக் கொண்டுநிதம்
ஆரக் கொடுக்கும் அருந்துணைவீ,
வெய்யோன் உன்னைச் சுட்டாலும்,
பெய்யும் வெள்ளம் உனைப்புரட்டிப்
பீறி அடித்துச் சென்றாலும்
ஏறி மிதித்து நடந்தாலும்,
காறி உமிழ்ந்து துப்பியுனைக்
கயவர் அசுத்தஞ் செய்தாலும்
நாறும் பிணத்தைப் புதைத்தாலும்
சீறிப் பிணங்காச் சீமாட்டி
சின்னக் குணங்கள் சிறிதுமிலாச்
செல்வி, சேவைப் பெருமாட்டி

உன்னைஅடைந்த அழுக்கெல்லாம்
உணவாய்ப் பயிரை வழங்குதடி!
உணவுப் பயிர்கள் உன்மீது
உடலம் எடுத்துப் பசிப்பிணியின்
கொடுமைப் பிடியில் கிடந்துழலும்
உலகைக் காக்கும் என்றீசன்
உள்ளங் கண்டு மகிழ்ச்சியினால்
ஆடிக் களிக்கும் பெருமானாய்
மேனி குலுங்க உன்மதனன்
அரனும் மாறி அடியாரின்
றாடிக் களிக்க அதுகண்டுன்
குறையைத் தீர்க்க வெளிநின்றான்
உடலஞ் சிலிர்த்தங் குருகியதால்
பொறுமைக் குன்னை உவமித்த
கடலாய் அன்று மாறியதோ?
அம்மா உன்மீ துலவிவரும்
இம்மானிடர்கள் கருணைவழி
மேனிகுலுங்க மிதித்தாட
இயங்காதிருப்ப தேனோசொல்?
வானுங்களித்து மழைத்துளியாய்த்
தாளம்போடக் கவி தைக்கும்
புலவர் உள்ளம் வாழியவே!

# முகில்

ஆவி உருவிலுயர் ஆகாச வீதியிலே
காவித் திரிந்த கடனீரை விண்ணிருந்து
மண்ணுக் களிக்கும் மழைமுகிலே நின்வரவால்
தண்ணீரைப் பெற்றுத் தரையில் மறைந்தொழிந்த
புல்லுந் தலைநீட்டும்; பூமரங்கள் மெய்சிலிர்க்கும்
அல்லும் பகலும் அயரா துழைப்பவர்தம்
உள்ளம் மகிழும்; உலகூட்ட ஆறுகளும்
வெள்ளம் எடுத்து விரைவாய்ப் பறந்தோடும்;
வற்றி வறண்ட வாவிகளில் மேதிகளும்
நெற்றி தெரிய நிறைநீரில் நின்றாடும்;
தாகமெடுத்துத் தவித்த மரவேர்கள்
வேகி வெடித்த வெடிப்பெல்லாம் நீரோட
ஆகங் களித்தே அடிமண்ணை ஊடுருவிச்
சாகுமுயிர்க்குச் சலமூட்டி வாழ்விக்கும்
தாயே நினது தயவால் தழையெறிந்து
சாயும் மரங்கள் சடக்கென்று துள்ளியெழும்
காறி உமிழ்ந்த கசடெல்லாம் நீக்கிமலம்
நாறிக் கிடக்குந் நகரின் தெருக்கழுவிப்
பாரைப் புனிதப் பதியாக்கும் வானுலக
நீரை உதவும் நிறைமுகிலே நின் கருணைத்
தாரை இலையேல் தரையின் பெருமையெலாம்
ஒருகணத்தில் போமே ஒழிந்து!

# அருந்துணை!

கடவுள் உள்ளத் தெழுந்தவருள்
கல்லாய் மண்ணாய்க் காட்சிதரும்!
உடலம் எடுத்த உயிரினங்கள்
உழைக்கும் இடமாய்க் காட்சிதரும்!
நீலவான நெடு வெளியை
நித்தம் பார்த்துக் கிடக்கின்ற
கோல மகளே குளிர் நிழலைக்
கொடுக்குந் தருக்கள் ஈன்றளிக்கும்!
அன்னாய் அழுகி மணமெடுக்கும்
அவற்றை உண்டு அமுதாக்கும்!
பொன்னா வன்றோ உன்மேனி
இன்னார் இனியார் எனப்பாரா(து)
ஈயும் உளத்தின் விரிவாகி
வாயுங் கையும் இல்லாத
மேயும் விலங்கின் புல்லுணவும்
நீரும் நெல்லுங் கோதுமையும்
வேரில் விளையும் கிழங்குகளும்
காரின் துணையைக் கொண்டு நிதம்
கீரை அவரை சோளமெலாம்
ஆரக் கொடுக்கும் அருந்துணையே
வெய்யோன் உன்னைச் சுட்டாலும்
வெட்டிக் கொத்திக் கிழித்தாலும்
பெய்யும் வெள்ளம் உனைப் புரட்டிப்
பீறி யடித்துச் சென்றாலும்

ஏறி மிதித்து நடந்தாலும்
காறி உமிழ்ந்து துப்பி உனைக்
கயவர் அசுத்தஞ் செய்தாலும்
நாறும் பிணத்தைப் புதைத்தாலும்
சீறிப் பிணங்காச் சீமாட்டி
சின்னக் குணங்கள் சிறிதுமிலாச்
செல்வி சேவைப் பெருமாட்டி
உணவுப் பயிர்கள் உன்மீது
உடலம் எடுத்துப் பசிப்பிணியின்
கொடுமைப் பிடியில் கிழந்துழலும்
உலகைக் காக்கும் எனவீசன்
உன்னைப் படைத்த மகிழ்ச்சியினால்
மேனி குலுங்க உன்மீது
ஆடிக் களிக்க அது கண்டுன்
உடலஞ் சிலிர்த்துங் குருகியதால்
கடலாய் அன்று மாறியதோ?



ஓய்வுபெற்ற கழகப்புலவர். பெ. பொ. சிக்கு இந்துக்கல்லூரியில்
அளித்த பிரியாவிடை வைபவத்தின்போது. (1975)

# வீதி I

நீட்டி எங்கும் படுத்திருப்பேன்
நிதமும் என்னை அர்ப்பணித்துப்
பூட்டுந் திறப்பும் இல்லாமல்
பொதுவாய்க் கிடந்து பூரிப்பேன்!

நெஞ்சில் ஏறி மிதித்தாலும்
நீசக் காலால் உதைத்தாலும்
கொஞ்சங் கூடச் சலியாது
கூடி யிருப்பேன் சமாதியிலே!

காறி என்மேல் துப்பிடினும்
கஞ்சல் குப்பை கொட்டிடினும்
சீறி யவர்மேல் சினங்கொள்ளேன்
தினமும் அவர்க்காய் இரங்கிடுவேன்!

கறுப்பர் வெள்ளைக் காரருடன்
கள்ளர் கபடர் யாவருமே
செருப்பால் அடித்து நடப்பார்கள்
செத்தேன் சிவனே என்றிருப்பேன்!

காரும் என்மேல் ஓடிடுமே
கனத்த லொறியும் ஏறிடுமே
தாருங் காய்ச்சி ஊற்றிடுவார்
தயவுங் காட்டார் என்மேலே!

வானும் ஜீப்பும் வண்டிகளும்
வன்னும் காரும் சைக்கில்களும்
கூனும் குருடும் குழவிகளும்
கோடி கோடி யாய் வருமே!

பானுங் கொண்டு செல்வார்கள்
படையுங் கொண்டு செல்வார்கள்
மீனுங் கொண்டு செல்வார்கள்
மிசினுங் கொண்டு செல்வார்கள்!

ஊரில் உள்ளார் யாவருமே
ஓடித் திரிவார் என்மேலே
ஆரும் அறியா ரகசியங்கள்
அனைத்துங் கண்டு படுத்திருப்பேன்!

நாயும் என்மேல் குலைத்துவரும்
நகரச் சுவரின் ஒட்டிகளை
மேயும் மாடும் கன்றுகளும்
மெதுவாய்ச் சாணம் போட்டுவரும்

# வீதி II

பகலும் இரவும் ஓயாமல்
பண்டஞ் சுமக்கும் வண்டிகளும்
நகரத்துள்ளார் மலஞ்சுமக்கும்
நடை வண்டிகளும் ஊர்ந்து வரும்!

படங்கள் பார்த்து வருபவரும்
பாய்ந்து வருவார் வஸ்ஸுக்காய்!
குடங்கள் தூக்கி வருவாரும்
குமிந்து நிற்பார் பைப்படியில்

மோட்டார் சைக்கிள் வண்டிகளும்
முறைத்துப் போடும் இரைச்சல்களும்!
நாட்டார் கொள்ளி வண்டிகளும்
நகரைப் பார்க்கும் காலையிலே!

பேப்பர் பையன் காலையிலே
பிடிப்பான் ஓட்டம் சைக்கிளிலே
ஆப்பம் ஆப்பம் என்றலையும்
அசிங்கமெல்லாம் ஓடிவரும்!

கூப்பன் கடையைப் பார்ப்பாரும்
கொண்டு திரிந்து விற்பாரும்
சூப்பிச் சூப்பி ஐஸ்பழத்தை
சுற்றித் திரியும் சுள்ளிகளும்

ஊட்டி ஊட்டி வளர்த்தாலும்
"ஓசி"க் கோப்பி அடிப்பதற்குப்
போட்டியிட்டே இலையான்கள்
பொசுங்கும் கடைக்குள் நுழைவாருரே!

வெய்யோன் சற்றும் தயவின்றி
வெந்து வெடிப்பான் என்மேலே!
ஐயோ என்னைக் காப்பதற்காய்
அருகில் வைத்தார் மரங்களையே!

அடியும் வேரும் இல்லாமல்
அவற்றைத் தறித்து விட்டார்கள்!
மடையர் செய்த தவறுகளால்
மழையுந் தவறிப் போச்சுதடா!

காளி கோயில் தேருக்கு
கையில் தேங்காய் கொண்டு செலும்
ஈர வேட்டிக் காரரும் என்
இதயத் தேறிச் சென்றிடுவார்!

# எண்வரிசை

ஒற்றைக் காலில் நிற்குமிந்தப்
பறவை எது தோழி!
ஓடிவரும் மீனைக் கொத்தும்
வெள்ளைக் கொக்குத் தோழி

இரண்டு சில்லில் ஏறி ஓடும்
வண்டி எது தோழி
எங்கள் அண்ணன் ஓடிவரும்
சைக்கிள் வண்டி தோழி

மூன்று கண்கள் கொண்ட அந்தக்
காயு மெது தோழி
பாங்குடனே கறி சமைக்கும்
தேங்கா யடி தோழி

நாலு முலை இரண்டு கொம்பு
கொண்ட தெது தோழி
நல்ல வெள்ளைப் பால் கறக்கும்
பசு வதுதான் தோழி

கொடுமை தரும் பாதகங்கள்
ஐந்தும் எவை தோழி
கொலை களவு கள்ளுக் காமம்
சூது மடி தோழி

கால்கள் ஆறு உடையதெது
 கண்டு சொல்வாய் தோழி
பூவில் தேனை உண்டு வரும்
 வண்டதுவே தோழி

ஏழு நாளில் பள்ளிவைக்கும்
 நாள்கள் எவை தோழி
திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
 வெள்ளி யடி தோழி

நாலும் நாலும் எத்தனை நீ
 நாடி உரை தோழி
நானும் எண்ணி எட்டெனவே
 சொல்லிடுவேன் தோழி

பத்திலொரு பழ மெடுத்தால்
 எத்தனை சொல் தோழி
ஒன்ப தென்று சொன்னாள் அதை
 நம்புவையோ தோழி

பத்து மணி என்றவுடன்
 பால்குடிப்போம் தோழி
பசி எடுத்தால் பத்தும் ஓடிப்
 பறந்திடுமே தோழி

(அமரன் - ஆனந்தன் இசை நடனத் தாரகைக்கு 10 - 01 - 55 இல் எழுதியது.)

# கவி அரங்கு

நெட்டை மரத்தை நிலத்தில் விழுத்தி அதன்
கட்டை பறிச்சான் கவிபாட வந்து விட்டான்!
காய்ச்சல் தரையெல்லாம் மேய்ச்சல் நிலமாக்கும்
(இனிப் பொறுக்க மாட்டான்)

ஈச்சந் தீவானும் எழும்பி விட்டான் கவிபாட!
(இதைப் பார்த்துச் சும்மா)

கிடப்பானா இல்லை கிழம்பிவிட்டான் கவிபாட!
புட்டு அவிச்சிருக்கு பொடியனும் காத்திருப்பான்!
முட்டைப் பொரியல்மணம் மூக்கை அரித்திடுது!
வெட்ட வெளி அரங்கில் சோழகமும் வீசுறது!
சட்டையையும் மீறிச் சாடுறது குளிர் காற்று!
என்று சிலர் உள்ளம் ஈடாடும் வேளையிலே
நின்று கவி கேளுங்கள் என்று நான் சொல்லவில்லை!
ஒன்று நான் சொல்லுவேன் ஊரவரே தமிழ் நாட்டில்
கவியரங்கை காத்திருப்பர் காசுங் கொடுத்திடுவார்!
தவியாய்த் தவிப்பர் தலைகள் பல ஆயிரமாய்க்
குவியும் கவியரங்கம் அவையின்பேர் ஆர்வத்தால்
கவியும் குதித்துவரும் கவிஞர்களும் சோபிப்பர்!
சும்மா வருமிந்த சுகத்தையும் விட்டு விட்டு
அம்மாதான் போனாலும் அகலேன் இதைவிட்டு!
கேட்டுமுடித்தே கிழம்பிடுவேன் வீட்டுக்கு
பாட்டின் அழகில் பழகும் இளங்காளைகளின்
உளட்டத்தால் வளர்ந்து புத்துலகை உருவாக்கும்!

# பொங்கல் விழா

உலகுக் கொருநாள்; உயர்வுடைய நன்னாள்!
குல மாதர் உள்ளம் குதுகலிக்கும் பொன்னாள்!
உழைப்பின் உயர்வை உணர்ந்துலகம் தையில்
திளைக்குந் திருநாள்; திருமகளுந் தூய
கலைமகளும் மென்மைக் கமலத்தை விட்டுத்
தலைவாழை மேலே தையலரின் கையால்
அள்ளி வழங்கும் அமுதில் கலந்திருந்து
துள்ளி விளையாடுந் துடியாட்டப் பிஞ்சுகளின்
சின்னஞ் சிறுவிரல்கள் சேர்த்துப் பிசைந்து களி
கொள்ள விருந்தில் குலவிக் குலவிமகிழ்
கொள்ள நிலமாதின் மேனி புளகமுற
தைநாளில் கொண்டாடும் வையகத்துப் பொங்கல்
எங்கும் பொலிகிறது; எட்டுத் திசைகளிலும்
பொங்கிப் புதுமகிழ்வு கொள்ளும் இந்நாளை
திருக்கோண மாமலையாம் தெய்வத் திருநகரில்
கருத்தோடு நல்லி ளைஞர் கழகம் இன்றளிக்கு
மிந்தப் புனிதப் பொங்கல் விழாவிலொரு
செந்தமிழ் கவியரங்கு தந்த இளைஞர்களை
வாழ்த்தி வணங்குகின்றேன்; வண்டமிழின் பண்புணர்ந்த
ஈழத்து நற்கவிஞர் இங்குவந்து உங்களுடன்
வாழுங் கவிதைகளை வாரி வழங்குதற்கு
ஓடி வந்துள்ளார்கள்; உள்ளம் சிலிர்க்கிறது!
வாழ்க கவிஞர்களே வந்திருக்கும் நல்லோர்காள்
கேட்டுப் பயன் பெறுக; கிழக்கின் கவிச்செல்வம்
கங்கு கரையின்றி கரைபுரண்டு ஓடுவதைக்
கண்டு களித்திடுக கற்றோர்கள் மெச்சி உள்ளம்
துள்ளக் கவிபாடக் கேட்டிடுவீர் எங்கள்
ஈழத்தின் கவிமேகம் என்னிதயப் பூங்காவில்
வாழும் கவிமேகம் வந்து விட்டார் பாருங்கள்!

# கம்பன் விழா

மூவறங் காத்து நின்ற
முறைமையைச் சொல்ல வந்த
பாவலர்க் கிருகை கூப்பிப்
பணிவுடன் வணக்கஞ் சொல்லி
சேவைகள் செய்யும் இந்தச்
சிறுவரைப் போற்றிக் கம்பன்
காவியப் பெருமை கூறும்
கழகத்தை வாழ்த்து கின்றேன்.

கற்றவர் துணையைக் கொண்டு
கம்பனின் புலமை தன்னை
மற்றவர் அறியச் செய்யும்
மாபெரும் பணியைக் கண்டு
பெற்றவர் வாழ்த்துகின்றார்
பெரியவர் வாழ்த்துகின்றார்
நற்றவப் பேறு வந்து
நம் மொழிக் குதித்த தென்றே?

சொல்லது சொல்வ தாகச்
சொந்தமாய்க கவிதை யாக்கிச்
சொல்லறங் காத்து நின்ற
முறைமையைச் சொல்க என்று
வல்லடி வழக்கில் நின்றார்
வந்தவன் என்ன செய்வேன்
நல்லது என்று சொல்லி
நழுவிடப் பார்த்தேன் ஆனால்...?

கும்பனாய்க் கிடந்த வென்னைக்
கூரிய கம்பி போட்டுத்
தம்பலங் கொண்டு தூக்கித்
தரையினில் நிமிர்த்தி வைத்து
வம்பினுக் கிழுத்து வந்து
வண்டமிழ்ப் புலவர் கூடும்
கம்பனின் விழாவில் ஏற்றிக்
கவியரங் காட விட்டார்!

# பாரதி விழா

அரங்கினிலே ஏறிநின்று ஆடச் சொன்னால்
அதுமுடியா தென்றவரை மறுத்திருப்பேன்!
கரங்குவித்து அவர்காலில் விழுந்திருப்பேன்
காளையர்கள் அதைப்பார்த்து நகைத்திருப்பர்!
நரம்புடனே எலும்பணிந்த நாட்டுமக்கள்
பறங்கியரை ஆட்டிவைத்த பாரதிக்கு
இறங்கென்று சொன்னாலும் இறங்கமாட்டேன்
இங்கிருக்கும் தியாகியவர் இல்லாவிட்டால்!
அரங்கமைத்து கவிபாட அழைப்பாராகில்
அதைமறுக்கேன் தியாகியவர் அருகில் உண்டே..!

பாரதிக்கு விழாவெடுக்கப் போறேன் என்றார்
பாவரங்கும் அதிலமைக்கப் போறேன் என்றார்!
நீரதற்கு தலைமைதாங்க வேண்டு மென்றார்
நில்லும் இதைக் கேட்டதற்கு நன்றி ஆனால்
ஊரெடுத்த கவியரங்கில் எலாம் தலைமை
ஒண்புலவ னாய்ப்பலகால் இருந்து விட்டேன்!
பாரதிக்கு விழாவெடுக்கும் அரங்கிலேனும்
பாடவைத்துப் பார்த்திடுங்கள் என்று சொன்னேன்
நீரெடுக்குங் கவியரங்கி லேனும் இந்த
நிலைமாறச் செய்தருள வேண்டு மென்றேன்!

அவருக்கோ விருப்பமில்லை எனினும் என்றன்
அன்பான வார்த்தையிலே அடங்கி விட்டார்
எவருக்கும் அடங்காத தியாகி இவரின்
இதயத்தின் இசைவாலே தலைமை யென்றும்
சுவரொட்டி இல்லாமல் உங்களோடு
சூழ்ந்திருந்து கவிபாடிச் சுவைக்கின்றேன் நான்
கவரொட்டி பாரதியின் கையில் சேர்ப்பேன்
நவயுகத்தை பாட்டினிலே தோற்றுவித்த
நாமறிந்த புலவனைநான் பாடச் செய்தான்
நாடறிந்த புலவனுக் என்மாலை பாவே!

உடையற்ற மனிதர்க்கும் கவிதை செய்தான்
உணவுக்குந் தொழிலுக்கும் கவிதை செய்தான்
கடையர்க்கும் பொடியற்குங் கவிதை செய்தான்
கஞ்சர்க்கும் வஞ்சர்க்குங் கவிதை செய்தான்
அடியார்க்கும் கொடியார்க்கும் கவிதை செய்தான்
ஆணுக்கும் பெண்ணுக்கும் கவிதை செய்தான்
கொடி கட்டி முடிகட்டிக் கோலஞ் செய்த
கோபுரம்போல் பாரதியும் உயர்ந்து நின்றான்!

சாதிக்கும் நீதிக்கும் கவிதை செய்தான்
சத்தியத்தை நிலைநாட்டக் கவிதை செய்தான்
ஓதற்கும் உணர்தற்குங் கவிதை செய்தான்
ஊருக்கும் பாருக்குங் கவிதை செய்தான்
காதற்ற நெஞ்சர்க்கும் கவிதை செய்தான்
காளிக்குங் கண்ணற்குங் கவிதை செய்தான்
பாதித்த பொருளெல்லாம் கவிதை பெற்றுப்
பாரதியை அழியாமல் காக்கு தம்மா!

# குங்குமம் - பாமேடை

ஆழிக் கடல்முத்தை அள்ளிச் சொரிகின்ற
ஈழத் திருநாட்டின் இன்பத் திருப்பதியில்
வாழும் பெருமை எமக்குண்டு ஆனாலும்
ஊழைப் புறங்காட்டி ஓடச் செயுமுழைப்பை
நாடும் இளைஞர்களின் நடமாட்டம் இல்லையெனில்
வீடு சிறக்காதே வேதனைகள் தீராதே?
ஆதலினால்
என்னருமைக் காளைகளே இன்றே எழுந்திருங்கள்
பொன்னைப் பெருக்கும் புதுமைத் துறைகளிலே
நாடி உழைத்தால் நலம் பெருகி நாம் வாழ்வோம்
ஓடி உழையுங்கள் ஓயாதுழையுங்கள்!
என்றே இளைஞர்களை இப்பதியில் வாழ்கின்ற
நன்றே புரியும் நலமுடையார் சார்பினிலே
வேண்டுகின்றேன் வாழ்க இளைஞர் வளரீழ
நாட்டினிலே என்று நலமாரப் போற்றியே
பாட்டிசைக்கும் இவ்வரங்கில் பாராட்டி வாழ்த்துகின்றேன்!
ஆசையுடன் எங்கள் அருமைத் திருக்கோணை
வாசகர்கள் வட்டம் வளர்க்குந் தமிழேடு
ஈழத் தமிழர் இதழில் பவனிவரும்
குங்குமமே எங்கள் கோணைத் திருப்பதியின்
மஞ்சரியாய் இன்று மலர்ந்த மணிமலரே
அஞ்சலித்தேன் உன்றன் அழகில் களி கூர்ந்தேன்
நின்னைப் படைத்த நிறைசெல்வன் நெஞ்சத்தைக்
கன்னித் தமிழால் களிகூர வாழ்த்துகின்றேன்
அயரா துழைக்கும் நல் அமரசிங்கத்தின்
பெயரால் உனைக்காணும் பேறுதனைப் பெற்றோம்!
அமரன் பணி வெல்க; அணிசேர் மலர் வெல்க.
குமரன் அடிபோற்றிக் கும்பிட்டு வாழ்த்துகின்றேன்.

அன்புப் பெருமக்காள், அணிசேர் கவிபாடும்
இன்பப் புலவர்காள் இந்தக் கவியரங்கை
நன்றே நடாத்தும் படி கேட்ட நல்லவர்காள்
யாவர்க்கும் என்வணக்கம் கூறி கவியரங்கின்
பாவலரைப் போற்றிப் பணிந்து அவர் தம்மை
வந்து கவி பாட வரிசையாய் அழைக்கின்றேன்
சிந்தை களிகூரச் செந்தமிழை நாம் பருகி
இன்பம் பெறுவோம் இனி!
"கவியரங்கிற் பங்குபற்ற இருந்த கவிஞர்
அவையினிலே காணவில்லை அவர்கள் தமக்கு
எதிர்பாரா விதமாக ஏற்பட்ட தடைகளினால்
இதில் கலக்க முடியவில்லை. அதற்காய் உங்கள்
மலர் முகத்தைப் பார்த்து நான் மன்னிப்புக் கோருகின்றேன்"

இப்பொழுது:

தாமரைத் தீவான் இந்தத்
தமிழ்க்கவி அரங்கிற்கென்று
பாமலர் அனுப்பி உள்ளார்
ஆசிரியர் தவராஜா
அன்புடன் அதைப் பாட
ஆசையுடன் வந்துள்ளார்
அவர் பாடும் கவி கேட்போம்.

ஆசையை யூட்டி மக்கள்
அகத்தினில் மறைந்திருக்கும்
வாசனை தன்னைக் கிண்டி
வையத்தை மகிழ வைக்கும்
பாஷையில் கவிதை கண்ட
பாவலர் தமிழுஞ் கான
ஓசையில் உணர்ச்சி யேற்றி
உயர் கவிதந்தான் வாழ்க!

ஈழக் கவிதை வானில் ஒளிரும்
இளந் தமிழ்ப் பிள்ளை மூதூர் தன்னில்
நடந்த கவிதை அரங்கில் மக்கள்
உள்ளங் கவர்ந்த செல்வி றெஜினா
வில்லியம் என்னும் வீரப் பெண்மணி
சொல்லின் செல்வி சொற்சுவை நிறைந்த
சங்க நாதம் கேட்போம் இன்று
அன்புச் செல்வியின் அழகுக் கவிதை
இன்பம் பெருகி விளங்குக நன்றே!

செந்தமிழ்ச் செல்வி றெஜினா வில்லியம்
நந்தமிழ் மக்கள் நடையைப் பார்த்து
நொந்து தமிழர் வாழ்வில் உணர்வு
வந்து பொழிய வளமார் கவிதை
தந்து எங்கள் தளர்வைப் போக்கி
வைத்தமைக் காக அவர் தமக்கு எங்கள்
நன்றியைக் கூறி நான் வாழ்த்துகின்றேன்!

ஒரு கவிஞ ரோடே இந்த
உயர் கவி அரங்கம் நடத்தி
ஒருவாறு முடித்து விட்டேன்
உள்ளதை வைத்துச் சமைக்கும்
திருநிறை மனைவி போலச்
செய்ததை நினைத்தால் சிரிப்பு
பெருகுது எனினும் உங்கள்
பொறுமையை மெச்சுகின்றேன்!

**வாழ்க கவிஞர்கள்!**
**வளர்க தமிழ் இனிமை!!**

**(1971-10-16இல் திருக்கோணமலை வாசகர் வட்டம் நடாத்திய "குங்குமம்" திருக்கோணமலை மாநில மஞ்சரி வெளியீட்டு விழாக் கவியரங்கில் தலைமை தாங்கிப் பாடியது.)**

பாராட்டு

எனது அருமைச் சிறுவர்களே!

யாழ்தான் தமிழ் நாட்டு வீணை. அது தமிழ் நாட்டில் வாழ்ந்த சிறுவர்கள் வீட்டில் வைத்து வாசித்தது. இன்று நீங்கள் காணும் வீணையல்ல; இனிய யாழ்தான் அவர்கள் வாசித்தார்கள்.

இலங்கை வேந்தன் இராவணன் பெருமையுடன் தன் கொடியில் கொண்டிருந்ததும் யாழே; யாழின் இசைக்குப் பரிசிலாகக் கிடைத்த நகரமா? யாழ்ப்பாணம். மட்டு மாநகர்ப் புலவர் சுவாமி விபுலானந்தர் இயற்றியது 'யாழ்நூல்' என்று யான் சொல்லவும் வேண்டுமோ?

இன்று நீங்கள் படித்து வரும் அருமையான 'யாழ்' ஒரு உங்கள் கையில் புத்தக வடிவில் [illegible] பருவத்தில் ஆசிரியர் போதனை அவர்களோடு [illegible] [illegible] நீங்கள் விரும்பவில்லை என்று நான் சொன்னேன் என் வார்த்தையை அப்போதிருந்து [illegible] [illegible] எனக்குக் கிடைக்கும். யாழ் விரும் பத்தகங்கள் யாரும் உண்டா?

மோகன் இயற்றிய யாழ் மிக அற்புதமானது. அதை [illegible] .... ஆ! .... இன்னிசைப் பாட்டுகள், கவிச் சித்திரங்கள், அழகான கட்டுரைகள், விடுகதைகள் எல்லாம் கேட்டேன்.

யாழ் [illegible] அப்பொழுது நான் [illegible] வாழ்த்துகள் [illegible] நீங்கள் [illegible] கொண்டாடுங்கள்.

நன்றி.

திருக்கோணமலை. [illegible]

[illegible]

(த. அமரசங்கம் "யாழின் ஆரம்பகாலத்தில் தனக்கு வைத்துக்கொண்ட புனைப் பெயரே 'மோகன்' ")

# மஹா கும்பாபிஷேகம் கண்டார் வாழி

ஆயிரத்துத் தொளாயிரத்தோ டெண்பத் தொன்றாம்
ஆண்டு முதன் மாதமிரு பத்தைந்தாம்நாள்
ஞாயிறுவார முத்தரமாம் நட்சத் திரத்தில்
நலஞ்சேரும் உதயாதி நாளிகையில்
தூயமீன லக்கினசுப வேளை தன்னில்
தொல்கோணை யீசருமை வைகுங்கோயில்
நேயமுடன் புனருத்தா ரணஞ்செய் தின்று
நிகழ் மஹாகும் பாபிஷேகம் கண்டார்வாழி

# பொங்கல்

பழைய பாவக் கறையெல்லாம்
பாரில் நின்றும் நீங்கிடவே
புதிய வாழ்வும் தையினிலே
பொங்கப் புனிதன் அருளுகவே.

" தனசக்தி "
10.01.55

('யாழ்' பொங்கல் மலர், 1955)



காளிகோவிலில், பிரமுகர்களை கௌரவித்த பொழுது. கழகப்புலவர். பெ. பொ. சி., தொண்டர், பண்டிதர் வடிவேல், சின்னத்தம்பி, முகாந்திரம் முத்துக்குமாரு, சிவலோகநாதன், செல்வி. சுவாமிநாதன், DRO. நவரத்தினராஜா, டாக்ரர். சிவானந்தம் ஆகியோர், சட்டத்தரணி. செல்வராஜா, இரா. சம்பந்தன்.

# சைவசமய நூலகப் பணி

புலவர் பெ.பொ. சிவசேகரனார் *(திருக்கோணமலை, இலங்கை.)*

தமிழ்மொழி நூல் வளம் உடைய மொழியாகும். தமிழ் மொழியிலே சங்க இலக்கியங்கள்,திருக்குறள் முதலிய நீதி நூல்கள், இராமாயணம் பாரதம் ஆகிய இதிகாசங்கள், சிலப் பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி ஆகிய காப்பியங்கள், தேவார திருவாசகம் முதலிய திருமுறைப் பாடல்கள், ஆழ்வார்கள் அருளிய திருவாய்மொழிகள், திருப்புகழ், கந்தரலங்காரம், முதலிய முருகன் அடியார் பாடல்கள், தாயுமானவரின் தத்துவப் பாடல்கள், கிறிஸ்தவ, இஸ்லாமிய காவியங்கள், பிரபந்தங்கள், சிறுகதைகள், பெருநாவல்கள், சிந்தனைக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், மேனாட்டு விஞ்ஞானக் கலையை விளக்கும் நூல்கள், வரலாற்று நூல் கள், பிரயாண நூல்கள், வாகட நூல்கள், சோதிடநூல்கள், இன்னும் பற்பல துறையில் எழுதப்பட்ட நூல்களின் வளம் தமிழ்மொழியை அணிசெய்து விளக்குகின்றது.

இந்நூல்கள் எல்லாவற்றையும் எல்லோரும் படிப்பது எளிதன்று. படிப்பவரின் ஆழ்ந்த நுண்புலமையை வேண்டி நிற்கும் நூல்களைப் படிப்பவர் ஒரு சிலரே. பெரும்பாலோர் பொழுது போக்குவதற்கும் உள்ள மகிழ்விற்குமாகவே நூல் களைப் படிக்கின்றனர். சிறுகதைகள், பெருநாவல்கள் இத் தகையோர் உள்ளங்களைக் கவர்ந்திழுக்கும் நூல்களாகும்.

பழந்தமிழ் இலக்கிய நூல்கள் செய்யுள் வடிவிலும் சூத்திர வடிவிலும் இருப்பதால் இந்நூல்களை எல்லாருங் கற்பதில்லை. அறிவும் ஆராய்ச்சியும் உடையாரே இந்நூல் களை ஆழ்ந்து கற்கின்றார்கள். மற்றவர்கள் இந்நூல்களின் விமர்சனங்களையும், விளக்கங்களையும் படித்து மகிழ் கிறார்கள்.

விஞ்ஞானக் கல்வி பெருகிவரும் இந்நாளில் விஞ் ஞானத்தைப் பாடநூல்கள் வாயிலாகவே படித்துப் பட்டமும் பெறுகின்றனர். விஞ்ஞானத்துறையில் எழுதப்பட்ட சில பொது நூல்களைச் சாதாரண மக்களும் படித்துப் பயனுறு கின்றனர்.

பரந்து கிடக்கும் நூலுலகில் எத்தனையோ நூல்கள் படிக்கப்படாமல் காகிதமட்டைக்குள் சிறைவாசஞ் செய்கின் றன.

இன்றுள்ள தமிழ் மக்களிற் பெரும்பாலோர் பத்திரிகைகளைப் படிப்பதோடு மட்டுமே நின்றுவிடுகிறார் கள். பலர் வார, மாத, சஞ்சிகைகளையும் படித்து மகிழ் கிறார்கள். நூல்களைப் படிப்பவர் இன்று அருகியே காணப்படுகின்றனர்.

தமிழ்நூல்களில் சிறப்பாக உள்ள சமய நூல்களைப் படிப்போர் தொகை குறைந்து கொண்டே வருகின்றது. சமய நூல்களிற் பல ஏட்டோடும், புத்தகங்களோடும் மட்டுமே கிடக்கின்றன. செய்யுள் வடிவிலுள்ள சமயநூல்களைச் சாதாரண மக்கள் தொட்டுமே பார்ப்பதில்லை. விளக்கடியில் வைத்து வணங்குவார்கள். ஆனால் படிக்க மாட்டார்கள். இதை உணர்ந்தே பல சமய நூல்கள் இன்று வசனவடிவில் ஆக்கப்பட்டு வருகின்றன, சைவசமய சாத்திர நூல்களைப் படித்துக் கிரகிப்பார் சிலரே. தோத்திர நூல்களிற்கூட ஒரு சில பாட்டுக்கள் மட்டுமே மக்களால் படிக்கப்பட்டு வரு கின்றன. பெரும்பாலான பாடல்கள் படிக்கப்படாமல் ஏட்டிலேயே கிடந்து தூங்குகின்றன.

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் படிப்போர் அருகிவருவதைப் போலவே சமய நூல்களைப் படிப் பாரும் அருகி வருகின்றனர். சிறுகதை, பெருநாவல்கள் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து வரும் இந்நாளில் சமய நூல்களைக் கற்கும் ஆர்வம் குறைந்து கொண்டே வரு கின்றது. சமய நூல்களைப் படிப்பதின் அவசியத்தைப்

பாடசாலை நிர்வாகிகளோ, பெற்றாரோ, ஆசிரியர்களோ, சமுதாய அறிஞர்களோ, உணர்ந்து செயல்படுபவர்களாகக் காணப்படவில்லை. சமயநூற்கல்வி பாடசாலைகளில் இடம் பெற்றிருந்தபோதும் அதில் அக்கறை கொள்வார் அருகியே காணப்படுகின்றனர். இக்கால வாழ்க்கையின் போக்கும் சமுதாய நோக்கும் வளர்ந்து வரும் இளைஞர் உள்ளங்களைச் சமயநூலறிவு பெறாத வழியில் திசைதிருப்பிவிடுகின்றன. இதனால் இன்றுள்ள தமிழர் சமுதாயத்தின் சமய உணர்வு குன்றியே வருகின்றது, சிறப்பாகத் தமிழ் மக்களிடத்தில் சைவசமய உணர்வு அருகி வருவதைக் காணலாம்.

இந்த நிலையில் மக்களுக்குச் சைவசமய உணர்வை ஊட்டிவரும் சமுதாய அமைப்புகளில் ஆலயங்கள், ஆதீனங்கள், ஆச்சிரமங்கள், சைவசமயச் சங்கங்கள், அருள்நெறி மன்றங்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன.

ஆலயங்கள் வழிபாட்டு இடங்களாகும். ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள், பூசைகள், திருவிழாக்கள் மூலம் சமய உணர்வும், இறையுணர்வும் மக்களிடையே பரவி வருகின்றன. இறைவழிபாட்டையும் சமய உணர்வையும் தடைசெய்யும் நிகழ்ச்சிகள் ஆலயத்தில் இடம்பெறாது பார்த்துக்கொள்ளல் வேண்டும். ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் இன்று வெறுங் களியாட்ட விழாக்களாக மாறி வருவதினால் சமய உணர்வும் இறையுணர்வும் பெறமுடியாத ஓர் சூழ்நிலை ஆலயங்களின் புனிதத்தன்மையைக் கெடுத்து வருகின்றது. சமுதாய அமைப்பில் ஆலயங்கள் எதற்காக அமைந்திருக்கின்றன என்னும் நோக்கத்தை அறியாதவர்கள் ஆலய நிர்வாகத்தில் ஆதிக்கஞ் செலுத்துவதினால் சமுதாயத்திற்குப் பெருந்தீங்கு விளைந்து வருகின்றது. ஆலயங்கள் சைவசமய உணர்வை ஊட்டும் நிலையங்களாகவும், இறையுணர்வை ஊட்டும் நிலையங்களாகவும் விளங்க ஆலய நடைமுறையின் நோக்கும் போக்கும் திருத்தி அமைக்கப்படாவிடின் ஆலயங்கள் வெறுங் களியாட்ட

நிலையங்களாக மாறிவிடும் அபாயமும் உண்டு. ஆலயங் கள் காம உணர்ச்சிகளை வளர்க்கும் நிலையங்களாக மாறிவிடக் கூடாது.

சைவசமய ஆதீனங்களும், மடங்களும், ஆச்சிரமங் களும், சைவசமய உணர்வையும், சைவசமய நூலறிவை யும் வளர்க்கும் நிலையங்களாகப் பணிபுரிந்து வருவதாற் றான் ஓரளவு சமுதாயம் காக்கப்பட்டு வருகின்றது. தமிழ் நாட்டிலுள்ள ஆதீனங்களின் இவ்வரிய பணி இல்லையேல் இன்றுள்ள சமய நூலறிவும் வருங்காலத்தில் இல்லாமல் போய்விடும் சைவசமய நூலறிவு சமுதாயத்தில் பரவுவதற்கு நிலைக்களங்களாய் இருப்பவை ஆதீனங்களே. ஆலயங் கள் நெறி தவறிப் போகாமல் நடப்பதற்கும் ஆதீனங்களே காரணமாய் விளங்குகின்றன.

சைவசமய மன்றங்களும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அருள்நெறி இயக்கங்களும் இன்றுள்ள சமுதா யப் போக்கை அறிந்து பணிசெய்து வருவதால் சமய உணர்வு மட்டுமல்ல சமுதாயத்தில் சைவசமய வாழ்வு மலர்ந்து வருவதையுங் காணலாம். தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் திருத்தொண்டில் சைவசமயத்தில் மறுமலர்ச்சி தோன்றி வருவதையுங் காணலாம். தவத்திரு அடிகளாரின் வருகையால் இலங்கையிலும் சைவசமய எழுச்சி ஏற்பட்டி ருப்பதை எல்லோரும் அறிவர்.

மன்றங்களின் பணிகளோடு சைவசமய நூல்கள் மக்கள் வாழ்வில் இடம்பெறச் செய்தலும் சமுதாயப் பணிகளுள் ஒன்றாகும்.

சைவசமய நூல்கள் அச்சேறி இருக்கலாம். அவை களை மக்கள் விரும்பி வாங்கிப் படிக்கக்கூடிய சூழ்நிலை யையும் உருவாக்க வேண்டும். சைவசமய நூல்கள் மக்க ளால் பயன்படுத்தப்படுகின்றனவா என்று பார்த்தலும் அவசி யம். மக்கள் சைவசமய நூல்களைப் படித்துப் பயன்

பெறச் செய்வதில் சைவசமய ஸ்தாபனங்கள் ஒன்று கூடி ஒத்துழைத்தல் வேண்டும். சைவசமய மக்களின் உள்ளத்தில் சைவசமயக் கருத்துக்கள் ஆட்சி புரிய வேண்டும்.

இம்மகத்தான பணி நூலகங்களாலும் வாசிகசாலைகளாலுமே நிறைவுபெறும். மேடைப் பேச்சுக்கள் ஓரளவு இப்பணியைச் செய்யலாம். எனினும் நூலகங்கள் வாசிகசாலைகளின் பணியே மக்கள் சமுதாயம் சைவசமய நூலறிவு பெறுவதற்குத் தகுந்த சாதனமாகும். சைவசமய நூல்களைக் கொண்ட நூலகங்களும் வாசிகசாலைகளும் ஊர்கள் தோறும் அமைக்கப்படல் வேண்டும். அந் நூலகங்களில் இளைஞர்கள் சைவசமய நூலறிவைப் பெறத்தக்க நூல்களும், பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் இடம்பெறல் வேண்டும். இந் நூலகம் செய்யும் பணிகளுக்குக் குந்தகஞ் செய்யும் வேறு நூல்களோ பத்திரிகைகளோ 'சைவசமய நூலகங்களில் இடம் பெறுதல் கூடாது. இந்நூலகப் பணி ஒழுங்காக நடைபெற ஆதீனங்கள், ஆச்சிரமங்கள், மன்றங்கள் யாவும் ஒன்று சேர்ந்து தங்கள் ஒத்துழைப்பை நல்கவேண்டும். இந்நூலகங்கள் சைவசமய நூலறிவைப் பெறும் எழுச்சி நிலையங்களாக இயங்க வேண்டும். சைவசமய நூற் கண்காட்சி ஒன்றை ஆண்டு தோறும் நடத்துவது நூலகங்களின் சிறப்பான பணிகளில் ஒன்றாகும்.

பொது நூலகங்கள் நாட்டில் இருப்பினும் அதில் சைவசமய நூல்கள் இடம் பெற்றிருப்பினும் சைவசமய நூலறிவைப் பெறுவதற்கென தனித்தியங்கும் சைவசமய நூலகங்கள் சைவசமய நூலறிவு சமுதாயத்தில் ஊன்றி வளர்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதும் காலத்தின் தேவையாகும்.

**சைவசமய நூலகப் பணி ஓங்குக!**



# கோணமாமலையும் கோணேசர் கோயிலும்



தென்னிந்தியர்கள் மேற்குத்திசை நாடுகளோடும் தென்கிழக்காசிய நாடுகளோடும் நடத்திவந்த வர்த்தகம் இன்று நேற்று நடந்துவந்ததல்ல, மிகப் புராதன காலத்தி லிருந்தே நடந்து வந்திருக்கிறது.

"முத்து, பொன், தந்தம், அரிசி, மிளகு முதலியவைகளும் மயில்களும் குரங்குகளும் கூட பபிலோன், எகிப்து, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கும், பிறகு றோமாபுரிக்கும் அனுப்பப்பட்டன. இவைகளுக்கு முன்பே மலையாளக் கரையிலிருந்து தேக்கு மரம் சால்டியாவுக்கும்,பபிலோனுக்கும் அனுப்பப்பட்டு வந்தது. திராவிடர்களால் ஓட்டப்பட்ட இந்தியக் கப்பல்களிலே இப்பொருட்கள் அனைத்தும் அல்லது பெரும்பாலும் கொண்டு போகப்பட்டன. புராதன உலகத்தில் தென்னிந்தியா எத்த கைய உன்னதஸ்தானம் வகித்து வந்ததென்று இதனால் தெரிந்து கொள்ளலாம்."

"வட இந்தியாவை விடத் தென்னிந்தியா கடலோடு அதிக உறவு கொண்டாடியது. வெளிநாட்டு வியாபாரம் பெரும்பாலும் தென்னிந்தியாவுடன்தான் நடைபெற்று வந்தது. பழந்தமிழ்ப் பாடல்களிலே யவனர்களைப் பற்றிய குறிப்புக் கள் மிகுந்து காணப்படுகின்றன. யவன தேசத்து மதுவகை கள், பூந்தாழிகள், அணிவிளக்குகள் முதலியவற்றைப் பற்றித் தமிழ் நூல்கள் கூறுகின்றன. யவனர் என்ற சொல் முதலில் முக்கியமாகக் கிரேக்கர்களைக் குறித்து நின்றது. பிறகு அந்நிய நாட்டவர் அனைவருக்கும் அப்பெயர் பொதுவாக வழங்கலாயிற்று."

"கிழக்குத் தேசங்களில் இந்தியக் குடியேற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த பெருமுயற்சியில் தென்னிந்தியாவே வழிகாட்டியாக இருந்தது. வெளிநாடுகளில் குடியேறும் நோக்கத்துடன் பலர் புறப்பட்டுச் சென்றார்கள். இது கி. பி. முதல் நூற்றாண்டில் ஆரம்பித்துப் பல நூற்றாண்டுகள் வரையில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது. மலாய் நாட்டுக்கும் கம்போடியாவுக்கும், யாவா, சுமத்திரா, போர்னியோ முதலான தீவுகளுக்கும் அவர்கள் சென்று குடியேறினார்கள். அவர்கள் தங்களோடு கூடவே இந்தியக்கலை நாகரீகங்களையும் கொண்டு சென்றனர்."

"(இத்தகைய ஆற்றல் வாய்ந்த தென்னிந்தியக் கடலோடிகள்) மிகவும் குறுகலான கடலைக் கடந்து தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்றது பெரிய காரியமல்ல" என்று ஜவஹர்வால் நேரு தமது உலக சரித்திரத்தில் கூறியுள்ளார்.

தென்னிந்திய மக்களின் நீண்ட கடல் கடந்தபெரும் பிரயாணங்களை நோக்கும்போது மிக அண்மையிலுள்ள இலங்கையோடு கிறீஸ்துவுக்கு முற்பட்ட பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தென்னிந்தியர்கள் தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகின்றது.

இலங்கையின் வடபகுதியோடு சிறப்பாக வடகிழக்கு வடமேற்குப் பகுதிகளோடு முதன் முதல் தொடர்புகொண்டவர்கள் தென்னிந்தியர்கள் என்று கூறின் அதில் தவறிருக்க நியாயமில்லை.

தென்னிந்தியக் கடலோடிகளுக்கு இலங்கையின் வடகிழக்கில் உள்ள துறைமுகமும் வடமேற்கில் இருந்த துறைமுகமும் இலங்கையில் வந்து இறங்குவதற்கு மிக வாய்ப்பாக இருந்தன. அதன் காரணமாக வடகிழக்கிலுள்ள திருக்கோணமலைத் துறைமுகமும் வடமேற்கில் இருந்த மாதோட்டம் என்னுந் துறைமுகமும் அவற்றைச் சூழ்ந்துள்ள பின்னிலங்களும் மிகப் பழங்காலத்திலிருந்தே இன்று வரை

யும் இந்துசமயத்தைச் சார்ந்த தமிழர் வாழ்ந்து வரும் பிரதேசமாகக் காட்சியளிக்கின்றது. இன்று நடைபெறும் குடியேற்றத் திட்டங்கள் மூலம் மற்றைய இனத்தவர்கள் பெருந்தொகையாகக் குடியேற்றப்பட்டுக் கொண்டு வந்தாலும் புராதன காலந்தொட்டு இன்றுவரை திருகோணமலைப் பகுதியில் இந்து மதத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் தொடர்ச்சியாக இடையீடின்றி நிலையான குடிமக்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதில் ஐயமே இல்லை.

கோணமலையின் பின்நிலம் வளம் வாய்ந்த பூமியாக இருந்தமையும், மகாவலி கங்கையின் நீர் வளமுள்ள நிலப்பகுதிகள் அண்மையில் இருந்தமையும் தென்னிந்தியத் தமிழர்கள் இங்கே தங்கிக் குடியேற்றங்கள் அமைப்பதற்குச் சாதகமான காரணிகளாக இருந்தன. எனவே காடாகக்கிடந்த இப்பகுதிகளை அழித்து நாடாக்கினர். காடுகள் இருந்த இடங்களில் கழனிகள் தோற்றம் பெறலாயின. அத்தோடு இங்கிருக்கும் இயற்கைத் துறைமுகமும் அவர்களின் வர்த்தகத்துக்கும் தாய்நாட்டோடு தொடர்புகொள்வதற்கும் உதவியாக இருந்த காரணத்தால் ஓர் நிலையான பழந் தமிழ்க் குடியேற்றம் ஒன்று இங்கு ஏற்படலாயிற்று. இது மட்டுமன்றி இப்பகுதி உப்பு விளையும் பிரதேசமாகவும், முத்துக்குளிப்பதற்கேற்ற இடமாகவும் இருந்த காரணத்தால் தென்னிந்திய வர்த்தகர்களின் வர்த்தகத்துக்கு இத்துறை முகப் பட்டினம் சாதகமாகவே இருந்திருக்கவேண்டும்.

ஆரம்பத்தில் இக்குடியேற்ற வாசிகள் வான் மழையையும் ஆற்று நீரையும் நம்பியே வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். தாம் வாழும் இத்திருக்கோணமலைப் பகுதியில் வழிபாடு செய்வதற்காகக் கோயிலொன்றையும் அமைத்தார்கள். கோயிலைச் சூழ்ந்திருந்த வேளாண்மை செய்யும் நிலங்களெல்லாம் கோயில் நிலங்களாகவே கருதப்பட்டு வந்தன. அவர்கள் அமைத்த கோயிலைச் சுற்றியே அவர்கள் வாழ்க்கை அமைந்தது.

இவ்வாறு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே திருக்கோணமலையில் தோற்றம் பெற்ற கோயிலே கோணேசர் கோயிலாகும். இதுவே திருக்கோணமலையில் தோன்றிய முதற் கோயிலுமாகும்.

மரக்கலத்தில் செல்லும் போது கடலிலிருந்தே பார்த்து வணங்கக் கூடியதாக ஆழமான கடலுள் நீண்டு வளைந்து கிடக்கும் மலை உச்சியில் இக்கோயிலை அமைத்தார்கள்.

இலங்கையின் குணதிசையில் இம்மலை அமைந்திருந்த காரணத்தினால் இதனைக் குணமலை என்று பெயரிட்டழைத் தார்கள். குணமலை என்னும் பெயர் நாளடைவில் மக்கள் நாவில் பயின்று திரிபு பெற்றுக் கோணமலை என்னும் உருவத்தைப் பெற்று விட்டது. கிழக்குத் திசையைப் பழந் தமிழர் குணதிசை என்றே அழைத்து வந்தனர். மேற்குத் திசைக்குக் குடதிசை என்ற பழந்தமிழ்ப் பிரயோகம் இருப் பதையும் காணலாம். கிழக்கு, மேற்கு, என்ற இரு சொற் களும் முறையே கீழ், மேல், என்ற இடப்பொருளில் வந்துள் ளனவே தவிர திசைப்பொருளில் வரவில்லை. அவ்விரு திசைகளும் முறையே குணக்கு, குடக்கு என்ற சொற் களால் குறிக்கப்பெற்றுள்ளன." என்று டாக்டர் செ. வை. சண்முகம் அவர்கள் "சங்க இலக்கிய மொழி அமைப்பு" என்னும் கட்டுரையில் எடுத்துக்காட்டிருப்பதையும் கண்டு தெளிக. குணகடல், குணவாயில், குணதிசை, முதலிய இலக்கிய வழக்காறுகளும் இதனை உறுதிப் படுத்துகின்றன.

இக்கோயில் மிகப் பழமையானது என்பதைக் "குண மலை" என்னும் இவ்வூர்ப் பெயரே எடுத்துக் காட்டி நிற்கிறது. கோணேசர் கோயில் இலங்கையிலுள்ள கோயில் களுக்குள் மிகப் புராதனமான கோயில் என்னும் எண்ணமும் மக்கள் மத்தியில் உலாவுகின்றது. வடகைலையின் சிகரங் களுள் ஒன்றாகக் கூறப்படும் கதையும், இராவணனால் வணங்கப் பெற்ற கோயில் என்றும் சொல்லப்படும் இக் கோயிலின் பழமையைப் பற்றி மக்கள் கொண்டிருந்த எண் ணத்தைப் பிரதிபலிப்பனவாகவே இருக்கின்றன.

இக்கோணமலையை ஆரியர்கள் "கோகர்ணம்" என்று அழைத்தார்கள். அழமான கடலுள் நீண்டு வளைந்து கிடந்த இம்மலை அவர்களுக்கு கோகர்ணம் போல் காட்சி அளித்தது போலும். (கோ-மாடு, கர்ணம்-செவி) இந்தக் கோகர்ணத்தில் பிராமண விகாரை ஒன்று இருந்தது. அந்தக் கோகர்ண பிராமண விகாரை புத்தசமயப் பரம்பலுக்கு தடையாக இருந்து வந்ததைக் கண்ட மகாசேன மன்னன் சீற்றங் கொண்டு அதனை அழித்ததாக அறிகிறோம்.மகாசேன மன்னன் காலத்தில் இருந்த இந்தப் பிராமணக் கோயில் இந்துமதப் பண்பாட்டின் கோட்டையாக விளங்கிவந்திருப்பதை இச் செய்திகள் நமக்குப் புலனாக்குகின்றன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் மகாசேன மன்னனுக்கு ஆத்திரமூட்டக்கூடிய அளவுக்கு மிகப் பிரபல்யம் வாய்ந்த இந்து மதப் பண்பாட்டு நிறுவனமாக விளங்கிய கோகர்ணப் பிராமண விகாரை கோணமலையில் தென்னிந்தியர்களால் கட்டியெழுப்பப்பட்ட கோணேசர் கோயில் அன்றி வேறு எக் கோயிலாய் இருக்கமுடியும்? இக்கோயில் இடிக்கப்பட்ட போது குறைந்தது ஐந்நூறு ஆண்டுக்கால வளர்ச்சியைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருக்கோணமலைக் கோணேசர் கோயில் மிகப் பிரபல்யத்தோடு விளங்கியிருந்ததைக் காண்கின்றோம். தமிழகத்தில் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கை அழித்தொழிப்பதற்காகவும் தமிழ்மக்களை இந்துசமயப் பண்பாட்டில் நிலைத்து நிற்கும் ஒன்றுபட்ட ஓர் சமுதாயமாக ஆக்குவதற்காகவும் தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய பக்தியியக்கம் தென்னிந்தியாவோடு நின்றுவிடாமல் கடல் கடந்து புத்தசமயச் செல்வாக்குப் பெற்றிருந்த ஈழநாட்டிலும் பரவியது. இப் பக்தியியக்கத்தின் வைதிக சமயப் படையெழுச்சி திருஞான சம்பந்தப் பெருமானைத் தலைவராகக் கொண்டு இயங்கி வந்தது. அவ்வைதிகச் சமயப் படையெழுச்சிக் காலத்தில் தென்னிந்தியத் தமிழர்கள் பெருந் தொகையாக திருக்கோணமலையை நோக்கி வருவதற்கு இங்கிருந்த

கோணேசர் கோயில் ஈழநாட்டில் பக்தியியக்கத்தைப் பரப்புவதற்கு ஏற்ற தலமாய் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அதன்காரணமாகத் திருஞானசம்பந்தப் பெருமானின் பாடற் பதிகத்தையும் பெற்றது இக்கோயில். அக்காலத்தில் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்துள்ள குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலையாக விளங்கியது.

வைதிக சமயத் தலைவரும் அந்தணருமாகிய திருஞான சம்பந்தரால் கோணேசர் கோவில் பாடல் பெற்ற நிகழ்ச்சி தென்னிந்தியாவில் இருந்த வைதிகப் பிராமணர் இக்கோயிலை நோக்கி வருகை தருவதற்கு ஒரு தூண்டுகோலாய் இருந்திருக்கலாம். அதன் காரணமாக வைதிகப் பிராமணர்கள் பலர் திருக்கோணமலைப் பகுதியை நோக்கி வந்து, வைதிக மதப் பிரசாரத்திற்காகத் தங்கியிருந்து, பல்லவ மன்னர் ஆதரவுடன் அமைக்கப்பெற்ற பிராமணக் குடியிருப்புக்களாகிய சதுர்வேதி மங்கலத்தில் வாழ்ந்து வந்திருக்க வேண்டும். இந்நிகழ்ச்சி பல்லவகுலதிலகனாகிய முதலாவது நரசிம்மவர்மன் காலத்தில் நிகழ்ந்திருக்கலாம். இலங்கைமன்னனாகிய மானவர்மன் ஆட்சியிழந்து முதலாம் நரசிம்மவர்மனிடம் அடைக்கலம் புகந்தபோது நரசிம்மவர்மன் இலங்கை மீது படையெடுத்துவந்து ஆட்சியைப் பகைவரிடமிருந்து மீட்டு மானவர்மனுக்கு அளித்தவனாகையால் அவன் இலங்கை மன்னன் உதவியுடன் கோணேசர் கோவில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிவந்திருக்க வேண்டும். மலையின் உச்சியில் கற்கோவில் ஒன்றைக் கட்டியவனும் இந்த மாமல்லனே.

பல்லவ பாணியில் - திராவிட சிற்பமுறைப்படி கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இக்கற் கோயில் கட்டி யெழுப்பப் பட்டிருக்கிறது என்பதை இங்கு எஞ்சிக் கிடக்கும் அழிபாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையில் சோழராட்சி நடைபெற்ற காலமாகிய பத்தாம் நூற்றாண்டின் கடைசிவருடங்களிலும் பதினொராம் நூற்றாண்டு முழுவதிலும் சோழரின் படையெழுச்சி நிகழ்ந்தபோதெல்லாம் பல்வேறு சமூகக் கூட்டங்களைச் சேர்த்தவர்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் சிறப்பாகத் திருக்கோணமலைப் பகுதியில் வந்து குடியேறினார்கள். கி. பி. 1070ம் ஆண்டு வரை சோழசாம்ராஜ்யத்தின் ஒரு

மாகாணமாக இலங்கை இருந்து வந்தது. சோழராட்சிக் குட்பட்ட இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்னும் பெயரையும் பெற்றது. சோழருடைய ஆதிக்கத்தின் தாக்கம் மற்றெந்தப் பகுதியையும் விட திருக்கோணமலையில் கூடுதலாக இருந்திருக்கிறது. அந்தக்காலத்தில் திருக்கோணமலை கோணேசர் கோவில் சோழரின் பேராதரவைப் பெற்று விளங்கியது. திருக்கோணமலையில் வாழ்ந்து வந்த மக்களின் சமய, சமூக, கலாசார அபிவிருத்திக்கும் கோணேசர் கோயில் ஒரு மையஸ்தானமாய் விளங்கியது.

சோழர் ஆட்சிக்காலத்தில் திருக்கோணமலைக் கோணேஸ்வரக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலதானங்களைப் பற்றியும் முதலாம் இராஜராஜ சோழ மன்னனின் காலத்தில் தஞ்சைப் பெருங்கோயிலின் தாபரிப்புக்கு விடப்பட்டிருந்த ஐந்து கிராமங்களும் திருக்கோணமலைப் பகுதியிலிருந்தே விடப்பட்டிருந்ததென்ற அரிய செய்திகளைப் பற்றியும் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளரும், சாசன ஆராய்ச்சியாளருமாகிய திரு. செல்வத்துரை குணசிங்கம் அவர்கள் எழுதிய "கோணேஸ்வரம்" என்னும் தமிழ் நூலிலும், "தமிழரும் திருக்கோணமலையும்" என்னும் அவரது ஆங்கில நூலிலும் விரிவாக அவர் எழுதியிருப்பதைக் கொண்டு அறியலாம்.

சோழ மன்னன் அளித்துள்ள நிலதானங்களைப் பற்றிக் கவனிக்கும் போது திருக்கோணமலைக் கோணேசர் கோயிலிலே ஈழநாட்டில் இந்து சமயப் பண்பாட்டை வளர்க்கக் கூடிய மாபெரும் நிறுவனமாகவே அவன் அமைத்து வைத்தான் என்பது தெரியவருகிறது.

சோழராட்சியின் முடிவுக்கும் வடக்கில் தமிழ் இராஜ்யம் ஒன்று தோற்றம் பெறுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் சோழகங்கன் என்னும் புகழோடு தோற்றமளிக்கும் குளக்கோட்டனுக்கும் திருக்கோணேசர் கோயிலுக்கும் இருந்த தொடர்பும் அம்மன்னன் இக்கோயிலுக்கு ஆற்றிய திருப்பணியும் இன்றுவரை மக்கள் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டதையும் காண்கின்றோம். அவன்

செய்துவைத்த திருப்பணி அமைப்புக்களும் குளந்தொட்டு வளம் பெருக்கியமையும், அவற்றைச் செவ்வனே நடத்தி வந்தமையும் தான் செய்து வைக்கும் திருப்பணிகள் நீடு நின்று நடைபெற வேண்டுமென்ற அவனது ஆசையும் தக்ஷிணகைலாச புராணத்திலும் கோணேசர் கல்வெட்டிலும் காணப்படுகின்றன.

இக்குளக்கோட்டு மன்னன் சோளகங்கன் என்று பேசப் படுவதேன்?

கங்கைகொண்டான் என்றும் கடாரங்கொண்டான் என்றும் பாராட்டப்பெறும் இராஜேந்திர சோழனின் தமிழ்ச்சேனை கங்கையாறளவுஞ் சென்று மாற்றாரை வென்றது பொங்கு கங்கையை பொற்குடத்தில் எடுத்து வந்தது. கங்கையின் நீரைக் கொண்டு வந்த படைத்தலைவனைக் கோதாவரிக் கரையில் வைத்து வரவேற்றான் இராஜேந்திர சோழன். அக்கங்கை நீரை சோழ நாட்டில் தான் புதிதாகக் கட்டிய ஏரியில் உகுத்து அதற்குச் "சோழகங்கம்" என் னு ம் பெயரையும் கொடுத்தான். அச்சோழகங்க ஏரியால் சோழ நாட்டை வளம்பெறச் செய்தான் இராஜேந்திர சோழன். அதனால் அவன் சோழகங்கனும் ஆயினான்.

திருக்கோணமலையில் குளந்தொட்டு வளம்பெருக்கிய குளக்கோட்டு மன்னனை ஈழ்நாட்டை வளம்பெறச் செய்த சோழகங்கன் என்று புகழலாமல்லவா?

பார்தாங்கு கோயிலும்பொன் மண்டபமும்
கோபுரமும்பரற்கு நாட்டி
ஏர்தாங்கு மாயனுக்கும் அலங்கார
ஆலயம் ஒன்றியற்றி முற்றும்
கார்தாங்கு திருக்குளமும் பாவநாசனச்
சுனையும்கண்ட, கண்டன்
சீர்தாங்கு குளக்கோட்டனெனும் சோழகங்
கனைநற் சிந்தைவைப்பாம்

இவ்வாறு மக்கள் உள்ளத்திலும் நாவிலும் குளக்கோட்டு மகாராசா என்றும் புலவர் பாடலில் சோழகங்கன் என்றும் இடம்பெற்ற குளக்கோட்டு மன்னனை திருக்கோணமலை இன்றும் மறவாமல் போற்றி வருகிறது. குளக்கோட்டு மன்னனின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப்பதிகத்தையும் அருணகிரிநாதரின் திருப்புகழையும் பெற்ற பல்லவ மன்னனால் கட்டியெழுப்பப்பட்ட கற் கோயிலையும் சோழமன்னரால் புதுப்பிக்கப்பட்ட விமானம் கோபுரம் ஆகியவற்றையும் கொண்ட ஈழநாட்டின் இந்துசமயப் பண்பாட்டின் அரணாக விளங்கிய இம்மாபெரும் கோயில் வன்னெஞ்சம் படைத்த கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த போத்துக்கீசத் தளபதி டொன் கொன்ஸ்ரன்ரைன் டீசா நொறன்ஹா என்பவனால் தகர்த்தெறியப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டதையும் அறிகிறோம்.

இக்கோயில் போத்துக்கீசரால் அழிக்கப்பட இருந்த நேரத்தில்தான் இங்கிருந்த தங்க விக்கிரகங்களிற் சில மக்களால் எடுத்துச் செல்லப்பட்டு மண்ணினுள்ளும், கிணற்றினுள்ளும், புதைத்தும் மறைத்தும் வைக்கப்பட்டது. அந்த விக்கிரகங்களிற் சில அண்மையில் கண்டெடுக்கப்பட்டு புதிதாகக்கட்டிய ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தகர்த்தெறியப்பட்ட கோயிலின் அங்கங்களுள் கடலுள் தாண்டவைபோக எஞ்சியிருந்த தூண்கள் போத்துக்கீசர் கட்டிய பிரடெரிக் கோட்டைக்குப் பயன்படுத்தப்பட்டன. ஒன்றிரண்டு தூண்களே இன்று வெளியில் காணப்படுகின்றன.

இக்கோயில் 1624ம் ஆண்டு அழிக்கப்பட்டது. போத்துக்கீசர் கட்டிய கோட்டையை பிரித்தானியர் பாரமெடுத்த பின்பு பல ஆண்டுகள்வரை இப்புனித ஸ்தலத்துக்கு இந்துக்கள் போவது தடைசெய்யப்பட்டிருந்தது. மிகநீண்ட காலத்தின்

பின்னரே ஆண்டுக்கு ஒரு முறை இப்புனித ஸ்தலத்துக்கு இந்துக்கள் யாத்திரை செய்யும் சலுகை அளிக்கப்பட்டது. அதன்பின்னர் வாரத்தில் இருநாட்கள் திங்களும் வெள்ளியும் சென்று வழி பாடாற்ற பிரித்தானியர் இடமளித்தனர். இன்று எந்தவிதமான தடையுமின்றி எந்நேரமும் இந்துக்கள் சென்று வழிபாடு செய்து வருகிறார்கள்.

உள்ளே சென்று வழிபாடு செய்யும் உரிமை வழங்கப் பட்டதும் ஆலயம் இருந்த மலைக்குச் சென்று கடலுள் புதையுண்டு கிடக்கும் கோணேசப் பெருமானை நினைந்து வழிபாடாற்றி வந்தனர் மக்கள். மலையோரத்திலிருந்த கற்பாறையிலேயே வைத்துத் தீபதூபம் காட்டுவதும் அர்ச்சனைகளும் நடைபெற்று வந்தன.

நீண்டகாலமாகப் போத்துக்கீசராலும், ஒல்லாந்தராலும், பிரித்தானியராலும் மலைக்குச்சென்று அந்தணர்கள் பூசை செய்யும் உரிமை மறுக்கப்பட்டிருந்தமையை நினைத்து மனம் நொந்து அந்த நீசமகிபாலர்களின் கொடுங்கட்ட ளைகள் அழிய அருள் செய்யவேண்டுமென்று இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த திருக்கோணமலை யைச் சேர்ந்த அகிலலேசபிள்ளை என்னும் புலவர் "திருக்கோணநாயகர் பதிகம்" என்னும் நூலில் குறிப்பிட்டி ருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

அம்புவியை அரசுசெய்யும் நீசமகி
பாலர்கள் அக்கிரமமாக
வம்பவிழ்நின் பதமலரை மறையவர்
பூசனைபுரியாவகை தடுத்தார்
எம்பரனே! இவர்கள் கொடுங் கட்டளைகள்
அழிய அருளீந்து உனது பாத
அம்புயக்காட்சியைத் தருவாய்
திரிகோணச் சிலம்புறையும் ஆதிமூர்த்தி

என்பதே அப்பாடல்

நீண்ட காலமாகப் பூசைகள் நடைபெறாமல் இருந்து பின் ஒருவாறு மலையில் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், கோணேசப் பெருமானுக்குப்புதிய கோயில் கட்டி பூசைகள் செய்யவேண்டுமென்ற எண்ணம் 1963ம் ஆண்டு ஏப்பரல் மாதம் மூன்றாந்தேதி புதன்கிழமை நடந்தேறிய ஆவர்த்தன மகா கும்பாபிஷேகத்தன்று நிறைவேறியது.

பதினாறு ஆண்டுகள் கழிந்து இப்பொழுது அவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு பதினேழாம் ஆண்டு முடிவில் இரண்டாவது மகாகும்பாபிஷேகத்தை மக்கள் கண்குளிரக் கண்டு தம் இன்னல் எல்லாம் தீரவேண்டி நிற்கிறார்கள்.

**(திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர்**
**25-01-1981)**

அன்பளிப்பு
அமரர் திருமதி புட்பராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது

ந்து
ாண்
திய
ணம்
மை
றை


லயம்
வில்
ரிரக்
ள்.

அன்பளிப்பு
திரு நடராசா ஆ[illegible]
ஆசிரியர் - பண்ணாகம், [illegible]
ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

ஈழத்து இலக்கியச் சோலை
திருக்கோணமலை

**வெளியீடு**

**08**



21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.